ளியீடு 25-7-2002 Issued 25-7-2002

5/11/2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT


புதன்கிழமை, ஆகஸ்ட் 29, 2001 – தொகுதி 8 – எண் 1

Wednesday the 29th August, 2001 – Volume 8 – No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

511/2001

29-8-2001

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v - ix |
| Governor and Council of Ministers | xi - xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv - xviii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix - xxix |
| **1. வினாக்கள்-விடைகள்-** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1 - 18 |
| **2. தகவல் கோரல்-** | |
| (அ) மாநில மனித உரிமைகள் ஆணைய உறுப்பினர் நியமனம் | 19 - 20 |
| (ஆ) காவிரி நீர் பெறுதல் | 20 - 22 |
| (இ) நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைத்தல் | 23 - 24 |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு-** | |
| (அ) சென்னை, மண்ணடி, அங்கப்ப நாயக்கன் தெருவில் குடிநீர் வழங்காததால் 27-8-2001 அன்று ஏற்பட்ட நிகழ்வுகள் | 24 - 38 |
| பேராசிரியர் க. அன்பழகன் | 24 - 26, 30 - 31 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 26 - 30, 37 - 38 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 31 - 32 |
| * திரு. சி. ஞானசேகரன் | 33 - 34 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 34 - 37 |

| | பக்கங்கள் |
|---|---|
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு** - தொடர்ச்சி | |
| (ஆ) தாம்பரம் நகராட்சிப் பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு | 38-40 |
| திரு. மீ.அ. வைதியலிங்கம் | 38, 39-40 |
| *மாண்புமிகு திரு. சி. துரைராஜ் | 38, 39, 40 |
| (இ) சென்னை, போரூர் ஏரியில் ஆக்கிரமிப்பு | 40-44 |
| திரு. பரிதி இளம்வழுதி | 41-42 |
| *திரு. சி. ஞானசேகரன் | 42-43 |
| திரு. ப. ரங்கநாதன் | 43 |
| மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் | 43-44 |
| **4. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்**–தொடர்ச்சி | 45-121, 122-208 |
| (அ) கோரிக்கை எண் 18 – மருத்துவம் (ஆ) கோரிக்கை எண் 19 – மக்கள் நல்வாழ்வு | |
| *மாண்புமிகு திரு. செ. செம்மலை | 45, 53, 60, 65-66, 68, 69, 70, 102-103, 105-106, 113, 117, 134-135, 139, 155-156, 161, 168-200 |
| திரு. கு. பிச்சாண்டி | 48, 55, 60-65, 67-68, 72 |
| *திரு. பி.கே. சேகர்பாபு | 72-74, 80-84, 93-96 |
| டாக்டர் தே. குமாரதாஸ் | 50, 57, 97-105 |


223442


| | பக்கங்கள் |
|---|---|
| **4. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்**–தொடர்ச்சி | |
| *திரு. அ. மில்லர் | 106-111 |
| டாக்டர் ஆர். கோவிந்தசாமி | 111-117 |
| *திருமதி கே. பவானி கருணாகரன் | 118-121 |
| *திரு. எச்.எம். ராஜு | 47, 54, 122-126, 202, 205 |
| *திரு. எம்.சி. சம்பத் | 127-131 |
| *செல்வி க. பாலபாரதி | 49, 131-137 |
| திரு. கு. அன்பழகன் | 139-146 |
| *திரு. சோ. இராசேந்திரன் | 147-151 |
| திரு. எஸ். மாணிக்கராஜ் | 151, 153-156 |
| திரு. எச். ராஜா | 157-159 |
| *திரு. சி. ஞானசேகரன் | 45, 53, 160-168, 201, 205 |
| **5. அறிவிப்பு**– | |
| உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல் | 121 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 208 |

## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர் – டாக்டர் சி. ரங்கராஜன்

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை, இலஞ்ச ஒழிப்பு, சிறுபான்மையினர் நலன் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

2. நிதி மற்றும் சட்ட அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல், சட்டமன்றம், சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், சட்டமியற்றல், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

3. கல்வி அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

4. மின் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

7. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

8. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

9. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

குடிசைத் தொழில்கள் உள்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர்-கிராமத் தொழில் வாரியம்.

10. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. தனபால்:**

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.



11. வருவாய்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம், கடவுச் சீட்டு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு.

12. பொதுப் பணித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு பாசனம் உள்பட பாசனம்.

13. செய்தி—விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, வனம், சுற்றுச் சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

14. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

15. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி இரா. சரோஜா:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

16. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு, அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

17. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன்:

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

18. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

19. மீன் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:

மீன் வளம் மற்றும் கால்நடை பராமரிப்பு.

20. தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:

தொழிற்சாலைகள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.

21. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு:

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

22. வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:

வணிக வரிகள்.



23. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்பு திட்டமிடல், குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

24. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

25. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்.

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – Dr. C. RANGARAJAN

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| **1. Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:**<br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police, Prevention of Corruption, Minorities Welfare and Information Technology. |
| **2. Minister for Finance and Law** | .. | **The Hon. Thiru C. Ponnaiyyan:**<br>Finance, Planning, Elections and Legislature, Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| **3. Minister for Education** | .. | **The Hon. Dr. M. Thambidurai:**<br>Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians overseas, Refugees and Evacuees. |
| **4. Minister for Electricity** | .. | **The Hon. Thiru D. Jayakumar:**<br>Electricity, Non-conventional Energy Development. |
| **5. Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:**<br>Hindu Religious and Charitable Endowments. |

**19. Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P. Rajendra Prasad:**

Fisheries and Animal Husbandry.

**20. Minister for Industries** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Industries, Iron and Steel Control, Mines and Minerals.

**21. Minister for Milk and Dairy Development** .. **The Hon. Thiru C. Shanmugavelu:**

Milk and Dairy Development.

**22. Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Commercial Taxes.

**23. Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru A.K. Selvaraj:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and Chennai Metropolitan Development Authority.

**24. Minister for Transport** .. **The Hon. Thiru Nainar Nagendran:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

**25. Minister for Backward Classes** .. **The Hon. Tmt. Valarmathi Jebaraj:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities.



# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. பி.ஆர். சுந்தரம்

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. ப. இராஜரெத்தினம்

திரு. சோ. பாலகிருஷ்ணன்

திருமதி டி. யசோதா

திரு. லா. சந்தானம்

## முதன்மைச் செயலாளர்

திரு. செ.சு. ஜானகிராமன்

## செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

---

# 20—8—2001 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டனர்.

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட்., | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம்., | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |

| | |
|---|---|
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை. உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. தொட்டியம் |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 7. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. திருவையாறு |
| 8. | அரசன், திரு. ப. | .. அறந்தாங்கி |
| 9. | அருணாசலம், திரு. அ. | .. வரகூர் (செ.வ.) |
| 10. | அருள், திரு. பி.எஸ். | .. புவனகிரி |
| 11 | அழகம்மாள், திருமதி வி. | .. தலைவாசல் (செ.வ.) |
| 12. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 13. | அன்பழகன், திரு. ஆகுசி. | .. பெரணமல்லூர் |
| 14. | அன்பழகன், திரு. கு. | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 15. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 16. | அன்பழகன், திரு. ஜெ. | .. தியாகராய நகர் |
| 17. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 18. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி—2 |
| 19. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 20. | ஆண்டிவேல், திரு. ப. | .. வேடசந்தூர் |

| | | | |
|---|---|---|---|
| 21. | ஆறுமுகம், திரு. கே. | - | செங்கல்பட்டு |
| 22. | ஆறுமுகம், திரு. த. | - | திருவொற்றியூர் |
| 23. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - | அண்ணா நகர் |
| 24. | ஆஸ்டின், திரு. | - | நாகர்கோவில் |
| 25. | இரவிராஜ், திரு. கோ. | - | திருத்தணி |
| 26. | இராசேந்திரன், திரு. சி. | - | திருவோணம் |
| 27. | இராசேந்திரன், திரு. சோ. | - | கோவில்பட்டி |
| 28. | இராமசாமி, திரு. கே.ஆர். | - | திருவாடனை |
| 29. | இராமசாமி, திரு பி.சி. | - | மொடக்குறிச்சி |
| 30. | இராமச்சந்திரன், திரு. எஸ். | - | கலசப்பாக்கம் |
| 31. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | - | கம்பம் |
| 32. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | - | சாத்தூர் |
| 33. | இராமு, திரு. ந. | - | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 34. | இராம் பிரபு, திரு. இரா. | - | பரமக்குடி (செ.வ.) |
| 35. | இராஜசேகர், திரு. மா. | - | ராஜபாளையம் (செ.வ.) |
| 36. | இராஜரெத்தினம், திரு. ப. | - | பெரம்பலூர் (செ.வ.) |
| 37. | இராஜா, திரு. டி.கே. | - | திருப்பத்தூர் |
| 38. | இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. | - | பத்மநாபபுரம் |
| 39. | இராஜேந்திரன், திரு. பி.ஜி. | - | ஆலங்குளம் |
| 40. | இலட்சுமணன், திரு. கே.என். | - | மயிலாப்பூர் |
| 41. | இளவழகன், திரு. ப. | - | அரியலூர் |
| 42. | இளையகண்ணு, திரு. கா.தி. | - | ஏற்காடு (ஆவா.) |
| 43. | இன்பத் தமிழன், திரு. இரா.தா. | - | ஸ்ரீவில்லிபுத்தூர் |



| | | | |
|---|---|---|---|
| 44. | ஈஸ்வரன், திரு. ரா. | - | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 45. | உசேன், திரு. எஸ்.ஏ.எம். | - | திருவல்லிக்கேணி |
| 46. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | - | தஞ்சாவூர் |
| 47. | உமாதேவன், திரு. கே.கே. | - | திருப்பத்தூர் |
| 48. | உலகரட்சகன், திரு. பி.எஸ். | - | செய்யாறு |
| 49. | ஏழுமலை, திரு. வெ. | - | செஞ்சி |
| 50. | கணபதி, திரு. ந. | - | வானூர் (செ.வ.) |
| 51. | கணேசன், திரு. ஐ. | - | எடப்பாடி |
| 52. | கணேசன், திரு. ஆர்.டி. | - | தேனி |
| 53. | கண்ணன், திரு. ஏ.எஸ். | - | பொன்னேரி (செ.வ.) |
| 54. | கந்தசாமி, திரு. கு.ரா. | - | சத்தியமங்கலம் |
| 55. | கந்தசாமி, திரு. கா. | - | குன்னூர் (செ.வ.) |
| 56. | கருணாகரன், திரு. கே.சி. | - | சிங்காநல்லூர் |
| 57. | கருணாநிதி, திரு. மு. | - | சேப்பாக்கம் |
| 58. | கருப்பசாமி, திரு. சொ. | - | சங்கரநயினார்கோவில் (செ.வ) |
| 59. | கருப்பணன், திரு. கே.சி. | - | பவானி |
| 60. | கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. | - | குளத்தூர் (செ.வ.) |
| 61. | கலாவதி, திருமதி கு. | - | சேந்தமங்கலம் (ஆவா.) |
| 62. | கனகதாரா, செல்வி சி. | - | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 63. | கனிதா சம்பத், திருமதி எஸ். | - | திருப்போரூர் (செ.வ.) |
| 64. | காசாம்பு பூமாலை, திருமதி பூ. | - | சங்கராபுரம் |
| 65. | காமராஜ், திரு. மே.ப. | - | தாரமங்கலம் |
| 66. | கார்த்தி, திரு. மு. | - | சேலம்—2 |

67. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
68. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
69. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
70. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
71. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
72. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
73. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
74. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
75. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
76. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
77. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
78. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
79. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
80. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
81. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
82. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
83. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
84. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
85. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
86. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
87. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
88. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
89. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
90. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆ.வா.)



91. சாமி, திரு. ஆர். - மேலூர்
92. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
93. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
94. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
95. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
96. சிவசாமி, திரு. செ. - திருப்பூர்
97. சிவசுப்பிரமணியன், திரு. டி.என் - கரூர்
98. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
99. சிவபெருமாள், திரு. அ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
100. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
101. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
102. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
103. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
104. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
105. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
106. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
107. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
108. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
109. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
110. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
111. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
112. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
113. செல்வராஜ், திரு. ஆ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
114. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்

115. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
116. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
117. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
118. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
119. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
120. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
121. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)
122. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. - ஆண்டிப்பட்டி
123. தமிழ்மொழி ராஜதத்தன் திருமதி - மேல்மலையனூர்
124. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
125. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
126. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
127. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
128. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
129. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
130. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
131. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
132. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்
133. திருமாவளவன், திரு. இரா. - மங்களூர் (செ.வ.)
134. துரைமுருகன், திரு. - காட்பாடி
135. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
136. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு
137. நடராஜன், திரு. அ. - குத்தாலம்



138. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி
139. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
140. நடராஜன், திரு. வது. - இளையான்குடி
141. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
142. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
143. நளினி மனோகரன், திருமதி - போளூர்
144. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
145. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
146. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
147. பச்சைமால், திரு. தா. - குளச்சல்
148. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
149. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி—1
150. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
151. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
152. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
153. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
154. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
155. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
156. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
157. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
158. பாப்பா சுந்தரம், திரு. அ. - குளித்தலை
159. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
160. பாரிமோகன், திரு. கி. - தர்மபுரி
161. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி

162. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர் - தொண்டாமுத்தூர்
163. பாலசுப்பிரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
164. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
165. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
166. பால் மனோஜ் பாண்டியன்,
திரு. பி.எச். - சேரன்மகாதேவி
167. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
168. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
169. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
170. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திக்குளம்
171. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
172. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)
173. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
174. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
175. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
176. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
177. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு
178. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
179. மணி, திரு. டி. - விளவங்கோடு
180. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
181. மணி நாடார், திரு. எஸ்.எஸ். - சாத்தான்குளம்
182. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
183. மல்லிகா, திருமதி சி. - முசிறி
184. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி



185. மில்லர், திரு. அ. - கூடலூர்
186. முரளிதரன், திரு. கே.வி. - தளி
187. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
188. முருகேசன், திரு. ஆ.கு. - ஆத்தூர்
189. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
190. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
191. மோகன், திரு. ப. - சின்னசேலம்
192. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
193. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
194. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
195. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிச்செட்டிப்பாளையம்
196. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
197. ராமச்சந்திரன், திரு. கே. - ஆரணி
198. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
199. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
200. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி
201. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி
202. ராஜா, திரு. எச். - காரைக்குடி
203. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்
204. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்
205. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்
206. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், - பேரூர்
திரு. மா.ப.
207. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு

208. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. .. அரவக்குறிச்்சி
209. வளர்மதி, திருமதி பா. .. ஆலந்தூர்
210. வளர்மதி ஜெபராஜ், திருமதி .. மதுரை மேற்கு
211. வள்ளல் பெருமான், டாக்டர் பி. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
212. வாசுதேவன், திரு. பெ. .. மதுராந்தகம்
213. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
214. வில்வநாதன், திரு. இரா. .. சோளிங்கர்
215. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. .. பூங்கா நகர்
216. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. புதுக்கோட்டை
217. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. .. பனமரத்துப்பட்டி
218. வீரபாண்டியன், திரு. ஜெக. .. மயிலாடுதுறை
219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
220. வெங்கடாஜலம், திரு. செ. .. சேலம்—I
221. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
222. வேலுசாமி, திரு. செ.மா. .. பல்லடம்
223. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
224. வேல் முருகன், திரு. தி. .. பண்ருட்டி
225. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
226. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
227. ஜீவானந்தம், திரு. இரா. .. நாகப்பட்டினம்
228. ஜெயக்குமார், திரு. கு. .. நாமக்கல் (செ.வ
229. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
230. ஜெயராமன், திரு. வி. .. பொள்ளாச்சி



31. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
32. ஹக்கீம், திரு. எம்.ஏ. .. மதுரை மத்தி
33. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு
34. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி .. (நியமனம்)
35. (வெற்றிடம்) .. சைதாப்பேட்டை

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 13, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 ஆகஸ்ட் 29, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று*
*அப்பால்நாற் கூற்றே மருந்து."*

நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து, மருந்தை அருகிருந்து கொடுப்பவன் என்ற மருத்துவ முறை அந்த நான்கு வகைப் பாகுபாடு உடையது.

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா எண் 25, திரு. எம். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.*

**25–**

#### தொழிற் பயிற்சி

***1048–திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

*மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–*

*திருமயத்தில் அரசு தொழிற் பயிற்சி மையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருமயத்தில் தொழிற் பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் இல்லை என்று சொன்னார்கள். திருமயத்தைச் சுற்றி உள்ள ஊர்களில் நிறைய மாணவர்கள் படிக்கின்றார்கள். தொழிற் பயிற்சி மையம் 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. திருமயம் தொகுதி பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் வாழ்கின்ற பகுதியாகும். அங்கே ஒரு அரசு தொழிற் பயிற்சி மையம்கூட இல்லை. இது நமது பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். எனவே, பொன்மனத் தலைவி, இதயதெய்வம், தமிழக முதல்வர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆட்சியிலே மீண்டும் பரிசீலனை செய்து அடுத்த ஆண்டாவது தொழிற் பயிற்சி மையம் அங்கே தொடங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திருமயம் தாலுகாவில் A.C. Muthiah Vocational Training Institute என்ற அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி நிலையம் கோனார்பட்டு என்ற இடத்தில் இயங்கி வருகிறது. திருமயம் அமைந்துள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏற்கெனவே ஓர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையமும், 19 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க வேண்டும் என்ற திட்டத்தின்படி இன்னும் 79 இடங்களில் அமைப்பதற்கு யாரும் முன்வரவில்லை. எனவே, தனியார் துறையில் அப்படி அமைப்பதற்கு யாரேனும் முன்வந்தால் அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க என்னென்ன விதிமுறைகளை இந்த அரசு வைத்துள்ளது? மிக, மிகப் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்தைச் சார்ந்த ஏழையெளிய மாணவர்கள் தனியார் தொழிற் பயிற்சி மையங்களிலே பணத்தைக் கட்டிவிட்டு, அவர்கள் அந்தப் பணத்தை வாங்கியதோடு சரி, சரியாக அந்தத் தொழிற் பயிற்சி மையம் செயல்படாமல், என்னுடைய எடப்பாடி பகுதியிலேகூட 2, 3 பயிற்சிப் பள்ளிகளை மூடிவிட்டு, அந்த மாணவர்களுக்கு சான்றிதழ்களைக்கூட வழங்கவில்லை. இது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? பரீட்சைகூட எழுத முடியாத அந்த ஏழையெளிய மாணவர்களுக்கு இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற் பயிற்சி நிலையம் அமைப்பதற்கு N.C.V.T. அனுமதி வழங்குகிறது. அவர்களுடைய விதிமுறைகளுக்கு உட்பட்டு இருந்தால் மட்டுமே N.C.V.T. அனுமதி வழங்குகிறது. அந்த அனுமதியைப் பெற்றுத்தான் தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் தனியார் துறையில் 603 தொழிற் பயிற்சி நிலையங்கள் இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல எங்காவது அப்படித் தவறு நடந்திருக்குமானால், அதைச் சுட்டிக்காட்டினால் அதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 26, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**26–**

## கூட்டுறவு வங்கி

***2110–திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்குத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2001 ஆகஸ்ட் 29

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நடைமுறையிலே ஒவ்வொரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியும் 2, 3, 4 ஊராட்சிகளை உள்ளடக்கியதாக அமைந்திருக்கிறது. 10 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து விவசாயிகள், தங்கள் விவசாயம் சம்பந்தமான இடுபொருட்களைப் பெறுவதற்கும், நகைக் கடன்கள் பெறுவதற்கும், விவசாயம் சம்பந்தமான கடன்கள் பெறுவதற்கும் அந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை நாடி வருகின்ற சூழ்நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைத் தொடங்க மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தொடக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அதற்கு NABARD சில விதிமுறைகளை வகுத்திருக்கிறது. அந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினுடைய எல்லை 2000 எக்டேர், அதாவது 4942 ஏக்கர் நிலமும், அந்த வங்கி ஒரு வருடத்திற்குள்ளாக ரூபாய் 10 இலட்சம் அளவிற்குக் குறையாமல் குறுகிய காலக் கடன்கள் கொடுக்கிற நிலைமையில் இருக்க வேண்டும் என்றும் இரண்டு விதிமுறைகளுக்குட்பட்டு இருந்தால் மட்டுமே, புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தொடங்கப்பட வேண்டுமென்று NABARD அறிவித்திருக்கிறது. இந்த விதிக்கு உட்படுகிற எல்லையில், அந்த வரம்பிற்கு உட்பட்டு வங்கிகளைத் தொடங்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம்.



2001 ஆகஸ்ட் 29]

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கிராம வளர்ச்சி வங்கிகள் ஆரம்பிக்கப்படும் என்று முந்தைய திமுக. அரசு நிதிநிலை அறிக்கையிலே எடுத்துக் கூறியிருந்தது. அதன்படி, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கிராம வளர்ச்சி வங்கிகள் ஆரம்பிப்பதற்கு ஏற்கெனவே இருந்த அரசு செயல்பட்டிருக்கின்றதா? அப்படியில்லையென்றால், அதற்காக ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, புதியதாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், உழவர்களுடைய மேம்பாட்டை ஊக்குவிப்பதற்காக கிராம வளர்ச்சி வங்கி ஆரம்பிக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குச் சம்பந்தப்பட்டது இல்லை என்று சொன்னாலும்கூட, கடந்த ஆட்சியில் அப்படி ஒரு திட்டத்தை அறிவித்து, அதை நடைமுறைப்படுத்தவில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் NABARD-க்கு எழுதி அந்தக் கோரிக்கையை NABARD ஏற்காத காரணத்தாலே, அந்தத் திட்டம் செயல்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.பூ. முனுசாமி.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், NABARD விதிகளின்கீழ் வரையறுக்கப்பட்ட பகுதிக்குள்தான் இந்த வங்கிகள் திறக்கப்பட்டு இருக்கின்றன என்று அறிவித்திருக்கிறார்கள். ஒரு ஒன்றியத்தில் 8 பஞ்சாயத்துக்களுக்கு, 10 பஞ்சாயத்துக்களுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு ஒரு வங்கி என்றிருக்கிறது. அதேபோல, மக்கள் தொகையின் அடிப்படையிலேகூட ஒரு வங்கியில் பார்த்தோம் என்று சொன்னால், விவசாயப் பெருமக்கள் 2000, 3000 பேர் இருக்கிறார்கள். இன்னொரு வங்கிக்கு வருகின்றபோது, 1000 பேர், 500 பேர் என்ற நிலையிலே இருக்கின்றார்கள். இதையெல்லாம் கணக்கிட்டு, மேலும் விவசாயப் பெருங்குடி மக்கள் பலன் பெறுகின்ற வகையில், ஊராட்சிகளின் எண்ணிக்கையைக் குறைத்தும், மக்கள் தொகையின் அடிப்படையிலும், விவசாயிகளுடைய அடிப்படையிலும் புதியதாக வங்கி திறப்பதற்கு NABARD-க்கு மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு பரிந்துரை செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2001 ஆகஸ்ட் 29

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை மக்கள் மத்தியில் இருந்து மக்களுக்குத் தேவைப்படுகிற அளவிற்கும், அதேநேரத்திலே அந்த வங்கிகளும் இலாபகரமாகச் செயல்படுகிற அளவிற்கும் இருக்கும் என்று சொன்னால், அதைப்பற்றி இந்த அரசு தீவிரமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கோவிந்தராஜ்.

**திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட, கிருஷ்ணகிரி ஒன்றியத்திலே 30 ஊராட்சிகள் இருக்கின்றன. 30 ஊராட்சிகளில் 17 ஊராட்சிகளுக்கு ஒரேயொரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி இயங்கிக் கொண்டிருக்கிற நிலையில், அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பெரிய ஏமாற்றத்தை அளிக்கின்ற நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது. 17 ஊராட்சிகளுக்கு ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி இருக்கின்ற நிலையிலே அந்தப் பகுதி விவசாயிகள் விவசாயத்தைப் பெருக்குவதற்கு விவசாயக் கூட்டுறவு வங்கியிலே கடன் பெறுகிற வகையிலே அதனைப் பிரித்து இன்னொரு வங்கி தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டதைப்போல, NABARD சொல்லியிருக்கிற அந்த 2 விதிமுறைகளுக்கு உட்பட்டு கோரிக்கை வருமானால், அதைப் பரிசீலிப்பதிலே அரசுக்கு ஆட்சேபணை இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைத் தொடங்குவது சம்பந்தமாக நடைபெறுகிற விவாதத்திலே, ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் முறையாகச் செயல்படுவதற்கும், ஏற்கெனவே நடந்திருக்கக்கூடிய முறைகேடுகள் சம்பந்தமாகப்



2001 ஆகஸ்ட் 29]

பரிசீலிப்பதற்கும், குறிப்பாக, வையம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் விவசாயிகளும், சாதாரண ஜனங்களும் டெபாசிட் செய்த 77 இலட்சம் ரூபாய் பணத்தைக் கையாடல் செய்து ஊழல் புரிந்து இருக்கிறார்கள். அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுவதும், அந்தப் பணத்தை பாவப்பட்ட அந்த மக்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படுவதும் வேண்டும். அதன்மீது அரசின் நடவடிக்கை உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்புடைய கேள்வியாக இது இல்லாவிட்டாலும்கூட, இது கடந்த ஆட்சிக் காலத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள், 'மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லையென்றால் தனிக் கேள்வி போடுங்கள்' என்று சொல்லிவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** ஆகவே, இதுபற்றி முழு விவரங்களும் உறுப்பினருக்கு வேண்டுமென்றால், தனியாக ஒரு கேள்வி போட்டால், முழு விவரங்களும் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிக்கு ஒரு தொடக்க வேளாண்மை வங்கி என்பது மூலக் கேள்வியாக இருந்தாலும், ஏற்கெனவே தொடங்கப்பட்டு, செயல்பட்டு வந்த கூட்டுறவு வங்கிகள் பல இடங்களிலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. வேறு சில வங்கிகளோடு இணைக்கப்பட்டு செயல்படுகின்றன. ஏற்கெனவே மூன்று ஊராட்சிகளுக்கு ஒன்று என்ற அடிப்படையிலே செயல்படுகிற வங்கிகள் இப்போது 7 ஊராட்சிகளுக்கு அல்லது 9 ஊராட்சிகளுக்கு உட்பட்டதாக மாற்றப்படுகின்றன. நலிவுற்ற காரணத்தினாலே சில பிரச்சினைகளினாலே கலைக்கப்பட்டு வேறு தொடக்க வங்கியோடு இணைக்கப்பட்டு விடுகிறது. இதனாலே, மிகப் பெரிய சிரமம் ஏற்படுகிற காரணத்தினாலே, அந்த மாதிரியான வங்கிகளை, அதிலே இருக்கிற முறைகேடுகளைக் களைந்து, திரும்பவும் பழைய இடத்திலேயே செயல்படச் செய்வதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா? அதோடு, மூலக் கேள்விக்குத் தொடர்புடையது அல்ல என்று சொன்னாலும்கூட, கூட்டுறவுத் தேர்தலை எதிர்பார்க்கிறார்கள்.

[2001 ஆகஸ்ட் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், என்ன இது? மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாமல் கேட்டீர்களென்றால் எப்படி?

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த இடத்திலே இதைப்போன்று இருக்கிறது என்ற விவரத்தை உறுப்பினர் கொடுத்தால் அதைப்பற்றி இந்த அரசு ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான திருப்பத்தூரிலே இருக்கின்ற மாடப்பள்ளி உழவர் சேவைக் கூட்டுறவு வங்கியிலே—தமிழ்நாட்டிலே இரண்டாவது பெரிய சொசைட்டி— Consumer Loan ரூ.10,000—ஐக் கடந்த ஆட்சியிலே ரூ.35,000 என்ற அளவிற்கு உயர்த்தி சுமார் 400 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், ஒரு மில் அதிபருக்கு இரண்டு கோடி ரூபாய் அளவிற்குப் பருத்தி கொடுத்து, பின்னர் அவர் தற்கொலை செய்து கொண்டார். அந்தப் பணம் இன்றுவரை வசூலிக்கப்படாமல், அந்தக் கூட்டுறவு வங்கிக்கு நட்டம் ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, 3, 4 கோடி ரூபாய் அளவிற்கு அந்த சொசைட்டியிலே ஊழல் நடந்திருக்கிறது. அது அரசுக்குத் தெரியுமா? அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் இதைப்பற்றித் தனியாக ஒரு கோரிக்கை கொடுத்தால், அதைத் தீவிரமாகப் பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நில வள வங்கியிலே அதிகமாக நகைக் கடன்கள்தான் வழங்கப்படுகின்றன. விவசாயிகளுக்கு உதவுகிற வகையிலே, விவசாயக் கடன்களை அதிகமாகக் கொடுக்க இந்த அரசு புதிய திட்டங்கள் ஏதாவது வகுக்குமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து விவசாயிகள் நன்மை பெறுகிற அளவிற்கு இந்த



2001 ஆகஸ்ட் 29]

அரசு தீவிரமாக புதிய திட்டங்களைக் கொண்டு வருவதற்கான பணியிலே ஈடுபட்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தாலுகா அளவிலே வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம்—Co-operative Marketing Society—இருக்கிறது. அந்த வட்டத்திலிருந்து புதிய வட்டம் பிரிகின்ற சமயம், அந்தப் புதிய வட்டத்திற்கு Co-operative Marketing Society ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என்பதை இந்த நேரத்திலே நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காகத் தனியாக ஒரு கேள்வி போட்டால் விவரங்கள் திரட்டித் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜி. பழனிசாமி.

முற்பகல் 10-15

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மத்தியக் கூட்டுறவு வங்கி சென்ற ஆட்சிக் காலத்திலே இரண்டாகப் பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. அந்தப் பகுதியினுடைய விவசாயிகள், அதை விற்பனை செய்யக்கூடாது என்று எதிர்ப்புகளைக் கடுமையாகத் தெரிவித்தார்கள். இதை அரசு மீண்டும் பரிசீலித்து, அதுபோன்று விற்பனை செய்திருந்தால், மத்திய வங்கியாக, கூட்டுறவு வங்கியை எடுத்துக் கொள்வதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா? அதற்குரிய விவரங்கள் அரசுக்குத் தெரியுமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தொடங்கப்படுவது சம்பந்தமான விவரங்கள் பற்றிய குறிப்புகள்தான் என்னிடத்திலே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனியாக ஒரு கேள்வி போட்டு கோரிக்கை கொடுத்தால், அதுபற்றி தீவிரமாகப் பரிசீலிக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

[2001 ஆகஸ்ட் 29

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இங்கே ஒவ்வொரு ஊராட்சியிலும் தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் தொடங்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அது முடியவில்லை என்று சொன்னாலும்கூட, பல்வேறு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கட்டடங்களே இல்லாமல், போதிய இட வசதி இல்லாமல், அந்த வங்கிகளை நடத்த முடியாத நிலை இருக்கிறதே, அவைகளுக்கு எல்லாம் கட்டடங்கள் அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவுற்ற வங்கிகள் என்கின்ற அடிப்படையிலே சிலவற்றை எடுத்து, அதற்கு NABARD உதவியுடன் சில திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு இந்த அரசு முனைந்திருக்கிறது. அந்த அடிப்படையிலே இதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன்.

**திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னசேலம் தொகுதியைச் சார்ந்த பங்காரம் கூட்டுறவு வங்கியிலே 20 கிராமங்கள் இருக்கின்றன. பெத்தானூர் என்கின்ற பகுதியில், தனியாக வங்கி வேண்டுமென்று பல வருடங்களாகக் கோரிக்கை இருக்கிறது. எனவே, அது அங்கு தனியாக அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்க விரும்புகிறேன். அதே போன்று, சின்னசேலம் கூட்டுறவு வங்கியில் பல்வேறு முறைகேடுகள் எல்லாம் நடந்து, அதனுடைய செயலாளர் அவர்கள் வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். அதிலே நடைபெறுகிற பல்வேறு ஊழல்கள் காரணமாக பொது மக்கள் அவதியுறுகிற நிலைமையிலே இருக்கின்றார்கள். அச்சுறுகிற வகையிலே இருக்கிறார்கள். இதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகப் பதிலை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியிருக்கிற இந்த இரண்டு கோரிக்கைகளையும் தனித்தனிக் கோரிக்கையாகக் கொடுத்தால் இந்த அரசு அதைப்பற்றிப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2001 ஆகஸ்ட் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருப்பூர் திரு. செ. சிவசாமி.

**திரு. செ. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே இருக்கின்ற செயலாளர்கள் எல்லாம் தொடர்ந்து அதே வங்கிகளிலே நீண்ட காலமாக இருக்கின்ற காரணத்தால் அங்கே வருகின்ற விவசாயிகளுடைய பெயரில் போலியாக இவர்கள் கடன்களைப் பெற்று அங்கே தவறு நடைபெறுவதாகத் தெரிய வருகிறது. எனவே, அந்தச் செயலாளர்களை வேறு சங்கங்களுக்கு இட மாறுதல் செய்வதற்கு அரசு ஆய்வு செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் செயலாளர்களை எல்லாம் ஒரு வங்கியிலிருந்து இன்னொரு வங்கிக்கு மாற்றுவதற்காக அரசு போட்ட உத்தரவை எதிர்த்து உயர் நீதிமன்றத்திலே அவர்கள் தடையாணை பெற்றிருக்கின்ற காரணத்தாலே, அது இப்பொழுது நிலுவையிலே இருக்கிறது. விரைவிலேயே இந்த அரசாங்கம் அந்தத் தடையாணையை ரத்து செய்வதற்கான முழு முயற்சிகளிலே ஈடுபடும் என்பதையும், அதற்குப் பின்னாலே இந்த அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே ஆலோசனை பெற்று தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, திரு. கா. கந்தசாமி. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**27—**

பட்டா

***218—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, சுண்டட்டி கிராமத்தில் 50 வருடங்களாகப் புறம்போக்கு நிலங்களில் வசித்து வரும் மக்களுக்குப் பட்டா கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2001 ஆகஸ்ட் 29

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பட்டா வழங்க இயலாது.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் புறம்போக்கு நிலத்தில் விவசாயிகள் 40, 50 ஆண்டு காலமாக தேயிலை பயிர் செய்து வருகின்றார்கள். அவர்கள் மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் பயிர் விளைவிக்கின்ற அந்த நிலத்தை அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்க அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இயற்கைச் சூழலைப் பாதுகாக்கவும், மண் அரிப்பைத் தடுக்கவும், நீலகிரி மாவட்ட வனவிலங்கு பாதுகாப்புச் சங்கம் மற்றும் ஏனையோர் அளித்த யோசனைகளின்படி மலைப்பகுதி சம்பந்தப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளையும் ஆய்ந்த அரசு, மாநிலத்திலுள்ள அனைத்து மலைப்பகுதிகளிலும் விவசாயக் காரியத்திற்காக நில ஒப்படைப்பு பற்றி அரசாணை எண் 1168—ல் ஆணையிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இது தடைசெய்யப்பட்ட பகுதி என்பதனால் கொள்கை அளவிலான முடிவு எடுக்க இருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று மீண்டும் பரிசீலிப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இங்கே பயிர் செய்கின்ற சிறு, ஏழை விவசாயிகளுக்கு வேறு நிலம் இல்லை. அவர்கள் பயிர் செய்வது அரை ஏக்கர், ஒரு ஏக்கர் நிலம்தான். சுண்டட்டி கிராமம் மட்டுமல்லாமல், நெடுகுளா, சேளக்கரை, உள்ளத்தட்டி, குருத்தட்டி, பேரகணி, ஓடேன் போன்ற கிராமங்களில் வசிக்கின்ற விவசாயிகள் மிகவும் ஏழைகள். எனவே, அரசு ஒரு தனிச் சலுகையாக அவர்களுக்குப் பட்டா வழங்க முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறிய பதிலில் விடை இருப்பதால், பரிசீலனை



2001 ஆகஸ்ட் 29]

செய்து அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நீலகிரி மாவட்டத்தில் பெங்கால்மட்டம் போன்ற சில இடங்களில் பட்டா கொடுத்தபோது, ஏற்கெனவே இரண்டு முறை நிலச்சரிவு ஏற்பட்ட இடமாக இருக்கிறது. அது மக்களுக்குப் பிற்காலத்தில் பாதிப்பு ஏற்படுத்துமா, இல்லையா என்பதை விசாரணை நடத்த வேண்டுகிறேன். மேலும், சில கிராமங்களில்— மேல்கவ்வட்டி என்ற கிராமத்தில் கடந்த 700 வருடங்களாக விவசாயிகள் விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்களுக்குப் பட்டா வழங்கவில்லையென்றாலும்கூட, அந்த இடத்தைத் தவிர வேறு இடத்தைத் தேர்வு செய்து, புதிதாக வீடு கட்டும் மக்களுக்குப் பட்டா கொடுக்கலாம். ஏற்கெனவே அவர்கள் வரியும் செலுத்தி வருகிறார்கள். அவர்கள் பட்டா கேட்கவில்லை. பட்டா நிறுத்தி வைக்கப்பட்டதை நாங்கள் அறிவோம். பரம்பரை, பரம்பரையாக, 700 வருடங்களாக விவசாயம் செய்கிறவர்கள். 20 சென்ட், 30 சென்ட் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். புதிதாக வீடுகட்டும் மக்களுக்கு வேறு பக்கத்தில் பட்டா வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய பிரச்சினையில், அவை எந்தப் பகுதியில் இருக்கின்றன என்று அவர்கள் எழுதிக்கொடுப்பார்களேயானால், அரசு பரிசீலனை செய்து தக்க முடிவு எடுக்கும் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, திரு. தா. பச்சைமால், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**28—**

## விவசாயக் கல்லூரி

***2099—திரு. தா. பச்சைமால்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. தா. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிரிகள் கொடுத்த சோதனைகளையெல்லாம் சாதனையாக்கி, இமாலய வெற்றி கண்டு தமிழக மக்களின் ஒளி விளக்காய்த் திகழ்கின்ற மாண்புமிகு அன்னையே, முக்கடலும் சங்கமிக்கும் எழில்மிக்க கன்னியாகுமரி மாவட்டத்தில் தம்பத்துக்கோணம் என்னும் குக்கிராமத்தில் ஒரு சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்த என்னை, உலகத்தில் எந்தவொரு அரசியல் கட்சித் தலைமையும் செய்யாத வண்ணம், கட்சியின் ஒன்றியக் கழகச் செயலாளராக இருந்த என்னை, கழக மாவட்டச் செயலாளராக ஆக்கி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பச்சைமால், கன்னிப் பேச்சிலே வைத்துக்கொள்ளலாம்.

**திரு. தா. பச்சைமால்:** அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லிவிட்டு, பிறகு கேட்கிறேன். குளச்சல் சட்டமன்ற வேட்பாளராக அறிவித்து, எனது வெற்றிக்காக தொகுதி முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் செய்து வாக்குகளைச் சேகரித்து வெற்றி பெறச் செய்த எங்கள் குடும்ப அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது வெற்றிக்காக உழைத்த கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், என்னைப் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த குளச்சல் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தை இம்மாமன்றத்தில் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் கடல் வளமும், வயல் வளமும், மலை வளமும் நிரம்பிய பகுதி. இங்கே பேச்சிப்பாறையில் அன்னாச்சிகுளம் ஆராய்ச்சி மையமும், திருப்பதிசாரத்தில் நெல் விதை ஆராய்ச்சி மையமும், கன்னியாகுமரியில் ஒரு பழத்தோட்டமும் மற்றும் குமரி மாவட்டத்தில் வாசனைப் பயிர்கள் பலவகைகளும், காய்கறிகள் மற்றும் பூந்தோட்டங்களும் பல இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவும் இருப்பதால்தான் அமைச்சர், இல்லை என்கிறார். வேறு கல்லூரி இல்லை என்கிறார்.



**திரு. தா. பச்சைமால்:** இங்கே ஒரு விவசாயக் கல்லூரி வரவேண்டுமென்று பல காலமாக மாவட்ட மக்கள் எதிர்பார்க்கின்றனர். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் விவசாயக் கல்லூரி அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வேளாண் கல்லூரி வேண்டும் என்று கேட்கிறார். வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பிலே 10 கல்லூரிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆண்டு ஒன்றுக்கு 531 மாணவர்கள் கல்லூரியிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 2500-க்கும் மேற்பட்டவர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். ஒரு கல்லூரி தொடங்கப்பெற வேண்டுமென்று சொன்னால் கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் அரசுக்குச் செலவாகும். இந்த நிலையிலே கல்லூரி அமைக்கிற எண்ணம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980-ஆம் வருடத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்த நேரத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலே 'Indian Council of Research Centre' என்ற ஒரு ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்துவதற்கு இடத்தைக் கேட்டார்கள். அன்று போதுமான இடம் அரசுக்குக் கொடுக்க இயலாது என்ற நிலை இருந்ததன் காரணமாக அந்த வாய்ப்பைக் குமரி மாவட்டம் இழந்துவிட்டது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் பச்சைமால் அவர்கள் குறிப்பிட்டதுபோல அங்கே பல முறையிலே உள்ள செடிகள் வளர்க்கப்படுகின்றன. ஆராய்ச்சி நிலையம் வைக்க வேண்டுமென்று ஐ.சி.ஏ.ஆர். விரும்பியதுகூட ஆசியாவில் இருக்கிற tropical countries-லே உருவாகிற செடிகள் எல்லாம் குமரி மாவட்டத்திலே வளர்க்கப்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தினாலே அவர்கள் அப்படிப்பட்ட ஒரு பிரேரணையைக் கொடுத்தார்கள். இன்று திருவட்டாரிலே ஆதிகேசவசுவாமி கோவிலுக்குச் சொந்தமான 100 ஏக்கருக்கு அதிகமான இடம் இன்னொரு தனியாருக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை வேளாண்மைத் துறை எடுத்து, அங்கே பெரிய அளவுக்கு ஒரு

[2001 ஆகஸ்ட் 29

வேளாண்மைக் கல்லூரியை உருவாக்கவில்லை என்றாலும்கூட, ஒரு மினி கல்லூரியாவது ஏற்படுத்துவதற்கு முன்வருமா? அங்கே இன்று பல முறையில் உள்ள நோய்கள் செடிகளுக்கு வந்துகொண்டு இருக்கின்றன. ' ஆகவே, அதைப் பற்றியெல்லாம் ஆராய்ச்சி நடத்த வேண்டிய தேவையும் ஏற்படுகிறது. இதையெல்லாம் கணக்கிலே வைத்துக்கொண்டு ஒரு மினி வேளாண்மைக் கல்லூரியையாவது ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மினி வேளாண்மைக் கல்லூரி தரப்படுமா என்று கேட்கிறார்கள். மினி கல்லூரி ஆரம்பிப்பது என்று சொன்னால் 'மனி' (Money) தேவைப்படும். ஆகவே, அந்த எண்ணம் இப்பொழுது அரசுக்கு இல்லை. (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் மணி, அவர் 'Money' தேவைப்படும் என்று சொல்லிவிட்டார். (சிரிப்பு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், வேளாண் பட்டப்படிப்பு படித்தவர்களுக்கே வேலை இல்லாத நிலையிலே மீண்டும் கல்லூரி தொடங்குவது சாத்தியம் இல்லை என்று பதிலுரையிலே சொல்லியிருக்கிறார்கள். பயிற்சி கொடுத்து, பயிற்சி பெற்றவர்களுக்கு அரசு வேலை கொடுக்க வேண்டும் என்ற அந்த நோக்கத்திலே நாம் இருக்கின்ற காரணத்தினாலேதான் அப்படிப்பட்ட நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. இருந்தாலும்கூட, நம்முடைய நாடு உழவுத் தொழிலையே நம்பியிருக்கக் கூடிய நாடு, பிரதானத் தொழிலாகக் கொண்டிருக்கக்கூடிய நாடு. இந்த நாட்டிலே அரசு வேலைக்கு மாத்திரமல்லாமல், வேளாண் தொழிலை ஊக்குவிப்பதற்காகவும், இன்னும் வேளாண் சம்பந்தப்பட்ட சார்புத் தொழில்கள் எல்லாம் சுய தொழிலாகச் செய்வதற்கு, படித்த இளைஞர்கள் உழவுத் தொழிலில் ஈடுபடக்கூடிய வகையிலே நல்ல பயிற்சிகளைக் கொடுத்து வேளாண்மையைப் பெருக்குவதற்கு மாவட்டந்தோறும் கல்லூரிகளை அமைத்து, உழவுத் தொழிலை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள், 'மனி' (Money) இல்லை என்று சொன்னவுடன், உழவர்களுக்கெல்லாம்



2001 ஆகஸ்ட் 29]

மாவட்டந்தோறும் பயிற்சி அளிக்கப்படுமா என்று கேட்கிறார்கள். மாவட்டந்தோறும் உழவர்களுக்கு எல்லாம் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. கல்லூரியிலும் அதற்கெல்லாம் 'மனி' (Money) தேவைப் படுகிறது. ஆகவே, அந்த எண்ணம் இப்பொழுது அரசுக்கு இல்லை. நீங்கள் சொல்கிற நல்ல கருத்துகளை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29, திரு. கோவை தங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**29–**

## பேருந்து வசதி

***895–திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் போக்குவரத்து வசதி குறைவாக உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பகுதியில் பயணிகள் தேவைக்கேற்ப தற்போது பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, வால்பாறை பகுதியில் பேருந்துகள் குறைவாக இயக்கப்பட்டு வருகின்றன என்ற கருத்து சரியானது அல்ல.

முற்பகல் 10—30

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மலைப் பகுதியில் பேருந்துகள் மிகக் குறைவாகச் சென்று கொண்டிருக்கின்றன. மக்கள் பல மணி நேரம் காத்திருக்கிறார்கள். பேருந்துகளில் மக்கள் நெருக்கிக்கொண்டு செல்கிறார்கள். இதனால் தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் கவலை அடைந்திருக்கிறார்கள். 1991–96 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி

அவர்கள் ஆட்சியில் அங்கு பேருந்துகள் அதிகமாக ஓடிக்கொண்டிருந்தன. சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 3 பேருந்து வழித்தடங்கள் நிறுத்தப்பட்டு இருந்தன. அதனால் மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு, அங்கே வாழ்கின்ற மக்களுக்குப் போதுமான பேருந்துகளையும், மினி பேருந்துகளையும் விடுவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஒரு நாளைக்கு இப்போது 40 ஆயிரம் ரூபாய் அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அரசுப் பேருந்துகள் குறைவாகச் செல்வதால், பிரைவேட் வேன்கள், பிரைவேட் கார்கள் அதிகமாக ஓடிக்கொண்டிருப்பதால் நஷ்டம் ஏற்படுகிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அதைப் பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல, 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை அம்மாவினுடைய ஆட்சி போக்குவரத்துக் கழகங்களுடைய பொற்கால ஆட்சி என்பதை நான் ஏற்கெனவே இங்கே தெரிவித்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது வால்பாறை பகுதியிலே பேருந்துகள் செல்வது நிறுத்தப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். தற்போது 58 பேருந்துகள் அந்தப் பகுதியிலே ஓடிக்கொண்டிருக்கின்றன. 100–க்கும் மேற்பட்ட சிறிய வேன்கள் அங்கே பேருந்துப் பயணிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதை மாற்றி, இடையூறு இல்லாமல் மக்கள் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அந்த வட்டாரப் போக்குவரத்து ஆணையருக்குத் தகவல் கொடுக்கப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு**: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. தகவல் கோரல்

### (அ) மாநில மனித உரிமைகள் ஆணைய உறுப்பினர் நியமனம்

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தனி நீதிமன்றங்களுக்கு 3 நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். அவர்களிலே ஒருவருடைய பெயர் உயர் நீதிமன்ற நீதிபதி பதவிக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. அந்தப் பரிந்துரை ஏற்கப்படவில்லை. அதற்குப் பிறகு, அவர் தமிழ்நாடு அரசுத் தேர்வாணையத்தினுடைய உறுப்பினராக நியமிக்கப்பட்டார். பிறகு மாநில மனித உரிமை கமிஷன் உறுப்பினராக நியமிக்கப்பட்டு இருக்கிறார். மனித உரிமை கமிஷன் உறுப்பினர் பதவி என்பது உயர் நீதிமன்ற நீதிபதி பதவிக்கு நிகரானது. எனவே, அவர் அரசுத் தேர்வாணையத்தினுடைய உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டு இந்தப் பதவியை ஏற்றுக்கொண்டு இருக்கிறார். அரசியல் அமைப்புச் சட்டம், பிரிவு 319–இன்படி தேர்வாணையத்திலே தலைவராகவோ, உறுப்பினராகவோ இருந்த ஒருவர் அரசுப் பணி எதிலும் அமரக்கூடாது என்பது தெளிவாக இருக்கிறது. எனவே, இந்த நியமனம் அரசியல் சட்டத்திற்கும், விதிமுறைகளுக்கும் உட்பட்டதுதானா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோஜ் பாண்டியன் அவர்கள் இதுகுறித்து அவையிலே வினா எழுப்பினார்கள். இது அரசியல் சட்டத்திற்கு மாறான ஒரு நியமனம், இது ஒரு தவறான நியமனம், ஏற்கெனவே தனி நீதிமன்றத்திலிருந்துவிட்டு, பிறகு தேர்வாணையத்திலிருந்துவிட்டு, பிறகு இப்போது மாநில மனித உரிமைகள் ஆணையத்திலே அவர் இருப்பது சட்ட விரோதமானது என்பதை அவைக்கு ஏற்கெனவே நான் அறிவித்து இருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள், இதுகுறித்து எத்தகைய நடவடிக்கையை மாநில அரசு, மைய அரசோடு கலந்து எடுக்க வேண்டுமென்பதை ஆய்ந்து, அந்த நடவடிக்கைகளை எடுக்க முயற்சிகளை மேற்கொள்வார்கள்.

[2001 ஆகஸ்ட் 29

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாக்கள்–விடைகள் நேரம் முடிந்த பிறகு, கவன ஈர்ப்புத் தீர்மானம் வரும் என்று சொன்னீர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வைதியலிங்கம் உட்காருங்கள். அது பிறகு வருகிறது. அவசரப்படாதீர்கள், உட்காருங்கள்.

*முற்பகல் 10-35*

### (ஆ) காவிரி நீர் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்று சொல்லக்கூடிய தஞ்சையிலே வாழக்கூடிய விவசாயிகள் எல்லாம் தங்களுடைய நெற்பயிர்கள் வாடிவிடுமோ என்று சொல்லி, அடிவயிற்றிலே நெருப்பைக் கட்டிக்கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையிலே, காவிரியிலே தண்ணீர் வராதா என்ற கேள்விக்குறியோடு ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். கர்நாடக அரசு காவிரி நீரை விடமாட்டோம் என்று சொல்லி மறுத்ததன் காரணமாக நாங்களும் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து இருக்கிறோம். ஆகவே, இன்று தமிழகத்தினுடைய நெற்களஞ்சியத்தை உருவாக்கக்கூடிய அந்தப் பகுதியிலே பயிர்கள் எல்லாம் வாடிக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் கர்நாடக அரசிடமிருந்து காவிரி நீரைப் பெறுவதற்கு நம்முடைய தமிழக அரசு என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது? பத்திரிகையிலேகூட செய்தி வந்து கொண்டிருக்கிறது. இப்படி பத்திரிகைச் செய்திகள் வருவதனாலே, பிரச்சினைகள் நிச்சயமாகத் தீர்ந்துவிடப் போவதில்லை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும் இன்னும் முனைப்போடு செயலாற்றி, கர்நாடக அரசிடமிருந்து எந்த வகையில் காவிரி நீரைப் பெற இருக்கிறார்கள்? கட்சி வித்தியாசம் இல்லாமல் அனைத்துக் கட்சி உறுப்பினர்களையும், அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி, தமிழகத்திற்குத் தண்ணீரைப் பெறுவதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நல்ல முயற்சிகள் மேற்கொள்வார்களா? எந்த முயற்சியின் அடிப்படையிலே காவிரி நீரைப் பெற இருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாக அறிவிக்கவேண்டுமென்று கேட்டு நான் அமர்கிறேன்.



2001 ஆகஸ்ட் 29]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் கொடுத்து இருக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, தனியாக ஒத்திவைப்புத் தீர்மானம் வந்த பிறகுதான் பதில் சொல்லுவார்கள், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுவும் காவிரி பற்றியதுதானே?

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. *(குறுக்கீடுகள்)*

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Zero hour–லே என்னைப் பேசவிடுங்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது முக்கியமான பிரச்சினை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து பேசி முடிவு சொல்வார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பேச விடுங்கள், *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காவிரித் தண்ணீர்தானே வேண்டும்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் பேசுகின்றபோது, காவிரித் தண்ணீர் விடுவதற்கு கர்நாடக அரசு மறுத்துவிட்டது என்று இங்கே குறிப்பிட்டார்கள். அப்படி அதிகாரப் பூர்வமாக எந்தத் தகவலும் கர்நாடக அரசிடமிருந்து இதுவரை பெறப்படவில்லை. ஏற்கெனவே இந்த அவையில் நான் தெரிவித்ததுபோல்,

காவிரி நீர் பெறுவது குறித்து கர்நாடக முதலமைச்சருடன் ஒரு சந்திப்புக்கு நேரம் கேட்டு இருக்கிறோம். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், அரசின் தலைமைச் செயலாளர் அவர்களும், பொதுப் பணித் துறைச் செயலாளர் அவர்களும் கர்நாடக முதலமைச்சரைச் சந்திக்க நேரம் கேட்டு இருக்கிறோம். நேரம் ஒதுக்குவதாக கர்நாடக முதலமைச்சர் எனக்கு பதில் அனுப்பி இருக்கிறார். அதோடு, மத்திய அரசு நடுவர் மன்றம் கொடுத்த இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதற்காக அமைத்துள்ள கண்காணிப்புக் குழு – மானிடரிங் கமிட்டி – கூட்டத்தை உடனடியாகக் கூட்ட வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதி இருந்தோம். அதற்கு மத்திய நீர்வளத் துறை அமைச்சர், இந்தக் கூட்டம் வருகிற 6 ஆம் தேதி நடைபெறும் என்று தெரிவித்து பதில் அனுப்பி இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கூட்டம் நடைபெறும் வரை நாம் காத்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதே பிரச்சினைதானே? கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர் வரவில்லை என்கிற மாதிரிக் கேட்கிறீர்களா?

**திரு. கோ.சி. மணி:** அதுபற்றி இல்லை. (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** தண்ணீர் வரவில்லை. (குறுக்கீடுகள்) கர்நாடக அரசின் நீர்வளத் துறை அமைச்சர் பேட்டியில், 'இல்லை' என்று சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மாநிலங்களுக்கு இடையேயுள்ள பிரச்சினை. மிக முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளில் வரும் செய்திகளின் அடிப்படையில் ஒரு மாநில அரசு பதில் அளிக்க முடியாது. பத்திரிகைகளில் வரும் செய்தியை அப்படியே உண்மை என்று எடுத்துக்கொண்டு நாம் எந்த முடிவுக்கும் வர முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) நாம் கர்நாடக முதலமைச்சரைக் கேட்டு இருக்கிறோம். அவரிடமிருந்து அதிகாரப் பூர்வமான பதில் 'இல்லை' என்று வரவில்லை.



## (இ) நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைத்தல்

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் பற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றிப் பிறகு எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. கோ.சி. மணி:** இது முக்கியமான பிரச்சினை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொடுத்து இருக்கிறீர்கள்; ஆய்வில் இருக்கிறது. அமைச்சரிடத்திலே பதிலைக் கேட்டு, பின்னர் எடுத்துக்கொள்கிறேன்.

**திரு. கோ.சி. மணி:** நான் இதுபற்றிச் சொல்லிவிடுகிறேன். இது நியாயமானது. அனுமதிக்கலாமா என்பதுபற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அரசின் நெல் கொள்முதல் பற்றியது.

**திரு. கோ.சி. மணி:** முக்கியமான பிரச்சினை, அதனால் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மைக் காலங்களில் தமிழகத்தில் காவிரி டெல்டா பகுதிகளில் அறுவடைக் காலங்களில் அரசே நேரடி நெல் கொள்முதல் ஆரம்பித்து வாங்குவது வழக்கமாக இருந்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றி நீங்கள் கொடுத்து இருக்கிறீர்கள்.

**திரு. கோ.சி. மணி:** இப்போது குறுவை அறுவடை நடந்து கொண்டிருக்கிறது. சென்ற காலங்களில் செப்டம்பர் 1ஆம் தேதிக்குள் ஆங்காங்கே நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை உருவாக்கி நெல் வாங்கிக் கொண்டிருந்தார்கள். இந்த வருடம் செப்டம்பருக்கு இன்னும் 2 நாட்கள்தான் இருக்கின்றன. எனவே, வாங்கப் போகிறார்களா? அரசு கொள்முதல் நிலையங்களை அமைக்குமா, இல்லையா? அந்தக் கொள்கையையாவது அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10—40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை இப்போதுதான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அரச மரத்தைச் சுற்றியவுடனே அடிவயிற்றைத் தொட்டுப் பார்த்தால் எப்படி? உட்காருங்கள். அமைச்சரிடமிருந்து பதில் வந்தவுடன் எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. கோ.சி. மணி:** இதுவரையில் எதிர்பார்த்தேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து முடிவெடுப்பதற்காக 5–9–2001 அன்று தமிழக அமைச்சரவைக் கூட்டம் கூடவுள்ளது. அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) சென்னை, மண்ணடி, அங்கப்ப நாயக்கன் தெருவில் குடிநீர் வழங்காததால் 27–8–2001 அன்று ஏற்பட்ட நிகழ்வுகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சென்னை, மண்ணடி, அங்கப்ப நாயக்கன் தெருவில் 27–8–2001 அன்று சிலர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து, ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. ஹேமச்சந்திரன், திரு. மணி, திரு. ஞானசேகரன், பேராசிரியர் மற்றும் பரிதி இளம்வழுதி ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. அப்துல் லத்தீப் அவர்கள் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள அனுமதியளிக்கிறேன். அறிவிப்பை மட்டும் சுருக்கமாக எடுத்துக் கூறுமாறு அழைக்கிறேன். மாண்புமிகு பேராசிரியர்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் குடிநீர்ப் பிரச்சினை மிகக் கடுமையாக பொதுமக்களைப் பாதித்து வருவதை இந்த அவையிலே உள்ள அனைவரும் அறிவோம். நான் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைமுகம் தொகுதியிலேயும் அந்தக் குடிநீர்ப் பிரச்சினை, அதுவும் லாரிகள் மூலமாக வழங்குகிறபோது மக்களுக்கு இடையிலேயே பல்வேறு விதமான வருத்தங்கள் ஏற்படுகின்றன; மாறுபாடுகள் ஏற்படுகின்றன. மெட்ரோ வாட்டர் அதிகாரிகளுக்கு, நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், எந்தெந்தப் பகுதிகள் மிக அதிகமாகப் பாதிக்கப்படுகின்றன என்ற விவரத்தைத்



தெரிவித்து, அவர்களுக்கெல்லாம் குடிநீர் வழங்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். அவர்களும் முறையாகக் கவனிப்பதாகத்தான் தெரிவித்தார்கள். ஆனால், எதிர்பாராத வகையில், மண்ணடி வட்டாரத்திலே ஒரு பகுதிக்கு 3 நாட்கள் தொடர்ந்து லாரித் தண்ணீர் கிடைக்காத ஒரு நிலையினால் ஏற்பட்ட வேதனையும், இன்னொரு பகுதியிலே, எப்படியோ தினந்தோறும் லாரியிலே தண்ணீர் வருகிறது என்ற நிலைமையும், அங்கே உள்ள மக்களுக்கு, ஏதோ பாரபட்சமாக நடைபெறுகிறது என்ற வருத்தத்தை, ஆத்திரத்தை ஏற்படுத்தி, அதனுடைய விளைவாக, ஒரு பகுதிக்கு வந்த லாரியை, தண்ணீர் கிடைக்காத பகுதியைச் சேர்ந்தவர்கள் மடக்கி, தாங்களே தண்ணீர் விட்டுக்கொள்கிற முயற்சியிலே ஈடுபட்டு, அதன் காரணமாக இரண்டு பகுதிகளுக்கிடையிலே, அங்கே உள்ள இளைஞர்களும், தாய்மார்களும் மற்ற அனைவரும் – நான் டி.வி. காட்சிகளையும் பார்த்தேன்; விவரமும் கேட்டேன்; பத்திரிகைகளிலே வந்த செய்தியையும் பார்த்தேன் – வெறும் தண்ணீர் கிடைக்கவில்லை என்பதிலே ஏற்பட்ட பிரச்சினை, இரண்டு தெருக்களிலே உள்ள பொதுமக்களிடையே ஏற்பட்ட ஒரு பிரச்சினையாக வளர்ந்து, ஒரு வகையில் அது ஒரு சிறு கலவரம்போல அங்கே தோன்றியிருக்கிறது. காவல் துறையினர் பல பேரைக் கைது செய்திருக்கிறார்கள். அதிலே முக்கியமான பிரச்சினை தண்ணீர் கிடைப்பதில்தான்.

ஒரு கலவரம்போல ஏற்பட்டுவிட்ட விளைவுகளுக்காக, காவல் துறை கைது செய்ய விரும்பினால் அதுகூட கட்டுப்படுத்துவதற்குத் தேவையான ஒன்றுதான் என்று நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், கைது செய்ததற்குப் பின்னர், யார், யார் எந்தெந்தக் கட்சி என்று, தி.மு.க.–வினரை மட்டும் கைது செய்த பட்டியலிலே வைத்துக்கொண்டு, வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களையெல்லாம் விடுவித்துவிட்டார்கள். எனக்கு அந்தப் பாரபட்சம்தான் வருத்தம் அளிக்கிற ஒன்று. நான் தவறு செய்தால், எப்படி அந்தத் தவறு காவல் துறையால் நடவடிக்கைக்கு உரியதாக ஆகுமோ, அப்படித்தான் வேறு எந்தக் கட்சிக்காரராக இருந்தாலும் ஒரேவிதமாக நடத்தப்படுகிற நிலைமை இருக்கவேண்டும். இரண்டு பகுதிகளிலே இரண்டு குழுக்களாக அமைத்து நடைபெற்ற போராட்டம் அல்ல. எதிர்பாராமல் ஏற்பட்ட மாறுபாடு. அதிலே இரண்டு பகுதிகளிலேயும் எல்லோரும் இருக்கிறார்கள். பொதுமக்களைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள். அதிலே ஒரு பாரபட்சமான நடவடிக்கை எடுப்பதன் மூலமாக, அங்கே உள்ள இளைஞர்களுக்கிடையிலே, இன்னும் சொல்லப் போனால், தாய்மார்களுக்கிடையில்கூட, தாங்கள் அநீதிக்கு ஆளாக்கப்பட்டிருப்பதாக ஒரு வேதனை ஏற்பட்டிருக்கிறது. அதிலே

நிலைப்பாடு நியாயத்தின்பாற்பட்டதாக இருக்கும். ஏனென்றால், பெண்களை அவ்வளவு அர்ச்சனை செய்து இருக்கிறார்கள். யாரோ தேவாதிதேவர்களாம். அந்தப் பெயர்ப் பட்டியலை எல்லாம் நான் கொண்டு வந்திருக்கிறேன். அந்தப் பட்டியலில் உள்ளவர்கள் எல்லாம் பெண்களின் சேலையைப் பிடித்து இழுத்திருக்கிறார்கள். தண்ணீர் கிடைக்கவில்லை என்பதற்கு நாங்கள் எப்படிப் பொறுப்பு? எந்த ஆட்சி வந்தாலும் எங்களுக்கு இந்த நிலை என்று சொன்னால், நாங்கள் ஒரு முடிவுக்கு வரவேண்டிய கட்டாயம் ஏற்படும் என்பதை மிகத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், பேராசிரியர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து ஒரு ஒட்டுமொத்தமான கருத்தை உருவாக்குங்கள். அரசியலில் தேர்தல் வரலாம், தேர்தல் போகலாம். தேர்தலுக்காக சில நிலைகளை சில பேர் எடுக்கலாம். சிறுபான்மை மக்கள் தங்களுடைய கொள்கைக்கேற்ப, மனசாட்சிக்கேற்ப, இருக்கிற சூழ்நிலைக்கேற்ப ஒரு நிலையை எடுத்திருக்கலாம். அதைச் சொல்லி தாக்கி இருக்கிறார்கள்.

*முற்பகல் 10-50*

**பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே...

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் முடித்து விடுகிறேன். பேராசிரியர், நான் முடித்த பிறகு தாங்கள் எதையும் சொல்லலாம். உங்கள் பேச்சிற்கு நான் எப்போதும் மறுப்புச் சொல்வது இல்லை. நீங்கள் பேசிவிட்டீர்கள் என்பதற்காகத்தான் மிகுந்த தயக்கத்தோடு நான் பேசிக் கொண்டு இருக்கின்றேன். நூர் முகமது என்கிற ஒரு பெரியவரை – அவர் தடுத்து இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அண்ணன் அப்துல் லத்தீப் அவர்களுக்கு இருக்கிற வேதனை தெரிகிறது. நாம் அமைதி உண்டாக்குவதற்குத்தான் முயற்சி செய்ய வேண்டும். முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல இருக்கிறார்கள். இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் போதும்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** அரசின் கவனத்திற்குத்தான் கொண்டு வருகிறேன். பிறர் தாக்குவதுபோல தாக்கிக் கொண்டு இருக்கிறேனா? இதற்குக்கூட இங்கே உரிமை இல்லையா? தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள். என்னை ஏன் தடுக்கிறீர்கள்?



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தடுக்கவில்லை.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் என்ன ஆபாசமாகப் பேசி விட்டேனா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தடுக்கவில்லை. தலைவர்கள் எல்லாவற்றையும் அமைதிப்படுத்துவதற்காக இருக்கிறோம். ஆகவே, உணர்ச்சி வசப்படாமல் பேசுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** அமைதி ஏற்படுத்துவதற்காகத்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். நானே சொல்லிவிட்டேன். பல விஷயங்களைப் பேச விரும்பவில்லை. ஆழமாக எல்லாவற்றையும் பேச விரும்பவில்லை. ஏனென்றால், நான் அமைதியை விரும்புகிறவன். அமைதியாக எல்லா சமுதாய மக்களும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறவன். அங்கேகூட இது வகுப்புவாதம் என்று நான் சொல்லவில்லை. இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் ஏற்பட்ட கலவரம் என்றும் நான் சொல்லவில்லை. இதற்கு அடிப்படை, அரசியல் என்பதைத்தான் மிகத் தெளிவாக நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு வயோதிகருடைய கை வெட்டப்பட்டு இருக்கிறது. அன்வர் ஸ்டோர்ஸ் என்ற ஸ்டோர்ஸ்–ஐ முழுமையாகக் கொள்ளை அடித்திருக்கிறார்கள். பாவம், ஆட்டோ ரிக்ஷாக்களை ஓட்டிப் பிழைத்துக் கொண்டிருந்தவர்கள், அவர்கள் ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக ஏறக்குறைய 13 ஆட்டோ ரிக்ஷாக்கள் நொறுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை எப்படி அவர்கள் மீட்டு, அவர்களுடைய வாழ்க்கைக்கு வழி செய்துகொள்வார்கள்? செயல்பட்டுக் கொண்டிருந்த அந்த ஆட்டோ ரிக்ஷாக்களை நொறுக்கி இருக்கிறார்கள். தெருவிலே நிறுத்தி வைத்திருந்த 8 கார்கள் உடைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு மதரஸா – எங்களுடைய மார்க்கத்தை, பாடத்தைப் போதிக்கிற மதரஸா – முழுமையாக நொறுக்கப்பட்டு இருக்கிறது. புதிதாக வைக்கப்பட்டிருக்கிற கண்ணாடிகள் எல்லாம் உடைக்கப்பட்டிருக்கின்றன. அலுவலகத்திற்குள் நுழைந்து, அலுவலகத்திலே இருக்கிற கோப்புகள், அங்கே இருக்கிற தளவாடங்கள். இவற்றையெல்லாம் அழித்திருக்கிறார்கள். இந்த நிலை நீடித்தால், நான் என்னவென்று சொல்வது, எனக்குத் தெரியவில்லை. எப்படி நடந்தாலும் நாங்கள்தான் தாக்கப்படுவதா? நாங்கள் செய்த தவறு என்ன? ஏன் ஒரு ஜனநாயகத்திலே எங்களுடைய முடிவை, நாங்கள் எப்படி சரி என்று நினைக்கிறோமோ அப்படி எடுக்க இந்தச் சமுதாயத்திற்கு உரிமை இல்லையா? தேர்தல் நடந்து இத்தனை நாளைக்குப் பிறகு நாங்கள் தண்டிக்கப்பட்டு இருக்கிறோம் என்றால், இங்கே இருக்கிற ஆட்சி அதற்கு பதில் சொல்ல

வேண்டும். The Government is vicariously liable whatever it may be. You must make good the loss that the community has sustained. The Chief Minister should take due cognisance of the grave genocide, the perpetration of the genocide there and therefore, the Chief Minister may kindly take necessary action to restore peace and also to provide such compensation as is essential and warranted in the circumstances.

**திரு. பரிதி இளம்வழுதி:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** இனிமேல் இது நடக்கக்கூடாது. நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? அந்த மக்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய வகையில் என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை முதலமைச்சர் அவர்கள் தெளிவாக்க வேண்டும் என்று கூறி, பேராசிரியர் அவர்கள் மிகப் பொறுப்போடு சொன்னார்கள். அது அவருடைய தொகுதி, எனக்குத் தெரியும். அவருக்கு இருக்கிற நிலைப்பாடு, இப்பக்கம் பேசுவதா, அப்பக்கம் பேசுவதா என்கிற தர்மசங்கடமான நிலை; First Line Beach–க்குப் பேசுவதா? அங்கப்ப நாயக்கனுக்குப் பேசுவதா? இரண்டும் அவருடைய தொகுதியைச் சேர்ந்தது. எனவே அதைப் பேச வேண்டிய முறையிலே பேசி இருக்கிறார்கள். அவருக்கு எந்த மாறுபாட்டையும் நான் இங்கே தெரிவிக்க விரும்பவில்லை. இருந்தாலும் அவர்கள்கூட ஒத்துழைத்து, அவர்களும் இத்தகைய அராஜகத்தைக் கட்டுப்படுத்த முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன். இந்த நிலை பல மாவட்டங்களில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டீர்கள், போதும்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பல மாவட்டங்களில் பரவியிருக்கிறது. இதைத் தடுக்க உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.

*முற்பகல் 10—55*

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது தலையிட்டு குறுக்கிட்டுப் பேசுவதற்காகப் பேசவில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்திப் அவர்கள்



பேசுகின்றபோது, ஏதோ தேர்தலோடு தொடர்புடைய ஒரு நிகழ்ச்சியாக அதைக் கொண்டுவந்து காட்டினார்கள். அந்தப் பகுதியிலே எனக்கு நீண்ட நாள் பழக்கம். அங்கேயுள்ள இஸ்லாமிய நண்பர்கள் எல்லாம் எனக்கு ஆதரவாகப் பணியாற்றி இருக்கிறார்கள். வாக்குகள் ஏறி இருக்கலாம், குறைந்திருக்கலாம். வெற்றியும் பெற்றிருக்கிறேன். இஸ்லாமிய நண்பர்களுக்குத் தனியாக நன்றியும் தெரிவித்திருக்கிறேன். ஆகவே தேர்தலோடு, ஒருவேளை அரசியல் கொள்கை வேறுபாடு காரணமாக ஏற்பட்டிருக்கக்கூடிய மாறுபாடுகளை திரு. லத்தீப் அவர்கள் கருதிப் பேசி இருக்கக்கூடும். ஆனால், இந்த நிகழ்ச்சியில், தேர்தலை அடிப்படையாக வைத்து எந்த மாறுபாடும் இல்லை. வேறு பல குரோதங்கள், மாறுபாடுகள் யார், யார் இடத்திலே வேண்டுமானாலும் இருந்திருக்கக்கூடும். ஆனால், இது தேர்தலையோ அல்லது தி.மு.க. அரசியல் கொள்கையையோ அல்லது இஸ்லாம், இந்து என்ற அடிப்படையிலே ஏற்பட்ட ஒரு பிரச்சினையல்ல. வேறுவிதமாக எப்படி ஏற்பட்டிருந்தாலும் குற்றமுடையதுதான். அப்படி ஏற்பட்டிருக்கக்கூடியதிலே, அந்த அடிப்படையிலே, தங்களுக்குக் குடிதண்ணீர் தராமல் வேறு பகுதிக்கே தொடர்ந்து தருகிறார்கள் என்ற ஏதோ ஒரு மாறுபாடு. அதை அரசியல் கண்ணோட்டத்திலே இப்பொழுதும் பார்க்கத் தேவையில்லை. எப்பொழுதும் பார்க்கத் தேவையில்லை என்பதையும், என்னைப் பொறுத்தவரையில், இஸ்லாம், இந்து என்ற வேறுபாடுகளை மெல்ல நீண்ட காலத்திற்கு முன்னாலே இருந்து மறந்து பழகுகிற ஓர் இயல்பை வளர்த்துக் கொண்டவன் என்பதையும், நான் சார்ந்த நிலையில், அங்கு ஏற்பட்ட பிரச்சினையைத் தனிப்பட்ட முறையில் கருத வேண்டுமே தவிர, வேறு அரசியலோடு இணைப்பதிலே அர்த்தம் இல்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன். நீங்கள் ஏதாவது சொல்ல வேண்டுமா? சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன் சொல்லுங்கள். திரு. ஞானசேகரன், அடுத்து நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் வேதனை மிக்க ஒரு முக்கியமான பிரச்சினை இது. சென்னை நகரத்திற்குக் குடிதண்ணீர் கொண்டு வருவதற்குத் தமிழக அரசும், அதிலும் குறிப்பாக, தமிழக முதலமைச்சரும் கடினமான பல முயற்சிகளை எடுத்து, இப்போது குடிதண்ணீர் சென்னை மக்களுக்கு

வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதை சரியான முறையிலே, அனைத்துப் பகுதி மக்களுக்கும் கிடைக்கக்கூடிய முறையிலே விநியோகம் செய்ய வேண்டிய பொறுப்பு, அரசுக்கும், அதனுடைய அதிகாரிகளுக்கும் உண்டு என்பதை நாம் மறந்துவிட முடியாது. குறிப்பாக, Metro Water அதிகாரிகள் இதிலே தவறு செய்திருக்கிறார்களா என்பதை நாம் பரிசீலிக்க வேண்டும். ஏனென்றால் தண்ணீர் விநியோகம் செய்வதிலே வந்த –discrimination– பாகுபாடுதான் இதற்குக் காரணம் என்று செய்திகள் வருகின்றன. வியாபாரிகளுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு பிரத்தியேகமாக ஒரு முனைப்புக் காட்டப்பட்டதைத் தொடர்ந்து, அங்கே இருக்கின்ற மக்கள் தங்களுக்குத் தண்ணீர் கிடைக்காமல் இருக்கிற பின்னணியிலே தங்களுக்குத் தரவேண்டிய தண்ணீர் இப்படி வியாபாரிகளுக்குக் கொடுக்கப்படுகிறதே என்ற முறையிலே சில பிரச்சினைகள் ஏற்பட்டு, அது ஒரு சட்டம்–ஒழுங்குப் பிரச்சினையாக மாற்றப்பட்டு, துரதிருஷ்டவசமாக இரு தரப்பினரிடையே மோதலாக மாறி, இப்போது இதிலே அரசியல் வடிவம்கூட எடுக்கப்படுகின்ற துரதிருஷ்டவசமான நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதற்காக நாம் வருந்துகிறோம். இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புவது, பத்திரிகைகளிலே வந்திருக்கிற செய்தி, காவல் துறை 2 மணி நேரம் கடினமான ஒரு போராட்டத்தை நடத்தியதற்குப் பிறகுதான், மக்கள் மேலே lathi charge கூட நடத்தப்பட்டதற்குப் பிறகுதான் அங்கு அமைதியை ஏற்படுத்த முடிந்திருக்கிறது என்றால், அது எவ்வளவு கடினமான பிரச்சினையை இன்று குடிதண்ணீர் விநியோகத்திலே ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அரசு பிரத்தியேகமாகப் பரிசீலிக்க வேண்டும். இன்று அரசு பெரிய முயற்சியை எடுத்து பல ஊர்களிலே இருந்து தண்ணீர் கொண்டுவந்து சென்னை நகரத்திலே இருக்கிற மக்களுக்கு விநியோகிப்பதற்கு முயற்சிக்கிற நேரத்திலே, பொறுப்புணர்ச்சியோடு அதை விநியோகம் செய்ய வேண்டிய பொறுப்பு அதிகாரிகளுக்கு இருக்கிறது. ஊழியர்களுக்கு இருக்கிறது. அவர்கள் இதிலே தங்களுக்கு ஆதாயங்களைத் தேடி இந்த மாதிரி நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறதா என்ற ஐயப்பாடு இதுவரை கிடைத்த விவரங்களிலே இருந்து ஏற்படுகிறது. ஆகவே, இதைத் தடுத்து நிறுத்தி, அனைத்துப் பகுதி மக்களுக்கும் நாம் கொண்டு வருகின்ற தண்ணீர் எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல், equitable distribution என்ற முறையிலே அவர்களுக்குக் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை உத்தரவாதமாக ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டு, இந்த மிக முக்கியமான பிரச்சினையை, அரசினுடைய, அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.





*முற்பகல் 11—00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன்.

***திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர்ப் பிரச்சினை சென்னையில் மிகவும் மோசமாக இருப்பது உண்மை. ஆனால் தண்ணீர்ப் பிரச்சினை மாநகரத்தினுடைய பல பகுதிகளிலே இருக்கிறபோது, மண்ணடியில், அங்கப்ப நாயக்கன் தெருவிலே இந்த அளவிற்கு இது பூதாகாரமாக வெடித்து, இரு தரப்பு மோதல்களுக்கு ஆளாகி, ஏழெட்டு கார்கள், 17 ஆட்டோக்கள் மற்றும் கடைகள் எல்லாம் அடித்து நொறுக்கப்படக்கூடிய அளவிற்கும், ஓர் இஸ்லாமிய சகோதரர், நூர் முகமது என்பவருடைய கை அங்கே வெட்டப்படக்கூடிய அளவிற்கும் சென்றிருக்கிறது என்று சொன்னால், இதனுடைய பின்னணியை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் இங்கே சொன்னார்கள். இதிலே எப்படியிருந்தாலும் நமக்குத் தேவை முதலிலே அமைதி. ஆனால், இஸ்லாமியத் தோழர்கள் எப்படி பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் இங்கே சொல்கிறபோது மிகவும் வேதனையோடு அதை வெளிப்படுத்தினார்கள். தேர்தலுக்குப் பிறகு தமிழகத்திலே ஏனோ இன்னும் அரசியல் காழ்ப்புணர்ச்சிகள் ஆங்காங்கே தலைதூக்கி சமுதாயத்தில் அமைதியின்மையை உருவாக்கிக் கொண்டிருப்பதை நாம் பல இடங்களிலே பார்த்திருக்கிறோம். இதை ஒரு சாதாரண நிகழ்வாக அரசு கருதிவிடக்கூடாது என்ற காரணத்தை நான் கூறுகிறேன். இப்போது ஆங்காங்கே வீடுகள் தீப்பற்றி எரிகிறதைக்கூடப் பார்க்கிறோம். என்னுடைய தொகுதி வேலூரிலேகூட அரசியல் பின்னணி இருக்கிறது. 12 ஆம் தேதி தேர்தலுக்குப் பிறகு தொடர்ந்து 600 வீடுகளுக்கு மேலே, (மணியடிக்கப்பெற்றது) இதோ பேச்சை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையைக் கொண்டு வாருங்கள். ஏனென்றால், இதிலே நேரடியாக ஆர்வம் உள்ள பேராசிரியர் அவர்களும், லத்தீப் அவர்களும் சொல்லிவிட்டார்கள். நீங்கள் விவரத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆகவே, தண்ணீர் சப்ளை செய்கிறபோது எது எதெல்லாம் sensitive spot என்பதை அரசு கண்டறிந்து, போலீஸ் பாதுகாப்போடு நீங்கள் லாரிகளில் கொண்டுபோய், எந்தவிதமான தகராறும் இல்லாமல் கொடுக்க வேண்டும். இதுபோன்ற நிகழ்வுகள் இனி

வரும் என்று சொன்னால், இது உண்மையிலேயே நம்முடைய மனித சமுதாயத்துக்குத் தலைகுனிவை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகத்தான் இருக்கும். பெட்ரோல், ஆயில் டேங்கர் லாரி ஏதாவது போகும்போது மடக்கினார்கள் என்று சொன்னால் பரவாயில்லை. டீசல் லாரி என்றால் பரவாயில்லை. தண்ணீருக்குக்கூட இந்த அளவிற்குப் போராட்டம் என்று வருகிறபோது இதை சாதாரண நிகழ்வாக எடுத்துக்கொள்ளாமல் அரசு மக்களுக்குப் போதிய பாதுகாப்பையும் தந்து, தொடர்ந்து தண்ணீர் விநியோகத்தையும் செய்து, மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று நாட்களாக லாரி மூலம் குடிநீர் வழங்கப்படவில்லை என்று கூறி, சென்னை அங்கப்ப நாயக்கன் தெருவில் குடியிருப்பவர்கள் 27–8–2001 அன்று காலை சுமார் 10–30 மணியளவில் இப்ராகிம் சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர். தகவல் அறிந்த காவல் துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று, அவர்களை அமைதிப்படுத்தி, குடிநீர் வழங்க ஏற்பாடு செய்தனர். 27–8–2001 அன்று சுமார் 12 மணியளவில் அங்கப்ப நாயக்கன் தெரு மற்றும் சுல்தான் தெரு சந்திப்பில் அப்பகுதியில் குடியிருக்கும் பெரும்பாலான முஸ்லிம்கள் லாரியில் வந்த குடிநீரைப் பிடித்துக் கொண்டிருக்கும்போது அருகிலுள்ள ரேவ் பகுதியைச் சேர்ந்த பெண்களும், ஆண்களும் வருவதைக் கண்டதும் அதற்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். தங்கள் பகுதிக்கு வரவிருந்த குடிநீர் லாரியை அங்கப்ப நாயக்கன் தெருவில் உள்ளவர்கள் மடக்கி தண்ணீர் பிடிப்பதாக ரேவ் பகுதியினர் தகராறு செய்துள்ளனர். தகவல் அறிந்த பி–1, வடக்குக் கடற்கரை காவல் நிலையத்தினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சமாதானம் செய்தனர்.

அன்று பிறபகல் சுமார் இரண்டு மணியளவில் ரேவ் பகுதி தி.மு.க.–வைச் சார்ந்த மகாதேவன், துறைமுகப் பகுதி துணைச் செயலாளர் அண்ணாதுரை, வட்டச் செயலாளர் கவியரசு, 27–வது வட்ட இளைஞர் அணிச் செயலாளர் ஆகியோர் தலைமையில் ஒரு கூட்டத்தினர் திடீரென்று அங்கப்ப நாயக்கன் தெருவிற்கு வந்து ஈட்கா மசூதி அருகில் நிறுத்தப்பட்டிருந்த 14 வாகனங்களையும் – இரண்டு சக்கர வாகனங்கள் 6, மூன்று சக்கர வாகனங்கள் 2 மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் 6 உள்பட– மற்றும் 5 கடைகளின் கண்ணாடிகளையும் சேதப்படுத்தியுள்ளனர். இச்சம்பவத்தில் திரு. நூர் முகமது மற்றும் ஒரு



பெண்மணிக்கு சொற்பக் காயம் ஏற்பட்டது. தகவலறிந்த காவல் துறை உயர் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து அமைதியை நிலை நாட்டினர். இச்சம்பவம் குறித்து அங்கப்ப நாயக்கன் தெருவைச் சேர்ந்த திரு. ஜாபர் அலி என்பவர் அளித்த புகாரின் பேரில் பி–1, வடக்குக் கடற்கரை காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று, எண் 736/2001, பிரிவு 147, 148, 341, 323, 324, 427, 354 மற்றும் 506 (2) இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு, விசாரணைக்குப் பின்னர் அன்று இரவு எட்வர்ட் கென்னடி, பாபு, விக்னேஸ்வரன், கிருஷ்ணகுமார் மற்றும் சேகர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

*முற்பகல் 11-05*

இது தொடர்பாக மூன்றாவது கடற்கரைச் சாலையைச் சேர்ந்த திரு. நரேஷ் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் மற்றொரு வழக்கு 737/2001, பிரிவு 147, 148, 341, 323, 324, 427, 354 மற்றம் 506 (2) இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ், பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கில் அம்ஜத் என்பவர் அன்று இரவு கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட 6 நபர்களும் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர்.

இச்சம்பவத்தில் காயமுற்ற திருவாளர்கள் நூர் முகம்மது மற்றும் நரேஷ் ஆகியோர் அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் புறநோயாளிகளாக சிகிச்சை பெற்றுத் திரும்பினர். மேற்கண்ட சம்பவத்தின்போது ரம்சான் பீவி என்ற பெண்ணைக் கையைப் பிடித்து இழுத்து மானபங்கம் செய்ய முற்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு உண்மை இல்லை என விசாரணையில் தெரிய வருகிறது. பள்ளிவாசலின் உள்ளே புகுந்து சேதப்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டும் உண்மை அல்ல. அந்தப் பள்ளிவாசலின் முன்பு நிறத்தி வைத்திருந்த இரண்டு சக்கர வாகனத்தை சேதப்படுத்திய சம்பவம்தான் நடந்துள்ளது. ரேவ் பகுதியை குற்றம் நடக்காத பகுதியாக மாற்ற பூக்கடை, மாவட்டக் காவல் துறைத் துணை ஆணையாளர் தலைமையில் அப்பகுதியைத் தத்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் ரேவ் பகுதியில் ஒரு புறக் காவல் நிலையம் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேற்கொண்டு எந்தவித அசம்பாவிதமும் நிகழாவண்ணம் அவ்விரு பகுதியினருக்கும் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் குறிப்பிட்டதுபோல அங்கே எதுவும் நடைபெற்றதாகத் தகவல்கள் இல்லை. இத்தகைய குற்றச்சாட்டுகள், கடுமையான குற்றச்சாட்டுகள் இந்த அவையில் கூறப்பட்டுள்ளதால், தேவைப்பட்டால் மீண்டும் விசாரணை

நடத்தச் சொல்கிறேன். மாண்புமிகு லத்தீப் அவர்கள் இங்கே பேசும்போது genocide என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். Genocide என்றால் mass murder – நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் படுகொலைகள் நடந்தால் அதற்கு genocide என்று பெயர். அங்கே ஒரு மரணம்கூட நிகழவில்லை. ஆகவே, இத்தகைய மிகையான வார்த்தைகளை மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். இத்தகைய மிகைப்படுத்திப் பேசும் பேச்சுக்கள் ஆபத்தை விளைவிக்கக்கூடும் என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லத்தீப், உட்காருங்கள். விளக்கம் சொன்னதற்குப் பிறகு சொல்லுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் பெரியவர், மூத்தவர், உணர்ச்சி வசப்பட்டு தேவையற்ற சில சர்ச்சைகளுக்கும், பிரச்சினைகளுக்கும் அவரே வித்திட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினை இப்படியே பிற மாவட்டங்களுக்கும் பரவி உள்ளது என்றெல்லாம் மாண்புமிகு லத்தீப் அவர்கள் மிகவும் மிகைப்படுத்திச் சொன்னார்கள். அப்படி எந்தச் சூழ்நிலையும் இல்லை. ரேவ் பகுதியில்கூட இப்போது அமைதி நிலவுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் பேசுகின்றபோது, இந்தத் தேர்தல் முடிந்த பிறகு ஏனோ தெரியவில்லை, அரசியல் காழ்ப்புணர்ச்சிகள் இருந்தவாறே இருக்கிறது என்று கூறுகிறார். அதுதான் இந்தச் சம்பவத்திற்கும் காரணம் என்பது போலப் பேசுகிறார். அரசியல் காழ்ப்புணர்ச்சி என்று சொல்ல வேண்டுமானால், இந்தத் தேர்தல்கள் முடிந்த பிறகு இதுவரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கிட்டத்தட்ட 20 பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தேர்தல் காரணங்களுக்காகவே கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இருப்பினும் மாநிலத்தில் அமைதி, சட்டம்–ஒழுங்கைக் காக்கின்ற பொறுப்பு இந்த அரசுக்கு உள்ளதால், அதை ஒரு பெரிய பிரச்சினையாக நாங்கள் ஆக்கவில்லை. இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவி அளித்திருக்கிறோம். அவர்களுக்கு இரங்கல் தெரிவித்து இருக்கிறோம். சமாதானப்படுத்தி இருக்கிறோம். ஆனால் பதிலுக்குப் பதில் என்று நாங்கள் கொடுக்க ஆரம்பித்தால் – அதுதான் அரசியல் காழ்ப்புணர்ச்சி (மேசையைத் தட்டும் ஒலி) – பதிலுக்குப் பதில் என்று நாங்கள் கொடுக்க ஆரம்பித்தால் மாநிலத்தில் அமைதி கெட்டுவிடும். மாநிலத்தில் சட்டம்–ஒழுங்கைக் காக்கிற மிகப் பெரிய பொறுப்பில் நாங்கள் இருப்பதால் அதை நாங்கள்



தவிர்த்திருக்கிறோம். ஆகவே, அரசியல் காழ்ப்புணர்ச்சிகள் மென்மேலும் வளர நாங்கள் ஒருபோதும் துணை போக மாட்டோம் என்று தெரிவித்துக் கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது ரேவ் பகுதியில் அமைதி நிலவுகிறது, அமைதி கெடாவண்ணம் இவ்வரசு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, தாம்பரம் நகராட்சி.. (குறுக்கீடு) லத்தீப் அவர்கள், இதற்கு மேலே எப்போதும் விவாதம் கிடையாது. முதலமைச்சர் அவர்கள், தேவைப்பட்டால் இன்னும் விசாரிக்கிறேன் என்று சொல்லி இருக்கிறார்கள். (குறுக்கீடு) மரபு மீறியது இது. முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) லத்தீப் அவர்கள் மூத்த உறுப்பினர். மற்றவர்களுக்கு முன்மாதிரியாக நீங்கள் நடந்துகொள்ள வேண்டும். ஏனென்றால், அரசு கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு விவாதமே வைத்துக்கொள்வதில்லை. (குறுக்கீடு) விவாதமே வைத்துக்கொள்வதில்லை.

*முற்பகல் 11-10*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** விவாதம் தேவைப்படுகிறது. விளக்கம் தேவைப்படுகிறது. இல்லையென்றால் நான் சும்மா இருக்கமாட்டேன்.. அப்படியில்லையென்றால் என்னை தயவுசெய்து வெளியே அனுப்பிவிடுங்கள். மைக்கே கொடுக்க மாட்டேன் என்கிறீர்களே, என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மைக் உங்களுக்கு முன்னால்தான் இருக்கிறது. மைக் கொடுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாங்கள் அமர்ந்திருக்கின்ற இடத்திற்கேற்ப எவ்வளவு பொறுப்புடன் பதில் சொல்ல வேண்டுமோ, அந்த வகையில் பதில் சொல்லியிருக்கிறார்கள். சில இடங்களில் மிகைப்படுத்தப்பட்டதாகவும், genocide என்ற சொல்லுக்குப் பொருளையும் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். Genocide என்றால் உயிர் இழப்பை மட்டுமல்ல, உணர்வுக்கும், உள்ளத்திற்கும் பாதகங்கள் ஏற்பட்டால் அதுவும் ஒருவிதமான genocide தான். எனவே, அந்த அளவிற்கு இப்போது நம்முடைய உணர்வு பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற பொருளிலேதான் அதை நான் சொன்னேனே தவிர, அங்கே கொலைகள் நடந்ததாகச் சொல்லவில்லை. அந்தப் பொருளில் அல்ல. நான் அங்கே சென்று விசாரணை செய்யும்போது எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேதான் சொன்னேன். எனக்கு என்ன தெரியும்,

அங்கே நடந்தது? உடனடியாக அங்கே சென்று விசாரணை செய்தேன். விசாரணையில் எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலே நான் இந்த அவையில் பொறுப்புள்ள ஓர் அரசுக்குத் தெரிவிக்கவேண்டிய விவரங்களைத் தெரிவித்திருக்கிறேன். அது தவறாக இருந்தால் மகிழ்ச்சியடைகிறேன். எனவே, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கமே தவிர, அதில் வேறு நோக்கங்கள் இல்லை. அமைதி ஏற்படுவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தேன். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவோடு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் மகிழ்கிறேன். எனவே, யார் மீதும் இந்தப் பிரச்சினையைத் திணித்து மேலும் பிரச்சினையை வளர்க்கக்கூடிய நோக்கம் எனக்கில்லை என்பதை மிகத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) தாம்பரம் நகராட்சிப் பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாம்பரம் நகராட்சிப் பகுதியில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாடு குறித்து திரு. வைதியலிங்கம் ஓர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். அதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்கிறேன். சுருக்கமாக கவனத்தை ஈர்த்து எடுத்துக் கூறுமாறு அழைக்கிறேன். திரு. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் நகராட்சிப் பகுதியில் பொது மக்கள் மத்தியிலே குடிநீர்த் தட்டுப்பாட்டால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து இந்த அரசினுடைய கவனத்தை ஈர்க்கிறேன்.

***மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சியில் மொத்த மக்கள்தொகை *1,35,750*. தற்போது நாள் ஒன்றுக்கு பாலாற்றுப் படுகையிலிருந்து *9* இலட்சம் லிட்டர் குடிநீரும், மறைமலை நகர் திட்டத்திலிருந்து *10* இலட்சம் லிட்டர் குடிநீரும், நகராட்சிப் பகுதியிலுள்ள *4* தனியார் ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து லாரிகள் மூலம் *4* இலட்சம் லிட்டர் குடிநீரும் மற்றும் நகர்ப் பகுதியிலுள்ள *52* பொதுக் கிணறுகள் மற்றும் *160* இந்திய மார்க் II கைப் பம்புகள் மூலம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையிலே அமைதி காக்க வேண்டுகிறேன்.





**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மொத்தம் *25* இலட்சம் லிட்டர் தண்ணீர் வழங்கப்படுகிறது. மேலும் கூடுதலாக *26.5* இலட்சம் லிட்டர் தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தாம்பரம், காயத்ரி நகரில் ஓர் ஆழ்துளைக் கிணறு அமைத்து சுமார் *3.50* இலட்சம் லிட்டர் குடிநீர் அருகிலுள்ள மேல்நிலை நீர்த்தேககத் தொட்டி மூலம் விநியோகிக்கப்பட இருக்கிறது. டி.டி.கே. நகரில் உள்ள திறந்தவெளிக் கிணற்றிலிருந்து கூடுதலாக *5* இலட்சம் லிட்டர் தண்ணீர் கிருஷ்ணா நகர் பகுதிக்கு விநியோகம் செய்யப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எம்.ஜி.ஆர். நகர் மற்றும் அகரம் சாலைப் பகுதிக்கு ஆழ்துளைக் கிணறுகள் மூலம் *3* இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மறைமலை நகர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து கூடுதலாக *10* இலட்சம் லிட்டர் குடிநீர் பெற்று விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. வில்லியம்பாக்கம் பாலாற்றுப் படுகையிலிருந்து குடிநீர் வரும் வழியில் உள்ள வழியோர கிராமங்களில் வழங்கப்பட்டு வரும் குடிநீரைக் கட்டுப்படுத்துவதன் மூலம் கூடுதலாக *5* இலட்சம் லிட்டர் குடிநீர் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

இக்கூடுதல் குடிநீர் மூலம் நகரில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய வழிவகை செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இப்பேரவைக்குத் தகவலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *11-15*

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், தங்களுடைய விளக்கத்திலே சுட்டிக்காட்டுகிறபோது, தற்போது பாலாற்றுப் படுகையிலிருந்து ஒன்பது இலட்சம் லிட்டர் தண்ணீர் தினமும் வருவதாகச் சுட்டிக்காட்டினார்கள். உள்ளபடியே அங்கே ஏழு இலட்சம் லிட்டர் தண்ணீர்தான் வருகிறது. மறைமலை நகர் பகுதியிலேயிருந்து பத்து இலட்சம் லிட்டர் தண்ணீர் பெறப்படுவது என்பது உண்மை. அதைப்போல borewells மூலம் நான்கு இலட்சம் லிட்டர் தண்ணீர் வருகிறது. திறந்தவெளிக் கிணறுகளின் மூலம் எடுப்பது உள்ளிட்டு *25* இலட்சம் லிட்டர் தண்ணீர் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆனால், அங்கே வாழ்கிற *1,35,550* பேர் என்பது, அமைச்சர் அவர்களுடைய கணக்குப்படி அந்த மக்கள் தொகையைக் கணக்கெடுத்துப் பார்த்தால், எந்த அளவிற்கு இந்த *25* இலட்சம் லிட்டர் தண்ணீர் போதும். இந்த *25* இலட்சம் லிட்டர்

தண்ணீர் வருவதில்லை என்பது வேறு விஷயம். அப்படியே 25 இலட்சம் லிட்டர் தண்ணீர் அங்கே வந்தாலும், இந்த 1,35,550 மக்கள்தொகை கணக்கை; அங்கே 1-1/2 இலட்சத்திற்கும் மேல் மக்கள்தொகை இருக்கிறது; இது எந்த அளவிற்குப் பயன்படும் என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்கவேண்டும். இது ஏதோ ஏற்படுத்தப்பட்டது என்று நான் சொல்ல வரவில்லை. இயற்கையின் சீற்றத்தால்தான் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். பாலாற்றுப் படுகையிலே, தாம்பரம் நகரத்தைப் பொறுத்தமட்டிலே, தண்ணீர்த் தட்டுப்பாடு வரக்கூடாது என்பதற்காக எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு அமைச்சர் டி.ஆர். பாலு அவர்கள் மூலம் ஒரு தனி ஜெனரேட்டர் கூட வாங்கிக் கொடுத்து இயக்கிக்கொண்டிருந்தோம். ஆனால், இன்றைக்கு இயற்கையின் சீற்றத்தால் படுகையிலே தண்ணீர் இல்லை என்பது உண்மைதான் என்றாலும், எப்படி சென்னை மாநகருக்கு நீங்கள் நெய்வேலியிலிருந்து, மேட்டூரிலிருந்து, பல இடங்களிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து தருகிறீர்களோ, அதிலே ஒரு கோடி இலட்சம் லிட்டர் தண்ணீரை இந்தப் பக்கம் தாம்பரம் தொகுதிக்குத் திருப்பினால் சரியாக இருக்கும். அங்கேயிருக்கிற பம்மல், அனகாபுத்தூர், பொழிச்சலூர், சிட்லப்பாக்கம், மடிப்பாக்கம் பகுதிகளில் நான் கவன ஈர்ப்புத் தீர்மானம் தந்திருக்கிறேன். தாம்பரம் தொகுதிக்குத் தருவீர்களானால்தான் –இது சென்னையை ஒட்டியிருக்கிற புறநகர்ப் பகுதி –சென்னை மாநகராட்சி மக்கள் என்னென்ன எதிர்பார்க்கிறார்களோ, அத்தனை வசதிகளையும் எதிர்பார்க்கிற பகுதி என்பதையும், இந்தத் தொகுதியிலே சென்னை மாநகராட்சிப் பகுதியும்கூட இணைந்திருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட ஏற்பாட்டைச் செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## (இ) சென்னை, போரூர் ஏரியில் ஆக்கிரமிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சென்னைக்கு அருகேயுள்ள போரூர் ஏரி ஆக்கிரமிப்புக்கு உள்ளாவது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. பரிதி இளம்வழுதி. திரு. ப. ரங்கநாதன், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்கிறேன். சுருக்கமாக எடுத்துக் கூறுமாறு அழைக்கிறேன். திரு. பரிதி இளம்வழுதி அவர்கள்.





**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிமுக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினை குறித்து இந்த அவையினுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு எனக்கு வாய்ப்பை வழங்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றையதினம் கடுமையான தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இதுகுறித்து இந்த அவையிலே இவ்வளவு நேரம் விவாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தண்ணீர்த் தட்டுப்பாட்டைப் பற்றி நினைக்கிறபோது, இன்னும் ஒன்று, இரண்டு மாதங்களிலே மழை வந்துவிடும், நமக்கு தாகம் தீர்ப்பதற்கு ஓரளவு தண்ணீர் கிடைக்கும் என்ற ஆர்வத்தோடு காத்துக்கிடக்கிற நமக்கு, நிலவள ஆராய்ச்சியாளர்கள் ஒரு நீண்ட நெடிய ஆய்வை மேற்கொண்டு முடிவுகளை அறிவித்திருக்கிறார்கள். அந்த முடிவுகள் ஒரு அபாய அறிவிப்பாக இருக்கின்றன. இன்னும் 10 ஆண்டு காலத்திற்குள் நமக்கு குடிப்பதற்கே தண்ணீர் கிடைக்காது. அப்படியே கிடைத்தாலும் ஃபுளோரைடு, நைட்ரேட் போன்ற நோய்க் கிருமிகளை உள்ளடக்கக்கூடிய இரசாயனம் கலந்த கலவையாகத்தான் அது இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போரூர் ஏரி ஆக்கிரமிப்பு பற்றிப் பேசுங்கள். நீங்கள் ஏரிக்கு வாருங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம், நீர்நிலை ஆதாரங்களை சரியாகக் கையாளாமல் விட்டதாலும், சரியாகப் பாதுகாக்காததாலும்தான் ஏற்படுகிறது. அப்படிப் பார்க்கிறபோது, ஏரிகள், குளங்கள், குட்டைகள் எல்லாம் மழைக் காலத்திலே நீரைச் சேமித்து வைத்த பிறகு பயன்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும். ஒரு காலத்தில் தமிழகத்தில் மொத்தம் 43200 குளங்கள் இருந்தன. இப்போது 10000 குளங்கள்தான் இருக்கின்றன. முன்பு சென்னையில், 219 குளங்கள் இருந்தன, இப்போது 30 குளங்கள்தான் இருக்கின்றன. இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், இந்தக் குளங்கள், ஏரிகள் எல்லாம் திடீரென்று காணாமல் போய் விடுகின்றன. காணாமல் போனதற்குக் காரணம், சில அரசியல் கட்சிப் பிரமுகர்கள், அதிகாரிகளின் ஆதரவோடு அந்தப் பகுதிகளை ஆக்கிரமித்து plot போட்டு விற்றுவிடுகிறார்கள். இதுகுறித்து வீரன் என்பவர்கூட வழக்குத் தொடர்ந்திருக்கிறார். நான் அதற்குள் செல்ல விரும்பவில்லை. ஏற்கெனவே இந்தப் போரூர் ஏரி 150 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளது. இந்தப் போரூர் ஏரியைச் சுற்றி விரிவுபடுத்தி, ஆழப்படுத்தி, சுற்றுச் சுவர் கட்டி, கிருஷ்ணா தண்ணீரைக் கொண்டுவந்து சேமித்து, அதை சென்னைக்கு வழங்குவதற்காக ஒரு திட்டம் இருந்தது.

எல்லாம்—நான் தெள்ளத் தெளிவாகச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்—மாடி வீடுகள் எல்லாம் கட்டியிருக்கிறார்கள். அதேநேரத்திலே அவர்களைக் காலி செய்ய வேண்டும், அவர்களை அங்கேயிருந்து eviction செய்ய வேண்டும் என்று Tamil Nadu Land Encroachment Act, Section 19 (7) பிரகாரம் Notice அனுப்பியவுடனே அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்றிருக்கிறார்கள். இப்போது அந்த நீதிமன்றத்திலே ஒரு சில குறிப்பிட்ட வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. சில வழக்குகள் நிலுவையிலே உள்ளன. கிட்டத்தட்ட 10, 15 ஆண்டு காலமாக நிலுவையிலே உள்ள வழக்குகளில், 7 வழக்குகள் மட்டும்தான் இப்போது தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. சில வழக்குகள் நிலுவையிலே உள்ளன.

நான் 27–8–2001 அன்று அந்த ஏரிக்குச் சென்று நேரடியாக அங்குள்ள அதிகாரிகளிடம் விசாரணை நடத்தினேன். விசாரணை நடத்தியபோதுகூட அங்கேயிருந்த சிலர், எங்களிடம் எல்லாம் தடையாணை இருக்கிறது, நீங்கள் எங்கேயிருந்து வந்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அவர்களிடம் விளக்கமாக, ஓர் உரையாகக் கூறினேன். இது அரசாங்கத்திற்குச் சொந்தமான இடம், நீங்கள் தவறான முறையிலே இங்கே இருக்கிறீர்கள் என்று கூறி, அவர்களுடைய தடையாணையை நாங்கள் பார்த்து, எங்களுடைய உயரதிகாரிகளை அழைத்து, நீதிமன்றத்திலே சென்று இந்தத் தடையாணைகளை உடனடியாக நீக்க ஆவன செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11—25

தமிழ்நாட்டிலே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக ஆனதற்குப் பிறகு எந்தெந்த ஏரிகளிலெல்லாம் ஆக்கிரமிப்புகள், illegal possession இருக்கிறதோ அவற்றை நாங்கள் eviction செய்வதற்காக உடனடியான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் தடையாணைகளை நீக்குவதற்காக நீதிமன்றங்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் நாங்களே நேரடியாகப் பல கடிதங்களை எழுதியிருக்கிறோம் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். மேலும், நீங்கள் கூறியதுபோல போரூர் ஏரியிலே இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு யாரும் அங்கே குடிசைகள் போடவும் இல்லை, போடவும் விடமாட்டோம் என்று சொல்லிக்கொண்டு விடைபெறுகிறேன், நன்றி.



## 4. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 18 – மருத்துவம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001–2002 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 18--மருத்துவம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை குறித்த மானியக் கோரிக்கையை இந்த அவையிலே வைப்பதற்கு எனக்கு இத்தகைய அரிய வாய்ப்பையும், அந்தத் தகுதியையும் அளித்து, குடத்து விளக்காக இருந்த என்னை, இந்த விசுவாசம் மிக்க தொண்டனைத் தமிழகத்திற்கு அடையாளம் காட்டிய தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.792,96,54,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 155, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடங்கள், குளிர்சாதன வசதியோடு கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 826, திரு. டி.பி.எம். மைதீன்கான், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 591, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 835, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாத்தூரில் உள்ள மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்தும், போதிய அளவு மருந்துப் பொருட்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1273, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரம், அரசு பொது மருத்துவமனைக்கு போதிய கட்டடங்கள் கட்டி, மருத்துவர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1446, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டிலேயே அதிக அளவு சாலை விபத்து நடக்கும் திருவெறும்பூரில், அனைத்து வசதிகளும் கொண்ட மருத்துவமனை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1475, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 50 படுக்கைகள் வசதியுடன் முழு நேர (24 மணிநேரம்) மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1118, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1151, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்திலுள்ள அரசு மருத்துவமனைக்கு கோவை அரசு மருத்துவமனையிலிருந்து சிறப்பு மருத்துவர்கள் 15 நாட்களுக்கு ஒரு முறை வருகை தந்து நோயாளிகளுக்குச் சிறப்பு ஆலோசனை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1244, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1316, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், மாரமங்கலம் ஊராட்சி, பஞ்சுகாளிப்பட்டியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 841, திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் தலைமை மருத்துவமனையில் சிறுநீரகப் பிரிவு ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1434, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்ட மருத்துவமனைக்கு எம்.ஆர்.சி. ஸ்கேன் வசதியுடன் 100 படுக்கைகள் ஏற்படுத்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1629, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மத்திய சிறை வளாகத்தில் அரசு பொது மருத்துவமனையின் ஒரு பிரிவை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 661, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**THIRU J. HEMACHANDRAN:** Hon. Speaker Sir, "To discuss the need to upgrade the Government Dispensary as a Taluk Headquarters Hospital at Kulasekaram in Kanniyakumari District" I move-

"That the sum of Rs. 792,96,54,000/- allocated under Demand No.18-Medical be reduced by Rs.100/-"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1333, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 555, திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 653, செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் நகரில் இயங்கும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையின் படுக்கைகளின் எண்ணிக்கையினை அதிகப்படுத்தவும், அறுவை சிகிச்சை தியேட்டர் வசதி செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 721, திரு. எஸ்.கே. வேதரத்தினம், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1806, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1468, திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகர்கோவில் தொகுதி, சிங்களேயர்புரி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 912, திருமதி எஸ். மகேஸ்வரி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 815, திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதிக்கு உட்பட்ட பொது மருத்துவமனை, மகப்பேறு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள மருத்துவர்கள், ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 256, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 393, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1037, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1489, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 718, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 851, திரு. ரா. ஈஸ்வரன்.



**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1099, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 27, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 40, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்ட மருத்துவமனையில் காலியாகவுள்ள அனைத்து மருத்துவர் பணியிடங்களையும் உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11—30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 807, திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்ட மருத்துவமனைக்குப் போதிய மருத்துவர்கள் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 913, திரு. டி.என். சிவசுப்பிரமணியன்.

**திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூரிலுள்ள மருத்துவமனைக்கு மருத்துவர்கள் போதிய அளவில் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 107, திரு. என். ஆர். ரங்கராஜன். இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 915, திரு. கு. ஜெயக்குமார்.

**THIRU. K. JAYAKUMAR:** Hon. Speaker Sir, "To discuss the need to create ENT and Dental Departments in the District Headquarters Hospital at Namakkal", I move-

"That the sum of Rs.792,96,54,000/- allocated under Demand No.18-Medical be reduced by Rs.100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 634, திரு. கே. ஆறுமுகம்.



**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேல்மருவத்தூரில் சிறப்பு மருத்துவக் குழு ஒன்று, நடமாடும் ஆம்புலன்சுடன் இயக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 837, திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தானிப்பாடி அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.792,96,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 19 – மக்கள் நல்வாழ்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 19—மக்கள் நல்வாழ்வு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.541,76,36,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 154, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வெள்ளக்குட்டை, அலமேலுமங்காபுரம், சத்திரம் (ஜவ்வாது மலைப்பகுதி) ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இவ்வாண்டே தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 590, திரு. கா. கந்சாமி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1476, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாட்ராம்பள்ளியில் பொது மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1151, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்டத்திலுள்ள தலைமை மருத்துவமனைகளிலுள்ள முக்கியமான பழுதடைந்துள்ள கருவிகளை மாற்றி புதிய கருவிகள் நிறுவ அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1243, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை அரசினர் ராஜாஜி மருத்துவமனை, பாலரங்காபுரம் மருத்துவமனை, தோப்பூர் மருத்துவமனைகளுக்குக் கூடுதல் வசதிகள் செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1311, திரு. மே.ப. காமராஜ்.



**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தை 20 படுக்கைகள் கொண்ட முழு நேர மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 799, திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூரில் மருத்துவக் கல்லூரி ஒன்று அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1422, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1344, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 722, திரு. எஸ்.கே. வேதரத்தினம், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1805, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 816, திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதிக்கு உட்பட்ட பொது மருத்துவமனை, மகப்பேறு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டடங்கள் பராமரிப்பு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 246, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/–ல் ரூ.100/– குறைகக வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 412, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1006, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1514, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 711, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 852, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1095, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி அரசு வட்டத் தலைமை மருத்துவமனைக்கு இரத்த வங்கி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11, திரு. க. சிவராஜ்.

**திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் தொகுதியில் மையனூர், சீர்ப்பணந்தல் மற்றும் திருப்பால் பந்தல் ஆகிய ஊராட்சிகளில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள்

அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 37, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டத்தில் பிளேஸ்பாளையம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 192, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள பழனி, கீரனூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 528, திரு. து. நெப்போலியன்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வில்லிவாக்கம் தொகுதியில் செங்குன்றம் எனப்படும் நாரவாரிக் குப்பம் பேரூராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நவீன மருத்துவக் கருவிகள் வாங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1143, திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை, இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனையை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 456, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, வெள்ளக்கோவில் ஒன்றியம், கம்பளியம்பட்டியில் துணை சுகாதார நிலையம் அமைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1237, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, என்.என். கண்டிகை கிராமத்தில் ஆரம்ப சுகாதார மருத்துவமனை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1189, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.541,76,36,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

*முற்பகல் 11—35*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுக்கு எங்களுடைய துறையின் சார்பில் ரூ.500 மதிப்புள்ள ஆங்கிலம் மற்றும் இந்திய முறை மருந்துகள் அடங்கிய ஒரு அழகிய பையினை வழங்கியிருக்கிறோம். அதையும் பெற்றுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையையும், தேவைப்பட்டால் இடையிலே சில விளக்கங்களையும் தருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) கொடுத்ததைச் சொல்வதில் எதுவும் தவறில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு மானியக் கோரிக்கைகளின்மீது பொது விவாதம். திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினராக நான் வருவதற்கு வாய்ப்பளித்த தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எதிர்க் கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்களுக்கும், வணக்கத்திற்குரிய மேயர் தளபதி அவர்களுக்கும், என்னை மூன்றாவது முறையாக இந்தச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்த வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். 2001–2002 ஆம் ஆண்டுக்கான மருத்துவம்

@ 209 முதல் 297 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



மற்றும் மக்கள் நல்வாழ்வு பற்றிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் என்னுடைய கருத்துகள் சிலவற்றைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மருத்துவம் பற்றிய மானியக் கோரிக்கையிலே சில பாராட்டக்கூடிய அம்சங்களும் இருக்கின்றன. பொது இடங்களிலே புகை பிடிக்கக் கூடாது என்பதையும், குட்கா, பான் மசாலா போன்றவை, மக்களுக்கு கேடு விளைவிக்கக்கூடியவை தடை செய்யப்பட்டிருப்பதையும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, தாலுகா மருத்துவமனைகளை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக மாற்றுவதற்கான வழிமுறை வகுத்திருப்பதையும் நாங்கள் வரவேற்கிறோம்.

இந்த மானியக் கோரிக்கைகளுக்கு ரூ.1334.72 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில வருவாய்க் கணக்கில் ஒதுக்கியுள்ள மொத்த ஒதுக்கீடான ரூ.24,522 கோடியில் இந்த மானியக் கோரிக்கைகளுக்கான ஒதுக்கீடு 5.14 சதவீதமாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு நிதியொதுக்கீடு செய்யப்பட்டதைவிட இந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுத் தொகை கூடுதலாகத் தெரிந்தாலும், சதவீத அடிப்படையில் பார்க்கையில் சென்ற ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட 5.86 சதவீதத்தினைவிட 0.42 சதவீதம் குறைவாக இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கையில், வளர்ந்து வரும் மக்கள் தொகையின் அடிப்படையில், நோயுற்றவர்களின் அதிகரிப்பைக் கருத்தில் கொண்டு பார்க்கையில், மக்கள் நல்வாழ்வில் இந்த அரசு சரியான கவனம் செலுத்துமா என்பது சற்று கவலையளிப்பதாக உள்ளது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்திலே தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே, வருமுன் காப்போம் திட்டம், வாழ்வொளித் திட்டம், 24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்வோருக்கு 2500 ரூபாய் மருத்துவ சிகிச்சை நிதி, தொழில் முனைவோர் உதவியோடு மருத்துவமனைகள் மேம்படுத்தும் திட்டம், கண்ணொளி வழங்கும் திட்டம் என்று பல்வேறு சிறப்பு மிக்க மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களைத் தீட்டி, சாதாரண, சாமானிய, நடுத்தர மக்களின் நல்வாழ்வை மையமாக வைத்து திட்டங்களை அரசு நிறைவேற்றியது. அத்தகைய சிறப்பு மிக்க, பெயர் சொல்லும் திட்டங்கள் இந்த மானியக் கோரிக்கையிலே அதிக அளவிலே தென்படவில்லை என்பதையும் நான் இங்கே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவர் கலைஞருடைய ஆட்சியில் 600-க்கும் மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டித் தரப்பட்டன. 17 மாவட்ட மருத்துவமனைகளில் சி.டி. ஸ்கேன் வசதி செய்து தரப்பட்டது. அண்மையிலே முதலமைச்சரால் இங்கே தொடங்கி வைக்கப்பட்ட எம்.ஆர்.ஐ. ஸ்கேன்கள், 'கொண்டு வரப்படும்' என்று அப்போது அறிவிக்கப்பட்டு, அவை இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. கடந்த ஆட்சிக் காலத்திலே பல்வேறு புதிய கருவிகள் பல்வேறு மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டன. இப்படி மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட கடந்த ஆட்சி மருத்துவத் துறையிலே பல வளர்ச்சிகரமான திட்டங்களை கடந்த 5 ஆண்டு காலத்திலே நிறைவேற்றியிருக்கிறது. அதைப்போல இந்த ஆட்சியும் வாழ்க்கையில் வறுமையில் வாடிக்கொண்டிருக்கிற ஏழையெளிய, கிராமப்புற மக்களுக்கான மருத்துவ வசதிகளைச் செய்வதிலே அக்கறையோடு செயல்பட வேண்டுமென்பதுதான் எங்களுடைய கருத்து என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மரணமடைந்தார்கள். காஞ்சிபுரத்திலே ஒரு புற்றுநோய் மருத்துவமனை இருக்கிறது. தமிழகத்திலேயே ஒரேயொரு புற்றுநோய் மருத்துவமனை அங்குதான் இருக்கிறது. இலவசமாக மருத்துவ சிகிச்சை செய்வதற்கு வேறு எங்கேயும் மருத்துவமனை இல்லை. கன்னியாகுமரியில் இருப்பவர்கள்கூட காஞ்சிபுரத்திற்கு வந்துதான் சிகிச்சை பெற வேண்டும். ஆனால் அந்த மருத்துவமனைக்கான வசதிகள், அந்த மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்குரிய வசதிகளைப் பற்றியெல்லாம் இந்த மானியக் கோரிக்கையிலே சொல்லப்படவில்லை. அங்கே ஒரு படம் எடுக்க வேண்டுமென்றால் செங்கல்பட்டிற்குச் சென்று அங்கே சிகிச்சை மேற்கொண்டு படமெடுத்து, அதற்குப் பின்னால்தான் காஞ்சிபுரத்திற்கு வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதிலும் குறிப்பாக, புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களை வீட்டிலேகூட யாரும் வைத்துக்கொள்வதற்குத் தயாராக இல்லாத நிலையில் அப்படிப்பட்டவர்கள் தங்கி சிகிச்சை பெறுவது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது. ஆகவே, புற்றுநோய் மருத்துவமனை ஒன்றை மதுரையிலே தொடங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், காஞ்சிபுரம் புற்றுநோய் மருத்துவமனைக்கு இன்னும் பல்வேறு வசதிகளைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 11—40

அடுத்து, ஏர்வாடியில் தங்கியிருந்த மன நோயாளிகள் 22 பேர் தீயில் கருகிச் செத்தார்கள். அதற்குக் காரணம், அங்கே தனியார் பலர் மன நலக் காப்பகங்களை வைத்திருந்தார்கள் என்பதையும், குற்றாலத்திலும் வைத்திருந்தார்கள் என்பதையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கீழ்ப்பாக்கம் மன நலக் காப்பகத்தைத் தவிர வேறு அரசு மன நலக் காப்பகம் இங்கே இல்லை. கன்னியாகுமரி, திருநெல்வேலி போன்ற பகுதிகளிலே இருந்து கீழ்ப்பாக்கம் வரமுடியாத காரணத்தால் இப்படிப்பட்ட தனியார் காப்பகங்களில் மன நோயாளிகள் சேர்க்கப்பட்டு, அதன் காரணமாக நடைபெற்ற விபத்துகளை எல்லாம் நாம் பார்த்தோம். எனவே அரசு, ஒரு மன நலக் காப்பகத்தை மதுரைக்கு அருகே அமைத்தால் அது அந்தப் பகுதி மக்களுக்கு வசதியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, நோயாளிகளோடு வருகின்றவர்கள் தங்குவதற்கான வசதி மருத்துவமனைகளிலே இல்லை. எப்படி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்களை அதிக அளவில் கட்டித் தந்தோமோ, அதேபோல நோயாளிகள் தங்குவதற்கு ஆங்காங்கே மருத்துவமனைகளுக்குக் கட்டடங்களைக் கட்டித் தந்தால் இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களோடு வருகின்றவர்கள் அங்கே இருப்பதற்கு ஒரு நல்ல சூழ்நிலை உருவாகும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, சித்த மருத்துவம் மேம்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழகத்திலே பல நல்ல மூலிகைகள், தரமான மூலிகைகள் இருக்கின்றன. ஆனால் அந்த மூலிகைகளுக்குப் பேட்டன்ட் உரிமை தரப்படுகிறதா என்றால் இல்லை. பல வெளிநாடுகளில் பேட்டண்ட் உரிமை தரப்படுகின்ற சூழ்நிலையைப் பார்க்கின்ற நேரத்திலே தமிழகத்திலே இருக்கின்ற சித்த மருத்துவர்களுடைய மூலிகை மருந்துகளுக்கும் பேட்டன்ட் உரிமை பெறுவதற்கு இந்த ஆட்சி தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எழும்பூரில் இருக்கின்ற குழந்தைகள் நல மருத்துவமனையில் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் வாழ்வு பெறுகிறார்கள். இதைப்போன்ற ஒரு மருத்துவமனை தமிழகத்திலே வேறு எங்கும் பெரிய அளவில் இல்லை. தென்புலத்து மக்களுக்கும் இதுபோன்ற

மருத்துவமனைகளில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற டாக்டர்களை ஊக்குவிக்கின்ற வகையில் அவர்களுக்கும் விருதுகள் வழங்குகின்ற அந்த நிலையை இந்த அரசு ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மலைப் பகுதிகளிலே, மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பல்வேறு பகுதிகளிலே டாக்டர்கள் இருப்பதே இல்லை என்ற குறை நீண்ட காலமாக இருந்துகொண்டிருக்கிறது. மலைவாழ் மக்களில் டாக்டருக்குப் படித்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தால் கண்டிப்பாக அவர்கள் அங்கே தங்கி, சிகிச்சை அளிக்கக்கூடிய நிலை இருக்கும் என்பதை உணர்ந்து, அந்த மலைவாழ் மக்களை அங்கே டாக்டர்களாக நியமிக்க வேண்டும். அதேபோல, பெண் டாக்டர்களை அதிக அளவில் நியமிக்க வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11—45

தேர்வாணையத்தின் மூலம் டாக்டர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பல தடங்கல்கள் நீண்ட காலமாக இருக்கின்ற காரணத்தால், இன்னும் பல மருத்துவமனைகளிலே மருத்துவர்கள் இல்லாத நிலையிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, அதை விரைவுபடுத்தி, உடனடியாக மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது, தேர்வாணையத்தின் மூலம் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் மருத்துவர்கள் நியமனம் குறித்து நீதிமன்றத்திலே தடையாணை பெற்ற காரணத்தாலே, நியமனத்திலே தடங்கல் ஏற்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். அதற்காகத்தான், நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டு சென்றவுடன், அந்த வழக்கிற்கென்று வாதாடுவதற்கு அட்வகேட் ஜெனரலை பிரத்யேகமாக நியமித்து, வழக்கை விரைவாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மனுப் போட்டு, வழக்கை விரைவாக எடுத்து, ஒரே நாளிலே விவாதத்தையும் வைத்து, மறுநாளே தீர்ப்பும் ஆகி, அந்தத் தடையாணை நீக்கப்பட்டுவிட்டது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விரைவிலே, அனைத்து ஆரம்ப

சுகாதார நிலையங்களிலும் ஒரு பெண் மருத்துவர் இருப்பார் என்கிற நிலைமை உருவாகிற வகையில் 350 பெண் மருத்துவர்கள், [illegible] மாதத்திற்குள் நியமிக்கப்பட இருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அருமையான ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்கள் இங்கே சொன்னார்கள். தேர்வாணையத்தின் மூலம் மருத்துவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, உள்ளபடியே 1 ஆண்டு, 1-1/2 ஆண்டு காலம் ஆகிவிடுகிறது. அதனால், மருத்துவமனைகளிலே டாக்டர்கள் இல்லாத நிலைமை இருக்கிறது என்பது உண்மைதான். எனவே, அதற்காகத்தான் இப்போது அந்த முறையை மாற்றி, 10 (ஏ) (1) என்ற அடிப்படையில், வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நேரடி நியமனம் செய்ய, முன்னுரிமை அடிப்படையில், seniority basis - இதிலே விருப்பப்பட்டவர்களுக்கோ அல்லது வேண்டியவர்களுக்கோ இடம் கொடுக்காமல், முன்னுரிமை அடிப்படையில், வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் தற்காலிகமாக நியமித்து, பின்னர், subject to regularisation by TNPSC என்ற வகையில் 950 மருத்துவர்கள் தமிழகம் முழுவதும் நியமிக்கப்படுவார்கள் என்ற அந்த நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மருத்துவமனைகளிலே consolidated pay-ல் பணியாற்றிக் கொண்டிருந்த செவிலியர் 210 பேரை நிரந்தரமாக்கவும், மீண்டும் செவிலியர் பற்றாக்குறையைப் போக்குவதற்காக மீண்டும் 650 செவிலியர்களை contract basis-ல் எடுப்பதற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். உடனடியாக நான் சொன்ன அந்த நியமனங்கள் நடக்க இருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு நிலைமை உருவாகிறபோது, டாக்டர்கள் இல்லை என்கிற அந்தக் குறையும், செவிலியர்கள் இல்லையென்கிற அந்தக் குறையும் போக்கப்பட்டுவிடும். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இதையே திரும்பத் திரும்பச் சொன்னார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் பிச்சாண்டி அவர்களுடைய அந்தக் கேள்விக்குப் பதிலைச் சொன்னால், மற்ற உறுப்பினர்களுக்கும் வசதியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். Para-medical Staff என்கிற வகையில் அந்தப் பணி நியமனத்திற்குத் தடை இருந்தது. அதனாலே காலியாகிற இடங்களைப் பூர்த்தி செய்ய முடியாத ஒரு நிலை இருந்தது. அதனால், எல்லா மருத்துவமனைகளிலும் Technicians/Pharmacists ஆகியோரை நியமனம் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. இப்போது அந்தத் தடையைப்



போக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த வகையிலே Para-medical Staff 1500 பேர் விரைவிலே நியமனம் செய்யப்படவிருக்கிறார்கள் என்ற நல்ல தகவலையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி, இன்னும் 2 நிமிடங்களிலே உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, நம்முடைய மாநிலம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையிலே, இந்தியாவிலே எய்ட்ஸ் ஒழிப்பிலே முதல் இடத்திலும், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திலே இரண்டாவது இடத்திலேயும் இருந்தது. இப்படிப் பல்வேறு நிலைகளில் தொடர்ந்து மருத்துவத் துறையில் முன்னணியில் இருக்கின்ற மாநிலமாகத் தமிழகம் இருக்கிறது. கலைஞருடைய அரசிலே 'பல கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கி, ஐந்தாண்டு காலத்திலே பல்வேறு வளர்ச்சிகளைப் பெற்று இருக்கிறது. ஏழையெளிய மக்களின் இடம் தேடி அவர்களுக்கான மருத்துவ வசதிகளைச் செய்யக்கூடிய பணிகளையெல்லாம் ஆற்றியிருக்கிறது. அப்படிப்பட்ட நல்ல திட்டங்களை தொடர்ந்து இந்த அரசு நிறைவேற்ற வேண்டும் என்பதையும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11—50*

இப்போது சாதாரண ஏழையெளிய மக்களுடைய வாழ்க்கை, மருத்துவத்தை நம்பித்தான் இருக்கிறது. உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்பதைப்போல, அவர்களுக்கு வாழ்வளிக்கக்கூடிய மருத்துவத் துறை மிகத் திறம்படச் செயலாற்றினால்தான், தனியார் மருத்துவமனைகளை நாடிச் சென்று வைத்தியம் செய்ய முடியாத ஏழையெளிய மக்களுக்கெல்லாம், அரசு மருத்துவமனைகளிலே அந்த நல்ல திட்டங்கள் கிடைக்கும். கடந்த காலங்களிலே நம்முடைய பொது மருத்துவமனைகளிலே இருதய அறுவை சிகிச்சை செய்வதில்லை, சிறுநீரக அறுவை சிகிச்சை செய்வதில்லை என்ற நிலையெல்லாம் இப்போது மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, தொடர்ந்து அந்த அறுவை சிகிச்சைகளையெல்லாம் நம்முடைய மருத்துவமனைகளிலே செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் நான் இந்த

நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு மனிதனுக்கு வாழ்வில் வளம் சேர்க்க வற்றாத செல்வம் இருக்கலாம்; அவன் ஆணை கேட்டு நடக்க ஆள், அம்புகள் ஆயிரக்கணக்கில் இருக்கலாம். அதிகாரம் செலுத்தும் வாய்ப்புள்ள அரியாசனத்தில்கூட அமர்ந்திருக்கலாம். அறிவுடையோன் என்று அறிஞர் போற்றும் கீர்த்தியும் இருக்கலாம். எல்லாம் இருந்தும், நோயற்ற வாழ்வு அமையவில்லையெனில் என்ன பயன்? அதனை நல்வாழ்வு என்று நவின்றிட இயலுமா? இயலாது, இயலாது. அதை எண்ணிப் பார்த்து, இந்தத் துறையில் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

குறிப்பாக, எங்களுடைய கண்டன ஊர்வலத்தை நடத்துகின்ற நேரத்திலே, அதில் அடிபட்டு மருத்துவமனைக்குச் சென்றவர்களை எல்லாம் சேர்க்காமல், அவர்களை மருத்துவமனையிலே அனுமதிக்காமல், அவர்களை வெளியே அனுப்பிய ஒரு மோசமான நிலை நடைபெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட நிலை இருக்கக்கூடாது. யாராக இருந்தாலும், பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனைக்கு வந்தால், அவர்களை அனுமதித்து அவர்களுக்கான சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இராயப்பேட்டை, ஜி.எச். போன்ற மருத்துவமனைகளிலே, "நீங்களெல்லாம் விழுந்து அடிபட்டவர்கள் என்று சொல்லுங்கள்" என்று சொல்லக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதேபோல, மூன்று மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவதாக...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு) பிச்சாண்டி அவர்கள் முடிக்கப் போகிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக்குத் தவறான தகவலைக் கொடுக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும். அதன்பின் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** ஒரு சின்ன விளக்கம். நான் அதிகம் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "என்று சொல்லி, பேச்சை முடித்துக்கொள்கிறேன்" என்று பிச்சாண்டி அவர்கள் சொல்லுங்கள்.



**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான தகவலை அவைக் குறிப்பிலே ஏற்றுவதற்கு முயற்சி செய்கிறார். உள்ளபடியே தமிழகத்திலே இருக்கின்ற மருத்துவமனைகளிலே பணியாற்றுகின்ற மருத்துவர்கள் நல்ல மனிதாபிமானத்தோடு நடந்து கொண்டிருக்கிறார்கள். காயம்பட்டவர்கள் அல்லது அடிபட்டவர்கள் யாரையும் திருப்பி அனுப்பியதாக எந்தத் தகவலும் இல்லை. இராயப்பேட்டை மருத்துவமனையிலே அப்படி நடந்ததாகச் சொல்லுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியிருந்தால் புகார் எழுதிக் கொடுக்கச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராயப்பேட்டை மருத்துவமனையை நான் பார்வையிடுகிறபோது, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் அவர்கள்கூட, அடிபட்டவர்களை அந்த நேரத்திலே வந்து பார்த்து, நலம் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் ஒரு கருத்தையும் சொல்கிறார்; அப்படி அடிபட்டு வந்தவர்களை, கீழே விழுந்து காயம்பட்டதாக டாக்டர்கள் சொல்லச் சொன்னார்கள் என்று. அதுவும் தவறான கருத்து. அப்படி எந்த டாக்டரும் சொல்ல மாட்டார்கள். சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அதற்குத் தேவையும் இல்லை. டாக்டர்களுக்கு அந்த வேலையும் இல்லை. அவர்களுக்கு அரசியலோ அல்லது அப்படிச் சொல்ல வேண்டிய அவசியமோ இல்லை. எனவே, அதுபோன்ற கருத்துகளை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னாள் அமைச்சராகப் பணியாற்றியவர்கள்; பொறுப்புள்ளவராக இருந்தவர், சொல்வதைத் தவிர்க்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானே நேரடியாக மருத்துவமனைக்குச் சென்றிருந்த காரணத்தால் இதைச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் பேரணிக்கு வந்தவர், அரிவாளால் வெட்டப்பட்டு, இறந்துபோனார்; கோவை ரங்கசாமி என்பவர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மருத்துவ மானியத்திற்குத் தொடர்புடையதாகச் சொல்லுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மருத்துவ மானியத்திற்குத் தொடர்புடையது தான். அங்குள்ள டாக்டர்கள் அதை 'ஆக்சிடென்ட் கேஸ்' என்று சொல்லி, சென்னை பொது மருத்துவமனையிலே சொல்லி மாற்றப் பார்த்தார்கள். பிறகு நாங்களும், எங்களுடைய கட்சி முக்கியஸ்தர் பொங்கலூர் பழனிசாமி

போன்றவர்களெல்லாம் சென்று வாதாடி, போராடிய காரணத்தால்தான் அது மாற்றப்பட்டது. மருத்துவர்கள் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்வதாகச் சொல்கிறாரே, அதற்கு இதுதான் எடுத்துக்காட்டா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. பரிதி, டாக்டர்கள் எல்லாக் காலத்திலும் இருக்கக்கூடியவர்கள். யாராவது டாக்டர்கள் அப்படிச் சொல்லியிருந்தால் அதைப் புகாராக நீங்கள் அமைச்சருக்குத் தெரிவிக்கலாம். ஏனென்றால், டாக்டர்களுக்கு அரசியல் எதுவும் கிடையாது. எல்லாத் துறைகளைச் சார்ந்தவர்களும் இருக்கிறார்கள். எல்லா விருப்பம் உள்ளவர்களும் இருக்கிறார்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மருத்துவர்களைக் குறை சொல்லவில்லை. அங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்து சென்ற பிறகு, காவல் துறையினர் வந்த பிறகு, அரிவாளால் வெட்டப்பட்டு இறந்தது என்பதை மாற்றி, 'ஆக்சிடென்ட் கேஸ்' என்று மாற்ற முயற்சி செய்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியிருந்தால் எழுதிக் கொடுங்கள். பிச்சாண்டி, பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** ஏற்கெனவே காவல் துறைக்கு இது சம்பந்தமாகப் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 11—55*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி மிகவும் சாமர்த்தியமாக இங்கே சில விவரங்களைச் சொல்கிறார். அப்படி எந்த ஒரு நடவடிக்கையும் அவர் சொல்வதுபோல பொது மருத்துவமனையிலே நடக்கவில்லை. ஆக்சிடென்ட் கேஸ் என்று பதிய வேண்டுமென்று யாரையும் வற்புறுத்தவில்லை. அனுமதிக்கப்பட்ட நோயாளிகள் எப்படிக் காயமானது என்று டாக்டர்களிடம் சொல்வார்களேயானால், அவர்கள் காவல் நிலையத்திற்குத் தகவல் கொடுப்பார்கள். அவர்கள் வந்து காவல் நிலையத்திலே வழக்குப் பதிவு செய்வார்கள், ஸ்டேட்மென்ட் எடுப்பார்கள். அப்படித்தான் நடந்ததே தவிர, அவர் சொல்வதைப்போல தவறான காரியங்கள் எதுவும் மருத்துவமனையிலே நடக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டுத்தான் இருக்க வேண்டும். எல்லோருக்கும் – எதிர்க்கட்சியினருக்கும், ஆளுங்கட்சியினருக்கும் உயிர் ஒன்றுதான்.



காப்பாற்ற வேண்டும், அவ்வளவுதான். ஆனால், சில நேரங்களிலே அவர்கள் அரசியல்வாதிகளாக ஆக்கப்படுகிறார்கள அல்லது அரசியல்வாதிகளால் அவர்கள் இயக்கப்படுகிறார்கள் என்பதற்கு ஒரே ஒரு உதாரணம்—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், அரசியல்வாதிகள் என்றால் எல்லோரையும்தான் குறிக்கும் அது. எல்லோரும் அரசியல்வாதிகள்தான்.

**திரு. துரைமுருகன்:** நான் அதைத்தான் சொல்லுகிறேன். அப்படி ஆக்கப்படுகிறார்கள் என்பதற்கு ஒரே ஒரு உதாரணம். அதிலும் குறிப்பாக, சிறப்பாக, ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள் சொல்வதை சிலர் இக்கட்டான நிலையிலே கேட்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பதற்கு ஒரே ஒரு உதாரணம், கலைஞர் அவர்களை, கைது செய்த அன்றைக்கு அவருக்கு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபோன்று உள் விவகாரத்திற்குள்ளே எல்லாம் போக வேண்டாம். மருத்துவமனை சம்பந்தமாக நீங்கள் ஏதாவது விவரங்களைச் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள். இதுபோன்று விவகாரங்களுக்குள்ளே போக வேண்டாம். பிச்சாண்டி அவர்கள் பேச்சை முடியுங்கள்.

**திரு. துரைமுருகன்:** நான் வழக்குகளுக்கு உள்ளே போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழக்கும் வேண்டாம், இதுவும் வேண்டாம். (குறுக்கீடு) மருத்துவமனை சம்பந்தமாக நீங்கள் சொல்ல வேண்டியவைகளைச் சொல்லுங்கள். டாக்டர்கள் பற்றி ஏதாவது புகார் இருந்தால் சொல்லுங்கள். அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள்.

**திரு. துரைமுருகன்:** டாக்டர்களைப் பற்றித்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த டாக்டர்களைப் பற்றி இருந்தால், நீங்கள் புகார் எழுதிக் கொடுங்கள். (குறுக்கீடு) பொத்தாம் பொதுவாக நீங்கள் சில டாக்டர்களைப் பற்றிச் சொல்லக்கூடாது. அப்படி யாராவது டாக்டர்கள் நடந்திருந்தால் அதை நீங்கள் எழுதிக் கொடுங்கள். (குறுக்கீடு) நீங்கள் எழுதிக் கொடுங்கள். அமருங்கள்.

**திரு. துரைமுருகன்:** நான் சொல்வதிலே தவறு இருந்தால் நீங்கள் எக்ஸ்பஞ்ஜ் செய்து விடுங்கள். ஆனால், கேட்காமலேயே நீங்கள் போய்விட்டால் எப்படி? கேட்காமலேயே பாண்டியன் போய்விட்டான், என்ன ஆச்சு தெரியுமா? உங்களுடைய ஊரிலேதான்—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், இந்தக் கதை எல்லாம் தெரியும். (குறுக்கீடு) எனக்கு பாண்டியனைப் பற்றியும் தெரியும், துரைமுருகன் பற்றியும் தெரியும் என்கின்ற காரணத்தினாலேதான் சொல்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. பிச்சாண்டி, உங்களது பேச்சை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சிகிச்சை மறுக்கப்பட்டு, திருவண்ணாமலை அரசு மருத்துவமனையிலே வந்துகூட சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். அதைப்போல மாவட்ட மருத்துவமனைகளிலே சிகிச்சை பெற்றிருக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் பார்க்க வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு பேசி முடியுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** அது மட்டுமல்லாமல்—விழுப்புரம் மருத்துவக் கல்லூரி, வேலூர் மருத்துவக் கல்லூரி—தொடர்ந்து மருத்துவக் கல்லூரிகளை உயர்த்தினால்தான், டாக்டர்கள் இல்லையென்கின்ற நிலை மாறும் என்பதை உணர்ந்து, திருவண்ணாமலை மற்றும் அங்கெல்லாம் மருத்துவக் கல்லூரிகள் தொடங்குகின்ற வகையிலே, ஒவ்வொரு ஆண்டும் புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கி அதிலே மருத்துவர்களை அதிக அளவிலே உருவாக்கினால்தான், டாக்டர்கள் பஞ்சம் தீரும், அது ஏழையெளிய மக்களுக்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்த்து இந்த அரசு செயல்பட வேண்டும். அதேபோல, பிசியோதெரபிஸ்ட்டுகள் எல்லாம் வேலைவாய்ப்பில்லாமல் நீண்ட காலமாக இருக்கிறார்கள். எல்லா மருத்துவமனைகளிலும் அந்த இடங்கள் காலியாக இருக்கின்றன. அவர்களுக்கும் அந்த வேலைவாய்ப்புகளை வழங்குகின்ற பணிகளை அரசு கவனிக்க வேண்டும் என்பதைத் தெரிவித்து, இந்த வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கும் நன்றியினைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

***திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்வுற்று வறுமை மிஞ்சி, பாழ்பட்டுக் கிடந்த தமிழகத்தை, கடந்த 5 ஆண்டு காலத்தில் தாழ்வுற்று வறுமை மிஞ்சி, பாழ்பட்டுக் கிடந்த தமிழகத்தை உய்விக்க வந்த எங்களது மனிதப் புனிதவதி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களுக்கு



(மேசையைத் தட்டும் ஒலி) எனது பணிவான நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். அனுபவம் வாய்ந்த பெருமக்கள் அடங்கிய இந்தப் பேரவையில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய கன்னிப் பேச்சு என்பதால் அவையோர் எவரும் குறுக்கிட மாட்டார்கள் என்று பெரிதும் நம்புகிறேன். சென்னை, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் வேட்பாளராக நிறுத்தப்பட்ட என்னை வெற்றி பெறச் செய்வதற்காகப் பாடுபட்ட மனிதப் புனிதவதி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், தொகுதிவாழ் மக்களுக்கும் என்றென்றும் நன்றி உள்ளவனாகச் செயல்படுவேன் என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொண்டு, எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

நண்பகல் 12—00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். 1996 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7 ஆம் நாள் அதிகாலை வேளையிலே அன்றைய ஆட்சியாளர்களின் கட்டளையை, ஏற்று காவல் துறையினர் எங்களின் மனிதப் புனிதவதி குடியிருக்கும் போயஸ் தோட்டத்திற்குள் நுழைந்து, எங்கள் புரட்சித் தலைவி அவர்களைக் கைது செய்து காலை முதல் மாலை வரை விசாரணை என்ற போர்வையில் நேரத்தைக் கடத்திவிட்டு, அந்திசாயும் வேளையிலே கம்பி வலை அமைக்கப்பட்ட காவல் துறை வண்டியிலே நீதிபதியின் வீட்டிற்கு அழைத்துச் சென்று 8–வது மாடியிலே இருக்கின்ற..

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** ஆளும் கட்சியினர் பேசினால் மட்டும் எதை வேண்டுமானாலும் பேசலாமா? ஆனால், நாங்கள் பேசினால் மட்டும் அதை வேண்டாமென்று சொல்கிறீர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு உறுப்பினர் வைதியலிங்கம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கன்னிப் பேச்சு என்று முதலிலே சொல்லிவிட்டேன். ஆகவே அருள்கூர்ந்து குறுக்கிட வேண்டாமென்று அவை அடக்கத்தோடு கேட்டுக்கொள்கிறேன். கம்பி வலை அமைக்கப்பட்ட காவல் துறை வண்டியிலே நீதிபதியின் வீட்டிற்கு அழைத்துச் சென்று, 8–வது மாடியிலே இருக்கின்ற நீதிபதியின் வீட்டில் உள்ள lift–ஐ இயங்காமல் செய்து அன்றையதினம் கால் கடுக்க எங்கள் தலைவியை மாடிப்படி ஏறவிட்டதை நினைத்து எங்கள் நெஞ்சம் இன்னும் வேதனை என்னும்

வெப்பத் தீயில் மிதந்து கொண்டிருக்கிறது. அந்தக் கொடுஞ்செயல்களைக் கண்ட எங்கள் நெஞ்சம் பதறியது. அதுமட்டுமா? சென்னை மத்திய சிறையிலே, கூவத்தின் ஓரத்திலே கொசுக்களும், பெருச்சாளிகளும் குடிகொண்ட சிறைக் கொட்டகையை எங்கள் தலைவிக்குத் தந்துவிட்டார்கள்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிட விரும்பவில்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கன்னிப் பேச்சு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடந்ததைச் சொல்லுகிறார். நீங்கள் பேசும்போது சொல்லுங்கள், உட்காருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** எங்கள் நெஞ்சங்கள் தணலாய், நெருப்பாய் தகித்துக் கொண்டிருக்கின்றன. கடந்த ஆண்டு எங்கள் இதய தெய்வம், மனிதப் புனிதவதி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்த நாட்டு மக்களுக்கு ஒரு வேண்டுகோளை வைத்தார்கள். முன்னாள் முதல்வர் அவர்கள் செய்திருக்கிற தவறுகளால் அவர் ஆயுள் உள்ள வரை, ஆயுள் முழுவதும் சிறையிலே இருக்க வேண்டுமென்று கூறினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் குறுக்கிட விரும்பவில்லை.

**திரு. பி.கே. சேகர்பாபு:** இந்தக் கூற்று எப்போது நிறைவேறும் என்று, வாக்களித்த மக்கள் எங்களைப் பார்த்துக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், இது கன்னிப் பேச்சு.

**திரு. துரைமுருகன்:** நான் அவர் பேச்சில் குறுக்கிட விரும்பவில்லை. ஆனால் உங்களிடம் ஒன்றை...

**திரு. பி.கே. சேகர்பாபு:** கவர்னர் உரையிலே, கழக ஆட்சி அமைந்தது ஒரு சரித்திர சாதனை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எதிர்க் கட்சி உறுப்பினர் ஒருவர், சரித்திரம் எது என்று கேட்கிறார். கடந்த ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சியில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தொல்லைகள், இந்தியத் துணைக் கண்டத்தில்...(குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கன்னிப் பேச்சுப் பேசுகிறார். இதற்குப் போய் இத்தனை பேர் எழுந்திருக்கிறீர்களே. (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

*(திமுக உறுப்பினர்களும், ஆளும் கட்சி உறுப்பினர்களும் எழுந்து நின்றனர்)*

**திரு. கோ.சி. மணி:** அவர் அபாண்டமாகப் பழி சுமத்துகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொண்டருடைய பேச்சு, அவைக்கு வந்திருக்கிற தொண்டருடைய கன்னிப் பேச்சு. அவர் சொல்வதைச் சொல்லட்டும். நீங்கள் பேசுகிறபோது விளக்கம் சொல்லுங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) சேகர்பாபு, உட்காருங்கள். துரைமுருகன், நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** நான் பேரவைத் தலைவரிடம்தான் ஒரு கிளாரிபிகேஷனைக் கேட்க விரும்புகிறேனே தவிர, நான் சேகர்பாபுவினுடைய கன்னிப் பேச்சிலே நான் குறுக்கிட விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எழுந்தால் அவர் உட்கார்ந்துதானே ஆகவேண்டும்?

**திரு. துரைமுருகன்:** ஆம், உட்கார்ந்துதான் ஆகவேண்டும். Point of order can be raised at any time. Sir, I am on a point of order. நான் பேரவைத் தலைவரிடம் கேட்க விரும்புவது, குறிப்பாக, கவர்னர் உரை, நிதிநிலை அறிக்கை இவற்றின்மீது பேசுகிறபோது எல்லாவற்றையும் கலந்து பேசுவார்கள். ஆனால் Demand–ல் பேசுகிறபோது, அந்த Demand–க்கு உரிய பொருளில்தான் பேசுவார்கள். ஆனால், நாங்கள் ஏதாவது எடுத்து வைத்தால், அது இத்தோடு ஒட்டி வரவில்லை என்று அமர வைத்துவிடுகிறீர்கள். (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன், நீங்கள் அப்புறம் சொல்லுங்கள். நான் கேட்டதற்குப் பிறகு நீங்கள் என்ன தீர்ப்பைச் சொன்னாலும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேகர்பாபு, உட்காருங்கள். அவர் விளக்கம் சொல்கிறார். சொல்லி முடியுங்கள்.

**திரு. துரைமுருகன்:** ஆனால், மாண்புமிகு உறுப்பினரின் கன்னிப் பேச்சு என்ற காரணத்தால், அவரிடத்திலே நேரடியாகக் கேட்க விரும்பாத காரணத்தால், உங்களிடத்தில் கேட்கின்றேன். மானியக் கோரிக்கைக்கு சம்பந்தா சம்பந்தம் இல்லாத ஒரு பேச்சைப் பேசுகிறபோது, ஏதோ ஒரு சிறையில் அவர்களுடைய தலைவி மட்டும் பெருச்சாளி, கொசுக்கடியில்

தலைமைக்கு நன்றி சொல்வதையோ, நீங்கள் உங்களுடைய தொகுதி மக்களுக்கு நன்றி சொல்வதையோ, நீங்கள் மானியக் கோரிக்கையிலே பேசுகிறபோதுகூட தெரிவியுங்கள். நான் அதற்கு முழுமையான அனுமதியைத் தருகிறேன். சேகர்பாபுவுக்குத் தருகிற அதே அனுமதியை நான் உங்களுக்கும் தருகிறேன். கன்னிப் பேச்சுப் பேசக்கூடிய நண்பர்களுக்குத் தருகிறேன். அதிலே மாறுபட்ட கருத்து இல்லை. (குறுக்கீடுகள்) கல்வி அமைச்சர் ஏதோ சொல்கிறார்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு பேசும்போது ஏதோ சட்டத்திற்கு வெளியில் சென்றதாக நண்பர் பேசுகிறார். அப்படிப் பேசவில்லை. இதனால் எந்தக் குழப்பமும் கிடையாது. அவர் பேசும்போது, பேரவைத் தலைவர் சொன்னதுபோல, தான் சார்ந்திருக்கிற கழகத்தைப் பற்றியும், தான் வெற்றி பெற்றதைப் பற்றியும், தான் வெற்றி பெற்றதற்குக் காரணமான எங்களுடைய புரட்சித் தலைவியைப் பற்றியும் சொன்னார்கள். அரசியலில் எப்படி வெற்றி பெற்றோம் என்று சொல்லும்போது, பழைய, கடந்த கால நிகழ்ச்சிகளைச் சொல்வதும் வாடிக்கை. இதில் ஒன்றும் தவறு கிடையாது. அதைச் சொல்லும்போது, என்ன நடந்ததோ, அதைச் சொல்லியிருக்கிறார்கள். அதில் எலி இருக்கிறதா, கொசு இருக்கிறதா என்று எல்லோருக்கும் தெரியும். (குறுக்கீடுகள்) முடித்துவிடுகிறேன். ஹெல்த் டிபார்ட்மென்டிற்கு, சுத்தமாக இருக்க வேண்டும் என்ற கருத்தில்கூட அவர் சொல்லி இருக்கலாம். அங்கு கொசு, எலி நிறைய இருப்பதனால் ஹெல்த் மினிஸ்டருக்குச் சொல்லியிருக்கலாம். சம்பந்தப்பட்டுதான் பேசியிருக்கிறார். சம்பந்தப்படாமல் பேசிவிட்டார், பேசிவிட்டார் என்று சொன்னால், அது தவறு. அதோடு ஓர் உறுப்பினர் பேசும்போது பொதுவாகச் சொன்னார். வரவு–செலவுத் திட்டம் வந்தது, ஆளுநர் உரை வந்தது, அதில் பேசியிருக்கலாம் என்று சொன்னார். இப்பொழுது எவ்வளவு பேர் இருக்கிறோம்? நாம் 234 பேர்கள். நீங்களும் பேசலாம். அங்கிருந்தே சில கருத்துகளைச் சொல்லலாம். 234 பேர்களும் இந்த இரண்டே நேர்வுகளில் பேச முடியுமா? அந்த அளவுக்கு நேரம் இருக்கிறதா? நடைமுறையில் பார்க்கும்போது, ஏதாவது ஒரு மானியம் வரும்போது இங்கு மட்டுமல்ல—முதன் முறையாக நானும் கன்னிப் பேச்சுப் பேசுகிறவன்தான். (குறுக்கீடு) துரைமுருகன், தயவுசெய்து கன்னிப் பேச்சு பேசவிடுங்கள். நான் புதிதாகச் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறேன். முதல் முறையாக வந்திருக்கிறேன். நான் பார்லிமென்டில்தான் இருந்தேன்—பார்லிமென்டிலே எந்த topic வந்தாலும் ரெயில்வே டிப்பார்ட்மெண்ட் வந்தாலும், எங்கள் ஊரிலே light எரியவில்லை என்று அங்குகூட சொல்வார்கள். கால்வாய் வெட்டணும் என்று சொல்வார்கள். பொதுவாகவே சொல்லுகின்றேன். எந்தவொரு மானியம் வந்தாலும், நீங்கள்கூட எழுந்திருப்பீர்கள். நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள்கூட பாராளுமன்றத்திலே இருந்து இருக்கின்றார்கள். நீங்கள் பார்த்தீர்கள் என்றால், உறுப்பினருக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கும்போது, சில பிரச்சினைகளைப் பேசத்தான் செய்வார்கள். தொகுதியைப் பற்றியும் பேசுவார்கள். எல்லோருக்கும் எல்லா நேரத்திலும் வாய்ப்புக் கிடைக்காது. ஜெயிலைப் பற்றியும் பேசுவார்கள். ஜெயிலில் இருந்ததைப் பற்றிச் சொல்ல வேண்டும் அல்லவா? அதிலும் புரட்சித் தலைவி அவர்கள் ஜெயிலில் இருந்தபோது எலி அங்கே இல்லையா? கொசு இல்லையா? சொல்லச் சொல்லுங்கள், பார்க்கலாம். இது ஒரு பிரச்சினையா? அவர் சொன்னதில் என்ன தவறு இருக்கிறது?



*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்களே, திராவிட இயக்கத்தைச் சேர்ந்த அனைவருக்குமே, தாங்கள் சார்ந்து இருக்கிற தலைமைமீது ஒரு உணர்ச்சிமயமான ஈடுபாடு இருப்பது உண்மை. அவர் ஆர்.கே. நகர் தொகுதியிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அவைக்கு வந்திருக்கிறார். ஒரு துடிப்புமிக்க தொண்டன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தொண்டன், தான் சார்ந்து இருக்கின்ற தலைமையைப் பற்றிப் புகழ்ந்து பேசுவதையும், கடந்த காலத்திலே அந்தத் தலைவர்கள் அரசியலிலே இருந்த காரணத்தால் அனுபவித்த இன்னல்களைச் சுட்டிக்காட்டுவதிலும் ஒன்றும் தவறு இல்லை. முறைகேடு ஒன்றும் இல்லை. உங்களுடைய உறுப்பினர்கள் கன்னிப் பேச்சுப் பேசுகின்றபொழுது அதே மரபிலே பேசினால் அதை நான் அனுமதிக்கத் தயார். நான் நிச்சயமாக அதிலே குறுக்கிட மாட்டேன். அந்த அனுமதியைத்தான் இப்போது நான் உறுப்பினர் பி.கே. சேகர்பாபுவுக்குத் தருகிறேன். சேகர்பாபு, பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று பாட்டாளி மக்கள் கட்சி...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி அவர்களே, பொன்முடி அவர்கள் பாட்டாளி மக்கள் கட்சிக்காக ஏதோ வக்காலத்து வாங்கிப் பேசுகிறார், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள் என்று தெரிகிறது. கன்னிப் பேச்சிலே நேற்று எங்கள் உறுப்பினர் பேசினார்

என்று அதையும் சொல்லுகிறீர்கள். அதைக் குறுக்கிடுவதற்காகச் சொல்லவில்லை. சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் எழுந்து அதற்கு விளக்கம் கேட்டார். அந்தப் பிரச்சினை முடிந்து விட்டது. அதேபோல, இப்போது துரைமுருகனும் விளக்கம் கேட்கிறார். (குறுக்கீடு) அதைத்தான் கேட்கிறார். அவர் இப்போது யாரையும் குற்றஞ் சாட்டிப் பேசவில்லை. எங்களுடைய தலைவி அனுபவித்த இன்னல்கள் என்று அவைகளைத்தான் அவர் சுட்டிக்காட்டுகிறார். அதிலே தவறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) உங்களுக்கு நிச்சயம் உரிமை உண்டு. அதற்குப் பதில் அளிக்கக்கூடிய உரிமை உங்களுக்கு உண்டு. நீங்கள் பேசுகிறபோது பதில் சொல்லலாம். (குறுக்கீடு) நீங்கள் பேசுகிறபோது பதில் சொல்லலாம். சேகர்பாபு பேசி முடிக்கட்டும்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 நிமிடத்தில் நிறைவு பெறுகிற என்னுடைய கன்னிப் பேச்சில், அவையில் அனுபவம் வாய்ந்த மூத்த உறுப்பினர்களான, முன்னாள் அமைச்சர்களாக இருந்த துரைமுருகன், நான் குடியிருக்கின்ற பகுதியிலே சட்டமன்ற உறுப்பினராகப் பல்லாண்டு காலமாக இருக்கின்ற பரிதி இளம்வழுதி, பொன்முடி போன்றவர்கள் எல்லாம் எங்களைப் போன்ற-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேகர்பாபு, உங்களுக்கு விளம்பரம் தேடித் தர வேண்டுமென்று அவர்களுக்கு விருப்பம்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் சொல்ல வருகிறேன். எங்களைப் போன்ற இளைஞர்கள் கன்னிப் பேச்சுப் பேசுவதை ஊக்குவிக்காமல் இப்படி இடையூறு செய்வது அருமை அண்ணன் துரைமுருகன் போன்றவர்களுக்கு நியாயமாகப்படுகிறதா என்ற வினாவினை வைத்து, எங்கள் புரட்சித் தலைவி அவர்கள் 28 நாட்கள் சிறையிலே இருந்த அந்த வழக்கிலே இருந்து நீதிமன்றம், அவர் நிரபராதி என்ற தீர்ப்பினை வழங்கி, அவரை அந்த வழக்கிலே இருந்து விடுதலை செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த அவையிலே கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், எங்கள் புரட்சித் தலைவி அவர்கள்மீது உண்மைக்கு மாறான அந்த வழக்குகளைப் பதிவு செய்தவர்கள்மீது இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது என்பதை இந்த அவையிலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்படி 28 நாட்கள் சிறையிலே இருந்த அந்த வழக்கைப் பற்றிக் கேட்டால், கடந்த கால ஆட்சியாளர்கள், நாங்கள் மக்களுக்கு வாக்குறுதி அளித்தோம், மக்கள் எங்களுக்கு வாக்குகளை அளித்ததாகக் கூறுகின்றார்கள். இந்த நேரத்தில் நான் ஒன்றை நினைவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். கடந்த ஆண்டு எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் இந்த நாட்டு மக்களுக்கு ஒரு



தகவலைச் சொன்னார்கள். அதாவது முந்தைய ஆட்சியில் முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிற தவறுக்கு அவர் ஆயுள் உள்ள வரையில் சிறையில் இருக்க வேண்டுமென்ற ஒரு தகவலைக் கூறி இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வாக்களித்த மக்களை நாங்கள் சென்று பார்க்கின்றபொழுது, உங்களது இயக்கத்தின் தலைவி அவர்கள் கூறிய கூற்றை எப்போது மெய்ப்பித்து காட்டப் போகின்றீர்கள் என்று எங்களைக் கேட்கின்றார்கள். மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேகர்பாபு, தலைமைக்கு வணக்கம் சொல்லிவிட்டீர்கள். இனி, மானியக் கோரிக்கைக்கு வாருங்கள்.

*பிற்பகல் 12-15*

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அவர்கள் மீண்டும் அமைத்த எம்.ஜி.ஆர். ஆட்சியில் முதல் நிதிநிலை அறிக்கையை இந்த அவையில் தாக்கல் செய்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேசும்போது, இதனை 2001-2002ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு-செலவுத் திட்டம் எனக் கூறினார். என்னைப் பொறுத்தவரை, இது திருத்திய வரவு-செலவுத் திட்டமல்ல; 2001-2002 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டமென நாம் கருத வேண்டும் என இந்த அவையிலே நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நோய்நாடி நோய்முதல் நாடி' என்பார்களே, அதுபோல, தமிழக மக்களின் பிரச்சினைகளைத் தேடித் தெரிந்துகொண்டு, அவற்றுக்குத் தீர்வு காணும் நல்ல மருத்துவராக இருக்கும் எங்களுடைய மனிதப் புனிதவதி, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை குறித்த இந்த விவாதத்தில் நான் பேசுவதற்கு அனுமதி அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று சொல்வார்கள். அந்த குறைவற்ற செல்வத்தை எதிர்கால சந்ததியினர் நிரம்பப் பெற வேண்டும் என்பதற்காக, கடந்த முறை ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது மனிதப் புனிதவதி, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல்நோக்குத் திட்டங்களை அமல்படுத்தினார்கள். இடையிலே வந்தவர்கள் அந்தத் திட்டங்களைச் சிதறடித்து, சீரழித்துவிட்டாலும், மீண்டும் மக்களுக்கு நோயற்ற வாழ்வைத் தர வேண்டும் என்பதற்காக தமிழ்நாட்டில்

உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கு ஃபின்லாந்து நாட்டு அரசின் தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவியுடன் ரூ.86 கோடி மதிப்பில் 967 அதிநவீன மருத்துவக் கருவிகள் அமைத்திட இருப்பது, தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள ஒட்டுமொத்த மக்களும் பாராட்டுகின்ற நிலையாகத்தான் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதைப்போல, ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் மதுரை இராஜாஜி மருத்துவமனையிலும், சென்னை அரசு பொது மருத்துவமனையிலும் 9.6 கோடி செலவில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகள் அமைக்கப்பட்டு இருப்பது, இந்த அரசின் சாதனை என்ற சிகரத்தில் பதிக்கப்பட்ட வைரக் கல்லாக இருக்கிறது என்று சொல்லி இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டு காலம் ஒரு ஆட்சி நடைபெற்றது. அந்த ஆட்சியில் எத்தனை இடர் தருகின்ற சம்பவங்கள் நடைபெற்றன என்பதை எண்ணிப் பார்க்கும்போது தமிழக மக்களுக்குத் தலைக்குனிவுதான் ஏற்படுகிறது. தமிழக மக்களின் நோய் தீர்த்து மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ளப் பொறுப்பேற்றிருந்த அமைச்சர் ஒருவர், ஒரே ஒருவரை மட்டும் மகிழ்ச்சியாக வைத்துக்கொள்வதற்காக எந்த நிலையிலேயும் அவரையே சுற்றி வந்தார். அவர் ஆட்சியில் மருத்துவத் துறை எப்படிச் சீரழிந்தது என்பதற்கு சில உதாரணங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னை, அரசு பொது மருத்துவமனையில் இதய மாற்று அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. ஏழை, எளிய மக்கள் தங்களது இதய வால்வு சீரழிந்து போய் இருந்தால் அதனை மாற்றிக்கொள்வதற்கு அங்கே வசதிகள் செய்து தரப்பட்டு இருக்கின்றன. ஏறத்தாழ 15 ஆண்டு காலம், மறைந்த மனிதப் புனிதன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மனிதப் புனிதவதி டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் மிகுந்த அக்கறை கொண்டு மருத்துவத் துறையை வளர்த்து வந்தார்கள் என்றால், அதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால் அதே அரசு பொது மருத்துவமனையில் கடந்த ஆட்சிக் காலத்தில் இதய நோயாளிகள் அலைக்கழிக்கப்பட்டனர்; அவர்கள் தினம் தினம் சாவின் வாசலுக்குச் சென்று வந்தார்கள். 114 நோயாளிகள் அங்கு அனுமதிக்கப்பட்டு, தக்க சிகிச்சை கிடைக்காமல் அல்லல்பட்டார்கள். அந்தச் செய்தி எங்களுடைய பொதுச் செயலாளர், மனிதப் புனிதவதி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காதுக்கு எட்டியது. அன்று தி.மு.க. அரசின் கையாலாகாத்தனத்தைக் கண்டித்து ஓர்



அறிக்கையும் வெளியிட்டு இருக்கின்றார். 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் ஆரம்பித்து, எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் கிட்டத்தட்ட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலவச மருத்துவ முகாம்கள் அரசாங்கத்தின் சார்பிலே நடைபெற்றன. அந்த மருத்துவ முகாம்களில் கிட்டத்தட்ட ஏழையெளிய மக்கள், நடுநிலையாளர்கள், உழைக்கின்ற பாட்டாளிகள் கோடிக்கணக்கிலே சேர்ந்து பயன்பெற்றார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-20*

அது மட்டுமா? ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் பொதுநல நோக்கோடு இயக்கப் பணி ஆற்றுவதுதான், மறைந்த மனிதப் புனிதன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு போதித்துவிட்டுச் சென்ற நெறிமுறை என்பதால், ஆட்சியில் இல்லாத காலத்திலும்கூட பல்வேறு இலவச மருத்துவ முகாம்கள் தொடர்ந்து புரட்சித் தலைவி அவர்களால் நடத்தப்பட்டன என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி மக்கள் பிரச்சினைகளுக்காகப் போராடிய எங்கள் தலைவிதான் இன்றையதினம் முதலமைச்சராக இந்தச் சட்டமன்றத்திலே வீற்றிருக்கிறார். இந்தக் கடமையைச் செய்யவேண்டிய எதிர்க் கட்சித் தலைவர்கள், தங்களையும், தங்கள் குடும்பத்தையும் காப்பாற்றுவதற்காக வீதியிலே நின்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். தி.மு.க. தலைவரின் சொந்தங்கள் அம்மா ஆட்சியில் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதற்கு ஒரு சிறு உதாரணத்தை நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சி அமைந்த பிறகு, முன்னாள் தி.மு.க. கட்சியைச் சேர்ந்த ஒரு மந்திரியின் தம்பிமீது ஒரு புகார் கூறப்படுகிறது. அந்த அமைச்சரின் தம்பி காவல் துறையினரால் கைது செய்யப்படுகிறார். கைது செய்யப்பட்டு 15 நாட்கள் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிடுகிறது. உடனே அவர் நெஞ்சுவலி என்று கூறுகிறார். கைது என்று வந்தவுடன் நெஞ்சுவலி வந்துவிடுகிறது. நடந்த உண்மை. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மன்னிக்க வேண்டும், Hon. Speaker.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லி முடிக்கட்டும், சொல்லி முடிக்கட்டும். பின்னர் நீங்கள் என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** நான் எதற்குச் சொல்ல வந்தேன் என்றால், அன்றைக்கு வழக்கிலே இருக்கிறது என்று கூறினீர்கள். இதுவும் ஒரு வழக்கிலே இருக்கிறது. எப்படி அனுமதிக்கலாம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, வழக்கிலே இருக்கிற காரணத்தினால், பிரச்சினைக்குள்ளே போக வேண்டாம். மற்ற விவரங்களைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** வழக்கு ஆரம்பகட்ட நிலையிலே இருக்கிறது. இன்னும் நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**திரு. துரைமுருகன்:** நான் கலைஞருக்கு 'pressure' என்று சொன்னேன். Pressure என்பதற்குள்ளே, அது வழக்கிலே இருக்கிறது என்று சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள், ஒரு வழக்கிலே இருக்கிறது என்று சொல்கிறார். இதற்கு நீங்கள் அனுமதிக்கிறீர்கள் என்றால், நாங்கள் தகராறு செய்ய விரும்பவில்லை. இதுதான் உங்கள் முறை என்று சொன்னால், நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். நாங்கள் தகராறு செய்ய விரும்பவில்லை.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். நான் சொன்ன வழக்கு தற்போது கோர்ட்டிலே நிலுவையில் இல்லை. அந்தக் கேஸ் தற்போது நிலுவையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசி முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** கைது செய்யப்பட்டது நடைமுறை. ஆனால் கைது என்று வந்தவுடன் நெஞ்சுவலி வந்துவிடுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஓர் உறுப்பினருடைய கன்னிப் பேச்சிலே சில குறிப்பிட்ட வாசகங்களைக் கண்டித்து, இவ்வளவு தூரம் வெளிநடப்புச் செய்வது என்பது மிகவும் வருந்தத்தக்கது. அவர் கன்னிப் பேச்சிலே சில கருத்துகளைச் சொல்கிறார். அதற்கு எதிர்க் கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பு அவர்களுக்குக்கூட இருக்கிறது. இதைக் கண்டித்து அவர்கள் வெளிநடப்புச் செய்வது ஒரு தொண்டனுடைய கன்னிப் பேச்சையே தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு வலு குறைந்ததாக திராவிட



முன்னேற்றக் கழகம் இருக்கிறதா என்று மக்களுக்கு எண்ணத் தோன்றும். திரு. சேகர்பாபு அவர்கள், இனி பேசி முடியுங்கள்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன் என்னவென்று சொல்லுங்கள். கருணாகரன். *(குறுக்கீடுகள்)* திரு. பாபு, உட்காருங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாபு, உட்காருங்கள். திரு. கருணாகரன். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாகரன். *(குறுக்கீடுகள்)*

*(எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் ஏதோ சொல்லிவிட்டு வெளிநடப்புச் செய்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின் அவர்கள் போவது ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. மாடு போகிற வழியிலேதான் கயிறும் போகும். *(சிரிப்பு)* விடுங்கள். திரு. கருணாகரன், நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இந்த அவையில் அமைதிப்பூர்வமாகவும், ஜனநாயகப்பூர்வமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் சபையை நடத்துவதற்கு எல்லோரும் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், பேராசிரியர் உட்பட அனைவரும், இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பாகப் பேசியது ரொம்ப சந்தோஷமாக இருந்தது. தொடர்ந்து சபையினுடைய அனைத்து நடவடிக்கைகளும் மலிவான விளம்பரத்தைப் பெறுகிற வகையிலே, பத்திரிகைகளிலே தலைப்புச் செய்திகளாக இடம்பெறுகிற வகையிலே நடைபெற்றுக்கொண்டிருப்பது எங்களைப் போன்றவர்களுக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.

மக்கள் நல்வாழ்வு சம்பந்தமாகவும், மருத்துவம் சம்பந்தமாகவும் மிக முக்கியமான பிரச்சினையில் ஏராளமான விஷயங்கள் மக்கள் பிரச்சினைகளைப் பேசுவதற்கு நாங்கள் விரும்புகிறோம். கட்சிகள் சிறியது, எண்ணிக்கை குறைவு என்கிற காரணத்தினாலேயே, அல்லது இதுபோன்ற

சம்பவங்களால் நேரம் கடந்து போகிறது என்ற காரணத்தினாலேயே, கடைசி நேரம் நெருங்குகிறபோது, 5 நிமிடம், 2 நிமிடம், 3 நிமிடம் என்று எங்களுக்குக் குறைக்கப்படுகிறது. கட்சிகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்ற காரணத்தினாலேயே, திட்டங்களையும், கொள்கைகளையும், நல்லதையும் சொல்லுகிற எண்ணங்களுக்கு எங்களிடம் பஞ்சம் இல்லை என்பதையும் சொல்லி, இதுபோன்ற நடவடிக்கைகளைத் தவிர்ப்பதற்கு, தடுப்பதற்கு, ஜனநாயகப்பூர்வமாக இந்த அவை நடைபெறுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்; எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில், இடதுசாரிக் கட்சியைப் பொறுத்தவரையில், முழுக்க, முழுக்க அந்த ஒத்துழைப்பை நாங்கள் தருவதற்குத் தயாராக இருக்கிறோம்; மக்கள் உன்னிப்பாக தமிழ்நாட்டு சட்டமன்ற நடவடிக்கைகளைக் கவனிக்கிறார்கள் என்பதையும் கணக்கிலே எடுத்துக்கொண்டு, நாம் அவர்களுக்கு நியாயம் வழங்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன் அவர்களே, எண்ணிக்கை குறைந்தது என்கிற காரணத்திற்காக யாருக்கும் அனுமதி மறுக்கப்படுவதோ, அவர்களுடைய நேரம் வெட்டப்படுவதோ கிடையாது. இன்னும் சொல்லப் போனால், ஆளும் கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் என்மேல் அளவு கடந்த வருத்தம், அளவு கடந்த மனக் குமுறல். அந்தப் பக்கமே நான் திரும்பமாட்டேன் என்கிறேன் என்றெல்லாம் வருத்தப்படுகிறார்கள். அவர்கள் 10 பேர் பெயர் கொடுத்தால் ஒருவர் பெயர்தான் அன்றைக்கு அவையிலே வருகிறது, பேசுவதற்கான வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கிறது. ஆகவே, எதிர்க் கட்சியினுடைய குரலை ஒடுக்க வேண்டும் என்பதோ, அவர்களுடைய வாய்ப்புகளைப் பறிக்க வேண்டும் என்பதோ இந்த அவையினுடைய நோக்கம் அல்ல. மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் லத்தீப் அவர்கள் ஒரே ஒருவர் இருக்கிறார் என்பதற்காக வாய்ப்பைப் பறிக்கவா போகிறேன்? இப்போதுகூட அவர்தான் எழுகிறார். அவர்தான் பேசப் போகிறார். பேசுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக வந்திருக்கிற உறுப்பினர்கள் பேசுகின்ற கன்னிப் பேச்சிற்குத் தடை போட வேண்டும் என்று நாங்கள் இந்தத் தரப்பிலிருந்தோ அல்லது வேறு தரப்பிலிருந்தோ யாரும் சொல்லவில்லை. முறையாகவும், வரைமுறையோடும் சபை வாதப் பிரதிவாதங்கள்



நடைபெற்றால் அதனால் மிஞ்சுகிற நேரத்தில் எல்லோருக்கும் வாய்ப்புக் கிடைக்கலாமே, அது ஒரு ஆரோக்கியமான சபை நடவடிக்கையாக இருக்குமே, அதுதானே இன்றைய தேவை என்ற அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் கருணாகரன் அவர்கள் சொல்கிறார்கள்.

நான் சொல்வதைப்பற்றி ஆளுங் கட்சி உறுப்பினர்கள் வருத்தப்படக் கூடாது. எதிர் வரிசையிலே இருப்பவர்களுக்கு இருக்கக்கூடிய பொறுப்பைவிட ஆளும் கட்சி உறுப்பினர்களுக்குத்தான் அதிகமான பொறுப்பு. எனவே, சில நேரங்களிலே நீங்கள் பொறுமையோடு இருந்தால்தான் அது உங்களுக்கே பெருமை சேர்க்கும். இந்த அவைக்கும் பெருமை சேர்க்கும். உதாரணமாக, நான் சட்டமன்றத்திற்கு வந்த காலத்திலேயிருந்து கல்வி மானியத்தில் பேசாத ஆண்டே இல்லை. இந்த ஆண்டுதான் நான் கல்வி மானியத்திலே பேசவில்லை. கல்வி மானியத்தில் பேச வேண்டும் என்பது எல்லோருடைய விருப்பம். நான் பேசவில்லை. இந்து சமய அறநிலையத் துறை மானியத்தில் பேச வேண்டும் என்பது எல்லோருடைய விருப்பம். என்னால் பேச முடியவில்லை. நேற்றையதினம் காலையிலும் பேசவில்லை, மாலையிலும் பேசவில்லை. கல்வித் துறையிலும் பேசவில்லை. காரணம், என்னுடைய நிலை எனக்குப் புரிகிறது. நான் ஒருவனாக வந்திருக்கிறேன். ஒருவனாக வந்ததற்கு என்னைத்தான் நான் குறைப்பட்டுக்கொள்ள வேண்டும். இருந்தாலும், என்னுடைய எண்ணிக்கையைப் பார்த்துதான் நீங்கள் தீர்மானிக்கிறீர்கள் என்றால் என்னுடைய எண்ணத்திற்கு மரியாதை இல்லை என்ற நிலை உருவாக்கப்படுகிறது. எனவே, நான் தங்கள் வாயிலாக எல்லோரையும் கேட்டுக்கொள்வது என்னவென்றால், சில பேச்சுக்களை சில வகையில் பேசுவதை நிறுத்திக்கொள்வது நல்லது. அப்படிச் செய்தால், இந்தச் சட்டசபைக்கு முழுப் பொறுப்புள்ள நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு அந்தப் பெருமை சேரும். நீங்கள் மறைமுகமாக அந்தப் பெருமையைச் சேர்க்கிறீர்கள் என்று பொருள். அந்தப் பொருளிலேதான் திரு. கருணாகரன் அவர்கள் பேசியிருக்கிறார். அவருடைய அந்த உணர்வை நானும் பெற்றிருக்கிறேன். நீங்களும் பெற்றிருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். உங்களுடைய பொறுப்பான அந்த இடத்தில் நீங்கள் சரியாகத்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். யாரும் குறைப்படுவதற்கு முகாந்திரமே இல்லை. உங்களைப் பாராட்டி, இந்த வகையில் நீங்கள் சபையை நடத்துவதற்கு நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். ஆளும் கட்சிக்கு அதில் மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது என்பதை மட்டும் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். குறை இருந்தால் என்னை மன்னியுங்கள். காரணம் நான் ஒருவன். அதனால் நான் பேசக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய எண்ணத்திற்கு மிகுந்த மதிப்பு உண்டு. மரியாதை உண்டு. நீங்கள் மூத்த உறுப்பினர். நான் சட்டசபைக்குள்ளே நுழைந்த காலத்திலேயிருந்து பேசிக் கொண்டிருக்கக்கூடிய உறுப்பினர். ஆற்றல் மிக்க உறுப்பினர். உங்கள் கருத்துக்கு மதிப்புண்டு, மரியாதை உண்டு. ஆளும் கட்சி உறுப்பினர்கள் அந்த மதிப்பையும், மரியாதையையும் புரிந்துகொண்டு இருக்கிறார்கள், அவர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சி–எங்களைப் பொறுத்தவரையில் எங்களுக்கு எங்களுடைய இதய தெய்வம், புரட்சித் தலைவி சரியான அறிவுரை தந்திருக்கிறார்கள். எப்படி நடந்துகொள்ள வேண்டும், எந்தக் காரணத்தைக் கொண்டும் எங்களுடைய கழகத்தைச் சார்ந்தவர்கள் உணர்ச்சிவசப்படக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் அதன்படிதான் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். இருப்பினும், திரு. சேகர்பாபு பேசியதைப் பற்றித்தான் இங்கே பிரச்சினை வந்திருக்கிறது. சேகர்பாபு பேசியதில் என்னைப் பொறுத்தவரையில் எந்தக் குறைபாடும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர் ஆரம்பத்திலேயிருந்தே சட்டசபைக்கு உட்பட்டு, அந்த விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் பேசிக் கொண்டிருக்கிறார். ஆனால் வேண்டுமென்றே– தி.மு.க. நண்பர்கள், அவர்களுக்கு வேறு வேலை இருக்கலாம். அதற்காகச் சென்று இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஏதோ ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு, ஒரு விளம்பரத்தைத் தேடிக்கொள்ள வேண்டும் என்பதற்காக–நம்முடைய நண்பர்கள் சொன்னதைப்போல விளம்பரத்திற்கும் இருக்கலாம்.

*பிற்பகல் 12—30*

நீங்கள் பேரவைத் தலைவர் தெளிவாகச் சொன்னீர்கள். ஒரு தொண்டன் தன் தலைமையை நினைத்துப் பார்த்து, தன்னுடைய உணர்வுகளைப் பேசிக்கொண்டிருக்கும்போது, வேண்டுமென்றே, ஆரம்பத்திலிருந்தே குறுக்கிட்டுக்கொண்டேயிருந்தார்கள். அதற்கு நாங்களும் விளக்கம் தந்தோம். நீங்களும் விளக்கம் தந்தீர்கள். அவர் சட்டத்திற்கு மேற்பட்டு எதையும் பேசவில்லை. அப்போது சொல்லும்போதுகூடச் சொன்னார், அந்த வழக்கு நிலுவையிலே இருக்கிறது. அவ்வளவுதான். நிலுவை என்றால், stay கொடுக்கவில்லை. இருந்தாலும், நிகழ்ச்சியைத்தான் சொல்லிக்கொண்டிருந்தார். வேண்டுமென்றே



அப்போது குறுக்கிட்டுக் குறுக்கிட்டு, அவரைப் பேச விடாமல் தடுத்துவிட்டு, கடைசியிலே ஏதோ ஒரு காரணத்திற்காக வெளியே செல்கிறார்கள். ஆகவே, ஆளும் கட்சியைப் பொறுத்தவரையில் நாங்கள் பொறுப்புடன் செயல்படுகிறோம். இந்த நாட்டிற்காக, பல திட்டங்களைச் செய்து கொடுப்பதற்காக புரட்சித் தலைவி அவர்கள் வந்திருக்கிறார்கள். அவருக்கு உறுதுணையாக நாங்கள் இருந்துகொண்டிருக்கிறோம். ஆகவே நாங்கள் எந்த நேரத்திலும் எங்களுடைய கடமையிலிருந்து தவற மாட்டோம். தவறாமல் என்ன செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்வோம். ஜனநாயக நெறிமுறைகளுக்கு உட்பட்டுச் செயல்படுவதுதான் அனைத்துக் கட்சிகளுடைய எண்ணங்கள், அதைத்தான் மற்ற நண்பர்களும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், வருகின்ற ஒவ்வொரு மானியமும் முக்கியமான மானியம். அதில் அனைவரும் பொது மக்களுடைய பிரச்சினைகளை எடுத்துக்கூறி, அதற்குத் தீர்வு காண்பதற்குத்தான் இந்த அவை இருக்கிறது. அதற்காகத்தான் எல்லோரும் பாடுபட்டுக்கொண்டிருக்கிறோம். அதற்கேற்றாற்போல நீங்களும் அனைவருக்கும் வாய்ப்புத் தந்துகொண்டிருக்கிறீர்கள். ஆனால் ஜனநாயகத்தில், பொதுவாக நம்முடைய பார்லிமெண்ட் சிஸ்டத்திலே, இங்கிருந்தாலும் சரி, அங்கிருந்தாலும் சரி, அந்தந்தப் பார்ட்டியின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல நாம் நேரத்தை ஒதுக்குகிறோம். இங்கே அதிகமான உறுப்பினர்கள் என்பதை வைத்து நேரம் கொடுக்கிறோம். அதேநேரத்தில் சில நண்பர்கள், மூத்த உறுப்பினர்கள் இருக்கிறார்கள்; அனுபவம் மிக்கவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய அறிவுரையும், அவர்களுடைய ஆலோசனையும் தேவைப்படுகிறது, இந்த அவைக்கு. அதையும் எடுத்துக்கொள்வதுதான் ஆளும் கட்சியினுடைய எண்ணம். நீங்கள் அதற்கேற்றாற்போலச் செயல்படுகிறீர்கள் என்பதைத்தான் பல நண்பர்கள் பேசுகிறார்கள். ஆகவே, எங்களைப் பொறுத்தவரையில் எங்களுடைய தலைவி இட்ட கட்டளைக்கு ஏற்ப, நாங்கள் உணர்ச்சிவசப்பட்டோ, சபையை நடத்தக்கூடாது என்றோ, அதற்காகச் செயல்படுவது கிடையாது. நாங்கள் உங்களுக்குக் கட்டுப்பட்டே எப்போதும் செயல்படுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேகர்பாபு, பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்கள்மீது எங்களுக்கு மிகுந்த மரியாதை இருக்கிறது. நடுநாயகமாக வீற்றிருக்கிறீர்கள். ஆனால் தாங்கள்கூட, பேசுகின்ற நேரத்தில் திராவிடக் கட்சிகளைச் சார்ந்தவர்களுக்குத் தங்களுடைய

தலைமையின்மீது குற்றச்சாட்டு என்று சொன்னால் யாரும் பொறுத்துக்கொள்ள முடியாது. உணர்வு மிகுதியினாலே பேசுகிறார்கள் என்றெல்லாம் சொன்னீர்கள். ஆகவே, திராவிடக் கட்சிகளைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் அந்த உணர்வு இருக்கிறதா? மற்ற கட்சிகளுடைய தலைமையைச் சொல்கின்ற நேரத்தில் அவர்களுக்கு உணர்வு இல்லையா என்பதைக் கேட்டு, எங்களுக்கும் உணர்வு இருக்கிறது என்று சொல்லி, எல்லாக் கட்சிகளுக்கும்—திராவிடக் கட்சி, நாங்கள் மாத்திரமல்ல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களும் திராவிட இயக்க வழி வந்தவர்கள்தான். பெரியாரைத்தான் நீங்களும் போற்றுகிறீர்கள். அதே வழியில்தான் நாங்களும் வந்திருக்கிறோம். இதிலே ஒன்றும் வேறுபாடு இல்லை. துரைமுருகனுக்குப் பதில் சொல்வதற்காக அதைச் சொன்னேனே தவிர, தேசிய இயக்கம் வேறு எழுகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையிலே எல்லா வகையிலும் ஒன்றுதான். அவர்கள்கூட தமிழ் மாநில காங்கிரஸ்தான்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு தலைவரவர்களே...

**திரு. ஜி.கே. மணி:** நான் சொல்லி முடித்துவிடுகிறேன். இங்கே மாண்புமிகு புதிய உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். விதிமுறைக்கு மாறாகச் சொல்லவில்லை, உட்பட்டுச் சொன்னார்கள். உண்மையைச் சொன்னார்கள். இன்றைய முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆட்சிக் காலத்திலே கைது செய்யப்பட்டு, 28 நாட்கள் சிறையிலே அடைக்கப்பட்டு, 8 மாடிக் கட்டடத்திலே lift எல்லாம் நிறுத்திவிட்டு, ஏற்றப்பட்ட கொடுமையையெல்லாம் சொன்னார்கள். உண்மையிலேயே வருத்தப்பட வேண்டிய ஒன்று. நான் இன்னொரு உண்மையையும் சொல்கிறேன். இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்படிக் கொடுமைப்பட்ட காலத்தைச் சுட்டிக்காட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்களிடத்திலே பேசிக்கொண்டிருந்த நேரத்திலே, ஒரு கட்சித் தலைமைக்கு ஏதாவது பாதிப்பு என்று சொன்னால், கட்சித் தலைவர் கைது செய்யப்படுகிறார் என்று சொன்னால், எல்லாக் கட்சிகளும் மிகப் பெரிய ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களை எல்லாம் செய்வதுண்டு. ஆனால் என்னைக் கைது செய்து 28 நாட்கள் சிறைச்சாலையிலே அடைத்தார்களே, என்னுடைய கட்சிக்காரர்கள் எதையும் செய்யவில்லை என்று சொன்னதையெல்லாம் சுட்டிக்காட்டி, அந்த 28 நாட்களிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உங்களைக் கேட்கிறேன், ** என்பதை நான் அன்போடு கேட்டு அமர்கிறேன். (கூச்சல்—குழப்பம்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி அவர்கள் சொல்வது மிகத் தவறு. அவர் கைது செய்யப்பட்ட உடனேயே தமிழகம் முழுவதும் பெரிய பிரளயம் ஏற்பட்டதென்பதையும், நானும்கூட அதையொட்டி மதுரையிலே மறியல் செய்து, கைது செய்யப்பட்டு சிறைச்சாலையிலேதான் இருந்தேன் என்பதையும், பல தோழர்கள், இயக்கத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைக்குப் போனார்கள் என்பதையும் மணி அவர்கள் மறந்துவிடக்கூடாது. வேறு யாரும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

பிற்பகல் 12-35

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் சொன்னது சரியான வார்த்தை கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவி ** அல்ல. அவருக்குப் பின்னால் தமிழ்நாடே நிற்கிறது என்பதுதான் உண்மையான நிலைமை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** பேரவைத் தலைவர் அவர்களே, கோடிக்கணக்கான தொண்டர்கள் இருக்கும் இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். அத்தகைய தொண்டர்கள் யாரும் எங்களுடைய புரட்சித் தலைவியை ** ஏனென்றால், எங்களுடைய உயிராக இருப்பவர் அவர். அவரை ** எங்களுக்கு உயிர் கிடையாது. அதுதான் உண்மை, அப்படியிருக்கும்போது ** என்று சொல்வது தவறு. அந்தப் பொருள்படச் சொன்னால் அதை அவர்கள் வாபஸ் பெற வேண்டும்.

**திரு. ஜி.கே.மணி:** என்னுடைய உணர்வுகளைச் சுட்டிக்காட்டினேனே தவிர...

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** நாங்கள் ஏதாவது அவருடைய தலைவரைப் பற்றிப் பேசியிருந்தால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Topic வேறு மாதிரிப் போகிறது. திரு. மணி, உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி அவர்கள், அவருடைய உணர்வுகளைச் சொன்னார்கள். அந்த உணர்வுகளை நான் புரிந்துகொள்கிறேன். அந்தத் தலைவி கைது செய்யப்பட்டதை நாங்கள் எல்லாம் கண்டிக்கிறோம்; அப்படிக் கைது செய்தது முறைகேடானது என்கிற கருத்துகளை எல்லாம் சொன்னீர்கள், வரவேற்கிறோம். ஆனால் அவருக்குப் பின்னாலே இருக்கிற ஒரு மாபெரும் இயக்கம், அவர் கைது செய்யப்பட்ட நேரத்திலே கொந்தளித்ததையும், குமுறியதையும், வேதனைப்பட்டதையும், சிறைச்சாலையை நிரப்பியதையும் நான் அறிவேன். ஆகவே, தாங்கள் ** என்று சொன்ன அந்தக் கருத்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்பற்றி இப்போது பேச வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் (குறுக்கீடு) திரு. மணி, பிரச்சினையை முடித்துவிடுங்கள். விவாதத்தைத் திசை திருப்ப வேண்டாம். மானியக் கோரிக்கை இருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** ** என்ற வார்த்தையை... *(கூச்சல்—குழப்பம்)*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** ** என்ற வார்த்தையை நீங்கள் வேண்டுமென்றேதானே கொண்டு வருகிறீர்கள். இப்போது தேவையில்லை அல்லவா? (குறுக்கீடு) அவருடைய தலைவருக்கும், நம்முடைய தலைவருக்கும் பேச்சுவார்த்தை நடந்திருந்தால் அது வேறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அமர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்ன கருத்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. அதற்கு மேலும் விவாதங்கள், விமர்சனங்கள் தேவையில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் தெரிவித்த அந்த வாக்கியம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. ஆகவே, அதைப்பற்றி மேலும் நாம் விவாதங்களை வளர்க்க வேண்டிய அவசியம் இல்லை. விவாதம் திசை மாறிப்போக வேண்டிய தேவையும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்களுக்கு இப்போது நான் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் உங்களுடைய கன்னிப் பேச்சிலே எவ்வளவு கலகலப்பை உண்டாக்க வேண்டுமோ, அதை உண்டாக்கிவிட்டீர்கள். வெளிநடப்புச் செய்துவிட்ட திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களைப்பற்றி அல்லது அவர்களுடைய தலைமைபற்றி அல்லது அந்த வழக்கிலே இருக்கிறதா, இல்லையா என்கின்ற அந்த நிலைமைகளைப்பற்றி இப்போது பேச வேண்டாம். ஏனென்றால்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது



அவர்களே இல்லை. அவர்கள் இல்லாத நேரத்திலே பேசுவது முறையல்ல. நாம் எல்லாம் வீரர்கள். காற்றோடு கத்திச் சண்டை போடக்கூடாது. ஆகவே, வெளியே போனவர்களை விட்டுவிட்டு, மானியக் கோரிக்கையிலே பேசி உங்களுடைய பேச்சை நிறைவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்ற வார்த்தையைச் சொல்லவில்லை. உண்மையைச் சொன்னேன். *(கூச்சல்—குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு. (கூச்சல்—குழப்பம்) உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உட்காருங்கள். திரு. மணி அவர்களோடு சண்டை போட வேண்டாம். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு, இப்போது நீங்கள் மருத்துவ மானியக் கோரிக்கையிலே எஞ்சிய கருத்துகளைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. ஜி.கே. மணி, நீங்கள் சொல்ல வேண்டிய கருத்துகளைச் சொல்லி முடித்து விட்டீர்கள். அதற்கு நான் சொல்ல வேண்டிய விளக்கத்தையும் சொல்லிவிட்டேன், அமருங்கள். தயவுசெய்து அமருங்கள். (கூச்சல்—குழப்பம்) ஆளுங் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக அமருங்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமி, உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தைச் சுற்றியுள்ள மக்களுக்கு அனைத்து மருத்துவ வசதிகளும் செய்து தரப்பட வேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சென்னை குரோம்பேட்டை, அண்ணா நகர், தண்டையார்பேட்டை ஆகிய இடங்களில் peripheral மருத்துவமனை என்ற புறநகர் மருத்துவமனைகள் அமைக்கப்பட்டன. ஆர்.கே. நகர் பகுதியில்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சின்ன ஸ்டான்லி என்று ஏழை, எளிய மக்களால் அழைக்கப்படும் தண்டையார்பேட்டை peripheral மருத்துவமனை 100 படுக்கைகளுடன் அமைக்கப்பட்டு சிறப்பான முறையிலே செயல்பட்டு வந்தது. கடந்த 5 ஆண்டு காலத்தில் தி.மு.க. ஆட்சியினரின் கவனக் குறைவால் அந்த மருத்துவமனை பாழ்பட்டுக் கிடக்கிறது. அந்த ஆட்சியில் எப்படி ஒரு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இருந்தார் என்பது அனைவரும் அறிந்தது. சீர்கெட்ட நிலையில் இருக்கிற இந்த மருத்துவமனைக்கு இன்றைக்கு சுமார்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** என்னுடைய நேரத்தை உறுப்பினர்கள் முழுமையாக எடுத்துக்கொண்டு விட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையை அமைச்சர் முடிக்க வேண்டும். அதற்காகச் சொல்கிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** ஐந்து நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளில் உரையை முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** இந்த மருத்துவமனைக்கு இப்போது சுமார் 800-க்கும் அதிகமானோர் தினந்தோறும் புறநோயாளிகளாக வந்து சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள். 100 படுக்கைகள் கொண்டிருந்தாலும், மருத்துவர்களோ, மருத்துவக் கருவிகளோ, மருந்துகளோ இல்லாத நிலையில் யாரும் அங்கு உள்நோயாளியாக அனுமதிக்கப்படுவதில்லை. ஏழை, எளிய மக்களுக்கு மட்டுமே பயன்படுகின்ற இந்த மருத்துவமனையை மேம்படுத்தி அனைத்து வசதிகளும் செய்து தரவேண்டுமென்று இந்த அவையிலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

இன்றைக்குப் பிறந்த குழந்தை முதல் தள்ளாடும் வயதானவர்கள் வரை வயது வித்தியாசமின்றி பிடித்து ஆட்டுகிற நோய் நீரிழிவு நோய். அந்தக் காலத்தில் மதுமேகம் என்ற பெயர் வைத்து பயமுறுத்தினார்கள். இப்போது அதற்குத் தமிழிலே சர்க்கரை நோய் என்று சொல்லி பயமுறுத்துகிறார்கள். இந்த நீரிழிவு நோயினால் பாதிப்புக்கு உள்ளானவர்கள் இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டு, ஏழை, எளியோர்கள் மாற்றுச் சிறுநீரகம் பொருத்திக்கொள்ளும் அறுவை சிகிச்சைக்கு அரசிடம் அனுமதி பெற வேண்டும் என்ற விதி இருக்கிறது. இரத்த சம்பந்தமான உறவினர்கள் சிறுநீரகம் தானம் கொடுத்தால்தான் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்துகொள்ள வேண்டும் என்ற விதியைத் தளர்த்தி, நல்ல உள்ளம் படைத்தவர்கள் யார் சிறுநீரகம் தானம் தந்தாலும், அந்த சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையை அரசு மருத்துவமனையில் ஏழை, எளியோருக்குச் செய்திட அரசு உத்தரவிட வேண்டும். அப்படி சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு அதற்கான காலம் வரை வெளிநோயாளிகளாக இருந்து இரத்த சுத்திகரிப்பு செய்தலை dialysis-- அரசு மருத்துவமனைகளில் இலவசமாகச் செய்திட வேண்டும்.



மேலும், இப்போது பெருகி வரும் மக்கள் தொகையும், அதிகரித்து வரும் வாகன எண்ணிக்கையும் நெடுஞ்சாலைகளில் விபத்துக்களை உண்டாக்குகின்றன. சில தினங்களாக பத்திரிகைச் செய்திகளைப் பார்க்கும்போது, கருணையுள்ளம் கொண்ட மனிதப் புனிதவதி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சாலை விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையை அள்ளிக் கொடுப்பதைப் பார்க்க முடிகிறது. நெடுஞ்சாலைகளில் நூறு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள ஒவ்வொரு மருத்துவமனையையும் அனைத்து வசதிகளையும் கொண்ட, 24 மணி நேரமும் இயங்கக்கூடிய மருத்துவமனையாக மாற்றியமைத்து, இத்தகைய விபத்துக்களில் சிக்கி, ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுத்து நிறுத்திட வேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சிலர் இப்போது பதவி எனும் மன நோய் பிடித்து அலைகிறார்கள். அவர்களை ஆண்டவனாகப் பார்த்துத் திருத்துவான். ஆனால், ஆண்டவன் பெயரைச் சொல்லிக்கொண்டு ஏர்வாடியில் நடைபெற்று வந்த போலி மன நல மருத்துவ மையங்களைத் தடை செய்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மன நோய் மருந்தகங்கள் இல்லாத மாவட்டங்கள், தேர்ந்தெடுக்கப்பட்டு, மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் 14 மருத்துவப் பணியிடங்கள் உருவாக்கப்பட்டிருப்பதை இந்தச் சபையிலே மனதார வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள். நிறையப் பேர் பேச வேண்டும். நம் உறுப்பினர்களே நிறையப் பேர் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. பி.கே. சேகர்பாபு:** இப்போது போடப்பட்டிருக்கிற இந்தத் திருத்திய நிதிநிலை அறிக்கையில் இவ்வளவு நன்மைகள் செய்ய முடிந்திருக்கிறது என்றால், முழு நிதிநிலை அறிக்கையினைப் போட்டிருந்தால் மக்கள் இன்னும் எவ்வளவோ நன்மைகள் பெற்றிருக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். ஆனால், எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைக் குறை சொல்வது, கண்ணாடி வீட்டிலிருந்துகொண்டு கல் எறிகிற கதைதான். நான் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், மனிதப் புனிதவதி எங்கள் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சி என்கின்ற தேர் ஓட ஆரம்பித்துவிட்டது. அது திட்டங்களை நிறைவேற்றிவிட்டு நிலைக்கு வந்து சேருமே தவிர, கள்ள மனம் கொண்டவர்கள் போடுகிற முட்டுக்கட்டைகளுக்காக எங்கேயும் நிற்காது. திட்டங்களை நிறைவேற்றிவிட்டுத்தான் நிலைக்கு வந்து சேரும். மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணம் இருந்தால், எங்களோடு சேர்ந்து நல்லாட்சித் தேர் இழுக்க வாருங்கள். இல்லையேல் ஒதுங்கிப் போங்கள் என்று சொல்லி, என் உரைக்கு முற்றுப்புள்ளி அல்ல, அரைப்புள்ளி வைத்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சோ. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்கள் இந்த நாட்டில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவராக இருந்தவர்கள். நம்முடைய அருமைத் தலைவர் காமராஜருடைய 10 ஆண்டு கால ஆட்சியை முழுமையாக ஆதரித்தவர்கள். ஆகவே, நாங்களும் திராவிடப் பாரம்பரியத்தில் வந்தவர்கள்தான் என்பதை நம்முடைய சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முழு மனதோடு அதை வரவேற்கிறேன், ஏற்றுக்கொள்கிறேன், பாராட்டுகிறேன், நன்றி கூறுகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுப் பேசுகிற நேரத்திலே ஒரு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, அது நேற்றோடு முடிந்தது. நேற்றே பிரச்சினை முடிந்துவிட்டது. இன்றைக்கு எழுப்பக் கூடாது. (குறுக்கீடு) வேண்டாம், வேண்டாம். டாக்டர் குமாரதாஸ் பேசுங்கள்.



**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம். நான் அனுமதிக்கவில்லை. அதை எடுத்தாகிவிட்டது. அந்த வார்த்தைகள் நீக்கப்பட்டுவிட்டன. இனிமேல் பேச்சுக்கு இடமில்லை. உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லப்பட்ட முறை சரியல்ல. அது நேற்றோடு முடிந்துவிட்டது. நீங்கள் வெளிநடப்புச் செய்தீர்கள். முடிந்துவிட்டது. மறுபடியும் அதைப் பேசக்கூடாது. இப்போது இதைப் பேசுவதற்கு உங்களுக்கு நான் அனுமதியளிக்கவில்லை. நீங்கள் பேசுவது அவைக் குறிப்பிலே ஏறாது. டாக்டர் குமாரதாஸ் பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** **

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் பேசுங்கள்.

பிற்பகல் *12-45*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம், மக்கள் நல்வாழ்வு பற்றிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு ஒரு வாய்ப்பினைத் தந்தமைக்காக முதலாவதாக என்னுடைய நன்றியைச் சொல்லி, தமிழக அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் நடைபெறுகின்ற விவாதத்திலே கலந்துகொண்டு சில கருத்துகளைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே சில பாராட்டப்பட வேண்டிய அம்சங்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ், இருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நேற்றையதினம் ஒரு விவாதம் எடுத்து வைக்கப்பட்டது. அதற்கு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் எதிர்த்துப் பதில் சொன்னார்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அதுபற்றிய பிரச்சினை வந்தபோது, பாராளுமன்றத்திலே ஏற்றுக் கொள்ளப்பட்ட சொல்லாக இருந்தாலும்கூட, ஒரு சொல்லை அவருடைய மனம் புண்படும் என்பதற்காக அன்று அவை முன்னவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நானும் நீக்கிவிட்டேன். அப்படி நீக்கியதற்குப் பிறகும், அவர்கள் என்ன காரணத்திற்காக மறுபடியும் பிரச்சினையைக் கிளப்பினார்கள் என்று தெரியவில்லை. திண்டிவனத்திலேயிருந்து phone வந்ததோ, என்னவோ தெரியவில்லை. நேற்றே பிரச்சினையைக் கிளப்பி, மீண்டும் அவர்கள் இந்த அவையிலே அதை எதிர்த்துச் சொல்லி வெளிநடப்புச் செய்தார்கள். இன்றைக்கு வலுக்கட்டாயமாகப் பிரச்சினையை எழுப்பி அவர்கள் வெளிநடப்புச் செய்கிறார்கள். எந்தப் பிரச்சினையையும் ஆளுங் கட்சித் தரப்பிலேயிருந்து யாரும் அதைத் தூண்டவில்லை. அவர்களுடைய உறுப்பினர் பேசிய கருத்திற்கு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். அண்ணா தி.மு.க.–வை அது பிறந்த காலத்திலிருந்தே நான் அறிவேன். அவர்களுக்கு ஒரு பழக்கம் உண்டு. வலுச் சண்டைக்குப் போகமாட்டார்கள், வந்த சண்டையை விட்டுத் தொலைக்கவே மாட்டார்கள். அது அவர்களுடைய வழக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தேவையில்லாமல் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவராக இருக்கின்ற பொறுப்புள்ள நண்பர் மணி அவர்கள், இன்று, நேற்றைக்கு முடிந்துபோன பிரச்சினையைக் கிளப்பி, அதிலே ஒரு விவாதத்தை உண்டாக்கி, அவர்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள. இது முறையற்றது என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். டாக்டர் குமாரதாஸ் அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும், 30 படுக்கை வசதிகளுடன்கூடிய அனைத்து வசதிகளும் கொண்ட மருத்துவமனையும் அமைப்பதாகக் குறிப்பிட்டிருப்பதைக் கண்டு நான் உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல, அனைத்து மருத்துவமனைகளிலும் அறுவை சிகிச்சை அரங்கங்களில் குளிர்சாதன வசதி செய்வதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்திலே பெருவாரியாக இளைஞர்களைக் கெடுத்துக்கொண்டிருந்த பான் பராக், குட்கா போன்றவற்றைத் தடைசெய்வதற்கு எடுத்திருக்கின்ற முயற்சிகளைப் பாராட்டுகிறேன். அதைப்போல, புகை பிடிப்பதையும் தடை செய்வதற்கு எடுத்திருக்கிற முயற்சிகளையும் நான் பாராட்டக்



கடமைப்பட்டிருக்கிறேன். 905 மருத்துவர்கள் பணியிடங்களையும், 1,508 தொழில்நுட்ப மற்றும் உதவிப் பணியாளர்கள் காலிப் பணியிடங்களையும் நிரப்புவதற்காக நீங்கள் எடுத்திருக்கின்ற முயற்சிகளை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

அதேபோல, அரசு பயிற்சி பெற்ற பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்களையும் பணியில் அமர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மருந்தாளுநர்கள் பல்லாயிரக்கணக்கில் வேலையின்றி இருக்கிறார்கள். அவர்களையும் பணியிலே அமர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மற்றும் வேலூர் மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு அங்கீகாரம் பெற இந்த அரசு முனைப்பான நடவடிக்கை எடுத்து வருகிறது என்று கூறியிருக்கிறீர்கள். அப்படியென்று சொன்னால், கடந்த ஆட்சியிலே குமரி மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரிக்கு என்று சொல்லி அடிக்கல் நாட்டப்பட்டதினுடைய நிலை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன். அடிக்கல் நாட்டப்பட்டு இந்த ஆண்டே மருத்துவக் கல்லூரி குமரி மாவட்டத்திலே செயல்படும் என்று சொல்லி முந்தைய அரசு அறிவித்திருக்கிறது. ஆனால், இப்போதுதான் அதற்கான அனுமதியைப் பெறுவதற்கான முயற்சி எடுப்பதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதனுடைய யதார்த்தமான நிலை என்ன என்பதைத் தாங்கள் எங்களுக்கு விளக்கவேண்டும் என்று நான் இந்த நல்ல சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல இந்த ஆண்டே அதைத் தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, நீங்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமப்புற மாணவர்கள் சேர்க்கையை 15 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாக உயர்த்தியிருப்பதை நாங்கள் மிக, மிக வரவேற்கிறோம். அதிலே எங்களுக்கு சில கருத்துகளை நீங்கள் தெரிவித்தாக வேண்டும். குறிப்பாக, கிராமப்புறம் என்று சொல்கிறபோது, கிராமப் பஞ்சாயத்து என்று சொல்கிறீர்கள். அங்கேயிருக்கிற பேரூராட்சிகளிலே படிக்கிறவர்களை நகரத்திலே படிக்கிற பிள்ளைகளாக நீங்கள் கணக்கிலே கொண்டு வருகிறீர்கள். அப்படியென்று சொன்னால் கிராமப்புறங்களிலே, கிராமப் பஞ்சாயத்து, டவுன் பஞ்சாயத்து இரண்டையும்தான் கணக்கிலே வைத்திருக்கிறீர்கள். கிராமப்புறங்களிலேயிருந்து சென்று படித்து வருகிற பிள்ளைகளுக்கு இது பொருந்தாத ஒரு சூழ்நிலையாக இருந்து

கொண்டிருக்கிறது. எனவே, நகராட்சி, மாநகராட்சி போன்றவற்றை நீங்கள் தனியாகக் குறிப்பிட்டுவிட்டு, அது பேரூராட்சியாக இருந்தாலும் சரி, கிராமப் பகுதிகளாக இருந்தாலும் சரி, அங்கே பயிலுகிற மாணவர்களுக்கு 25 சதவிகிதம் என்கிற ஒரு தெளிவான முடிவினை அறிவிக்க வேண்டும். என்னுடைய பகுதியிலே, ஒரு பிள்ளை என்னுடைய மாவட்டத்திலேயே மூன்றாவது மாணவியாகத் தேர்வு செய்யப்பட்ட பிறகும், டவுன் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடத்திலே படிக்கின்ற காரணத்தினாலே இந்தச் சலுகையைப் பெற்றுப் படிக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே, இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டு, நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் திட்டம் உண்மையாக மக்களுக்குச் சென்றடைய வேண்டும் என்று சொன்னால், கிராமப்புறம் என்று சொல்கிறபோது கிராமப்புறம் மட்டும் அல்லாமல் பேரூராட்சிகளையும் அதில் ஒருங்கிணைத்துக்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளை நான் உங்கள் முன்னாலே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-50

இப்போது மருத்துவ உதவியை அரசு வழங்கிக்கொண்டிருக்கிறது. ஏழை, எளிய மக்களுக்கு, சட்டமன்ற உறுப்பினரோ, நாடாளுமன்ற உறுப்பினரோ பரிந்துரை செய்தால், அவர்களுக்கு இருதய operation--க்கு, சிறுநீரக operation—க்கு என்று எல்லாம் உதவிகளைச் செய்கிறார்கள். ஆனால், புற்றுநோய்க்கு உதவிகள் செய்யப்படுவதில்லை. அவற்றையும் நீங்கள் கருத்திலே கொண்டு, அவர்களுக்கும் முடிந்த அளவிற்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 1,410 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தமிழகத்திலே இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்த 1,410 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 281 ஆரம்ப சுகாதார நிலையங்களில்தான் சித்த மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம், மறைந்த முதலமைச்சர், எனது அன்பிற்கும் வணக்கத்திற்குமுரிய டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த காலத்திலேதான் சித்த மருத்துவத்திற்கு ஒரு புத்துயிர் கொடுத்து, கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலேதான் ஒரே நேரத்தில் 200 சித்த மருத்துவர்களை நியமித்தார்கள். அதற்குப் பிறகு வந்தவர்கள், குறிப்பிட்ட காலங்களிலே 100 பேரை நியமித்திருக்கிறார்கள். அது போதாது. எனவே, 1,410 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 281-லேதான் நியமிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால்,



பாக்கி இடங்களில் அதிகமாக சித்த மருத்துவர்களை நியமிப்பதற்கான முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு யுனானி மருத்துவக் கல்லூரி இருந்துகொண்டிருக்கிறது. ஆனால், தமிழகத்திலே ஒரே ஒரு யுனானி மருத்துவர்தான் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று சொன்னால், அதற்கும் நீங்கள் புத்துயிர் வழங்க வேண்டும். ஏனென்று சொன்னால், இந்திய முறை மருத்துவம் என்று சொல்கிறபோது, சித்தா, ஆயுர்வேதா, யுனானி ஆகிய மூன்று துறைகளையும் ஒருங்கிணைத்து ஒரே துறையாக, ஹோமியோபதியையும் இணைத்துச் செயல்படுகிறது. ஆனால், மருத்துவர்களை அரசுப் பணிகளில் நியமிக்கிறபோது அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை. எனவே, இந்திய முறை மருத்துவத்திற்கு நீங்கள் அதிகமான முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இங்கேகூட அமைச்சர் அவர்கள் இன்றைக்குத் தந்திருக்கின்ற புள்ளிவிவரத்தில் 1,334.72 கோடி ரூபாய் சுகாதாரத் துறைக்குச் செலவிடப்படுகிறது. மொத்த வருவாயில் 5.44 சதவீதம் செலவிடப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், ஒட்டுமொத்தமாக இந்திய முறை மருத்துவத்திற்கு நீங்கள் ஒதுக்கியிருக்கிற தொகை என்று பார்க்கிறபோது 44 கோடி ரூபாய். கிட்டத்தட்ட 3.3 சதவீதம் வருகிறது. ஆனால், அது போதாது. குறைந்தபட்சம் மொத்த வருவாயில் 10 சதவீதம் ஒதுக்கினால்தான் ஆங்கில முறை மருத்துவத்திற்கு இணையாக இந்திய முறை மருத்துவத்தைக் கொண்டு செல்ல முடியும் என்பதை நீங்கள் கருத்திலே கொள்ளவேண்டும். கொடுக்கின்ற பணம் கட்டடங்கள் கட்டுவதற்கும், தேவையான மருந்துகள் வாங்குவதற்கும், இருக்கின்ற மருத்துவர்களுக்கு ஊதியம் கொடுப்பதற்கும்தான் போதுமானதாக இருக்கிறது. எனவே, உண்மையிலேயே சித்த மருத்துவம் அல்லது இந்திய முறை மருத்துவத்திலே ஆர்வம் உடையவர்களாக நீங்கள் செயல்படுவீர்கள் என்று சொன்னால், தேவையான ஆராய்ச்சிகள் செய்வதற்கு அதிகமான பணம் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

அடுத்து, நமது தாம்பரம் பகுதியிலே இருக்கக்கூடிய சானடோரியம் மருத்துவமனையில் எய்ட்ஸ் நோய்க்கு மருத்துவர்கள் மருத்துவம் செய்கிறார்கள். ஆனால், நேற்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எய்ட்ஸ் நோய்க்கு மருந்து இல்லை, சித்த மருத்துவத்தில் இல்லை, தவறான விளம்பரம் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் அதில் உடன்படவில்லை. நேற்றைக்குக் குறுக்கிட வேண்டாம் என்று

D
V21, 2, 1P01
P62.81
223442
சென்னை-600 008
எழும்பூர்

விட்டுவிட்டேன். காரணம், அதிலே ஆங்கில முறை மருத்துவர்கள் மருத்துவம் செய்து, குறிப்பாக இப்போது ரிடையர் ஆகிவிட்டார்கள், மரியாதைக்குரிய டாக்டர் தெய்வமணி அவர்கள். அவர்களுடைய தலைமையின்கீழ் IMPCOPS—லிருந்து மருந்துகளைப் பெற்று ஆராய்ச்சி செய்து எய்ட்ஸ் நோயாளிகளுக்கு மிக நல்ல முன்னேற்றம் இருக்கிறது என்று அவர்களே குறிப்பிட்டார்கள். எனவே, இந்திய முறையிலும் அப்படிப்பட்ட மருந்துகளை, ஆங்கில முறை மருத்துவர்களும், இந்திய முறை மருத்துவர்களும் ஒருங்கிணைந்த ஒரு குழுவை அமைத்து, நான்கூட ஒரு challenge—ஆக உங்களுக்குச் சொல்கிறேன், 25, 50 நோயாளிகளை நீங்கள் ஒதுக்கீடு செய்து அவர்களுக்கு இந்திய முறை மூலம் மருத்துவம் செய்யவேண்டும், அவர்களுடைய நோயினுடைய தன்மை எவ்வளவு விரைவாகக் குறைந்து வருகிறது என்று கண்டறிகிற விதத்திலே நீங்கள் ஒரு குழுவை அமைத்துப் பார்த்தால்கூட இந்திய முறை மருத்துவத்திற்கு, சித்த மருத்துவத்திற்கு வெற்றி என்பதை அறிய முடியும் என்று நான் ஆணித்தரமாக இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, அப்படிப்பட்ட ஆராய்ச்சிகளை நீங்கள் மேற்கொள்வதற்கு முனைப்புடன் செயல்பட வேண்டும். அதை விட்டுவிட்டு, இந்திய முறை மருத்துவர்கள் என்று சொன்னால், போலி, பித்தலாட்டம் என்று சொல்லி மக்கள் மத்தியிலே செல்கிறபோது ஒரு தவறான கருத்து உருவாகிவிடும். எனவே, அப்படிப்பட்ட கருத்துகள் உருவாகாத விதத்திலே இந்திய முறை மருத்துவத்திற்குப் புத்துயிர் வழங்க இந்த அரசு, குறிப்பாக மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் முனைப்புடன் அதிலே செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் இந்திய முறை மருத்துவத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் வருத்தப் பட்டார்கள். நம்முடைய நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கிறபோது, இந்த அவையிலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த அரசினுடைய நிதிநிலைமையைப் பற்றித் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். சென்ற ஆட்சியாளர்கள் எந்த அளவிற்கு நிதியை விட்டுவிட்டுச் சென்றிருக்கிறார்கள் என்ற விவரத்தைச் சொன்னார்கள். எனவே, அந்த அடிப்படையிலே இருப்பதை வைத்து இப்போது நிதியை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் துறைக்கு ஒதுக்கி அந்த வகையிலே இந்திய முறை மருத்துவத் துறைக்கும் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்.



*பிற்பகல் 12-55*

அரசாங்கத்திடம் நிதி இல்லை என்று சொன்னாலும், நிதி ஆதாரங்களைத் திரட்டுகின்ற வகையில் இந்திய முறை மருத்துவத்திற்கு ஊக்கமும், நல்ல உற்சாகமும் தந்து இன்னும் அந்தத் துறையை மேம்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தமிழ்நாடு மருத்துவத் துறை மேம்பாட்டுத் திட்டம் என்ற வகையில் உலக வங்கியை நாடி சுமார் ரூபாய் 29.17 கோடியை இங்கே இந்திய முறை மருத்துவ சிகிச்சைக்குக் கேட்டிருக்கிறார்கள். அதற்காக proposal எல்லாம் அனுப்பப்பட்டு, மத்திய அரசும் அதற்கு ஒப்புதல் கொடுத்து, அது உலக வங்கிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, உலக வங்கியும் இதை ஏற்றுக்கொண்டு விரைவிலே நிதி ஒதுக்கம் செய்யும் என்று நாங்கள் நம்புகிறோம். புரட்சித் தலைவி அவர்கள் அதற்காக உலக வங்கியை நாடுவதற்கு முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள். எனவே, அப்படி உலக வங்கி அந்தத் தொகையை நமக்கு ஒதுக்குகிறபோது, இந்திய முறை மருத்துவ சிகிச்சைக்கு ரூபாய் 29.17 கோடி கிடைக்க இருக்கிறது. அந்தத் தொகையை வைத்து, இந்த இந்திய முறை மருத்துவத்தை இங்கே தமிழகத்தில் நல்ல விரிவாக்கம் செய்வதற்கு இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி. என்னுடைய அடிப்படைக் கேள்வியே, சுகாதாரத் துறைக்கு மருத்துவத் துறைக்கு ஒதுக்கப்படவேண்டிய தொகையில் ஒட்டுமொத்தமாகப் பணம் இல்லை என்பது வேறு– ஒதுக்கப்படக்கூடிய தொகையில் இந்திய முறை மருத்துவத்திற்கு, இப்போது நீங்கள் அதற்கு ஒதுக்கியிருப்பதைப் பார்த்தால், 3.3 சதவிகிதமே ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதனால் இந்திய முறை மருத்துவம் வளர்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. ஆகவேதான் நான் சொல்கிறேன், ஒதுக்கப்படக்கூடிய நிதியில் 10 விழுக்காடு அதற்கென்று நீங்கள் தனியாக ஒதுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மருத்துவத் தாவரங்கள் வாரியம் அமைப்பதற்கு நீங்கள் முயற்சிகள் மேற்கொண்டு இருப்பதை நான் பாராட்ட

கடமைப்பட்டிருக்கிறேன். 'Patent rights' ல் மிகக் கவனமாக இருக்க வேண்டும். நாம் வெகு காலமாகப் பயன்படுத்தி வரும் வெள்ளைப்பூண்டு, மஞ்சள், வேப்பிலை, மிளகு இவற்றுக்கான 'patent rights' ஐ வெளிநாட்டுக்காரன் உரிமை கொண்டாடுகிறான். நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால், நாம் இங்கே பயன்படுத்துகிற அத்தனை மூலிகைகளினுடைய 'patent rights'-ஐயும் வெளிநாட்டுக்காரன் கொண்டு செல்கிற ஒரு துர்பாக்கியமான சூழ்நிலை ஏற்பட்டுவிடும். எனவே, நீங்கள் இதிலே கண்ணும் கருத்துமாக இருந்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தரமான மூலிகைகள் கிடைக்காத ஒரு காலகட்டத்தில் இப்போது வேலைவாய்ப்பையும் கருத்தில்கொண்டு, வெளிநாட்டிற்கு மருந்துகளை ஏற்றுமதி செய்ய முடியும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில், பரந்து விரிந்து கிடக்கின்ற தமிழகத்தில், புறம்போக்குப் பகுதிகளிலே அந்தந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப தரமான மூலிகைகளைப் பயிரிட்டு வெளிநாட்டுச் செலாவணியையும் அதிகப்படுத்தும் முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தைப் பற்றி, இரண்டு, மூன்று முக்கியமான கோரிக்கைகளை உங்கள் முன்னால் வைத்து என்னுடைய உரையை நிறைவு செய்யலாம் என்று கருதுகிறேன். என்னுடைய மாவட்டம் இயற்கை வளம் கொஞ்சுகிற மாவட்டம். வளம் மிக்க மாவட்டம். அந்த மாவட்டத்திலே, பல்வேறு பகுதிகளிலே யானைக்கால் நோயால் மிக, மிக அதிகமாக மக்கள் இன்னல்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அந்த யானைக்கால் நோயைத் தடுப்பதற்கு நீங்கள் எடுத்த முயற்சியை அதிகப்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டவர்களை உடல் ஊனமுற்றவர்கள் பட்டியலிலே சேர்த்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற வகையில், பல்வேறு உதவித் திட்டங்களை வகுப்பதற்கு அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, எங்களுடைய கருங்கல், நட்டாலம், புதுக்கடை, தலக்குளம், இரணியல், களியக்காவிளை, இப்படிப்பட்ட பகுதிகளில் அதிகமான மக்கள் யானைக்கால் நோயால் பாதிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பகுதிகளிலே தடுப்பு முகாம்களை அதிகமாக நிறுவி அந்த நோயைத் தடுப்பதற்கு முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாகர்கோவிலில் இருக்கக்கூடிய தலைமை மருத்துவமனையில் அதிகமாக நோயாளிகள் வருகிறார்கள். வருகிறவர்களிலே 75



சதவிகிதத்தினர் தரையிலே படுக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புகள் அங்கே இல்லை. எனவே, அந்தத் தலைமை மருத்துவமனையில் அதிகமான படுக்கை வசதிகளை ஏற்படுத்தி, வருகிற நோயாளிகள் தரையிலே படுப்பதனால் அதிகமான நோய்கள் வராமல் தடுப்பதற்கான முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று நான் இந்த நல்ல சந்தர்ப்பத்திலே உங்களை வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதிக்குட்பட்ட கருங்கல் பகுதியிலே, ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை முழு நேர மருத்துவமனையாக உயர்த்தினார்கள். அது முழு நேர மருத்துவமனையாக உயர்த்தப்பட்டிருக்கிறதே தவிர, அதில் போதுமான கட்டட வசதிகள், படுக்கை வசதிகள், மருத்துவர்கள் இல்லாத ஒரு குறை இருந்துகொண்டிருக்கிறது. எனவே, எங்களுடைய தொகுதிக்குட்பட்ட அந்தப் பகுதியிலே எல்லா வசதிகளுடன்கூடிய ஒரு சிறப்பான மருத்துவமனையை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1·00*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் இந்திய முறை மருத்துவத்திலே அதிக ஈடுபாடு உள்ளவர் என்பது எனக்குத் தெரியும். எனவே, அவர் இங்கே சில கருத்துக்களை, எய்ட்ஸ் போன்ற வியாதிகளுக்கு சித்த மருத்துவ முறை சிறப்பாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்த முறையை நாங்கள் ஏற்றுக்கொண்டுதான், பரீட்சார்த்தமாக, தாம்பரத்தில் இருக்கின்ற நெஞ்சக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிற எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சித்த மருந்துகள் கொடுத்து, அவர்களுக்கு அந்த சிகிச்சை அளித்து வருகிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றைச் சொன்னார்கள். பதிலுரையிலே அதிக நேரம் எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதற்காகச் சொல்லிவிடுகிறேன். கன்னியாகுமரியிலே மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன்கூட வேலூருக்கும் அடுத்து கேட்பார் என்று நான் கருதுகிறேன். கடந்த ஆட்சிக் காலத்திலே அவசரக் கோலத்திலே ஏதோ அறிவிப்பை மட்டும் செய்துவிட்டு, அதற்கான நிதி ஒதுக்கீடு அல்லது infrastructure எதையும் செய்யாமல் விட்டுவிட்டதினாலே எங்களுக்கு இந்தச் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டும் என்று

சொன்னால், மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும், இப்போது Medical Council of India–வின் புதிய நிபந்தனையின்படி மருத்துவமனையும், மருத்துவமனை வளாகமும் ஒரே இடத்திலேயே இருக்க வேண்டும் என்ற ஒரு நிபந்தனையை விதித்திருக்கிறார்கள். அப்படிச் செய்கிறபோது 67 கோடி ரூபாய் ஒரு கல்லூரியை அமைப்பதற்கு நமக்கு ஆரம்பக் கட்டச் செலவாக ஆக இருக்கிறது. எனவே, அந்த வகையிலே சென்ற ஆட்சியினர் கன்னியாகுமரியில் மருத்துவக் கல்லூரி அமைப்பதாகச் சொல்லி அறிவிப்பை வெளியிட்டார்களே தவிர, அதற்கான விண்ணப்பத்தைக்கூட அனுப்பவில்லை என்பதைத்தான் நான் மிக வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்போதுதான், சென்ற வாரம்தான் அந்த விண்ணப்பத்தை நாங்கள் அனுப்பியிருக்கிறோம். அந்த மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்த பிறகு, டோக்கனாக 3 கோடி ரூபாய் மட்டும்தான் ஒதுக்கினார்கள். ஆனால், தேவைப்படுவதோ 67 கோடி ரூபாய். எனவே, அவர்கள் அதைச் செய்யவில்லை என்று சொன்னால்கூட, இந்த அரசு மிக வேகமாக நடவடிக்கை எடுத்து, அந்த 3.03 கோடி ரூபாய்கூட அரசாங்கம் கொடுக்கவில்லை; சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய தொகை என்றுதான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லும்போது இதை எல்லாம் சொல்லிக்கொள்ளலாம். ஏனென்றால் நிறையப் பேர் பேசவேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** இல்லை. இதைமட்டும் சொல்லிவிடுகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய விருப்பத்திற்கு இணங்க அங்கே கல்லூரி தொடங்கப்படுவதற்கான நடவடிக்கையை இந்த அரசு பொறுப்பு ஏற்றவுடனே முழு முயற்சியோடு எடுத்துக் கொண்டிருக்கிறது என்ற நல்ல செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அ. மில்லர் அவர்கள்.

***திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு பற்றிய மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு அனுமதி அளித்த தமிழகத்தின் தன்னிகரில்லாத் தலைவி, தமிழகத்தின் விடிவெள்ளி, தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், கழகத்தின் காவல் தெய்வம், அனைத்திந்திய



அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோடிக்கணக்கான தொண்டர்களின் தாயாக விளங்கிக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய வணக்கங்களையும், நன்றியையும் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் காணிக்கையாக்குகிறேன்.

என்னை ஈன்றெடுத்த தாய், தந்தையருக்கு முதல் வணக்கத்தைச் செலுத்துகின்றேன். தமிழ்நாடு, கர்நாடக மாநிலம், கேரள மாநிலம் ஆகிய மூன்று மாநிலங்களும் கூடும் ஊரான தமிழ்நாட்டின் கடைக்கோடியாக இருக்கும் கூடலூரில் பல்வேறு பொறுப்புகளிலே இருந்தாலும், ஒன்றியக் கழகச் செயலாளராகக் கடந்த 16 ஆண்டுகாலமாகப் பணியாற்றி வந்த என்னை கூடலூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக அறிவித்து, தமிழக மக்களுக்கு அறிமுகம் செய்து, நீலகிரி மாவட்டத்திலே இதுவரை இல்லாத அளவில் வரலாறு காணாத வெற்றிக்கு வித்திட்ட, 32,699 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்த அம்மா அவர்களுக்கும், கூடலூர் தொகுதி மக்களுக்கும், எனது வெற்றிக்காக இரவு, பகல் பாராது உழைத்த மதச் சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் அனைத்து நண்பர்களுக்கும், கழக அடலேறுகளுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி, எனது கன்னிப் பேச்சைத் தொடர்கின்றேன்.

பிற்பகல் 1-05

இன்றையதினம் இந்த மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு பற்றிய மானியக் கோரிக்கை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் மருத்துவக் கல்வியில் கிராமப்புற மாணவர்களின் சேர்க்கைக்கு 15 சதவீதம் ஒதுக்கீடு அளிக்கப்பட்டபோதும் அம்மாணவர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தினால் கிராமப்புற மாணவர்களின் சேர்க்கை ஒதுக்கீட்டை 15 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக உயர்த்தி இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை மனதாரப் பாராட்டுகிறேன்.

கிராமப்புறங்களில் மருத்துவ வசதிகள் வழங்குவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும், நகர்ப்புறங்களில் வாழும் ஏழையெளியோர், குறிப்பாக குடிசைப் பகுதிகளில் வாழும் மக்கள் இன்னமும் மருத்துவ வசதிகள் முற்றிலும் கிடைக்கப் பெறாதவர்களாகவே உள்ளனர் என்பதால் கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களிடையே உள்ள இத்தகைய ஏற்றத் தாழ்வினைப் போக்கிட நகர்ப்புற சுகாதாரத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தவிருக்கும் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவமனைகளில் தடையற்ற மின்சாரம் கிடைக்க படிப்படியாக அனைத்து மருத்துவமனைகளுக்கும் மின் ஆக்கிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதை வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

அரசு மருத்துவமனைகளில் தரமான சுகாதாரப் பணிகள் கிடைத்திட அதிநவீன கருவிகள் பொருத்திட ரூ.86 கோடி மொத்த மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, வாரி வழங்குகின்ற புரட்சித் தலைவி அவர்களுக்குப் பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புற மக்களுக்கு துணை சுகாதார நிலையங்களே மருத்துவ வசதி வழங்கும் அடித்தள அலகுகளாக அமைந்துள்ளன. மலைப் பகுதிகள் மற்றும் பழங்குடியினர்கள் வாழும் பகுதிகள் மற்றும் எளிதில் சென்றடையமுடியாத பகுதிகளில் 3,000 மக்களுக்கு ஒரு துணை சுகாதார நிலையமும் இதரப் பகுதிகளில் 5,000 மக்களுக்கு ஒரு துணை சுகாதார நிலையமும் அமைக்கப்படுவதற்குரிய குறிப்பைத் தந்ததற்கு, திட்டத்தினை வகுத்ததற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டுகிறேன்.

தேசிய கொள்ளைநோய்த் தடுப்புக் கண்காணிப்புத் திட்டத்தினை வரவேற்றுப் பாராட்டுகிறேன். உணவுக் கலப்படத் தடுப்புத் திட்டம், பூச்சியினால் பரவக்கூடிய நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம், தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம், தமிழகத்தில் மாநில எல்லைபுற மாவட்டங்களில் தாய்சேய் நலக் குழு பயிற்சித் திட்டம், கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் தாய்மார்களுக்கான காப்பீட்டுத் திட்டம் போன்ற மகத்தான திட்டங்களை வகுத்துத் தந்தமைக்காக புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டி வரவேற்கிறேன்.

அடுத்ததாக, என்னுடைய தொகுதிப் பிரச்சினைக்கு வந்துவிடுகிறேன். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தின் ஜீவநாடியாக இருந்து வருகிறது பச்சைத் தேயிலை. பச்சைத் தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும். பச்சைத் தேயிலைக்காக புரட்சித் தலைவி அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, நேற்றைய தினம்கூட தேயிலைத் தூள் விற்பனையைத் தொடங்கிவைத்தார்கள். அதற்காக நீலகிரி மாவட்ட மக்கள் சார்பாக புரட்சித் தலைவி அவர்களை நான் பாராட்டுகிறேன். அதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். பச்சைத் தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கூடலூர் பகுதியின் நீண்டநாள் கனவாக இருந்து வருகின்றது ஓர் அரசுக் கலைக் கல்லூரி. அந்தத் தொகுதியிலேயே கலைக் கல்லூரி கிடையாது.



எனவே, அரசுக் கலைக் கல்லூரி அல்லது பாலிடெக்னிக்- தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றைக் கொண்டுவர வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கூடலூர் பகுதியில் 40 ஆண்டுக்காலம், 50 ஆண்டுக்காலமாக விவசாயம் செய்துகொண்டிருக்கின்ற நிலங்களுக்கு இதுவரை பட்டா கொடுக்கப்படவில்லை. காரணம், அந்த நிலங்கள் எல்லாம் 24/1969 என்ற ஜென்ம ஒழிப்புச் சட்டத்தின் செக்ஷன் 17–ன் கீழ் கொண்டுவரப்பட்ட நிலங்கள். Section 53 -ன் கீழுள்ள Assessed waste, Unassessed waste போன்ற விவசாய நிலங்களுக்குப் பட்டா வழங்குவதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். காரணம், ஆட்சிகள் மாறும்போதும், அதிகாரிகள் மாறும்போதும், அந்த விவசாயிகள் அச்சுறுத்தப்பட்டுக்கொண்டே வருகிறார்கள். அதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டுமென்றால் உடனடியாக அரசு அதிகாரிகள், அரசியல் கட்சித் தலைவர்களைக் கொண்ட ஓர் உயர்மட்டக் குழுவை நியமித்து, அந்தப் பூமியின் தன்மையை ஆய்வு செய்து உடனடியாகப் பட்டா வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மசனக்குடி- சிரியூர்-சத்தியமங்கலம் சாலை. நாங்களெல்லாம் கூடலூரிலிருந்து கோவை வரவேண்டுமென்றால் 5 மணி நேரம் மலைப் பகுதியில் வரவேண்டும். அதற்கு மாற்றுச் சாலை அமைக்கும் பணி, புரட்சித் தலைவர் எம்ஜிஆர். அவர்களுடைய காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இன்னும் 8 கிலோ மீட்டர் சாலைகள் போட்டால், கூடலூரிலிருந்து–மசனக்குடி–சிரியூர்–சத்தியமங்கலம் வழியாக கோவைக்கு 3 மணி நேரத்தில் வந்துவிடலாம் என்பதைச் சுட்டிக்காட்டி அந்தச் சாலையைத் திறந்திட ஆவன செய்திடுமாறு புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

அடுத்து, நீலகிரி மாவட்டத்தில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தீய சமூவ சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு புரட்சித் தலைவி காலத்தில்தான் B.C.சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. கடந்த கால ஆட்சியில் அந்தச் சான்றிதழ் வழங்கப்படவில்லை. அவர்களை O.C.–யில் சேர்த்திருக்கிறார்கள். இதை அம்மா அவர்களின் பணிவான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்தத் தீயசமூவ சமுதாயத்திற்கு மீண்டும் B.C. சான்றிதழ்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேஜையடிக்கும் ஒலி பெற்றது)

அரசு தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்கள் பல்வேறு நிலைகளில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு arrears பணம் கிடைக்கவில்லை. வழிச் செலவுத் தொகை கிடைக்கவில்லை. அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை. இதையும் அம்மா அவர்களுக்குப் பணிவோடு சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

மசினகுடி, தலைக்குந்தா போன்ற பகுதிகளில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணிபுரிந்து வந்த கல் குவாரி மூடப்பட்டிருக்கிறது. அந்தக் கல் குவாரியைத் திறந்துவிட ஆவன செய்ய வேண்டுமாய் அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பந்தலூர் அரசு மருத்துவமனையை 24 மணி நேரமும் செயல்படக்கூடிய அளவுக்கு அதை நவீனப்படுத்த வேண்டுமென்றும் மேலும், பந்தலூரில் புதிய நீதிமன்றம் நிரந்தரமாகச் செயலாற்றிட ஆவன செய்ய வேண்டுமென்றும், கூடலூரில் சார்பு நீதிமன்றம் வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பழைய பேருந்துகளை மாற்றி, புதிய பேருந்துகளை விட வேண்டுமென்றும் அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கூடலூரில் விளையாட்டு அரங்கமே கிடையாது. எனவே, கூடலூரில் உள் மற்றும் வெளி விளையாட்டு அரங்கம் ஒன்றைக் கொண்டுவர வேண்டும்.

கூடலூர் மற்றும் பந்தலூர் அரசு மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள், செவிலியர்கள் இல்லை. எனவே, போதுமான அளவுக்கு அரசு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களைப் பணியமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

கூடலூர் கிளைச் சிறைச்சாலை இதுவரை திறக்கப்படவில்லை. அது மூடப்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் அவர்கள் மூடிய அந்த கிளைச் சிறைச்சாலையைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலைகளிலிருந்து மூலிகைச் செடிகளிடையே ஓடிவரும் வற்றாத ஜீவநதியாக உள்ள கூடலூர் பகுதி மூலிகை கலந்த நீரைக் கொண்டு அரசு மினரல் வாட்டர் தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். கூடலூரில் மூலிகைச் செடிகள் அதிகம் உள்ளன. அங்கே வனத் துறையின் கட்டுப்பாட்டில் ஜீன்பூல் என்ற கார்டன் இருக்கிறது. 2000 ஏக்கர் நிலப்பரப்பில் மூலிகைச் செடி ஆராய்ச்சிப் பண்ணை இருக்கிறது. திண்டுக்கல்லில் அமைய இருப்பதைப்போல



கூடலூரில் மூலிகைத் தாவர உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவையும், ஆயுர்வேதக் கல்லூரி ஒன்றையும் அமைத்திட வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்த புரட்சித் தலைவி அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2001–2002 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளில் மருத்துவம் சம்பந்தமான விவாதத்தில் பங்கு கொள்ள எனக்கு சந்தர்ப்பம் கொடுத்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவரும், எங்களுடைய இதய தெய்வமும் ஆகிய டாக்டர் ஐயா அவர்களுக்கும், டாக்டர் சின்ன ஐயா அவர்களுக்கும், எங்களுடைய சட்டமன்றத் தலைவர் திருமிகு ஜி.கே. மணி அவர்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு மனிதனுடைய மகிழ்ச்சியும் அவரவர் உடல் ஆரோக்கியத்தின் அளவைப் பொறுத்ததே. இதை மற்றவர்கள் சொல்வதைவிட, மருத்துவத்திலே 30 ஆண்டுகள் அனுபவம் பெற்ற டாக்டர் கோவிந்தசாமி ஆகிய நான் சொல்வதில் மகிழ்ச்சியடைகிறேன். இதை மனதில் கொண்டே அரசு அனைவருக்கும் தகுந்த மருத்துவ உதவி கிடைக்க வேண்டுமென்று ஒவ்வொரு வருடமும் நிதிநிலை அறிக்கையில் பெருந்தொகையை ஒதுக்கி வருகிறது. அப்படி ஒதுக்கும் நிதி திருப்திகரமாக இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை. World Health Organisation எனப்படும் உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசனைப்படி மொத்தச் செலவினங்களில் ஏறக்குறைய 5 சதவீதத்திற்குமேல் மருத்துவத்திற்குச் செலவிட வேண்டும். ஆனால் அதைவிடக் குறைவான தொகை மருத்துவத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இனி வரும் நிதி ஆண்டிலாவது உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசனையை முழுமையாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Health for All, நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற நிலையை நாம் அடைவதில் மக்கள் தொகைப் பெருக்கமும், அதற்கு இணையான மருத்துவர்கள் இல்லாததும் ஒரு பெரும் குறை. தமிழகத்தின் இன்றைய மக்கள் தொகை 6 கோடியே 21 இலட்சத்து 10

ஆயிரத்து 839 என்று மக்கள் கணக்கெடுப்பு இயக்குநர் டாக்டர் சந்திரமௌலி அவர்கள் கூறியுள்ளார்கள். இந்த மக்கள் தொகைக் கணக்குப்படி ஏறக்குறைய 5 ஆயிரம் நபர்களுக்கு மேல்தான் ஒரு மருத்துவர் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, தமிழகத்தில் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். இந்தச் சூழ்நிலையில் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நடப்பு ஆண்டில் மருத்துவத் தேர்வுக் குழுவால் தேர்வு செய்யப்பட்டும் மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைக்காமல் 75 மாணவர்கள் அவதிப்படுகின்றனர். இது சம்பந்தமாக எங்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றத் தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்கள் 27-8-2001 அன்று அகில இந்திய மெடிக்கல் கவுன்சிலில் கூடுதலாக இடம் பெற்று அம்மாணவர்களைச் சேர்க்க ஆவன செய்யுமா என்று கேட்டார்கள். அதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, செங்கல்பட்டு மற்றும் சேலம் மருத்துவக் கல்லூரிகளில் கூடுதல் இடம் கேட்டுப் பேசி வருகிறோம் என்று கூறியிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம்.

*பிற்பகல் 1-15*

இந்தக் கூட்டத் தொடர் நிகழ்ச்சியிலே, பாரதிய ஜனதா கட்சி சட்டமன்ற உறுப்பினர் திருமிகு கே.என். லட்சுமணன் அவர்கள் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் சேருவதற்காகப் பணத்தைக் கட்டிய மருத்துவத் துறை மாணவர்கள், இப்போது கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதே என்று கேட்ட கேள்விக்கு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் சேருவதற்காகப் பணத்தைக் கட்டிய மருத்துவக் கல்லூரி மாணவர்கள், ஏற்கெனவே பல் மருத்துவக் கல்லூரியில், பி.டி.எஸ். பட்டப் படிப்பில் சேர்ந்திருக்கிறார்கள் என்றும், அவர்கள் பி.டி.எஸ்.-ஐத் தொடர்கின்றார்கள் என்றும் ஒரு தவறான தகவலை இந்த மாமன்றத்திற்கு அளித்திருக்கின்றார்கள். இதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட 75 மாணவர்களிலே, 13 மாணவர்கள்தான் பல் மருத்துவக் கல்லூரியில், பி.டி.எஸ்.-ல் சேர்ந்திருக்கின்றார்கள். மீதமுள்ள 62 மாணவர்கள் தெருவிலே நின்றுகொண்டு துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு நானும் அதைத்தான் சொன்னேன். அப்படி கவுன்சலிங்குக்கு அழைக்கப்பட்டவர்களில் பாதிப் பேர், பல் மருத்துவப் படிப்புக்கு இடம் கிடைத்தவர்கள், மீதமுள்ளவர்கள் காத்திருப்போர் பட்டியலிலே எடுக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு உச்ச நீதிமன்றத்திலே தீர்ப்பு சாதகமாக அமையும் பட்சத்தில், அவர்களுக்கு இடம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். மீண்டும் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரிக்குக் கூடுதலாக இடம் கேட்டிருக்கிறோம். அதைப்போல, சேலம் மருத்துவக் கல்லூரிக்குக் கூடுதலாக இடம் கேட்டிருக்கிறோம். அப்படி, Medical Council of India, அந்த இரண்டு கல்லூரிகளுக்கும் கூடுதலாக இடங்களைக் கொடுக்கும் பட்சத்திலே, அவர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்றுதான் நான் சொல்லியிருக்கிறேன். தவறான தகவலை நான் அன்றைக்குச் சொல்லவில்லை.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அதேநேரத்திலே, நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில், பொறியியல் துறைகளில் இடம் கிடைக்காத 1500 மாணவர்களுக்கு re-counselling வைத்து, அவர்களின் தகுதிக்கேற்ப அவரவர்கள் விரும்பிய கல்லூரிகளிலே இடம் கிடைக்க உதவி செய்த மாண்புமிகு தமிழகக் கல்வி அமைச்சர் அவர்களை நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம். இதையே முன்னுதாரணமாகக் கொண்டு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், அந்த மாணவர்களின் குடும்பத்தில் ஒளிவிளக்கு ஏற்றி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல கோடி ரூபாய் செலவு செய்து ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதற்குப் பதிலாக, சென்னை உயர்நீதிமன்ற உத்தரவைக் காட்டியே, தற்போதுள்ள 75 மாணவர்களையும், மருத்துவக் கல்லூரிகளில் இருக்கும் இடங்களை அதிகரித்து, அதில் அவர்களைச் சேர்த்து, Medical Council of India-விடம் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற ஒரு ஆலோசனையை அமைச்சர் அவர்களுக்கு நான் கூற விரும்புகிறேன்.

மக்களுக்குத் தரமான, தங்கு தடையற்ற மருத்துவ வசதிகள், அவர்கள் செலவிடும் சக்திக்கேற்ப கிடைக்கவேண்டும் என்பது இந்த அரசின் தலையாய நோக்கங்களில் ஒன்றாகும் என்பது நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கிணங்க அண்மையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், சென்னை அரசு பொது மருத்துவமனையிலும், மதுரை இராஜாஜி அரசு பொது மருத்துவமனையிலும் M.R.I. Scan கருவிகளின் செயல்பாட்டை ஆரம்பித்து வைத்தமைக்கு நன்றி. இந்த

M.R.I. Scan கருவிகளை அனைத்து மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் நிறுவினால் பலரும் பயன் பெற முடியும் என்பது எங்களுடைய கருத்து. மக்கள் வரிப் பணத்தை மக்களுக்காகச் செலவிடும்போது, நாட்டின் கடைசிக் குடிமகனுக்கும் சென்றடைய வேண்டுமென்பது எங்களுடைய கட்சியினுடைய நிறுவனர் டாக்டர் ஐயா அவர்கள் விருப்பம். ஒரு ஜனாதிபதிக்குக் கிடைக்கக்கூடிய மருத்துவ வசதி, சாதாரண அடித்தட்டில் உள்ள குடிமகனுக்கும் கிடைக்கவேண்டும் என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியும், டாக்டர் ஐயா அவர்களும் அடிக்கடி வற்புறுத்தக்கூடிய ஒரு கருத்து. இதைத்தான் டாக்டர் ஐயா அவர்கள் கடந்த 10 ஆண்டுகளாக மருத்துவத் துறையிலே சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மருத்துவமனைகளிலே போதுமான மருத்துவ இடைப் பணியாளர்கள் இல்லாத நிலையைப் போக்க, மாநிலத்திலுள்ள ஒவ்வொரு அரசு மருத்துவக் கல்லூரியிலும் செவிலியர் கல்லூரி ஆரம்பிப்பதை நாங்கள் வரவேற்கின்றோம். அதேநேரத்திலே, செவிலியர்கள் மட்டுந்தான் துணைப் பணியாளர்கள் என்பது மட்டுமல்ல. Para-medical workers like Lab Technician, X-Ray Technician, Dark Room Assistant, E.C.G. Technician போன்றவர்கள் எல்லாம் இருக்கின்றார்கள். இவர்களுக்காக ஒரு தனி நிறுவனத்தை ஏற்படுத்தி, அவர்களும் கல்வி கற்க வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விபத்திற்கென சிகிச்சை மையங்களை—Accident Trauma Centres—ஏற்படுத்துவதற்கான திட்டத்தை அரசு நிறைவேற்றும் என்று அறிவிப்பு செய்திருக்கிறது. மதிப்பு மிக்க உயிர்களைக் காப்பாற்ற அரசின் இந்த அறிவிப்பை நாங்கள் வரவேற்கின்றோம். அதேநேரத்தில், Mobile Hospitals என்று சொல்லப்படுகிற அந்த ஆஸ்பிடலையும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Trauma Centre அமைக்க முன்னுரிமை அளிக்கும்போது, வேப்பூரிலே—அதாவது சென்னைக்கும், உளுந்தூர்பேட்டைக்கும் இடையில்தான் அதிகமான விபத்துக்கள் நடக்கின்றன. அந்த விபத்துக்களைத் தடுக்க Trauma Centre—ஐ வேப்பூரில் அமைத்தால் நன்றாக இருக்கும் என்ற ஒரு ஆலோசனையையும் கூறுகின்றேன். தற்போது இப்பகுதியில் விபத்தால் பாதிக்கப்பட்டவர்கள், எனது தொகுதியில் அமைந்துள்ள விருத்தாசலம் அரசு பொது மருத்துவமனைக்குத்தான் சிகிச்சைக்காகக் கொண்டு வரப்படுகிறார்கள். எனவே, இந்த மருத்துவமனையில் நவீன மருத்துவ சாதனங்கள் அமைத்து,



இருதய சிகிச்சை நிபுணர், பொது மருத்துவர், எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர், குழந்தை மருத்துவ நிபுணர், செவிலியர்கள் மற்றும் தேவையான மருத்துவமனைப் பணியாளர்கள் ஆகியோர்களை நியமனம் செய்தால் பல உயிர்களைக் காப்பாற்ற முடியும்.

பிற்பகல் 1-20

செங்கல்பட்டு மருத்துவமனை, சென்னைக்கும், திருச்சிக்கும் இடையேயுள்ள பெரிய மருத்துவமனை. அந்த மருத்துவமனையிலே அனைத்து வசதிகளையும் செய்து தரவேண்டும். திருப்பத்தூரிலே இருக்கக்கூடிய மருத்துவர்கள் சரியாகப் பணிக்குத் திரும்புவதில்லை; அதேநேரத்தில், ஊழல்கள் நடைபெறுவதாகக் கேள்விப்படுகிறேன். அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

விபத்துக்கள் பெருக்கத்திற்கு சாலைப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதில் (Traffic Regulations) காவல் துறையினரின் மெத்தனப் போக்குதான் முக்கியக் காரணம் என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அதுவும் முக்கியமாக இரவு நேரங்களிலும், விடிகாலைப் பொழுதிலும் காவல் பணியைத் தீவிரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நானும், எனது துணைவியார் டாக்டர் ராமதிலகம் அவர்களும் அண்மையில் சிகாகோ நகரில் நடைபெற்ற update in medical knowledge, என்ற கருத்தரங்கில் கலந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்ததால், அமெரிக்கா, லண்டன் ஆகிய நாடுகளில் உள்ள மருத்துவமனைகளுக்குச் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது. peripheral hospitals என்று கூறுவார்கள். அந்த peripheral hospitals-ல் மருத்துவமனைகளில்கூட இல்லாத எல்லா மருத்துவ உபகரணங்களும், எல்லா மருத்துவ வசதிகளும் இருப்பதைக் கண்டோம். எல்லாவித சிகிச்சைகளும் அந்த மருத்துவமனைகளிலேயே வழங்கப்படுவதால், நம் நாட்டைப்போல் மேல் சிகிச்சைக்கு வேறு மருத்துவமனைக்கு refer செய்ய வேண்டிய அவசியம் இல்லை. நாம் அந்த அளவிற்குச் செய்யாவிடினும், மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த மருத்துவமனைகளிலும், மாவட்ட அரசு மருத்துவமனைகளிலும் எல்லாவித வசதிகளையும் செய்தால் உயிர் இழப்பைத் தவிர்க்க முடியும். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். மருத்துவமனைக்கு இறக்குமதி செய்யும் நவீன மருத்துவக் கருவிகள், உயிர்காக்கும் மருந்துகள் (life saving drugs) போன்றவற்றை எவ்வித வரியுமின்றி இறக்குமதி செய்ய வழி வகுக்க

வேண்டும்; மக்களுக்குக் கிடைக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிலும் குறிப்பாக, மத்திய அரசு sales tax என்று போடுகிறார்கள். அதற்குப் பதிலாக Value Added Tax (VAT) என்ற முறையை அமல்படுத்த நடவடிக்கை எடுக்கிறார்கள். இதைப்பற்றிய முழு விவரத்தையும் National Institute of Public Finance and Policy, New Delhi என்ற நிறுவனத்திடம் இருந்து கேட்டு, உயிர் காக்கும் மருந்துகளுக்குச் சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். ஆயிரம் ரூபாய்க்கு யானை வாங்கி, அரை அணாவுக்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சவுக்கு வாங்க முடியவில்லை என்பார்கள்.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** சவுக்கு இல்லை. அங்குசம் வாங்க முடியவில்லை என்பார்கள். யானைக்கு அங்குசம்தான். குதிரைக்குத்தான் சவுக்கு. அங்குசம் வாங்க முடியவில்லை என்று சொல்வார்கள். அதைப்போல, எல்லா மருத்துவமனைகளிலும் ambulance–கள் இருந்தும், அந்த ambulance–களுக்குத் தகுதியான டிரைவர்களே இல்லை. ambulance–க்கே வைத்தியம் பார்க்கக்கூடிய நிலையில், ஆபத்தான நிலையில் அவை மருத்துவமனைகளிலே கிடப்பதை நாங்களெல்லாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். அதையும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இறுதியாக ஒரு சில வார்த்தைகள்.

Indian Medical Association requests the Government to recognise I.M.A. as the official organisation of Modern Medical Doctors and give the status of Recognised Association like many other associations. Indian Medical Association is willing to take care of the continuing medical education programme as well as free service to the downtrodden and ensure every doctor is updated. Indian Medical Association, since two decades, has been requesting the past Government, the Government prior to that and requests the present Government to put an end to the practice of medicine by unqualified persons, viz., quacks in any system for that matter. இவற்றையெல்லாம் வற்புறுத்தி, விபத்துக்களால் உயிர் இழப்பு ஏற்படும்போது, உறவினர்களின் ஒப்புதலோடு உறுப்புகளைத் தானமாகப் பெறச் சட்டம் இயற்றலாம். உதாரணம், கண் தானம், சிறுநீரக தானம். வட்ட வாரியாக அரசு மருத்துவமனைகளில் Non–Incinerator பொருத்தி, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதலோடு அனைத்து மருத்துவமனைகளிலும் பயன்படச் செய்யலாம். அரசு



மருத்துவமனைகளில் காலியாக உள்ள அனைத்து இடங்களுக்கும் தகுந்த மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் தொழில்நுட்ப ஊழியர்களைப் பணியமர்த்த வேண்டும். அந்தந்தத் துறைகளில் சிறப்புப் பட்டம் பெற்ற மருத்துவர்களை அந்தந்தத் துறைகளிலேயே பணியாற்ற வாய்ப்பளிக்க வேண்டும். தற்காலிகப் பணிமாற்றம் எந்த வகையிலும் அனுமதிக்கப்படக் கூடாது என்று கேட்டுக்கொண்டு. கடைசியாக The exact adage or aphorism is, 'We will try to cure; We will often treat; But we always console.' அதாவது, நாங்கள் எப்போதும் குணப்படுத்த விரும்புகிறோம். எப்பொழுதுமே வைத்தியம் செய்கிறோம். ஆனால், எப்போதுமே நல்ல காரியங்களுக்கு உறுதுணையாக, ஆதரவாக, அரவணைப்பாக இருப்போம் என்று கூறிக்கொண்டு, வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். மேலும், வேலூர் மாவட்டம், அரசு பொது மருத்துவமனையை மருத்துவக் கல்லூரியாக மாற்ற உள்ளதால், அதற்கு அடுத்த மிகப் பெரிய மருத்துவமனையாக உள்ள திருப்பத்தூர் பொது மருத்துவமனைக்கு மாவட்ட மருத்துவமனை என்ற அந்தஸ்து வழங்க வேண்டும்.

*பிற்பகல் 1-25*

திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையில் தினமும் 1500 விவசாய, பீடித் தொழிலாளர்கள், ஏழைகள் பயனடைந்து வருகிறார்கள். இதில் டாக்டர்கள், கீழ்நிலை ஊழியர்கள் 10, 15 ஆண்டுகளாகப் பணியாற்றுகின்றார்கள். அவர்களால் ஊழல் மலிந்து ஏழைப் பெண்களின் கர்ப்பப்பை ஆபரேஷனுக்கு (மணியடிக்கப்பெற்றது) ரூபாய் 7000 வீதம் rate fix செய்யப்படுகிறது. Post-mortem முதல் நுழைவுச் சீட்டு வரை ஊழல் நடைபெறுகிறது. இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சரவர்கள் கண்காணிக்க வேண்டுமென்று வந்தவாசி தொகுதி மக்கள் சார்பாகவும் கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டிற்கான Part II scheme–ல் 20 நோயாளிகள் ஊர்திகளை வாங்குவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, காலியாக உள்ள ஓட்டுநர்கள் பணியிடங்கள் தற்போது நிரப்பப்பட்டு வருகின்றன. எனவே, அந்தக் குறை முழுமையாக இந்த ஆண்டு போக்கப்பட்டுவிடும்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரை எத்தனை ஆஸ்பத்திரிகளில் ambulance வசதி இருந்து, டிரைவர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். இப்போது எவ்வளவு பேரை, இந்த மூன்று மாத காலத்திற்குள் போட்டிருக்கிறீர்கள் என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையிலே முடிவாகக் கருத்தைச் சொல்வார்கள்.

**திரு. ஐ. கணேசன்:** அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதாலே நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி கே. பவானி கருணாகரன். (குறுக்கீடு) உறுப்பினர், கொஞ்சம் உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் கடைசியிலே சொல்வார்கள்.

***திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் பணிவான வணக்கத்தையும, நன்றியையும், என் சார்பாகவும், என்னை இந்தப் புனிதமான மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த என் தொகுதி மக்களின் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். 'மண் குடிசை வாசல் என்றால், தென்றல் வர மறுத்திடுமா' என்று எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் பாடியதுபோல, மண் குடிசையிலே சாதாரண ஏழைப் பெண்ணாக இருந்த என்னை, இந்தப் புனிதமான மாமன்றத்திலே ஒரு சட்டமன்ற உறுப்பினராக அமர வைத்து அழகு பார்க்கும் என் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவை இரு கரம் கூப்பி வணங்குகின்றேன். அன்னையே, தங்களுக்குக் கடந்த ஆட்சியிலே செய்த கொடுமைகள் எத்தனையோ! தீயிலே வெந்து புடம்போட்ட பொன்னாகத் திரும்பி வந்து, இந்த மாமன்றத்திலே ஒரு தங்கத் தலைவியாக, முதல்வராக வீற்று, அரியணையை அலங்கரித்து, எங்கள் தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக் கொண்டிருக்கும தாங்கள், 2001–2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மக்கள் பயன்படும் வகையிலே பல நல்ல திட்டங்களைக் கொண்டுவந்திருப்பது பாராட்டுக்குரியது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவம், மக்கள் நல்வாழ்வு மானியக் கோரிக்கையில் பேச எனக்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



'நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா, காடு கமழும் கற்பூரச் சொற்கோ' மாண்புமிகு எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லாட்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் இந்தத் துறைக்குத் தலைமை ஏற்ற நாள் முதல் மருத்துவத் துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்பொழுது குடும்ப நலத் திட்டத்தில் இந்தியாவிலேயே முதலாவது இடத்தை நாம் பெறும் நாள் வெகு தொலைவில் இல்லை என்ற நிலையை எட்டிவிடலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். குடும்ப நலத் திட்டம் மூலம் மக்கள் தொகையை நாம் குறைத்திருக்கிறோம். அதற்காக இந்த அரசு மத்திய அரசிடம் பாராட்டைப் பெற்றிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். தமிழக மக்களின் இதயக் கோவில்களில் இரண்டறக் கலந்து, நிரந்தர இடத்தைப் பெற்று, நிரந்தரமாக நிலைத்து நிற்கும் மாண்புமிகு முதல்வர், முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக இருக்கும் அம்மா அவர்கள் முதல்வர் ஆசனத்திற்குப் பல கோடி மடங்கு பெருமையைத் தேடித் தந்துள்ளார்கள்.

தமிழகத்தில் சித்த மருத்துவத்தைச் செம்மைப்படுத்த மாநில அரசு பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. இதன் காரணமாக, சித்த மருத்துவம் மக்களிடையில் பிரபலம் ஆகும். அதன்மூலம் மக்கள் பயன்பெறுவார்கள். தீர்க்க முடியாத நோய்களை எல்லாம் சித்த மருத்துவத்தின் மூலம் தீர்க்க ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் இருக்கின்ற அரசு மருத்துவமனைகளில் அளிக்கின்ற சேவையின் தரத்தை உயர்த்த வேண்டுமென்பதில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை கண்ணும் கருத்துமாக இருக்கின்றது என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அரசு மருத்துவமனைகளில், வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள் மட்டுமே சிகிச்சைக்கு வருகிறார்கள் என்ற நிலையை நமது ஆட்சிக் காலத்தில் மாற்றி அனைத்துத் தரப்பு மக்களும் பயனடையும் வகையில் சென்னை பொது மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் மையத்தை அம்மா அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள். அதை நான் பாராட்டுகிறேன்.

பிற்பகல் 1—30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திருமதி கே. பவானி கருணாகரன்:** அதை நான் வரவேற்கிறேன். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். நமது புரட்சித் தலைவர் அவர்கள் அதை செயல்திறனிலே காண்பித்து, தமிழகத்திலே முதல்வராகப் பொறுப்பேற்று, நல்லாட்சி புரிந்திட்ட எங்கள் தங்கம், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கொடுத்து, கொடுத்துச் சிவந்த கரத்திற்குச் சொந்தக்காரர். அந்தப் பாரி வள்ளலையே மிஞ்சிவிட்ட அமுதசுரபியாகக் காட்சியளிக்கும் எங்கள் தாயே, ஏழைகளுக்கு, அதுவும் குறிப்பாக, தாழ்த்தப்பட்ட இனப் பெண்களுக்கு நீங்கள் போட்டிருக்கும் பல நல்ல திட்டங்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகும்.

அன்பு, அறிவு, துணிவு என்ற தாரக மந்திரத்தின் தங்கத் தலைவி, அவர்கள் கனிவான பார்வைக்கு எங்கள் தொகுதியின் பிரச்சினைகளை வைக்கின்றேன். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது பழமொழி. என் தொகுதியிலுள்ள அரசு மருத்துவமனையில் தினமும் 1500 பேர் வந்து வைத்தியம் செய்துகொள்கிறார்கள். ஆனால், அந்த மருத்துவமனையில் 500 பேருக்குள்ள மருந்துகள்தான் உள்ளன. நோயாளிகளுக்குப் போதிய படுக்கை வசதிகள் இல்லை. அதிக எண்ணிக்கைகள் கொண்ட படுக்கைகள் தேவைப்படுகின்றன. கண் சிகிச்சைப் பிரிவிலும் படுக்கை வசதி இல்லை. அரசு மருத்துவமனையில் நாய்க்கடிக்கு மருந்து இல்லை. பொது மக்கள் மிகவும் கஷ்டத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். மருத்துவமனைக்குப் பொதுக் கழிப்பிடம் இல்லை. குடிநீர் வசதியும் இல்லை. மருத்துவமனை சமையலறையில் சமையலகாரருக்கு ஒரு உதவியாளர் தேவைப்படுகிறது. Ambulance–க்கு ஓட்டுநர் இருவர் தேவைப்படுகிறார்கள். Electrician ஒருவர் தேவைப்படுகிறார். இவற்றை அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் செய்து கொடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

அரக்கோணம் வட்டம், நாகவேடு ஊராட்சியைச் சுற்றியுள்ள கிராமங்களின் மக்கள் தொகை 20000–க்கும் மேலே உள்ளது. நாகவேட்டை மையமாகக் கொண்டு ஒரு துணை ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தருமாறு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நெமிலியிலுள்ள புன்னை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் போதிய படுக்கை வசதிகள் இல்லை, பெண் மருத்துவர் ஒருவர் தேவைப்படுகிறார், போதிய மருந்துகள் இல்லை. எனவே, அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு வைக்கின்றேன். தக்கோலம் பேரூராட்சியில் உள்ள ஆரம்ப



சுகாதார நிலையத்தில் போதிய படுக்கை வசதியும், மருத்துவ வசதியும் தேவைப்படுவதால், அதை ஏற்படுத்தித் தர அம்மாவைக் கேட்டுக் கொள்கிறேன். அரக்கோணம் ஒன்றியம், மோசூர் ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு விழா நடந்து முடிந்ததிலிருந்து ஒரு மருத்துவரோ, செவிலியரோ வருவதில்லை. அங்கே ஒரு மருத்துவரை நியமித்தால் நலமாக இருக்கும்.

"அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே" என்ற பாரதியின் கவிதை வரிக்கு உயிர் கொடுத்த எங்கள் புரட்சித் தாயே, உங்கள் பிள்ளைகளான எங்களை என்றென்றும் வழிநடத்திடும் எங்கள் தெய்வமே, 'உடல் மண்ணுக்கு, எங்கள் உயிர் புரட்சித் தலைவிக்கு' என்று கூறி, இந்த மாமன்றத்திலே பேச எனக்கு வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

## 5. அறிவிப்பு

### உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் கூட்டம் மாலையிலும் நடைபெறவிருப்பதால், மாலை 4–30 மணியளவில், சட்டமன்றப் பேரவை மண்டபத்தை ஒட்டிய பகுதியில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 4–30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4—30

பேரவை மீண்டும் பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் கூடியது.

## 4. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின்மீது விவாதம். திரு. எச். எம். ராஜு.

***திரு. எச். எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு மானியக் கோரிக்கைகளில் என்னைப் பேசுவதற்கு அழைத்த தங்களுக்கு நன்றியைக் கூறிக் கொண்டு, மக்களுக்குத் தரமான, தங்குதடையில்லாத மருத்துவ வசதிகள், ஆரம்ப சுகாதார மையங்களில் 30 படுக்கைகள் மற்றும் சிறப்பு மருத்துவர்கள், நடமாடும் மருத்துவ ஊர்திப் பிரிவு, அனைத்துத் தலைமையிட மருத்துவமனைகளில் உள்ள அறுவை சிகிச்சைக் கூடங்களிலும் குளிர் சாதன வசதி, எல்லா மருத்துவமனைகளிலும் மின் உற்பத்தி இயந்திரங்கள் (generators) அமைப்பது, செவிலியர்களுக்காக தனியாகக் கல்லூரி, சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி மருத்துவ சிகிச்சை மையங்கள் அமைப்பது, கிராமப்புற மாணவர் சேர்க்கை ஒதுக்கீட்டை 25%-ஆக உயர்த்தியிருப்பது, ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் பெண் மருத்துவ அலுவலர்கள் 350 பேர் நியமிக்கப்பட இருப்பது போன்ற அருமையான நல்ல திட்டங்களை வரவேற்று இந்த மானியக் கோரிக்கையில் பேச விழைகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில், உதகையில் உள்ள தலைமை மருத்துவ மனையில் கடந்த 5 ஆண்டுகளாக 37 மருத்துவர்கள் பணியிடங்கள் காலியாக இருந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் காலையில் 10(a) (l) என்ற வகையிலே உடனடியாக எல்லா மாவட்டங்களிலும் காலியிடங்களை நிரப்பப் போவதாக ஒரு நல்ல செய்தியைச் சொன்னார்கள். மருத்துவர்கள் சமவெளிப் பிரதேசத்திலிருந்து வரும்போது நீலகிரி வந்து தங்குவதில்லை. அங்கு தங்குவதற்கு வேண்டிய மருத்துவர்கள் குடியிருப்புகள்



தேவைப்படுகின்றன. நான் அமைச்சரை அன்றையதினம் தங்கள் மூலமாகக் கேட்டதெல்லாம், மருத்துவர்கள் எல்லாம் தங்குவதற்கு இட வசதியும், மேலும் ஒரு வருடமாவது மருத்துவர்கள் கண்டிப்பாக எந்த இடத்தில் அவர்களைப் பணியில் அமர்த்தினாலும் அங்கிருந்து மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற ஒரு வழிமுறையை வகுத்துத் தாருங்கள் என்று அமைச்சரைக் கேட்டிருந்தேன்.

உதகையில் தாய் சேய் மருத்துவமனையில் 5 மருத்துவர்கள் பணியாற்றும் இடங்களில் ஒரு மருத்துவர்தான் பணிபுரிந்து வருகிறார். மீதம் உள்ள 4 மருத்துவர்களுடைய இடங்களும் கடந்த 5 வருடங்களாகக் காலியாக இருக்கின்றன. இப்போது புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் ஆட்சியிலே நல்ல பல திட்டங்கள் வருவதனால் மக்கள் எல்லாம் அதிக அளவிலே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொன்னதுபோல் இந்தப் பணியிடங்களை எல்லாம் நிரப்பித்தர முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் Diabetalogist, Cardiologist, Neurologist, Nephrologist, Radiologist, Psychiatrist— இருதய மருத்துவர், நரம்பியல் மருத்துவர், சிறுநீரக மருத்துவர், கதிரியக்க நிபுணர், மனநோய் மருத்துவர்—போன்றவர்கள் கோவை மருத்துவக் கல்லூரியிலிருந்து மாதம் 2 அல்லது 3 முறை நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தந்து அங்கு மருத்துவம் செய்து அங்குள்ள நோயாளிகளுக்குத் தங்களுடைய மேலான ஆலோசனைகளை-Expert opinion-வழங்கி, நீலகிரி மாவட்டத்திலுள்ள நோயாளிகளைக் குணமடையச் செய்ய வேண்டும் என்ற ஒரு கோரிக்கையையும் இங்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், நீலகிரி மாவட்டத்தில் உள்ள தலைமை மருத்துவமனைக்கு சி.டி.ஸ்கேன் வசதி கண்டிப்பாக இந்த வருடம் அமைத்துத் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் இங்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவையில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த cancer நோயாளிகளை உள்நோயாளிகளாக அனுமதித்து, அவர்களுக்குத் தகுந்த சிகிச்சை அளிக்க முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையையும் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் cancer நோயாளிகளுக்கு வருடம் முழுவதும் மருந்து வகைகள் கிடைக்க வேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, ஊட்டி-கல்லட்டி, Ghat Road என்கிற மைசூருக்குப் போகும் ஒரு சாலை இருக்கிறது. இந்தச் சாலையிலே மாதம் இரண்டு முறையாவது விபத்துக்கள் நேரிட்டுக் கொண்டிருக்கின்றன. இதுபோன்ற விபத்து நேரிடும் மற்ற இடங்களில் எல்லாம் மருத்துவத் தனிப் பிரிவு ஏற்படுத்தி, 2 மருத்துவர்கள், 3 செவிலியர்கள், para-medical staff போன்றவர்களை வைத்து மருத்துவ சிகிச்சை வண்டி அமைத்தால், விபத்துக்குள்ளானவர்களுக்குச் சரியான முதல் சிகிச்சை கொடுப்பதோடு, தலைமை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்கும் உதவியாக இருக்கும் என்ற ஒரு கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பிரிவானது தலைமை மருத்துவமனையுடன் இணைக்கப்பட வேண்டும்.

*பிற்பகல் 4—35*

மேலும், நீலகிரி மாவட்டத்திலுள்ள மேலூர் ஊராட்சி, மேல்ஹொசட்டியிலுள்ள (Mel Hosatty) மருத்துவமனையை எச்.ஏ.டி.பி. மூலமாக-மலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாகப் புதுப்பித்து மக்கள் உபயோகத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும். குந்தா தாலுகாவிலுள்ள கீழ்குந்தா பேரூராட்சியில், குந்தா பாலத்தில், உபயோகமில்லாத ஒரு மருத்துவமனை இருந்துகொண்டு இருக்கிறது. அதைப் புதுப்பித்து அதற்கு ஒரு நிரந்தர செவிலியரையும் மற்றும் பகுதி நேர மருத்துவர் ஒருவரையும் அளித்தால் அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு அது உபயோகமாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். மஞ்சூரில் ஒரு பெண் மருத்துவரும், ஒரு ஆண் மருத்துவரும் அமர்த்தப்பட வேண்டும். தற்போது அவர்கள் எடக்காடு என்ற கிராமத்திலிருந்து, வாரத்தில் திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய மூன்று நாட்களில் மட்டும் வந்து செல்கிறார்கள். ஆகவே, மஞ்சூரில் எப்பொழுதும் இருக்கும் அளவில் இந்த இரண்டு மருத்துவர்களையும் அளித்தால் அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு உபயோகமாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், குந்தா ஊராட்சிக்குட்பட்ட கிண்ணக்கொரை கிராமத்தில் உள்ள ஒரு சித்த மருத்துவமனையை அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் பல ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைக்கு ஏற்ப அங்கு அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆரம்பித்து, தகுந்த மருந்துகளுக்கு நிதி ஒதுக்கித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



உதகை தலைமை மருத்துவமனையில் 30 படுக்கைகள் கொண்ட காச நோய்ப் பிரிவு இருந்தது. கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக அங்கே அந்தப் பிரிவு இல்லாமல் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு சுகாதார நிலையங்களிலிருந்து மருந்துகள் கொடுத்தால்கூட சில நோயாளிகள் அந்த ஆஸ்பத்திரி பிரிவுக்கு வரவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அங்கே எல்லா வசதிகளும் இருக்கின்றன. ஆனால், அரசினுடைய அனுமதி மட்டும் வேண்டும். அந்த அனுமதி கிடைத்தால் அங்கேயுள்ள மக்களுக்கு அது உபயோகமாக இருக்கும். அதற்கான எல்லா வசதிகளும், மருந்துக் கிடங்கும்கூட அங்கே இருக்கிறது என்ற கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு நன்றாகத் தெரியும். நமது நாட்டில் 60 இலட்சம் பார்வையற்றோர் உள்ளனர். நாமெல்லாம் இறந்த பிறகு நமது கண்களை அவர்களுக்கெல்லாம் அளித்தால் அவர்களுடைய கண் பார்வை சரியாகும். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவமனையிலும் கண் தானத்திற்கென்று ஒரு பிரிவைத் தனியாக வைத்தால் இந்த மாதிரி கண் தானத்தின் மூலமாகப் பல ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான சகோதர சகோதரிகளுக்கு, உபயோகமாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் கடந்த 1990-91 ஆம் வருடத்தில் அரசு பயிற்சி பெற்ற 575 பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள், சுகாதார ஆய்வாளர் நிலை-2 என்று சொல்வார்கள்—Health Inspectors, Grade-II—10 வருடங்களாகப் பணியிடங்கள் வழங்கப்படாமல் சிரமப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்தப் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்களுக்குப் பணியிடம் காலியாகும்போது இவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வாழ்வளிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், தற்போது மன நல மருத்துவப் பிரிவு என்ற வகையிலே மாவட்டங்களிலே இருந்தெல்லாம் நோயாளிகள் சென்னையிலுள்ள கீழ்ப்பாக்கத்திற்கு வரவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. கடந்த 1991-96 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோவைக்கு மன நல மருத்துவப் பிரிவு வேண்டும் என்று சொன்னோம். அது இப்போது திருச்சியில் செயல்பட்டு வருகிறது. இருந்தாலும்கூட, ஒவ்வொரு தலைமை மருத்துவமனையிலும் குறைந்த

அளவிலே 5 அல்லது 10 படுக்கைகள் கொண்ட மன நல மருத்துவப் பிரிவு வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். பல ஆண்டுகளாக எங்களுடைய நீலகிரி மாவட்ட மக்களுடைய கோரிக்கை, மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி இல்லாமல் இருக்கிறோம் என்பது. ஆகவே, அங்கே ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்க சாத்தியக்கூறு இருக்கிறதா; அதற்கு வழி இருக்கிறதா என்பதைத் தாங்கள் யோசித்து எங்களுக்குத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டானிடா, தமிழ்நாடு, நல்வாழ்வுத் திட்டத்தை ஆதிவாசிகள் நிறைந்த எங்களுடைய நீலகிரி மாவட்டத்திற்கும் நீட்டித்துத் தர வேண்டுமென்றும், பள்ளி மாணவர் நலத் திட்டத்தில் நல்ல வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இந்த அரசு. அவர்களுக்குக் கண்டிருந்த நோய்களின் நிலையில் பல் சொத்தை அதிக அளவில் 10.23 சதவிகிதமும், வயிற்றுப்பூச்சி என்ற வகையிலே 8.72 சதவிகிதமும், சுவாசக் கோளாறு 8.63 சதவிகிதமும் உள்ளது. இந்த நிலை அதிகரிக்காமல், அந்தப் பள்ளி மாணவர்கள் நோய், நொடி இல்லாமல் வாழ்வதற்கு, அந்த வருங்காலத் தலைவர்களுக்கு நாம் உடனடியாக சிகிச்சை அளித்து நல்ல வகையிலே அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4—40

தற்கொலை, விபத்து போன்றவற்றில் உயிர்நீத்தவர்களுக்கு autopsy, postmortem செய்யப்படுவதுபற்றி சொல்கிறோம். அதைக் காலை வேளையில் மட்டும் செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை இரவு நேரத்திலும் மின் வெளிச்சம் இருந்தால் செய்யலாம்; அதை இரவு, பகல், இரு நேரங்களிலும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் மருத்துவமனை Advisory Committee என்பது கடந்த 5 ஆண்டு காலமாகச் செயல்படவில்லை. ஆனால், 1991-96-ல் அன்றைய ஆட்சியில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியின் பேரில் ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு முறை Medical Advisory Committee, Hospital Advisory Committee-நல்ல முறையிலே இயங்கிக் கொண்டு வந்தது. அந்தப் பணி மீண்டும் செயல்பட வேண்டுமென்று சொல்லி, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தங்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். வாழ்க பாரதம், வளர்க தமிழ்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சம்பத் அவர்கள்.

***திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அன்பு, அறிவு, துணிவு என்ற கோட்பாடுகளின் மொத்த உருவமாகத் திகழ்ந்த பேரறிஞர் அண்ணா, டாக்டர் புரட்சித் தலைவர் ஆகியோரின் வழித்தோன்றலில் சிறந்து, மீண்டும் தமிழகத்தில் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.-வின் பொற்கால ஆட்சியை நிறுவி உள்ள தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு எங்களது இதய தெய்வம் அம்மா அவர்களின் பாதம் பணிந்து, தமிழக சட்டமன்றப் பேரவை நெல்லிக்குப்பம் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என் உரையை சமர்ப்பிக்கின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

எங்கோ தொலைதூரக் கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கு நெல்லிக்குப்பம் சட்டமன்றத் தொகுதியில் இலட்சோப இலட்சம் தொண்டர்கள் நிறைந்த அனைத்திந்திய அண்ணா தி.மு.க.-வின் சார்பில் போட்டியிட வாய்ப்பு அளித்ததோடு, வெற்றிக்காக நெல்லிக்குப்பம் சட்டமன்றத் தொகுதியில் 9 இடங்களில் மக்கள் கடலில், எளிய தொண்டனாகிய எனக்கு வாக்குகள் சேகரித்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் சார்பிலும், என் குடும்பத்தினர் சார்பிலும், நெல்லிக்குப்பம் தொகுதிவாழ் கழகச் செயல் வீரர்கள், வீராங்கனைகள் சார்பிலும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, வாக்களித்து வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியினைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்மா என்றால் அன்பு; அம்மா என்றால் அறிவு; அம்மா என்றால் துணிவு; அம்மா என்றால் வெற்றி; அம்மா என்றால் தமிழகம் என்ற வெற்றிப் பரணியில் என்னைப் போன்ற எளிய தொண்டர்கள் அங்கம் வகிக்கின்ற சட்டப் பேரவையில், மேலும் என்னை மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகத் தேர்வு செய்ததற்கு எனது கோடானுகோடி நன்றியைத் தங்கள் பொற்பாதங்களில் சமர்ப்பித்துக்கொள்கிறேன். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர், துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் மருத்துவத் துறையில் ஏற்படுத்தியுள்ள அத்தனை திட்டங்களும் வரவேற்கத் தகுந்த, சிறப்பு அம்சம் வாய்ந்த திட்டங்களாகும். அத்தனை திட்டங்களையும் வரவேற்கிறேன்.

*மருத்துவக் கல்லூரிகளில் கிராமப்புற மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு 15 சதவிகிதமாக இருந்ததை 25 சதவிகிதமாக உயர்த்திய மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் அவர்களுக்கு எனது கடலூர் மாவட்ட மக்கள் சார்பாக நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*ரூ.9.6 கோடி செலவில் 2 எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகள் சென்னையிலும், மதுரையிலும் நிறுவப்பட்டுள்ளதை வரவேற்கின்றோம். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் கன்னிப் பேச்சுப் பேசுகிறார். திரு. கு. ஜெயக்குமார், அமருங்கள். திரு. சம்பத், தொடர்ந்து பேசுங்கள்.*

**திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களை, சிறப்பு மருத்துவர்கள் மற்றும் 30 படுக்கைகள் கொண்ட சிறிய மருத்துவமனையாக உயர்த்தியதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*அனைத்து மருத்துவமனைகளிலும் தங்குதடையின்றி மின் வசதி கிடைக்கும் வகையில் மின் உற்பத்தி இயந்திரங்கள் வழங்குவதை வரவேற்கின்றோம். அரசு மருத்துவக் கல்லூரியில் செவிலியர் கல்லூரி ஏற்படுத்தித் தருவதை வரவேற்கின்றோம். சாலை விபத்துக்களில் பாதிக்கப்பட்ட விலை மதிக்க முடியாத உயிர்களுக்குத் தக்க நேரத்தில் மருத்துவ உதவி அளிப்பதற்காகப் பொருத்தமான இடத்தில் உரிய வசதிகளுடன்கூடிய விபத்துப் பகுதியாக எங்கள் மாவட்டத்தில் வேப்பூரில் சிகிச்சை மையம் ஏற்படுத்தித் தர மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பணிவான வேண்டுகோள் வைக்கின்றேன்.*

*பிற்பகல் 4-45*

*அரசு மருத்துவமனைகளில் தரமான சுகாதாரப் பணிகள் கிடைத்திட, அதி நவீனக் கருவிகள் பொருத்திட இருக்கும் திட்டத்திற்கு நிறைவாக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*வடலூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் இல்லை. மருத்துவர் குடியிருப்பு இருந்தும், மருத்துவர்கள் அங்கு தங்குவதில்லை. ஆம்புலன்ஸ் இருந்தும் அவசர சிகிச்சைக்குப் பயன்படுவதில்லை. புற நோயாளிகள் பிரிவு, சோதனைக் கூடம், சித்த மருத்துவம் ஆகிய*



*பிரிவுகளுக்குக் கூடுதல் கட்டடம் கட்டித் தர தாழ்மையான வேண்டுகோள் வைக்கிறேன்.*

*காடாம்புலியூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் குடியிருப்புகள் இருந்தும் தண்ணீர் வசதி இல்லை. குடியிருப்புகள் மிகவும் பாழ்பட்ட நிலையில் உள்ளன. அந்தக் கட்டடங்களைப் புதுப்பித்துத் தரும்படிப் பணிவான வேண்டுகோள் வைக்கிறேன்.*

*வேலூர் மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கணியம்பாடியில் சிறப்பான முறையில் செயல்பட்டு வருவதை வரவேற்கிறேன். மேலும், சுற்றுச் சுவர் கட்டித் தரவும், தடுப்பு ஊசிகள் எடுத்துச் செல்லும் ஐஸ் பெட்டிகளை முறையாகப் பராமரிக்கவும் வேண்டுகிறேன்.*

*மாவட்டந்தோறும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் அறுவை சிகிச்சை-Laproscopy வசதி உள்ள மருத்துவமனைகளில் கட்டாயம் ஒரு பெண் மருத்துவரை நியமனம் செய்யப் பணிவுடன் வேண்டுகிறேன்.*

*எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் கட்டாயம் தொலைபேசி இணைப்பு வழங்கிட அரசு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். புவனகிரி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆபரேஷன் தியேட்டர்கள் இருந்தும் இடிபாடுக்குள்ளாகியுள்ளது. இதுநாள் வரையிலேயும் அறுவை சிகிச்சை நடைபெறவில்லை. அதை உடனடியாகச் சரி செய்து, சுற்றுச் சுவர் கட்டித் தர அரசு ஆவன செய்யப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பணிபுரியும் மருத்துவர்கள் அனைவரும் அங்கிருக்கும் மருத்துவர் குடியிருப்பில் கட்டாயமாகத் தங்குவதற்கு அரசு ஒரு ஆணை பிறப்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

*அடுத்து, எனது தொகுதிக்கு வருகிறேன். எனது நெல்லிக்குப்பம் தொகுதி பொது மக்களின் சார்பில் கீழ்க்கண்ட கோரிக்கைகளைப் பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்; ஆவன செய்ய வேண்டுகிறேன்.*

*நெல்லிக்குப்பம் தொகுதியிலுள்ள ஒரே ஒரு நகராட்சி நெல்லிக்குப்பம். இதுநாள் வரையில் பேருந்து நிலையம் இல்லை. அந்தக் குறையைப் போக்குகிற வகையில் அங்கு பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

*கணினி யுகத்தின் விளிம்பில் நிற்கும் காலத்தில், என் நெல்லிக்குப்பம் தொகுதியில் மேல்நிலைப் பள்ளி வரைதான் கல்வி நிலையங்கள் உள்ளன.*

என் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சியில் தொழில்நுட்பக் கல்லூரியும், புதுப்பேட்டை, தொரப்பாடி பேரூராட்சிகளில் மகளிர் அறிவியல் கல்லூரியும் அமைத்துத் தர வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதியில் மலைப் பகுதி என்று அழைக்கப்படும் கடலூர் ஒன்றியத்தை உள்ளடக்கிய கிராமங்களில் வாழும் விவசாயிகள், வாழை, கரும்பு அதிக அளவில் பயிரிடுகிறார்கள். புயல் மற்றும் வெள்ளக் காலங்களில் பெருத்த பாதிப்புக்குள்ளாகிறார்கள். அதனால், தொடர்ந்து அவர்களால் வாழை, கரும்பு பயிரிட முடியவில்லை. கோடிக்கணக்கில் அந்தப் பகுதி முழுவதும் நஷ்டம் ஆகிறது. அந்தப் பகுதி விவசாயிகளின் ஸ்திரமற்ற நிலைமையைப் போக்கிட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நிரந்தரத் தீர்வு கிடைக்கும் விதத்தில், நஷ்டத்தை ஈடுசெய்யும் வகையில் புதிய திட்டங்களை அறிவித்திட வேண்டுகிறேன்.

1972 ஆம் ஆண்டின்போது பெருவெள்ளம் ஏற்பட்டு, அன்று முதல் திருநாவலூர் தொகுதியிலுள்ள அரசூர், மலட்டாறு என்னும் பகுதியிலுள்ள வாய்க்கால்கள் அடைபட்டுப் போயின. அந்த மலட்டாற்றில் அரசூரில் செக்-டேம் கட்டி, தூர் வாரி, நீர்வரத்துக்கு வழி செய்தால், பண்ருட்டி, நெல்லிக்குப்பம், அரசூர் ஆகிய 3 தொகுதிகளிலும் 35 கிலோ மீட்டர் தூரம் வரை நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து, விவசாயத்திற்கு நிலத்தடி நீர் கிடைக்கும். இந்த மூன்று தொகுதி விவசாயிகளின் வாழ்க்கைக்கு அது வரப்பிரசாதமாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். செக்-டேம் கட்டுவதன்மூலம் தென்பெண்ணை ஆற்றின் நீரிலிருந்து வரும் பெரும் பகுதி, விவசாயத்திற்குப் பயன்படும். இதன்மூலம் விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்ட 66 கிராமப் பஞ்சாயத்துக்களிலுள்ள சுமார் ஒரு இலட்சம் ஏக்கர் நிலம் பயன்பெறும். எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் இதனையும் கருணையுடன் பரிசீலிக்க வேண்டுகிறேன்.

*பிற்பகல் 4-50*

பல ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் உள்ள சி.என். பாளையம் ஊராட்சி, நடுவீரப்பட்டி ஊராட்சிகளுக்கிடையே இணைப்புப் பாலம் கட்டித் தர ஆவன செய்ய வேண்டுகிறேன். அவியனூர் மற்றும் சாத்திப் பட்டு ஊராட்சிகளுக்கு 2 கால்நடை மருத்துவமனைகளை அமைத்துத் தர வேண்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உயரிய எண்ணத்தோடு ஜாதி மதத் தடைகளுக்கு அப்பால் உயர்ந்து நிற்கும் தாயே, சிறை, பொய் வழக்கு, மோசடி, அரசியல் கயமைத்தனம் இவற்றை எதிர்கொண்டு, மக்கள் துணைகொண்டு பகை



வென்று, புரட்சித் தலைவர் பணி முடிக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சி, ஒன்று, இரண்டு என ஓராயிரம் வளர் பிறைகள் காண வேண்டி என் விருப்பத்தைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி.

***செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நல்ல வாய்ப்பைக் கொடுத்த தங்களுக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரியப்படுத்திக்கொள்கிறேன். மருத்துவம்-மக்கள் நல்வாழ்வு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பை வழங்கிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கிறேன். இந்த மானியக் கோரிக்கையில் ஏழை, எளிய மக்களுக்கு மருத்துவம் பயன்படக்கூடிய விதத்தில் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அத்தகைய நல்ல திட்டங்களை வரவேற்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

நடமாடும் மருத்துவ முகாம் திட்டம், ஆரம்ப சுகாதார நிலையத்தில் 30 படுக்கை வசதி, ஜெனரேட்டர் மற்றும் அறுவை சிகிச்சை அரங்குகளில் குளிர்சாதன வசதி போன்ற திட்டங்கள் உள்ளபடியே மக்களுக்குப் பயன்படும் என்ற நிலையில் நான் அதை வரவேற்கிறேன். அதேபோன்று, மாநிலத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எம்.ஆர்.ஐ. என்ற நவீன ஸ்கேன் வசதியைத் தென் மாவட்டத்தில் முதன்முதலாக மதுரையிலும், சென்னையிலும் தொடங்கி வைத்திருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன். அதேபோன்று, காலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மருத்துவர் பணியிடங்களையும், தொழில்நுட்ப மற்றும் உதவிப் பணியாளர் பணியிடங்களையும் நிரப்புவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது போன்ற திட்டங்களையும் நான் வரவேற்கிறேன்.

இதற்கும் மேலாக, தொடர்ந்து பல்வேறு பெண்கள் அமைப்புகள், அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் சார்பாக சென்ற ஆட்சிக் காலத்திலே வலியுறுத்தி வந்த, பெண் கரு அழித்தலைத் தடுக்கக்கூடிய விதமாக, ஸ்கேன் மையங்களைப் பதிவு செய்ய வேண்டும்; இல்லையென்றால் அந்த ஸ்கேன் மையங்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, மாநில அரசாங்கம்-மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பெண் கரு அழித்தலைத் தடுக்கக்கூடிய விதமாக ஸ்கேன்

மையங்களைக் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டும் என்று இப்போது அறிவித்திருக்கிறார்கள். இத்தகைய அறிவிப்பைப் பல்வேறு பெண்கள் அமைப்புகள் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வதோடு, பெண் கரு அழித்தல், பெண் சிசுக் கொலைக்கு எதிரான இந்த நடவடிக்கை தமிழகத்திலே பெண் கரு அழித்தலைத் தடுத்து நிறுத்தப் பயன்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அடுத்து, மருத்துவர்கள், அவர்களுடைய மருத்துவத் தொழில் பதிவு உரிமையை இழப்பதற்கான முறையிலே, 23-6-2001 ஆம் தேதியில், இந்தத் தொழில்நுட்பக் கருவிகளை, கருவின் பாலினத்தைத் தெரியப்படுத்தத் தவறாகப் பயன்படுத்தினால் பதிவு உரிமையை இழக்க நேரிடும் என்று எச்சரிக்கக்கூடிய சுற்றறிக்கையை நான் வரவேற்கிறேன். இதைக் கூறக்கூடிய நேரத்தில், சென்ற ஆட்சியின்போது தமிழகத்திலே இருக்கக்கூடிய தலைமை அரசாங்க மருத்துவமனைகள் எல்லாம் எப்படிச் செயல்பட்டன என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தலைமை அரசாங்க மருத்துவமனைகள் கிட்டத்தட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாறியிருக்கக்கூடிய சூழ்நிலைதான் ஏற்பட்டது. வருமுன் காக்கக்கூடிய திட்டம் என்று சொல்லி பல கோடி ரூபாய்களைச் செலவழித்தபோதிலும், நோய் வந்ததற்குப் பிற்பாடு செல்லக்கூடிய அரசாங்கத் தலைமை மருத்துவமனை மிகச் சீர்கேடான முறையிலேதான் இருந்துகொண்டு இருக்கிறது. குறிப்பாக, சென்னையிலே இருக்கக்கூடிய கோஷா ஆஸ்பிட்டல் என்று சொல்லக்கூடிய கஸ்தூரிபா காந்தி அரசாங்க மருத்துவமனையில் 12-2-2000 அன்று, செல்வி என்ற பெண் பிரசவத்திற்காகச் சென்றார். அங்கு, அந்தப் பெண்ணுக்குத் தவறான சிகிச்சை அளிக்கப்பட்டு, நான்கு விரல்கள் துண்டிக்கப்படக்கூடிய நிலை ஏற்பட்டது. வறுமை நிலையில் கணவனால் கைவிடப்பட்ட அந்தப் பெண், இரண்டு குழந்தைகளோடு, நான்கு விரல்களை இழந்த நிலையிலே மனுக்கூட எழுத முடியாமல், தொடர்ந்து அமைச்சர்களிடமும், சென்ற அரசாங்கத்திடமும் நடையாக நடந்து பார்த்தார். இதுவரை அந்த அரசு மருத்துவமனைகள் மீதோ, மருத்துவர்கள் மீதோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட அந்தப் பெண்ணிற்கு எந்தவிதமான நிவாரணமும் வழங்கப்படாத ஒரு நிலைதான் சென்ற தி.மு.க.வினுடைய ஆட்சியில் இருந்தது என்பதை நான் ஆதாரப்பூர்வமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



பிற்பகல் 4-55

முன்னாள் அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் திண்டுக்கல்லுக்கு வருகை தந்தபோது, தமிழகத்திலே தரங்கெட்ட மருத்துவமனை திண்டுக்கல் மருத்துவமனைதான் என்று ஒரு அரசு விழாவில் பகிரங்கமாக அறிவித்தார். அப்படி அறிவித்ததற்குப் பின்னர் அந்த அரசாங்க மருத்துவமனை, அதைவிட மோசமான, தரமற்ற நிலைக்குப் போய்விட்டது என்பதைத்தான் சென்ற கால ஆட்சியிலே நாம் பார்க்க முடிந்தது.

சட்டமன்ற உறுப்பினர் ஆனதற்குப் பின்னர், திண்டுக்கல், அரசாங்க பொது மருத்துவமனையை நான் சென்று பார்த்தபோது, கழிவு நீர்க் குழாய்கள் அனைத்தும் உடைந்து, அதிக சுகாதாரச் சீர்கேட்டோடு அந்த மருத்துவமனை இயங்கிக் கொண்டு இருக்கிறது. பிரசவ வார்டுகளில் எலிகளும், பெருச்சாளிகளும், சுண்டெலிகளுமாகப் படுக்கையிலே சென்று கொண்டிருக்கின்றன. இதுபற்றிக் கேட்டபோது, அந்த மருத்துவ மனையினுடைய தரைப் பகுதிகள் எல்லாம் எலிவளைகளாக இருப்பதை நான் நேரடியாகப் பார்த்து வந்தேன். இதைப் பராமரிப்பதற்குச் சென்ற ஆட்சியிலே என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று பொதுப் பணித் துறையினுடைய அதிகாரிகளைப் பார்த்துக் கேட்டபோது, போதிய நிதி எங்களுக்கு வழங்கவில்லை, வழங்கிய நிதியில் நாங்கள் சுவர்களுக்குப் பெயின்ட்தான் அடித்தோம் என்று அந்த அதிகாரிகள் சொல்கிறார்கள். இப்படி அரசாங்க மருத்துவமனை என்பது, கடந்த காலத்திலே இதுபோன்ற சீர்கேட்டிற்கு உள்ளாகி இருக்கிறது என்பதை இந்த அரசாங்கம் மிக ஆழமாக, கவனத்தோடு கவனிக்க வேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, தீவிர சிகிச்சை வார்டுகளின் கதவுகள் மூடப்பட்டு இருக்கின்றன. கேட்டால் ஏ.சி. மெஷின் செயல்படவில்லை என்று சொல்கிறார்கள். ஏ.சி. மெஷின் எங்கே இருக்கிறது என்று இதுவரை தெரியவில்லை. இதைப்பற்றிக் கேட்டால், அதிகாரிகளிடம் இருக்கிறது, அதை மராமத்து செய்கிறோம் என்று சொல்கிறார்கள். அதிகாரிகளிடம் கேட்டால், மருத்துவமனையிலே இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, இதுபோன்று கடந்த ஆட்சிக் காலத்தில், அரசாங்க மருத்துவமனைக்குள்ளே இருந்த, ஓடிக் கொண்டிருந்த fans, A.C. machines எல்லாம் பழுதுபட்டு இருந்தால்கூட சரி செய்வதற்கான நிதி ஒதுக்கப்பட வில்லையா? ஒதுக்கிய நிதியில் ஏதாவது ஊழல் நடந்திருக்கிறதா என்பதெல்லாம் தெரியாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது.

ஆகவே, தலைமை அரசாங்க மருத்துவமனைகளில், அநேகமாக அனைத்து மாவட்டங்களிலும் கிட்டத்தட்ட இதே நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. இதற்காகப் பல்வேறு போராட்டங்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகவும், அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் சார்பாகவும் நாங்கள் கடந்த காலத்திலே நடத்தியிருக்கிறோம். அந்த ஆதாரத்தோடுதான் இவற்றை மீண்டும் உங்களது பரிசீலனைக்கு நான் சொல்லிக்கொள்கிறேன்.

அதுபோன்று, அரசாங்க மருத்துவமனைகளில் உயிர் காக்கக்கூடிய மருந்துகள் போதிய அளவில் இருப்பது இல்லை. ஊழல் விஞ்ஞான முறையில் நடந்து கொண்டிருக்கிறது. பிரசவ வார்டுகளிலிருந்து பிணவறை வரை ஊழல் என்பது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, ஊழியர்களிடம் மென்மையாகவோ அல்லது வன்மையாகவோ ஏதாவது ஒரு கட்டத்திலே இந்த ஊழல்களை நாம் தடுத்து நிறுத்த வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, நடந்து கொண்டிருந்தது.

**செல்வி க. பாலபாரதி:** நடந்து கொண்டிருந்தது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருக்கிறது என்று சொல்லாதீர்கள்.

**செல்வி க. பாலபாரதி:** இப்போதும் இருந்து கொண்டு இருக்கிறது என்பதை நான் தயவுசெய்து சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், அரசாங்கம் இந்த விஷயத்திலே கவனத்தோடு பார்க்க வேண்டும் என்பதால்தான் எச்சரிக்கையோடு அதைக் கவனிக்க வேண்டும் என்ற முறையிலே அதை நான் சொல்கிறேன். குற்றமாக நான் அதைக் கூறவில்லை.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் ஏற்கெனவே மருத்துவமனைகளில் நடந்து வந்த ஊழல்கள், முறைகேடுகள் போன்றவை இந்த அரசிலே தொடரக்கூடாது என்கிற ஆலோசனையைத் தான் இங்கே சொல்கிறார். நானும் பதவியேற்ற இந்த 100 நாட்களில் 30 மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டு இருக்கின்றேன். நான் இந்த அரசின் சார்பிலே புரட்சித் தலைவி அவர்களின் நோக்கத்தை அங்கேயிருக்கிற மருத்துவர்கள், பணியாளர்களிடம் பக்குவமாகச் சொல்லி, நோயாளிகளிடம் எப்படி



நடந்துகொள்ள வேண்டும், எப்படி புகார்களுக்கு இடம் கொடுக்காமல் நடந்துகொள்ள வேண்டும் என்பதைத் தெளிவாகச் சொல்லி, இருக்கிறேன். நீங்கள் எல்லாம் 10,000, 15,000 ரூபாய் சம்பளம் வாங்குகிறீர்கள், வருகிற நோயாளிகள் எல்லாம் கூலி வேலை செய்து 1000 ரூபாய் சம்பாதிக்கிறார்கள். அவர்களிடம் கையேந்துவது என்பது நமக்கே மரியாதை இல்லை என்றுகூட பக்குவமாகச் சொல்லி அவர்களைக் கொஞ்சம், கொஞ்சமாகத் திருத்திக் கொண்டிருக்கிறோம். ஏதோ பழக்க தோஷத்தில் அந்தக் குறைபாடுகள் ஆங்காங்கே இருந்தாலும், நிச்சயமாக-முன்ஏர் எப்படிச் செல்கிறதோ அப்படியே பின்ஏர் செல்லும் என்பார்கள். இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ஒரு தூய்மையான, மக்களுக்காக, கிராம மக்களுக்காக, ஏழையெளிய மக்களுக்காக சுகாதார வசதியைச் செய்து கொடுக்க வேண்டும் என்று வெளிப்படையாக அவர்கள் இந்தத் துறையின்மீது அக்கறை எடுத்து, செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தத் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற உயர் மட்டத்திலே இருந்து கடைநிலை ஊழியர்கள் வரை இனிமேல் புரிந்துகொண்டு, தெரிந்துகொண்டு, நல்ல முறையிலே செயலாற்றுவார்கள் என்று நம்பி உங்களிடம் உறுதி கூறுகிறேன். இனிமேல் இதுபோன்ற குறைகள் இருக்காமல் நிச்சயமாக நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்.

பிற்பகல் 5-00

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியையும், எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மருத்துவச் சாதனங்கள் பராமரிப்பு. இதை மூன்று வகையாக நாம் பிரிக்கலாம். பயன்பாட்டில் இருக்கக்கூடிய மருத்துவச் சாதனங்கள், பழுது நீக்கிப் பயன்படுத்த வேண்டிய மருத்துவச் சாதனங்கள், பயன்படுத்த முடியாத மருத்துவச் சாதனங்கள் என்று மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். இதிலே பயன்படுத்த முடியாத சாதனங்களை விட்டு விட்டால்கூட, மேற்கண்ட இரண்டு சாதனங்களை Annual Maintenance Contract மூலம் பராமரிப்பதற்குரிய ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும். அதை யார் முடிவு செய்வது என்பதையும் அந்த நிர்வாகத்தில் வரையறுப்பது நல்லது என்று நான் நினைக்கிறேன்.

மேலும், வாகனங்களுக்குத் தொழில்நுட்பம் தெரிந்த ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டும். குறைந்தபட்சம் 50 வாகனங்களுக்கு ஒரு

பணியாளர் அல்லது 100 வாகனங்களுக்கு ஒரு பணியாளர் என்றாவது நியமித்தால்தான், அந்த வாகனங்கள் பழுதுபடுகின்றபோது அல்லது அந்த வாகனங்களில் ஏதாவது பிரச்சினை ஏற்படுகின்றபோது அதைச் சரி செய்வதற்கு உதவியாக இருக்கும். ஆகவே, தொழில்நுட்பம் தெரிந்த ஊழியர்களை நியமிப்பது மிகவும் தேவை. உதாரணத்திற்கு, Scan, M.R.I. Scan போன்ற உயர் நவீனக் கருவிகள் கிடைத்திருக்கின்றன. ஆனால், போய்க் கேட்கின்றபொழுதெல்லாம் ஆட்கள் இல்லை அல்லது ரிப்பேரில் இருக்கிறது என்று சொல்லக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. ஆகவேதான், தொழில்நுட்பம் தெரிந்த ஊழியர்கள், பணியாளர்கள் அவசியம் தேவை. அதையும் கவனிக்க வேண்டும்.

வேலை நேரத்தைப் பொறுத்தவரை, மருத்துவர்கள் காலை 8-00 மணி முதல் மதியம் 3-00 மணி வரை இருப்பதற்கு ஒரு முடிவு எடுக்க வேண்டும். மேலும், மருத்துவர்கள் அறுவை சிகிச்சை அரங்கிற்கு Cell Phone கொண்டு போகாமல் இருப்பதற்கு ஒரு தகவல் அனுப்ப வேண்டும். ஏனென்றால், தனியார் மருத்துவமனைகளிலேயிருந்து Cell Phone வருகின்றபோது அவர்கள் சென்று விடுவதாகக்கூட ஒரு தகவல் இருக்கிறது. ஆகவே, அதையும் தாங்கள் கவனிக்க வேண்டும்.

கோரிக்கைகள் என்று பார்த்தால், மலைப்பாங்கான பகுதிகளில் Van வைத்து மருந்துகள் கொண்டு செல்லப்பட வேண்டும். விபத்துக்கள் அதிகரிப்பதால் Mobile van மற்றும் Wireless வசதிகள் அரசு மருத்துவமனைக்கு வேண்டும். ஆம்புலன்ஸ் வசதிகளை ஏற்படுத்த வேண்டும். அரசு சாரா தனியார் நிறுவனங்கள் சார்பாக 104 ரத்த வங்கிகள் உள்ளன. இது போதுமானதல்ல. அதிகரிக்கப்பட வேண்டும். அலோபதி மட்டுமல்ல, மற்ற வைத்தியங்களுக்கும்-ஏற்கெனவே இந்தக் கொள்கைக் குறிப்பில் சொல்லியிருக்கிறீர்கள்-அதன்மீதும் நீங்கள் சொன்னபடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாகர்கோவிலில் மருத்துவக் கல்லூரி, மதுரை பாலரங்காபுரத்தில் பல் மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட வேண்டும். வியாசர்பாடியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும். திண்டுக்கல் சிறுமலையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவமனையில் குடிதண்ணீர் மற்றும் மின் வசதி இல்லாமல் இருக்கிறது. அது சரிசெய்யப்பட்டு மலை மக்களுக்குப் பயன்படவேண்டும். திண்டுக்கல்லில் I.C. Unit திறக்கப்படவில்லை. கழிவுநீர்க் குழாய்கள் உடைந்திருக்கின்றன. ஆகவே, அவை சரி செய்யப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கொள்கிறேன்.



அடுத்து, மருத்துவர்கள், மருந்தாளுநர்கள் நியமனத்தில், சென்ற ஆட்சியிலே சில மோசடிகள் நடைபெற்றிருக்கின்றன. Seniority-ஐ முந்திக்கொண்டு, சிலர் வரிசையின் அடிப்படையில் நியமிக்கப்படாமல், அதிலே பல்வேறு பிரச்சினைகள் நடந்திருப்பதாகத் தகவல்கள் இருக்கின்றன. அதையும் கவனித்து, பாதிக்கப்பட்டவர்களுக்குப் பணி வழங்கிடக் கேட்டுக்கொள்கிறேன். தொழுநோய்ந் தடுப்பு தொண்டு நிறுவனங்களில் பணியாற்றிக் கொண்டிருந்தவர்களுக்குப் பணி இழப்பு சென்ற ஆட்சியிலே ஏற்பட்டிருக்கிறது. அதையும் கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, தலைமை அரசாங்க மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார மருத்துவமனைகளிலும் இதுபோன்று மக்களுடைய சேவை என்பது ஓர் உயிர் மூச்சாகக் கொள்ளப்பட்டு கடைப்பிடிக்கப்படவேண்டும்.

அரசாங்க மருத்துவமனைகளில் இருக்கக்கூடிய சிறு, சிறு பிரச்சினைகள் தீர்க்கப்படுவதோடு, மத்திய அரசாங்கம் கடைப் பிடிக்கக்கூடிய 'GATT' கொள்கையும், 'Dunkel' கொள்கையும் இந்திய நாட்டில் மருந்துகள், மாத்திரைகள் இவற்றினுடைய விலையைக் கடுமையாக உயர்த்தியிருக்கிறது. ஆகவே, இத்தகைய சூழ்நிலையிலே மத்திய அரசாங்கத்தினுடைய இந்தக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதைக் கைவிட்டால்தான் சாதாரண, ஏழையெளியவர்களுக்கு இலவச மருத்துவம் என்பது உத்தரவாதமாகும். எதிர்காலத்தில் மாநில அரசு, மருத்துவச் சேவை என்பதனைத் தொடரமுடியும். ஆகவே, மத்தியில் இருக்கக்கூடிய பாரதிய ஜனதா ஆட்சியினுடைய அரசாங்கம் பன்னாட்டு மருத்துவக் கொள்கையைக் கைவிடுவதற்கு முன்வரவேண்டும் என்பதை மாநில அரசாங்கமும், இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்களாகிய நாமும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம் என்று கூறி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 5-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள் ஏதோ ஒரு கேள்வி கேட்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஓரே நிமிடத்தில் கேட்டு முடியுங்கள்.

***திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் துணைத் தலைவர் அவர்களே, அரை நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன். இந்த வாய்ப்பினை நல்கியதற்காக அவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு மருத்துவக் கல்லூரிகளிலே

மாணவர்களைச் சேர்க்கும்போது, இருக்கின்ற இடத்திலேயே தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்காக இட ஒதுக்கீடு அளிக்கப்படுவது குறித்து நான் ஒரு சில கருத்துக்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விருப்பப் படுகிறேன். மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் ஓர் உடன்பாடு உண்டு. அதன்படி, மாநில அரசிலேயிருக்கின்ற மருத்துவக் கல்லூரிகளில் இருக்கின்ற அத்தனை இடங்களிலும் 85 சதவிகிதத்திற்கு வேண்டிய மாணவர்களை மாநில அரசு தேர்வு செய்யும். மீதியிருக்கின்ற 15 சதவிகிதத்தை மத்திய அரசுக்குக் கொடுத்துவிட வேண்டும். இதை எல்லா மாநில அரசுகளும் செய்து கொண்டிருக்கின்றன. இங்கே இட ஒதுக்கீட்டு முறையைக் கடைப்பிடிக்கின்றபோது மாநில அரசானது 85 சதவிகிதத்திற்குத்தான் இட ஒதுக்கீட்டைக் கொடுக்கிறதேயொழிய, மீதியிருக்கிற 15 சதவிகிதத்தை மத்திய அரசுக்கு விட்டுக்கொடுத்து விடுகின்றது. ஆனால், மத்திய அரசு அனைத்து மாநில அரசுகளிலிருந்து வருகிற இடங்களுக்கு, அதாவது, All India Pool Quota (A.I.P.Q.) என்பதன் அடிப்படையிலே வருகிற இடங்களுக்கு மத்திய அரசு பொது Entrance Examination ஒன்றை வைத்து, மாணவர்களைத் தேர்வு செய்கிறபோது, அதில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்படுவது கிடையாது. இதன்மூலம் தமிழகத்திற்கு என்ன இழப்பு ஏற்படுகிறது என்றால், if reservation is applied for the entire Medical College seats, i.e. 100%, then we can admit at least another 33 students more from the Scheduled Caste and Scheduled Tribe people, whereas when 15% is given to the Central Government and when reservation is not applied on that 15%,- I am using a very mild word - in a 'clandestine way', the Central Government is taking away the seats of the Scheduled Caste and Scheduled Tribe people to the extent of about 33% from Tamil Nadu. Through the Chair, I would like to bring it to the knowledge of the Honourable Law Minister also to look at it through the legal angle, as well as to the Education Minister and also to the Secretaries concerned in this Department. They are very much aware of this. Honourable Sir, why I am raising this point is that, for the last two years, I have been trying for redressal of this grievence. Even when the P.M.K. Member was there at the Centre, as Health Minister, I approached him with this point. But, this was denied. It is a great injustice rendered to the Scheduled Caste and Scheduled Tribe people as well as to the Government of Tamil Nadu. These are the seats belonging to the Scheduled Caste people in Tamil Nadu, whereas these 33 seats are given to the general category people from other



States. Why should this intellectual atrocity continue on the Scheduled Caste and Scheduled Tribe people? I request the Honourable Minister to kindly look into this. Thank you very much.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள் மருத்துவப் படிப்புக்கு இடம் ஒதுக்குகிறபோது Central Pool-லேயிருந்து அந்த ஜாதிக்கான ஒதுக்கீடு சரிவரக் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்கிற ஒரு குறையைச் சொல்லியிருக்கிறார்கள். கொடுக்கப்படுவதில்லை என்ற ஒரு குறையைச் சொல்லியிருக்கிறார்கள்-நம்முடைய ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையிலே சரியாக இங்கே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அங்கே என்ன காரணத்தினாலோ அவர்கள் அதை மறுத்து வருகிறார்கள். மறுத்து வருகிறார்கள் என்று சொன்னால், அவர்களுக்குக் கொடுப்பதற்கு மனம் இல்லை என்று நான் கருதுகிறேன். இருந்தாலும், எங்களுக்கு அந்த அதிகாரம் இல்லை என்பதும் அவருக்குத் தெரியும். இருந்தாலும், நம்முடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இப்போது கிராமப்புற மாணவர்களுக்கு 25 சதவிகிதம் ஒதுக்கீடு கொண்டு வந்த நேரத்தில் மருத்துவப் படிப்பில் தாழ்த்தப்பட்டவர்கள் 42 பேர் இடம் பெற்றிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் சொல்லிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, தனி ஒதுக்கீடு. இந்த 25 சதவிகிதம் ஒதுக்கீட்டின்மூலம் கிராமப்புறத் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு மட்டும் 42 பேருக்கு இடம் கிடைத்திருக்கிறது. அதைப்போல, S.T. பிரிவைச் சேர்ந்த மலைவாழ் மக்களுக்கு இரண்டு இடங்களுக்கு கிடைத்திருக்கின்றன. எனவே, இப்படித்தான் நாங்கள் அதைச் சரி செய்ய வேண்டியிருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய மனக்குறையை நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியிடம் எடுத்துச் சொல்லி, மைய அரசுக்கு அதை உணர்த்த வேண்டிய முறையிலே உணர்த்தி, அதைப் பெற்றுத் தருவதற்கு இந்த அரசு பாடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5—10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. அன்பழகன்.

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடத்தில் நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதி எம்.எல்.ஏ. சீட்டு

கேட்டு, 1980-ஆம் ஆண்டிலும் அதே தொகுதி சீட்டு கேட்டு, 1984 ஆம் ஆண்டிலும் அதே தொகுதி சீட்டு கேட்டு, புரட்சித் தலைவர் அவர்கள் மறைந்ததற்குப் பின்னால் எங்களுடைய தங்கத் தலைவி, தானைத் தலைவி, தன்னிகரில்லாத சேனைத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் சேவல் சின்னத்திலே நிலக்கோட்டை தொகுதியிலே என்னை நிற்க வைத்து, மிகக் குறைந்த வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றி வாய்ப்பை இழந்து, பின்பு திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தினுடைய மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவராக என்னை நியமனம் செய்து, திருச்சி மாநாட்டிலே 5004 ஜோடி திருமணத்திலே என்னுடைய திருமணத்தையும் நடத்தி வைத்து. 10 ஆண்டுகளுக்குப் பின்னால் அதே நிலக்கோட்டை தொகுதியில் எனக்கு வாய்ப்பைக் கொடுத்து, அந்தத் தொகுதியிலே 40 ஆண்டு காலமாக சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஒருவர் கடந்த காலத்திலே கருணாநிதி அரசின் சாதனையைச் சொல்லியே நான் தனித்து நின்று வெற்றி பெற்றுவிடுவேன் என்று சொல்லி அவர்களும் என்னை எதிர்த்து நின்று, ஏதோ தேவேந்திர குல வேளாளர் மக்களை நர்ங்கள்தான் காப்பாற்றமுடியும் என்று வெளியிலே சொல்லிக்கொண்டிருக்கிற ஓர் ஆசாமி, அவர் வேட்பாளரை நிறுத்தி, அவரும் என்னிடத்திலே தோற்று, தென் தமிழ்நாட்டிலேயே 32 ஆயிரம் ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து, அதுவும் தங்கள் சாதனையைச் சொல்லியே நான் வெற்றி பெற்று விடுவேன் என்று சொன்னவர்களை ஜாமீன் தொகையை இழக்கச் செய்து, இப்போது இந்த மாமன்றத்திலே எனக்குப் பேச வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார்களே அந்தத் தங்கத் தலைவி, தானைத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களுக்கு இந்த அருமையான மாலை வேளையிலே நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே எனக்கு முன்னாலே ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த தனித் தொகுதியைச் சேர்ந்த பல சட்டமன்ற உறுப்பினர்கள், தங்கள் தொகுதிகளிலே உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு என்னென்ன சலுகைகளை இந்த அரசு அறிவித்திருக்கிறது, என்னென்ன சலுகைகளை அந்த மக்களுக்கு நாம் வாங்கித் தரமுடியும் என்பதையெல்லாம் பேசுவதை விட்டுவிட்டு, இங்கே, ஒருவர் நான் வெடிகுண்டை வீசி இந்தச் சட்டசபையைச் சுக்குநூறாக்குவேன் என்று சொல்கிறார். ஒரு காலத்திலே, ஒருவன் நல்ல தமிழிலே பேசுகிறான் என்று சொன்னால், அவருடைய நாவிலே கலைமகள் குடியிருக்கிறாள் என்று சொல்வார்கள். பின்பு, ஒருவன் நல்ல தமிழிலே இப்போது பேசுகிறான் என்று சொன்னால், அவனுடைய நாவிலே பேரறிஞர் அண்ணா குடியிருக்கிறார் என்று சொல்வார்கள். ஆனால், அந்த அண்ணாவின் வழி வந்தவர்கள் நாவிலே



நரகல் நடையை அமைத்துக்கொண்டு, சந்துபொந்துகளிலே பேசவேண்டிய பேச்சுக்களையெல்லாம் இந்த மாமன்றத்திலே வந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். இதைத்தான் நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். நானும் அந்த வகையிலே வந்த இனத்தைச் சார்ந்தவன்.

*பிற்பகல் 5-15*

எங்களுக்காகப் பரிந்து பேசுவதைப் போன்று பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் நேற்றையதினம் மேல் ஆடையைக் கழற்றிவிட்டு இங்கே வந்து அமர்ந்து, இந்தச் சட்டமன்றத்தினுடைய கவனத்தையெல்லாம் ஈர்த்து, ஏதோ எங்களுக்கெல்லாம் வாழ்வை இவர்தான் வாங்கித் தந்துவிட முடியும் என்று நினைத்து, எங்களுடைய உணர்வுகளை, எங்களுடைய உள்ளத்திலே நாங்கள் கோவிலாக வழிபட்டு வருகின்ற எங்கள் தாயை, அந்தத் தாயினால் நடத்தப்படுகின்ற இந்த அரசைக் கொச்சைப்படுத்துகின்ற வகையில் அவர்கள் நடந்துகொண்டார்கள். நான் ஒன்றை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்குத் தெரிந்த வரையில், புரட்சித் தலைவி அவர்கள் தேவேந்திர குல வேளாளர் வகுப்பைச் சேர்ந்த 8 பேர்களை இந்த மாமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினராக ஆக்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், எங்களுடைய சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் கருப்பசாமி அவர்களை தாட்கோவினுடைய சேர்மனாக ஆக்கி அழகு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய உறுப்பினர் ஒருவரை தென்காசி நாடாளுமன்ற உறுப்பினராக்கியிருக்கிறார்கள். ராஜ்ய சபாவிலே ஒருவரை உறுப்பினராக்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், சென்னை மாநகராட்சியிலே எங்கள் வகுப்பைச் சேர்ந்த மக்கள் இல்லாத எழும்பூர் தொகுதியிலே ஜான் பாண்டியன் அவர்களை நிற்க வைத்து ஒரு சாண் வித்தியாசத்திலே வெற்றி வாய்ப்பை இழந்திருக்கிறார்கள். ஆக, அந்த அளவிற்கு இந்தச் சமுதாயத்தை உயர்த்துகின்ற நோக்கோடு புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு எங்களைப் பாதுகாத்து வருகிறார்கள், வளர்த்து வருகிறார்கள், ஆளாக்கி வருகிறார்கள்.

இந்த அருமையான வேளையில், வெளியே இருந்துகொண்டு ஓர் ஆசாமி, மூன்று மாதம் நாங்கள் பார்ப்போம், (மணியடிக்கப்பெற்றது) இல்லாவிட்டால், நாங்கள் போராட்டத்தைத் தொடங்குவோம் என்று சொல்கிறார். ஆடு நனைகிறது என்று ஓநாய்கள் வருத்தப்படக்கூடாது. இந்தச் சமுதாயத்தை எப்படி வளர்க்க வேண்டும் என்பது எங்கள் தலைவிக்குத் தெரியும். இங்கேயிருக்கின்ற தமிழ்கூறும் நல்லுலகம்

அனைத்து மக்களுக்கும் தெரியும். யார், யாரை எங்கே, எப்படி வைப்பது என்று எங்கள் புரட்சித் தலைவி அவர்களுக்குத் தெரியும். அதை நீங்கள் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை. நான் இன்னுங்கூட மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்வேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மீதியை ஆதிதிராவிடர் மானியக் கோரிக்கையிலே பேசிக்கொள்ளலாம்.

**திரு. கு. அன்பழகன்:** கன்னிப் பேச்சு. மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நேற்றையதினம் ஒரு பேச்சைப் பேசுகிறபோது, இந்த ஆட்சியில் தேவேந்திர குல வேளாளர் வகுப்புக்கு அமைச்சர் பதவி இல்லையென்று பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் சொல்கிறார் என்று சொன்னபோது, பேரவைத் தலைவர் அவர்கள் என்னை உட்கார வைத்துவிட்டார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, எல்லோருக்கும் அதைப் பற்றித் தெரியும். நீங்கள் தொகுதிப் பிரச்சினைக்குப் போங்கள்.

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கடமை, நாங்கள் பேசாமல் இருந்துவிட்டால், அது பல்வேறு விதங்களிலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, நானும் பேசாமல் இருந்துவிட்டால் ஒரு மாதிரி ஆகிவிடும். அதனால், நீங்கள் பேசுவது எல்லோருக்கும் தெரியும்.

**திரு. கு. அன்பழகன்:** சரி. அந்த வகையிலே, வெண்ணெய் திரள்கிறபோது சட்டியை உடைக்கக்கூடாது. பாட்டாளி மக்கள் கட்சி நண்பர்களைக் கேட்டுக்கொள்வேன். கேட்பதெல்லாம் வழங்கக்கூடிய கற்பகத் தருவாக, காமதேனுவாகப் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கிறார்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கன்னிப் பேச்சுப் பேசுகிறார். (குறுக்கீடு) இல்லை, கன்னிப் பேச்சுப் பேசுகிறார் அவர். நீங்கள் உட்காருங்கள்.



**திரு. ஐ. கணேசன்:** கன்னிப் பேச்சில் எதை வேண்டுமானாலும் பேசலாமா? வெண்ணெய் திரண்டு வருகிறபோது நாங்கள் சட்டியை உடைத்தோம் என்று பொதுவாகச் சொல்வது என்பது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கன்னிப் பேச்சுப் பேசுகிறார்.

**திரு. ஐ. கணேசன்:** மரபு மீறிப் பேசக்கூடாது.

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை நான் ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், புரட்சித் தலைவி அவர்கள் எங்கள் சமுதாயத்தை நேசிக்கிறார்கள். அவ்வளவுதான். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் கன்னிப் பேச்சுப் பேசுகிறார். (குறுக்கீடு) அவரும் ஓர் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சார்ந்தவர். நீங்கள் குறுக்கிடுவது நன்றாக இல்லை என்று நினைக்கிறேன். தயவுசெய்து உட்காருங்கள். அவரைப் பேசவிடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** பானையை உடைப்பது என்று சொல்வது நியாயமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கடைசியில், முடிந்தவுடன் பதில் சொல்லுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** அந்த சீட்டில் உட்கார்ந்திருக்கிறீர்கள். முறையா, நியாயமா, சொல்லுங்கள்.

பிற்பகல் 5-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்காகத்தான் நான் சொன்னேன். ஆதிதிராவிடர் மானியக் கோரிக்கையிலே மீதியைப் பேசிக்கொள்ளுங்கள் என்று சொன்னேன்.

**திரு. ஐ. கணேசன்:** 'வெண்ணெய் திரண்டு வரும்போது சட்டியை உடைத்தது போல' என்று சொல்வது முறையா?

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசிய வார்த்தை அருமையான கன்னிப் பேச்சு. இதிலே எந்தத் தவறும் காணமுடியாது. நான் இன்னும்

சொல்லிக்கொள்கிறேன். இப்போது என்னுடைய ஆதங்கத்தைத்தான் சொல்கிறேன். கடந்த காலத்திலே இதேபோன்று....

**திரு. ஐ. கணேசன்:** இது முறையல்ல, நியாயமல்ல, நீதியல்ல. நான் கேட்பது, வெண்ணெய் திரளும்போது சட்டியை உடைத்ததுபோல என்று சொல்வது எந்த வகையில் நியாயம்? நியாயத்தை நீங்கள் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது தவறான வார்த்தையாகத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, பேசுங்கள்.

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசுகின்ற கன்னிப் பேச்சிலே குறை கிடையாது. இதை ஏன் சொல்கிறேன் என்றால், இதை மையமாக வைத்து தென்மாவட்டங்களில் கலவரத்தையும், பதட்டத்தையும் ஏற்படுத்தப் பார்க்கிறார்கள். அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். நல்ல தருணம் வருகிறது, அதைக் கெடுத்துவிடாதீர்கள் என்பதை மட்டும் நான் சொல்லிக்கொண்டு, என்னுடைய தொகுதிக்குள் இருக்கிற பிரச்சினைகளை நான் உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சட்டி, பானை உடைப்பது என்பது not an unparliamentary word. மோசமான வார்த்தை அல்ல.

**திரு. கு. அன்பழகன்:** நிலக்கோட்டை தொகுதியில், ஓர் அரசு மருத்துவமனை கடந்த ஆட்சிக் காலத்திலே மிகப் பாழ்பட்டு, குழிக்குச் செல்வது போன்று இருந்தது. நானும் அந்த மருத்துவமனைக்குச் சென்றேன். நான் கல்லூரிப் பேராசிரியராக இருந்தபோது, எங்களுடைய மாணவர்களை அழைத்து வந்து, N.S.S. Camp போட்டு வசூல் செய்து, அங்கே காற்றாடிகளையும், ஃபிரிட்ஜ்களையும், பெட்களையும் வாங்கி 5 ஆண்டுகளுக்கு முன்பே புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே கொடுத்தது, இன்றும் அவை பழுதுபட்ட நிலையிலே அப்படியே அந்த மருத்துவமனையில் இருந்தன. நான் உடனே நம்முடைய அரசு மருத்துவ அதிகாரிகளை அணுகி இதை உடனடியாக மாற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, என்னுடைய தொகுதியிலே அவ்வளவு பெரிய சாதனையைச் செய்திருக்கிறார்கள். அதற்கு இந்த அரசுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்தோடு மட்டுமல்ல, 'கல்லுக்குள் வசிக்கும் தேரைக்கும் கடவுள் உணவு வழங்கினார்' என்று சொல்வார்கள். ஆனால், புரட்சித் தலைவியின்



அரசு இப்போது கர்ப்பத்திலேயிருக்கிற கருவாக இருக்கும் சிசுவுக்கும் உணவு வழங்குகிறது. 'ஊட்டச்சத்துத் திட்டம்' கொண்டு வந்தார் புரட்சித் தலைவி. நான் இன்றைக்கும்கூடச் சொல்லிக்கொள்கிறேன், கடந்த திமுக. அரசு அதையெல்லாம் காற்றிலே தூக்கியெறிந்துவிட்டதால், கிராமத்திலேயிருக்கிற கர்ப்பிணிப் பெண்களுக்கு, அன்றாடம் வேலை செய்தால்தான் உணவு. காலையிலே எட்டு மணிக்கெல்லாம் வேலைக்குப் போய் வரப்புகளை வெட்டி, களை பறித்து, நாற்று நட்டு, அந்த கர்ப்பிணிப் பெண்கள் வீட்டிற்கு வந்து ஒரு போணி கூழ்கூடச் சாப்பிடுவதற்கு வகையில்லாத பெண்களுக்கு அந்த சிசு எப்படி வளரும்? இதையெல்லாம் அறிந்துதான் புரட்சித் தலைவி அவர்கள் அப்படியொரு மாபெரும் திட்டத்தைக் கொண்டு வந்தார். கடந்த அரசு அதை முற்றிலுமாக எடுத்துவிட்டது. இப்போது நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அருமையான திட்டத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். கிராமப்புற கர்ப்பிணித் தாய்மார்கள் நலனுக்கு அரசு பல நல்ல சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நல்ல திட்டத்தை இந்த அரசு கொண்டுவருமேயானால், தமிழ்நாட்டிலே இருக்கிற ஏழையெளிய பாட்டாளி மக்கள் வணங்குவார்கள், வாழ்த்துவார்கள். அடுத்து, சித்த வைத்தியம், இது சாதாரண வைத்தியம் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்துக்கொள்ளுங்கள். சித்த வைத்தியத்தைப் பற்றி திரு. சி. ஞானசேகரன் அவர்கள் பேசவிருக்கிறார். நீங்கள் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கு. அன்பழகன்:** சேடப்பட்டி தொகுதி—நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் இருக்கிற பகுதியிலே 'சதுரங்கி மலை' என்ற ஒரு மலை இருக்கிறது. அந்த மலையில் ஐந்து இலையைப் பிடுங்கி அந்த இலையை அரைத்துக் குடித்தால் நமக்கு உடலில் இருக்கிற நோய்கள் எல்லாம் தீர்ந்துவிடும் என்று சொல்கிறார்கள். அந்த அளவிற்கு மூலிகைகளை ஆராய்ச்சி செய்ய வேண்டும். கடந்த காலத்திலேகூட நம்முடைய ராமர் பிள்ளையை வைத்து மூலிகைப் பெட்ரோல் தயாரிக்கிறோம் என்று சொல்லி, அந்த மக்களை 5 ஆண்டு காலம் அவர்கள் பண்ணிய அநியாயம் இருக்கிறதே, அதையெல்லாம் இங்கு ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், அந்த சித்த வைத்தியத்தை நாம் முறையாகப் பயன்படுத்தவேண்டும். நம்முடைய ஆட்சி — நம்முடைய அமைச்சர் அவர்களும், நம்முடைய புரட்சித் தலைவி அவர்களும் அதற்கு முதலிடம் கொடுத்திருப்பதை நாங்கள் கண்டு வரவேற்கிறோம்.

*பிற்பகல் 5-25*

அதேபோல், சீனாவிலிருந்து வந்துள்ள அக்குபஞ்சர் மருத்துவம். நம்முடைய ஊரிலேயிருந்து பழைய காலத்தில் சீனாவிற்குச் சென்றது. பழனியிலே நவபாஷாணங்களால் செய்யப்பட்ட முருகன் சிலை இருக்கிறது அல்லவா? அந்தச் சிலையைச் செய்தவர் போக முனிவர். அந்த போக முனிவர் சீனாவிற்குச் சென்று, நம்முடைய மருத்துவத்தை அந்த நாட்டிலே பரப்பி (மணியடிக்கப்பெற்றது) இப்போது சீனா, அக்குபஞ்சர் மருத்துவத்திலே சிறந்திருக்கிறது. அதை மீண்டும் நம்முடைய தமிழகத்திற்குக் கொண்டு வந்து, அந்த அக்குபஞ்சர் வைத்தியத்தை நடத்திக் கொடுக்க நம்முடைய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெருமைக்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்றை மீண்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்று சொல்வார்கள். இங்கே இருக்கிற உறுப்பினர்கள், அவர்கள் தலைவர்களையெல்லாம் போற்றுவார்கள். என்னை இவ்வளவு தூரம் உயர்த்திய எங்களுடைய தலைவியை நான் போற்ற வேண்டும். இதை நான் ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், ஆவிகளை ஆராய்ச்சி செய்கின்ற ஒருவன், பேரறிஞர் அண்ணா எங்கேயிருக்கிறார் என்று தேடுகிறான். அவருடைய ஆவி தமிழகத்திலே இருக்கிற தமிழ்கூறும் 6 கோடி தமிழ் மக்களுடைய ஆன்மாக்களிலே சங்கமம் ஆகியிருக்கிறது என்று சொல்கிறான். பெரியார் எங்கேயிருக்கிறார் என்று கேட்டான். பெரியார் சொர்க்கத்திலே இருக்கிறார் என்று சொல்கிறார்கள். நான் என்னுடைய கவனத்திற்கு, என்னுடைய பார்வைக்கு திருவள்ளுவர், அரிஸ்டாட்டில், அரிஸ்டோபோனஸ், இங்கர்சால், ஈசாப், பிளேட்டோ, புளுடாஸ், புத்தர், பெரியார், பெர்னாட் ஷா, சாக்ரட்டீஸ், சைமன்டீஸ், ஷெல்லி, ஷேக்ஸ்பியர், சன்யாட்சன், ஷினோ, ஹேங்ஸ், தாகூர், காண்டேகர், லார்ட் விட்மென், எமர்சன், எட்மண்ட் பெர்த்விக், கார்ல்ஸ் வெர்திக், கார்ல் மார்க்ஸ், அவுலாடெல்லி, ஷீல், (மேசையைத் தட்டும் ஒலி) ஔவையார், கெல்லர்ஸ்டாவெல், மார்ட்டின் லூதர், மா சேதுங், சூயென்லாய், காந்தி, கென்னடி, நேரு, அண்ணா, லிங்கன், லெனின், நாசர், குருஷ்சேவ், புல்கானின் (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய பசும்பொன் தேவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இவர்களுடைய ஆன்மாக்கள் எல்லாம் எங்களுடைய தங்கத் தலைவி, தானைத் தலைவி புரட்சித் தலைவி அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) ஆன்மாவிலே சங்கமம் ஆகியிருக்கிறது என்று சொல்லி, வாய்ப்புக் கொடுத்த இந்தக் கன்னித் தமிழுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சோ. இராசேந்திரன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன?

**திரு. க. முருகவேல் ராஜன்:** Point of Order. என்னைக் குறித்துப் பேசினார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. திரு. சோ. இராசேந்திரன், பேசுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் உங்களைப் பற்றிப் பேசவில்லை. திரு. சோ. இராசேந்திரன், நீங்கள் பேசுங்கள்.

***திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த—

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of Order.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சோ. இராசேந்திரன், பேசுங்கள். (குறுக்கீடு) இதிலே Point of Order வராது. திரு. சோ. இராசேந்திரன், பேசுங்கள்.

*(திரு. க. முருகவேல் ராஜன் பேசுவதற்கு வாய்ப்புக் கேட்டு தொடர்ந்து நின்றுகொண்டிருந்தார்.)*

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சோ. இராசேந்திரன், பேசுங்கள். (குறுக்கீடு) இதிலே Point of Order வராது. திரு. இராசேந்திரன், பேசுங்கள்.

**திரு. சோ. இராசேந்திரன்:** அனைவருக்கும் நோயற்ற வாழ்வு என்ற இனிய தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையிலே தரமுள்ள மருத்துவ வசதி எளிதாகக் கிடைக்கச் செய்வது, தரமான அதி நவீன.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசிக் கொண்டிருக்கிறார், அல்லவா?

**திரு. சோ. இராசேந்திரன்:** மருத்துவமனைகளிலே மருந்துகள் தங்குதடையின்றிக் கிடைப்பதற்கான அரசின் குறிக்கோள் வரவேற்கத்தக்கது. ஆரம்ப சுகாதார மையங்கள் சிறிய மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்படுதல், நடமாடும் மருத்துவ ஊர்திப் பிரிவுகளை ஏற்படுத்துதல், அனைத்து அறுவை சிகிச்சைக் கூடங்களிலும் குளிர்சாதன வசதி, மின் உற்பத்தி இயந்திரங்கள் நிறுவப்படும் என்ற பல்வேறு திட்டங்கள் மானியக் கோரிக்கையிலே அறிவிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

*பிற்பகல் 5-30*

பல்நோக்குச் சுகாதார மேற்பார்வையாளர்கள் பயிற்சி, குறிப்பாகப் பெண்களுக்குத் தொடங்கப்படுவதற்கான நடவடிக்கையை நான் வரவேற்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சென்னை மற்றும் மதுரை மருத்துவமனைகளிலே எம்.ஆர்.ஐ. ஸ்கேன் என்ற நவீன இயந்திரத்தைத் திறந்து வைத்து இந்த நாட்டு ஏழையெளிய மக்களுக்கு அர்ப்பணித்ததை நான் மிகவும் வரவேற்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலையிலே தெரிவித்தபோது, தமிழ்நாட்டிலேயுள்ள அரசு மருத்துவமனைகளிலே 5,950 மருத்துவர்கள் பணியிடங்கள் தகுதியின் அடிப்படையிலேயும், seniority-யின் அடிப்படையிலேயும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக நிரப்பப்படும் என்ற ஒரு நற்செய்தியைத் தெரிவித்துள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவக் கல்லூரிகளிலேயுள்ள Dean பதவிகள் நிரப்பப்பட வேண்டும். மருத்துவக் கல்லூரிகளிலே போதிய விரிவுரையாளர்கள்



பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். மாவட்ட மருத்துவமனைகளிலே மன நல மருத்துவர்கள் நியமிக்கப்பட வேண்டும். மன நலக் காப்பகங்கள் மாவட்ட மருத்துவமனை அளவிலே ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற ஒரு கருத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

மருத்துவக் கல்லூரிகளிலே புதிதாக மாணவர்கள் சேரும்போது, 'ராக்கிங்' என்ற கொடிய செயலை அடியோடு ஒழிப்பதற்காக 'ராக்கிங்' தடைச் சட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மருத்துவ டிப்ளமோ பயிற்சியான டி.சி.எச்., டி.ஜி.ஓ., போன்ற டிப்ளமோ பயிற்சிகளை அடியோடு ரத்து செய்து, அதற்குப் பதிலாக எம்.டி.சி.எச்., எம்.டி.ஜி.ஓ. என்ற உயர் பட்டப் படிப்புகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தாலுகா அளவிலே மருத்துவமனைகளிலே அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். போதிய டாக்டர்கள், செவிலியர்கள் நியமிக்கப்பட்டு, நவீனக் கருவிகளும், போதிய உயிர்காக்கும் மருந்துகளும் அளித்தால், மாவட்ட மருத்துவமனை அளவிலேயே நோயாளிகள் அதிகம் வருவதைத் தடுப்பதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்த முடியும். மேலும், நோயாளிகள் மற்றும் பிரசவக் காலங்களிலே பெண்கள் உயிரைக் காப்பாற்ற முடியும் என்ற ஒரு கொள்கையை அரசு அறிவிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திருமதி ஷீலா ராணி சுங்கத் என்பவர், தனது ஆய்வில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இயற்கையான பிரசவம், குடும்ப நலத் திட்ட அறுவை சிகிச்சை மற்றும் மருத்துவ ரீதியான கருக்கலைப்பு போன்றவை நடைபெறுவதில்லை என்று தெரிவித்துள்ளார்கள். அந்த நிலையைப் போக்கிடத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆரம்ப சுகாதார மையங்கள் 30 படுக்கைகள் கொண்ட மையங்களாக விஸ்தரிக்கப்படும் என்று ஒரு திட்டத்தை அறிவித்துள்ளது, வரவேற்கத்தக்கது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் பெரும் பகுதி கிராமப் பகுதிகளை ஒட்டிய கிராம அமைப்பாகச் செயல்படுவதால், அங்கே மருத்துவர்கள் தொடர்ந்து பணியாற்றுவதற்கான உத்தரவாதத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

மருத்துவமனை நிர்வாகம் பெரும்பாலும் எந்தவிதமான கட்டுப்பாடற்ற நிலையில் உள்ளது. இவற்றைப் போக்க ஒவ்வொரு

மருத்துவமனையிலும் மக்கள் கண்காணிப்புக் குழு என்ற ஒரு கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இத்திட்டமானது சென்னை ஸ்டான்லி மருத்துவமனையிலே செயல்படுத்தப்பட்டு, அந்தத் திட்டம் ஒரு வெற்றிகரமான திட்டமாக அமைந்துள்ளது என்பதைத் தெரியப்படுத்திக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், எனது தொகுதியைப் பொறுத்தமட்டிலே, தூத்துக்குடி மாவட்டத்திலேயுள்ள கோவில்பட்டி நகரமானது, தூத்துக்குடி மாவட்டத்திலேயே இரண்டாவது பெரிய நகரமாகும். இந்த நகரம் தேசிய நெடுஞ்சாலையிலே அமைந்துள்ள ஒரு நகரம். அங்கிருக்கின்ற அந்த மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனை அந்தஸ்துக்கு உயர்த்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இந்த மாமன்றத்தின் வாயிலாக வைக்க ஆசைப்படுகின்றேன்.

1999 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலே, கோவில்பட்டி அரசு மருத்துவமனை மாவட்ட அரசு மருத்துவமனை ஆக்கப்படும் என்று அன்றைய முதல்வராக இருந்த மாண்புமிகு கருணாநிதி அவர்கள் அறிவித்தார்கள். அந்தத் திட்டம் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. அரசு மருத்துவமனைகளை மாவட்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துவதற்குத் தேவையான வழிகாட்டு நெறிமுறைகளை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, அரசாணை எண் 211, நாள் 30-6-2000-ன்படி அறிவித்திருக்கிறது. அந்த அரசாணையின்படி 2000-2001 புள்ளியியல் அடிப்படையிலே கோவில்பட்டி மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாக ஆக்குவதற்கு அனைத்துத் தகுதியும் உள்ளது என்று தெரிவித்துக்கொள்வதுடன், கோவில்பட்டி அரசு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உயர்த்தித்தரவேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இந்த மாமன்றத்திலே வைக்க ஆசைப்படுகிறேன். இந்தப் பிரச்சினையானது எனது தொகுதியின் நீண்ட நாள் பிரச்சினையாகும். மக்களுடைய நெடுநாளைய விருப்பமும் ஆகும். அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

*பிற்பகல் 5-35*

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகாவிலுள்ள குருவிகுளம் பிர்க்காவைச் சேர்ந்த திருவேங்கடம் என்ற மேஜர் பஞ்சாயத்திலே ஆரம்ப சுகாதார மையம் ஒன்றும் அமைத்துத் தர



வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, இந்த மாமன்றத்திலே எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் எஸ். மாணிக்கராஜ்.

**திரு. எஸ். மாணிக்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளராக 10 ஆண்டுகள் பணிபுரிந்த என்னை இன்றையதினம் இந்தச் சட்டமன்ற உறுப்பினராக ஆக்குவதற்கு (குறுக்கீடுகள்) உறுதுணையாக இருந்து என்னை உறுப்பினராக ஆக்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (குறுக்கீடுகள்) முதற்கண்....

***திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும். பேச அனுமதிக்காவிட்டால் என்னுடைய உரிமையைக் காக்கப் போராடுவேன். (குறுக்கீடுகள்)

(பின்னர், திரு. க. முருகவேல் ராஜன், தன்னுடைய இருக்கையைவிட்டு எழுந்து வந்து, மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கை அருகே கீழே அமர்ந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நேற்று சட்டை இல்லாமல் உட்கார்ந்து இருந்தார். இன்றைக்கு சட்டையோடு உட்கார்ந்திருக்கிறார். இவ்வளவுதான் வித்தியாசம். வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் பெயரைச் சொல்லிப் பேசுகிறார். கட்சியைச் சொல்லிப் பேசுகிறார். அதிலே இருக்கக்கூடிய உண்மையைச் சொல்வதற்கு ஒரு நிமிடம் அவகாசம் கொடுங்கள். அதைக்கூடப் பேசுவதற்கு நீங்கள் உரிமையை மறுக்கிறீர்கள் என்று சொன்னால் அப்புறம் எப்படி, சொல்லுங்கள். அவர் என்ன சொல்லப் போகிறார்? வேறு ஒன்றும் சொல்லப் போவதில்லை. நீங்கள் அவருக்கு வாய்ப்புக் கொடுக்கிறீர்கள். அவர் ஆதிதிராவிட உறுப்பினர் என்று சொன்னீர்கள். அதிலே சந்தோஷப்படுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுதான் உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன். நீங்கள் சொல்லிவிடுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** இருந்தாலும்கூட, நான் சொல்ல விரும்புவது, முருகவேல் ராஜன் என்று பெயரைச் சொல்லித்தான்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அ.இ.அ.தி.மு.க. கொறடா அவர்கள் பேசுவார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சட்டை இல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வந்தார்கள். இப்போழுது கீழே அமர்ந்திருக்கிறார்கள். இந்த மாமன்றம் சட்ட விதிகளின்கீழே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எந்த சட்ட விதியின் கீழே இப்படி உரிமைப் பிரச்சினையை எழுப்புகிறார் என்று நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மன்றத்திலே பேசக்கூடிய ஓர் உறுப்பினர் பெயரைச் சொல்லிப் பேசுகிறார். கட்சியைச் சொல்லிப் பேசுகிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிலக்கோட்டை உறுப்பினர் அன்பழகன் அவர்கள் உறுப்பினருடைய பெயரைச் சொல்லிக் குறிப்பிடவில்லை.

**திரு. ஐ. கணேசன்:** சட்டை இல்லாமல் வந்தார் என்றார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அவர் பெயரைச் சொல்லிக் குறிப்பிடவில்லை. (குறுக்கீடு) அவர் பெயரைச் சொல்லிக் குறிப்பிடவில்லை. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை இத்துடன் விட்டுவிட்டு—அவர் பெயரைச் சொல்லிக் குறிப்பிடவில்லை என்று சொல்லியிருக்கிறார்—இதைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அவை நடவடிக்கைகள் தொடர்ந்து நடக்க அமைதி வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மாணிக்கராஜ்.



**திரு. எஸ். மாணிக்கராஜ்:** என்னை சட்டமன்ற உறுப்பினராக நியமித்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்காக உழைத்த கூட்டணிக் கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் என் தொகுதி பொது மக்களுக்கும் நன்றியினை உரித்தாக்கிக்கொள்கின்றேன். புரட்சித் தலைவி அவர்கள் பல சோதனைகளையெல்லாம் சாதனைகளாக மாற்றி இன்றையதினம் சரித்திரம் படைக்கின்ற அளவிற்கு ஒவ்வொரு இலாக்காவாக ஆய்வு செய்து தனது திறமை பளிச்சிடுகின்ற வகையில் திட்டங்களைத் தீட்டி நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து இருக்கிறார்கள்.

பிற்பகல் 5-40

அதுமட்டுமல்லாமல், புரட்சித் தலைவி அவர்கள் ஒவ்வொரு நாளும் ஆயிரம் பேர்களிடம் மனுக்களைப் பெற்று அவர்களுடைய குறைகளை நீக்குகின்ற வகையில் நடவடிக்கை எடுக்கிறார்கள். இந்தியாவிலேயே தமிழகத்தை முதல் மாநிலமாக்குகின்ற பணியை புரட்சித் தலைவி அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவியைப் பார்க்கின்ற பொது மக்கள் அத்தனை பேர்களும் வியக்கின்ற அளவிற்கு அவர்கள் செயல்பாட்டில் இன்றைக்கு உயர்ந்து நிற்கின்றார்கள். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு செயல்பட்டு உயர்ந்து நிற்கின்றார்கள் புரட்சித் தலைவி அவர்கள். இதனைப் பார்த்து பொறாமை கொண்ட எதிர்க் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எந்த வழியும் இல்லாமல் இன்றையதினம் ஒரு சிறிய நிகழ்ச்சியைப் பெரிதாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தவிர, அவர்களால், நாங்கள் எங்கள் ஆட்சியில் இதைச் செய்தோம் என்று சொல்ல முடியவில்லை. அந்த அளவிற்கு மக்களுடைய செல்வாக்கை அவர்கள் இழந்து நிற்கிற நிலைமை. அந்த நிலைமையில் ஏதாவது ஒரு வழியில் இதைப் பயன்படுத்த வேண்டுமென்று அவர்கள் திட்டமிட்டு செயல்படுத்திய நிகழ்ச்சிதான் சமீபத்திலே நடந்த நிகழ்ச்சி.

புரட்சித் தலைவி அவர்கள் 1991 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்கின்றபோது, அவர்கள் ஆட்சியைப் பிடித்த நேரத்தில், கலைஞர் கருணாநிதி அவர்கள் மீது சர்க்காரியா கமிஷன் ஊழல் குற்றச்சாட்டுகள் இருந்தன. புரட்சித் தலைவி அவர்கள் தான் பதவியேற்றவுடன் மக்கள் தீர்ப்பை மதித்து எந்த விதத்திலும் அவர்களுக்குத் தீங்கு செய்யாமல் இருந்தார்கள். ஆனால் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஆட்சி நடத்திய 5 ஆண்டுகளும் புரட்சித்

தலைவியை எந்த அளவிற்கு சின்னாபின்னமாக்க வேண்டுமோ, அந்த அளவிற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எப்படியாவது அழித்து விடலாம் என்கிற நிலையோடு காரியங்களைச் செய்தார்கள். வேறு எந்தச் சாதனையையும் அவர்கள் படைக்கவில்லை.

புரட்சித் தலைவி அவர்கள் இப்போது ஆட்சிக்கு வந்த பின்பு தொண்டர்களைச் சந்திக்கின்ற ஒரு நிகழ்ச்சியை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். தொண்டர்கள் எல்லாம் சொன்னார்கள். ஒவ்வொருவரும், அம்மா நீங்கள் அப்போது ஆட்சி ஏற்றபோது எந்தத் தீங்கும் செய்யவில்லை; ஆனால் அவர்கள் ஆட்சியிலே உட்கார்ந்தவுடன் உங்களை எந்த அளவிற்கு வேதனைப்படுத்தினார்கள்; அந்த வேதனைகளை எல்லாம் நீங்கள் தாங்கிக் கொண்டிருக்கிறீர்கள். நாம் ஆட்சிக்கு வந்தால் அவர்களுக்கு நாமும் ஏதாவது இப்படிச் செய்ய வேண்டுமென்கிற கருத்தை ஒவ்வொரு தொண்டனும் சொன்ன காரணத்தினாலேதான், அந்த அடிப்படையிலேதான் ஒரு நிகழ்ச்சியை ஏற்படுத்தினார்கள். அந்த நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு இவர்கள் மீண்டும் இப்போது அரசியல் நடத்திக் கொண்டிருக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. இவர்கள் சாதனைகளையெல்லாம் இங்கே சட்டமன்றத்திலே ஒவ்வொரு துறை மானியக் கோரிக்கைகளின்போதும் அமைச்சர்கள் சொல்கிறார்கள். ஒவ்வொரு துறையிலும் எந்த அளவுக்கு ஊழல் செய்திருக்கிறார்கள், தவறு செய்திருக்கிறார்கள் என்கிற கருத்துகளை ஒவ்வொரு அமைச்சர் பெருமக்களும் அவரவர்களுடைய மானியக் கோரிக்கையின்போது இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

புரட்சித் தலைவி அவர்கள், எந்தத் துறையிலும் ஊழல் வந்து விடக் கூடாது; ஒவ்வொரு துறையும் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்கிற காரணத்தின் அடிப்படையிலே திட்டமிட்டு, ஒவ்வொரு துறையையும் ஆய்வு செய்து, அதில் எந்த அளவுக்கு சிறப்பான திட்டங்களைக் கொண்டு வர முடியும் என ஆய்வு செய்து, சிறந்த திட்டங்களை இங்கே வைத்திருக்கிறார்கள் என்பதை நாம் கண்கூடாகக் பார்த்துக் கொண்டிருக்கிற நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட புரட்சித் தலைவி அவர்கள் மருத்துவத் துறையிலும் பல திட்டங்களைத் தீட்டி இந்த மாமன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள்.

எனது தொகுதி நாங்குனேரி தொகுதி. நாங்குனேரியில் ஒரு மருத்துவமனை இருக்கிறது. அதிலே 52 படுக்கைகள் உள்ளன. 5 மருத்துவர்களுக்கு அங்கே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் 2 மருத்துவர்கள்தான் அங்கே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். 3



மருத்துவர்களை நியமிக்க வேண்டியிருக்கிறது. தற்போது எத்தனையோ பெண் டாக்டர்கள் அதிகமாகக் கொடுக்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே அந்தக் காலி இடங்களை நிரப்பித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தினசரி 500 நோயாளிகள் வந்து போகிறார்கள். உள் நேயாளிகள் 20 முதல் 30 பேர் வரை இருக்கிறார்கள். அறுவை சிகிச்சை மாதம் 60 முதல் 70 வரை செய்யப்படுகிறது. ஆதலால் அந்த ஆஸ்பத்திரிக்கு 3 மருத்துவர்களையும், தானியங்கி இரத்தப் பரிசோதனைக் கருவி, இதயப் பரிசோதனைக் கருவி, ஸ்கேன் ஆகியவற்றை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மேலும் அந்த ஆஸ்பத்திரியில் சித்தா பிரிவு திறக்கப்பட்டிருக்கிறது. அதற்கு டாக்டர்கள் கொடுக்கப்படவில்லை. அதற்கும் ஒரு டாக்டரைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5—45

அடுத்து, என்னுடைய தொகுதிக்குட்பட்ட வள்ளியூரில் 30 ஆண்டுகளாக ஒரு ஆஸ்பத்திரி இயங்கிக் கொண்டிருக்கிறது. வள்ளியூரைப் பொறுத்தவரையில் வளர்ந்து வரும் நகரங்களில் இது ஒரு பெரிய நகரம். அந்த நகரத்திலே 32 படுக்கைகள் கொண்ட, நவீன வசதிகளுடன் கூடிய ஒரு பொது மருத்துவமனையைப் புதிதாக அமைக்க அனைத்து எஸ்டிமேட்களும் தயாரிக்கப்பட்டு, அதற்காக ஏற்கெனவே 5 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு, கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. அமைச்சரிடத்தில் இது குறித்து நான் ஆதாரங்களைக் காட்டியிருக்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் இது குறித்து போராட்டங்களை அங்கே அறிவித்திருந்தார்கள். அந்தப் போராட்டம் குறித்த Peace Committee-ல் எல்லோர் முன்னிலையிலும், அந்த ஆஸ்பத்திரிக்கு கண்டிப்பாக நான் ஏற்பாடு செய்கின்றேன் என்று சொன்னதோடு, அமைச்சர் அவர்களிடமும் நான் கேட்டிருக்கிறேன். அவர்களும் கண்டிப்பாக அந்த ஆஸ்பத்திரி அமைய இருக்கின்ற இடத்தைப் பார்வையிட்டு, செய்து தருகிறேன் என்ற வாக்குறுதியைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான பதிலையும் அவர்கள் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளியூர் ஆரம்ப சுகாதார நிலையம் மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டதுபோல, கடந்த கால ஆட்சியில் மொத்தம் 42 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டதாக அறிவிப்பு மட்டும்

செய்யப்பட்டது. ஆனால், அதற்காக எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல், அதற்காக Infrastructure எதையும் அவர்கள் செய்யாத நிலையிலே, வள்ளியூரைப் போன்ற 41 மருத்துவமனைகள் எந்தவித வசதியையும் தரம் உயர்த்தப்பட்ட அளவுக்குப் பெற முடியாத நிலையிலே இருக்கின்றன. வள்ளியூரைப் பொறுத்தவரையில் சட்டமன்ற உறுப்பினர் என்னைச் சந்தித்து நிலைமையைச் சொல்லி இருக்கிறார். இதுகுறித்து அங்கே, அந்த ஊரிலே போராட்டங்களை எல்லாம்கூட பொதுமக்கள் நடத்தினார்கள். எனவே, அதைக் கவனத்தில் கொண்டு, இந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு அந்த மருத்துவமனைக்கு வேண்டிய வசதிகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எஸ். மாணிக்கராஜ்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மேலும் என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட கொடுமுடியாறு, பச்சையாறு திட்டங்கள் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவை விரைவில் முடியக்கூடிய கட்டத்தில் இருக்கின்றன. பச்சையாறைப் பொறுத்தவரையில் டேம் கட்டப்பட்டுவிட்டது. அதற்கான வாய்க்கால்கள் மட்டும் கட்டப்பட வேண்டியிருக்கின்றன. அதற்கான நிதியை ஒதுக்கித் தந்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குனேரியில் உயர் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை அமைக்க முந்தைய அரசால் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. அதற்காக 2 ஆயிரம் ஏக்கர் நிலம் ஆர்ஜிதப்படுத்தப்பட்டு மீண்டும் ஆயிரம் ஏக்கர் நிலம் கேட்கப்பட்டு, அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தத் திட்டம் என்ன நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் முதலில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் ஒரு திட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு அதை நடைமுறைப்படுத்துகின்ற நிலையில், இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டம் இப்போது வள்ளியூர் பகுதியிலிருந்து 60 கிராமங்களுக்குத் திட்டமிடப்பட்டு டெண்டர் விடுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அதோடு மற்றுமுள்ள கிராமங்களையும் சேர்த்துப் பயன்படுகின்ற வகையிலே செய்து தரவேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 5—50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவ மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு முன்னால், இளைஞர்கள் குட்கா, பான்மசாலா போன்ற பொருட்களுக்கு அடிமையாவதைத் தடுப்பதற்கு வழிவகை செய்கின்ற சட்டமானது இயற்றப்படும் என்று கூறியிருப்பதை நான் வரவேற்கிறேன். சட்டம் இயற்றுவதோடு நின்றுவிடாமல், இயற்றிய சட்டத்தைக் கடுமையாக அமல்படுத்த வேண்டும். ஏனென்றால், இப்போது இளைஞர் சமுதாயம் மிகப் பெரிய அச்சுறுத்தலை எதிர் கொண்டிருக்கிறது. போதைப் பொருட்கள், கஞ்சா, பிரவுன் சுகர் போன்ற பொருட்களுக்கு அடிமையாகி வருவது அதிகரித்து வருகிறது. அதிலும் குறிப்பாக, Professional கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்களை சில சமூக விரோத சக்திகள் இம்மாதிரியான பழக்கங்களுக்கு ஆட்படுத்துகின்ற செயல்களிலே ஈடுபட்டு வருகிறார்கள்.இங்கே சென்னையிலேகூட, Indian Institute of Technology-ல் உள்ள கேந்திர வித்யாலயாவில் படிக்கின்ற பிளஸ் 2 மாணவர்களை அங்கிருக்கின்ற சில அலுவலர்களே இம்மாதிரிப் பழக்கத்திற்குத் தூண்டுவதாகத் தகவல்கள் இருக்கின்றன. எனவே, அரசாங்கம் இம்மாதிரி கல்லூரிகளைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளில் செயல்படுகின்ற சமூக விரோத சக்திகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

மருத்துவ மானியக் கோரிக்கையிலே யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டம், போலியோ நோய்த் தடுப்புத் திட்டம், மலேரியா தடுப்புத் திட்டம், எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம், காசநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் என்று பல்வேறு திட்டங்கள் பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவது குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், சமீப காலமாக எய்ட்ஸைவிடக் கொடிய ஆட்கொல்லி நோயாக மஞ்சள் காமாலை நோய் இருந்து வருகிறது. Hepatitis-B ஒரு ஆட்கொல்லி நோயாக இருக்கிறது. எனவே, மஞ்சள் காமாலை நோயினைத் தடுப்பதற்கான திட்ட நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்திட வேண்டும்.

பக்கம் 13, பத்தி-3ல் மருத்துவக் கல்விக்கு கிராமப்புற மாணவர்களின் சேர்க்கைக்கு 15 சதவீதம் ஒதுக்கீடு அளிக்கப்பட்டபோது, அம்மாணவர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தைக் கருத்தில்கொண்டு, அரசு கிராமப்புற மாணவர்கள்

சேர்க்கை ஒதுக்கீட்டை 15 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக உயர்த்தியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது ஏதோ எதிர்மறையான பொருளைத் தருவதாக இருக்கிறது. ஏற்கெனவே 15 சதவீதம் இருந்தும், அதற்கான மாணவர்கள் போதுமானதாக இல்லை. ஆனால் அதற்கான சதவீதத்தைக் கூட்டியிருப்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி அமைப்பது நல்லது. அதிலும், குறிப்பாக, மிகவும் பிற்பட்ட மாவட்டமாக இருக்கின்ற சிவகங்கை மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரியைக் கொண்டுவர வேண்டும். ஏற்கெனவே, தனியார் மருத்துவக் கல்லூரி கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, 250 படுக்கை வசதிகள் கொண்ட, நவீனக் கருவிகள் கொண்ட ஒரு மருத்துவமனையானது கட்டப்பட்டது. ஆனால், அதற்குப் பிறகு அரசாங்கம் தனியார் மருத்துவமனைக்கு அனுமதி தருவதில்லை என்று கொள்கை முடிவு எடுத்த காரணத்தாலே இப்போது அந்த மருத்துவமனையும்கூட unutilised ஆக இருந்து கொண்டிருக்கிறது. எனவே, அந்த ஸ்தாபனத்தை நடத்துபவர்கள், பல்கலைக்கழகத்திற்குத் தருவதற்குக்கூடத் தயாராக இருக்கிறார்கள். எனவே, பல உயர் கல்விகளை வழங்குகின்ற அழகப்பா பல்கலைக்கழகத்தின் மூலமாக ஒரு மருத்துவக் கல்லூரியினை அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல் மருத்துவத்தைப் பொறுத்தவரையில் Tamil Nadu Government Dental College-ல் 60 சீட்டுகள் இருக்கின்றன. ஆனால், 100 சீட்டுகள் வரை அங்கே இருப்பதற்கான infrastructure இருக்கிறது. மீதியெல்லாம் தனியார் கல்லூரிகள்தான் பல இலட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்து, அங்கே மாணவர்கள் சேரவேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலே, பி.டி.எஸ்.-க்கு உள்ள சீட்டுகளின் எண்ணிக்கையை 60-லிருந்து 100 ஆகவும், அதேபோல எம்.டி.எஸ்.-க்கு உள்ள சீட்டுகளின் எண்ணிக்கையை 18-லிருந்து 40 ஆகவும் உயர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால், தனியார் கல்லூரிகளிலே பல இலட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்து மாணவர்கள் சேருகின்ற சூழ்நிலையிலிருந்து ஒரு relief-ஆக இருக்கும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

விபத்துக்களால் காயப்படுபவர்கள் நீண்ட தூரம் சென்று சிகிச்சை பெறும் சூழ்நிலையினால், விபத்துக்களால் ஏற்படும் உயிர் இழப்பு



அதிகமாகிறது. ஆகவே ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தலைமை மருத்துவமனையிலும், தலைக் காயப் பிரிவும், சி.டி.ஸ்கேன் சென்டர் ஒன்றும் அமைத்திட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

100 கோடி ரூபாய் செலவில் மாவட்ட மன நல மருத்துவத் திட்டம் இராமநாதபுரம் மற்றும் மதுரை மாவட்டங்களில் செயல்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்படுவதாக இங்கே மானியக் கோரிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. சமீபத்திலே, சிவகங்கை மாவட்டத்திலே ஒரு தர்காவிலே 22 மன நோயாளிகள் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு இருந்ததை மாவட்ட நிர்வாகமானது கண்டு, அவர்களை அங்கிருந்து விடுதலை செய்து, பல்வேறு மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்ததை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எனவே, இராமநாதபுரம், மதுரையோடு, சிவகங்கை மாவட்டத்திற்கும் இந்த ஒப்பளிப்பினை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-55

காரைக்குடி அரசு மருத்துவமனையிலே பல மாதங்களாக Anaesthetist இல்லாத ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. அதேபோல, Paediatrician இல்லை. எனவே, அங்கு ஒரு Anaesthetist மற்றும் Paediatrician நியமிக்கப்பட வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், காரைக்குடி அரசு மருத்துவமனையில் மாதத்திற்கு 100 பிரசவங்கள் நடைபெறுகின்றன. அதிலே, 20-லிருந்து 25 கேஸ்கள் சிசேரியனாக இருக்கின்றன. ஆனால், பிரசவ வார்டு அங்கே இல்லை. எனவே, 100 படுக்கை வசதி கொண்ட பிரசவ வார்டு ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் அரசிடம் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, Accident Emergency Ward ஒன்றும் அமைக்கப்பட வேண்டும். சிவகங்கை மாவட்டத்திலேயே மிகப் பெரிய நகரமாக காரைக்குடி இருந்து வருகிறது. பக்கத்திலே இருக்கின்ற ஒன்றியங்களைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான ஏழையெளிய மக்களும் மருத்துவ வசதி பெறுவதற்காக காரைக்குடிக்குத்தான் வருகிறார்கள். சிவகங்கை மாவட்டத்திலே எந்தவொரு மருத்துவமனையிலும் burn injury-க்கான ward இல்லை. எனவே, காரைக்குடி அரசு மருத்துவமனையில் தீக்காய சிகிச்சைப் பிரிவு ஒன்றும், Intensive Care Unit-ம் அமைத்திட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள்.

***திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவம், மக்கள் நல்வாழ்வு ஆகிய மானியக் கோரிக்கை விவாதத்திலே பேசுகிற வாய்ப்பை நல்கிய தங்களுக்கும், எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினை நான் இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு பற்றி பல உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துகளை இங்கே எடுத்து வைத்தார்கள். குறிப்பாக, பலர் இங்கே, ஆங்கில மருத்துவ முறைகளைப் பற்றி எடுத்துச் சொல்லி, ஆங்கில மருத்துவத்தை அடிப்படையாக வைத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிற மருத்துவமனைகளில் இருக்கக்கூடிய குறைகளையெல்லாம் களைய வேண்டும் என்கிற கருத்தினை இங்கே பதிந்திருக்கிறார்கள். அந்த வகையில், கடந்த மூன்று ஆண்டுகளாக, திராவிட முன்னேற்றக் கழக அரசால் அறிவிக்கப்பட்டு, ஆண்டுதோறும் தள்ளிவிடப்பட்ட எங்களுடைய வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி, இந்த ஆண்டு நிச்சயமாக வந்துவிடும், ஆரம்பிக்கப்படும் என்கிற செய்தியினை நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லி இருக்கிறார்கள். அதேபோல, இந்த அவையிலே நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களும் உறுதியளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை எங்களுடைய வேலூர் மாவட்டத்தின் சார்பாக நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய வேலூரிலே இருக்கக்கூடிய சி.எம்.சி., புகழ்பெற்ற மருத்துவமனை, இது இன்று ஆசியாவிலேயே புகழ்பெற்ற மருத்துவமனை. அதற்கு இப்பொழுது Five Star Status கிடைத்து, அதற்கான பரிசையும் பெற்றிருக்கிறது. அந்த மருத்துவமனையைத் தொடங்கிய ஒரு சமூகசேவகி, டாக்டர் ஐடாஸ்கால்டர் அவர்களுக்கும், அவரைத் தொடர்ந்து அங்கே அந்த மருத்துவப் பணியை மிகச் சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருக்கிற அந்த நண்பர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுக்களை இந்த அவையின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த கால ஆட்சியிலே, சில ஆண்டுகளுக்கு முன்னாலே தனியாரால் தொடங்கப்பட்ட பல எஞ்சினீயரிங் கல்லூரிகளையெல்லாம் Deemed University-களாகக் கொண்டு வந்தார்கள். ஆனால், 100 ஆண்டுகளுக்கு மேல் வரலாறு படைத்திருக்கிற சென்னை மருத்துவக்



கல்லூரியை ஒரு நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக திராவிட முன்னேற்றக் கழக அரசு அறிவித்தது. பிறகு ஏனோ அதே அரசு அந்த நிகர்நிலைப் பல்கலைக்கழகம் என்கிற அந்தஸ்தினை எடுத்துவிட்டு, அதனுடைய புகழுக்கு ஒரு பங்கத்தைச் சேர்த்திருக்கிறார்கள். ஆகவே, இழந்துவிட்ட அந்தப் பெருமையைப் பெற நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மீண்டும், வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்த Madras Medical College-ஐ நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக உருவாக்கி, அங்கே பல ஆராய்ச்சிகளை மருத்துவத் துறை மாணவர்கள் செய்வதற்கான வழிவகைகளைக் காண வேண்டுமென்று நான் ஒரு கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 6-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் அனுமதியோடு அலுவல் நேரம் மீண்டும் 5 நிமிடம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொல்லியதைப் போல சென்னை மருத்துவக் கல்லூரி 1998-ல் நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக ஆகி, அது 2000-லே அந்த அந்தஸ்தை இழந்துவிட்டது என்பது உண்மைதான். அதற்கு என்ன காரணம் என்பது மாண்புமிகு ஞானசேகரன் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். ஆனால், இப்பொழுது இருக்கிற எங்களுடைய கஷ்டம் எல்லாம், அது நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக மாறியவுடன், அது டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்படாமல் இருக்கிறது. எனவே, இப்பொழுது—அந்த அந்தஸ்தை இழந்த பிறகு, இப்பொழுது—டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தோடு சென்னை மருத்துவக் கல்லூரியை இணைக்க வேண்டுமென்ற அந்தக் கட்டாயத்திலே நாங்கள் இருக்கிறோம். இன்னும் அந்தப் பணி முடியாமல் இருக்கிறது. அதைச் செய்ய வேண்டிய அவசியம் இப்போது எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் சில உறுப்பினர்கள் பேச வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லியாக வேண்டும். 5 நிமிடத்தில் இது சாத்தியமா என்றுதான் நாங்கள் வியந்து கொண்டிருக்கிறோம். எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லிய பிறகு, மானியக் கோரிக்கை நிறைவேறிய பிறகுதான் ஒத்திவைக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால்

நாளைக்குத் தொடர வேண்டும். இதிலே எதைச் செய்யப் போகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. மாண்புமிகு உறுப்பினரை 6 மணிக்குள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள் என்று சொல்வதற்குப் பதிலாக, 5 நிமிடம் நீட்டிக்கப்படுகிறது என்று சொல்லிவிட்டேன், தவறு.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால், மீண்டும் அதை நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய வாணியம்பாடி பகுதியைச் சேர்ந்த டாக்டர் அக்பர் கௌசர் அவர்கள் யுனானி மருத்துவத் துறையிலே பல சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் ஏற்கெனவே மது அடிமைகளின் மறுவாழ்வு மையத்தை பல ஆண்டுகளாக நடத்திக் கொண்டு வருகிறார். சென்ற அ.தி.மு.க. ஆட்சியிலே 1992, 1993 மற்றும் 1994 ஆம் ஆண்டுகளிலே, மதுவினைத் தொடர்ந்து அருந்துபவர்களை எல்லாம் அந்த நிலையிலிருந்து மீட்பதற்கு, மாவட்ட ஆட்சியர் மூலம் அரசு அவரைப் பயன்படுத்தி, பல பட்டம் படித்தவர்களையெல்லாம் அங்கே அனுப்பி, அதற்காக அவரிடம் பயிற்சிகள் எல்லாம் எடுத்துக்கொண்டார்கள். மது அடிமைகளை மீட்டார்கள். அதேபோல குட்கா, பான் மசாலா போன்றவற்றையெல்லாம் சாப்பிட்டுவிட்டு சமுதாயத்தில் சீரழிந்து போய் இருக்கின்றவர்களைத் திருத்துவதற்கு டாக்டர் அக்பர் கௌசரைப் பயன்படுத்தி மருத்துவமனைகளிலே நீங்கள் ஒரு course எடுக்கலாம் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, யுனானி கல்லூரிக்கு உருது மொழியில் உள்ள யுனானி புத்தகங்களை translation செய்ய அரசு, டாக்டர் அக்பர் கௌசரைப் பணித்தது. அவரும் ஆயிரம் பக்கங்களுக்கு மேலே translation செய்து யுனானி மருத்துவத்திற்கு ஒரு புத்தகத்தைக் கொடுத்திருக்கிறார். அது இன்னும் பரிசீலிக்கப்படாமல் இருக்கிறது. அதைப் பரிசீலித்து அவருக்கு ஒரு அங்கீகாரத்தை வழங்கிட வேண்டுமென்றும், அவர் மொழிபெயர்த்த யுனானி புத்தகத்தை யுனானி கல்லூரிக்குப் பாடமாக வைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல,



"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்.
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்வீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்"

என்று பாடினான் பாரதி. தமிழ் மொழி மட்டும் இனிதானது அல்ல. தமிழ் மருத்துவமும் உண்மையிலேயே இனிதான ஒன்று. யாம் அறிந்த மருத்துவத்திலே தமிழ் மருத்துவத்தைப் போல் உலகத்திலே எந்த மருத்துவமும் இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு அந்த சித்த மருத்துவம் பல நாடுகளில் இப்பொழுது கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிறது. ஆனால், தமிழ் மண்ணில் மட்டும்தான் அதற்குரிய முக்கியத்துவம் இன்னும் கிடைக்காமல் இருந்து கொண்டிருக்கிறது. அதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கின்ற நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், மூலிகையை வளர்க்கின்ற ஒரு உன்னதமான பணியை சிரமேற்கொண்டு, 20 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலங்களை மீண்டும் பயிர் செய்யும் நிலங்களாக, மூலிகைச் செடி வளர்க்கக்கூடிய நிலங்களாக மாற்ற வேண்டுமென்று உறுதி பூண்டிருப்பதற்காக நான் அவரை நெஞ்சாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், பொதுவாக ஆங்கில மருத்துவம் என்பது பொதுவாக, ஒரு மருந்தைக் குடித்து விட்டால், அது யாருக்காவது அலர்ஜியாகி, அதற்கு இன்னொரு மருந்தை, அதாவது மருந்துக்கு மருந்து கொடுக்க வேண்டிய ஒரு நிலை இப்பொழுது. உலகம் தலைகீழாகப் போய் கொண்டிருக்கிறது. ஆனால், சித்த மருத்துவம் அப்படிப்பட்ட பக்க விளைவுகள் - side effects ஏதும் கொடுக்காமல் இருந்து கொண்டிருக்கிற ஒரு நிலையை இந்த உலகம் உணர்ந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, நம்முடைய தமிழ் மண்ணில் பிறந்திருக்கிற ஒரு இளம் விஞ்ஞானி இப்போது நைஜீரியாவிலே ஒரு சாதனையைப் படைத்துக் கொண்டிருக்கிறார்.

*பிற்பகல் 6—05*

இப்போது இருதய நோயானது பல பேருக்கு உலகத்திலே மிகவும் பொதுவாகிவிட்டது. அதாவது நம்முடைய இதயத்தில் இருக்கக்கூடிய, அந்தக் குழாயில் இருக்கக்கூடிய block-களை அறுவை சிகிச்சை இல்லாமல்

அப்புறப்படுத்துவதற்கான வழிவகைகளைக் கண்டுபிடித்து, வெறும் மருந்து, மாத்திரையிலேயே கரைக்க முடியும் என்ற ஒரு சாதனையை தமிழகத்தைச் சேர்ந்த இளம் விஞ்ஞானி படைத்துக் கொண்டிருக்கிறார். அதில் கொலஸ்ட்ரால் இருக்கிறது, அதேபோல block due to Triglyceroids and Platlet adhesiveness என்ற ஒன்று இருக்கிறது. இதுபோன்ற அடைப்பை எல்லாம் அறுவை சிகிச்சை இல்லாமலேயே கரைக்கக்கூடிய ஒரு சாதனையை படைத்து, இங்கே அண்ணா யூனிவர்சிட்டியிலே பி.டெக் முடித்துவிட்டு, பிறகு யு.கே.-வுக்குச் சென்று எம்.டெக். முடித்து, இங்கே இருக்கக்கூடிய மூலிகைகளையெல்லாம் அங்கே கொண்டு போய், அதிலே எந்த மூலிகை மிகச் சிறப்பான ஒரு மூலிகை, அது எந்தப் பகுதி என்பதைக் கண்டறிந்து, ஒரு active medicine ஆக அதை எடுத்துக் கொண்டு இன்று சிறப்பான ஒரு சாதனையைப் படைத்துக் கொண்டிருக்கிற அந்த இளம் விஞ்ஞானி வேறு யாரும் அல்ல, நமக்கு ஒரு உன்னதமான நிதிநிலை அறிக்கையைத் தமிழகத்திற்குத் தந்திருக்கிற நம்முடைய நிதியமைச்சருடைய மகன்தான், கொங்குவேள் மகிழ்நன் (மேசையைத் தட்டும் ஒலி) பற்றி தமிழகத்திலே ஏற்கெனவே ஜூனியர் விகடன் போன்ற பத்திரிகையிலேகூட அவர்கள் தெளிவாக எழுதியிருந்தார்கள். இப்படிப்பட்ட இளம் விஞ்ஞானிகள் இப்பொழுது தமிழகத்திற்குப் பயன்படுவதைவிட, வெளிநாடுகளிலே மிகச் சிறப்பாக அங்கே அவர்கள் பணியாற்றி, இங்கேயிருக்கக்கூடிய மூலிகைகளையெல்லாம் கண்டறிந்து மருத்துவத்தில் ஒரு நல்ல சாதனையை, சரித்திரத்தைப் படைத்துக் கொண்டிருக்கிற நிகழ்வினை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அவருடைய திறமையை நாம் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் புதிதாக வேறொன்றும் கண்டுபிடித்து விடவில்லை.

இங்கிருக்கக்கூடிய பாட்டி வைத்தியத்திலே தொடங்கி, பாட்டி வைத்திய காலத்திலே நெருஞ்சி, மருதமரப்பட்டை, சங்கராந்திப் பூண்டு, அதேபோல கடல் நண்டுகள், மான் கொம்பு ஆகியவற்றிலிருந்து எந்த அளவிற்கு மூலிகையை எடுத்து, ஒன்றாகச் சேர்ந்து அதைக் கொடுத்தால், அந்த இதயத்தில் இருக்கக்கூடிய குழாய்களில் இருக்கக்கூடிய அடைப்புகளை மாத்திரையிலேயே கரைக்க முடியும் என்ற ஒரு சாதனையை அவர் படைத்திருக்கிறார். எப்படி வெள்ளைக்காரன் காலத்திலே இங்கிருக்கக்கூடிய பஞ்சை எடுத்துக்கொண்டு போய் வெளிநாட்டில் நெய்து, இங்கு துணியாகக் கொண்டு வந்து ஒரு கலோனியல் ஆட்சியைப் படைத்தார்களோ, அதேபோல



இங்கிருக்கக்கூடிய மூலிகைகள்தான் அங்கே போய் இப்பொழுது பயோ-மெடிஸன் என்கிற பெயரில் மீண்டும் தமிழகத்திற்கு வந்து பல நூறு கோடிக்கு இப்போது வியாபாரம் ஆகிக் கொண்டிருக்கிறது. அது வெறும் இதய நோய்க்கு மட்டுமல்ல. Breast Cancer இப்பொழுதெல்லாம் quite common ஆகிவிட்டது. அந்த Breast Cancer-ஐ உடனடியாக மாத்திரையிலேயே கரைக்க வேண்டுமென்று சொன்னாலும்கூட, Fibroidinima என்கிற அந்தக் கட்டியைக் கரைப்பதற்கும் மாத்திரையை அந்த இளம் விஞ்ஞானி பயோ-மெடிஸன் மூலமாகக் கண்டுபிடித்திருக்கிறார். அதேபோல, கிட்னியில் இருக்கக்கூடிய ஸ்டோனைக் கரைக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கும் மாத்திரையிலேயே கரைக்க முடியும் என்ற சாதனையைப் படைத்திருக்கிறார்.

அதேபோல, மஞ்சள் காமாலை. கீழாநெல்லி. எங்களுடைய மாவட்டத்தில், வாலாஜாவில் கீழாநெல்லி மருந்தை நிறைய தயாரித்து அதைக் கொடுத்து அந்த மஞ்சள் காமாலை நோயைப் போக்குகிறார்கள். அதை ஒரு கேப்சூலாகக் கொடுத்து நூதன முறையிலே ஆங்கில மருத்துவத்திற்கு இணையாகத் தந்து மஞ்சள் காமாலையைப் போக்குகிற ஒரு தன்மையை அந்த இளம் விஞ்ஞானி படைத்திருப்பதையும் நான் இங்கே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, நந்தியாவட்டைப் பூவை வைத்து மருந்து தயாரித்து, கண் நோய்க்கும் மருந்து கண்டுபிடித்திருக்கிறார். பயோ-மெடிஸன் என்கிற பெயரிலே ஒரு புதிய வடிவில் அது இப்போது தமிழகத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. Psoriasis என்கிற அந்தப் படை நோய்க்கும் வேம்பில் இருக்கக்கூடிய அசாடிடாக்டின் மற்றும் வெப்பாலை போன்றவற்றிலிருந்து மருந்து தயாரித்து டாபர் கம்பெனிக்கு எல்லாம் நூறு கோடி ரூபாய்க்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். நம்முடைய தமிழகத்தில் வேம்புக்குப் பஞ்சமா? அல்லது இங்கு வெப்பாலைக்கு பஞ்சமா? கீழாநெல்லிக்குப் பஞ்சமா? கண்ணுக்கு இன்னும் இளமையாக இருக்க வேண்டுமா? பொதுவாகவே, நூறு ஆண்டு காலம் வாழ வேண்டுமென்ற ஆசை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று சொல்வார்கள். அந்த நோயற்ற வாழ்வோடு நூறு ஆண்டு காலம் வாழ வேண்டுமென்று சொன்னால், அதுவும் இளமைத் துடிப்போடு வாழ வேண்டும். முதியவர்கள் ஆனாலும்கூட முதுமை தட்டாமல் இளமை உணர்வோடு வாழ வேண்டுமென்று சொன்னால், அதற்கும் அந்த இளம் விஞ்ஞானி சில மருந்துகளைக் கண்டுபிடித்து

இருக்கிறார். அதிலே ஆயுளை நீட்டிக்க வேண்டுமென்று சொன்னால், பூனைக்காளி வித்து, நிலப் பனங் கிழங்கு, நீர்முள்ளி வித்து ஆகிய அந்த மருந்துகளை வைத்து அதற்கும் மருந்து கண்டுபிடித்திருக்கிறார். அந்த மருந்துகளை நம்முடைய தமிழ் மாநில காங்கிரஸினுடைய சட்டமன்றத் துணைத் தலைவர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள்கூட, அவ்வையார் எப்படி அதியமானுக்கு நெல்லிக்கனி கொடுத்தார்கள் என்கிற நிகழ்ச்சியை எனக்கு எடுத்துச் சொல்லி, அதைச் சொல்லியாக வேண்டுமென்று எனக்குப் பணித்திருக்கிறார். நெல்லிக்கனியில் "C" வைட்டமின் உள்ளது. நெல்லிக்கனியில் anti oxidant அதிகம் உள்ளது. அதில் உள்ள free radicals இளமையை எப்படிக் காப்பாற்றுகிறது என்கிற அந்தத் தன்மையைக் கண்டுபிடித்து, மருந்து தயாரித்து அந்த இளம் விஞ்ஞானி இளமையோடு விளங்க பயோ-மெடிஸனை இந்தியாவுக்கு சப்ளை செய்கிறார்.

*பிற்பகல் 6—10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஞானசேகரன் அவர்கள் சிறந்த வழக்கறிஞர் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அவர் எப்போது இந்த சித்த வைத்தியம் படிக்க ஆரம்பித்தார், எப்போது சித்த வைத்தியம் படித்து முடித்தார் என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது நமக்கு இந்த மானியக் கோரிக்கையை வழங்கிய சிறந்த வழக்கறிஞரான மாண்புமிகு செம்மலை அவர்களுடைய மகன் ஆங்கில மருத்துவத்தில்தான் படித்துக் கொண்டிருக்கிறார். என்னுடைய மகனும் இப்பொழுது சென்னை மெடிக்கல் காலேஜில்தான் மூன்றாம் ஆண்டு படித்துக்கொண்டிருக்கிறார் இருந்தாலும்கூட, நாங்கள் தமிழ் வைத்தியமான இந்த சித்த மருத்துவத்தில் எந்தவிதமான side effect-ம் இல்லை. உலகமே இன்று ஆங்கில மருத்துவத்தை உதறித் தள்ளிவிட்டு தமிழ் மருத்துவத்திற்குத் தாவிக் கொண்டிருக்கிற சூழ்நிலையை உணர்ந்துதான் இந்தத் தமிழ் மருத்துவ முறை மீண்டும் தலையெடுக்க வேண்டும், இந்த முதலமைச்சருடைய காலத்தில் மீண்டும் அது புனர்வாழ்வு பெற்று, தமிழகம் மட்டுமல்ல, உலகம் முழுமையிலும் இந்தத் தமிழ் மருந்து கொடி கட்டிப் பறந்து, எப்படி தமிழ் மொழி பரவ தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று நாம் நினைக்கிறோமோ, அதேபோல இந்த சித்த மருத்துவ முறையும்



உலகமெல்லாம் சென்று பரவ வேண்டும். ஏனென்றால் இங்கு இருக்கக்கூடிய அந்த மூலிகைகள்தான் இப்பொழுது நூறு கோடிகளுக்கு சாறுகளாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கர்நாடகாகூட இப்பொழுது மூலிகைச் சாறை ஏற்றுமதி செய்கிறார்கள்.

இதையெல்லாம் உணர்ந்துதான் நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் 20 இலட்சம் ஹெக்டேரிலே மூலிகையை - நிச்சயமாக அதிலே ஒரே கல்லிலே இரண்டு மாங்காய் நாம் அடிக்கப் போகிறோம் - மூலிகையும் நாம் வளர்க்கப் போகிறோம், நம்முடைய காட்டிலாக்காவினுடைய கொள்கையான இந்தியாவில் 33% நிலப்பரப்பு காடாக மீண்டும் என்று மாறுகிறதோ, அப்பொழுதுதான் நமக்கு மழை பொழியும், சுபிட்சம் கிட்டும் என்ற நிலையை உணர்ந்து இருக்கின்ற முதலமைச்சர் அவர்கள் தமிழ் மருத்துவ முறைக்கு நிச்சயமாக ஒரு நல்ல வாழ்வினை அளிப்பதற்காக முனைந்திருப்பதற்காக நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நைஜீரியா நாட்டில் அந்த மெஷின்ஸ் எல்லாம் போடவேண்டும் என்றால், 3 கோடியிலிருந்து 60 கோடி ரூபாய் வரை செலவு செய்து அந்த மெஷின்ஸை போடுகிறார்கள். ஏனென்றால், இந்த இதய நோயானாலும் சரி, Breast Cancer நோயானாலும்சரி, மஞ்சள் காமாலை நோயாக இருந்தாலும், இதற்கெல்லாம் நம்முடைய தமிழகத்திலே அதுபோன்ற இயந்திரங்களைப் பயன்படுத்தி அந்த இளம் விஞ்ஞானியினுடைய அத்துணை திறனையும், ஆற்றலையும் பயன்படுத்தி இந்தத் தமிழ் மருந்துகளுடைய பெருமையை நாம் மீட்பதற்கு நம்மாலான முழு முயற்சியை நாம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மருத்துவ சேவைக் கழகத்திலே 96 பேர் - அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 1992-93-லே ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்டு அதிலே - 96 பேர் பணிக்குச் சேர்ந்தார்கள். ஆனால் திராவிட முன்னேற்ற கழக ஆட்சியிலே அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றும்கூட அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். அவர்கள் மீண்டும் பணிக்கு வரவேண்டுமென்று முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் பணியைக் கொடுத்து, அவர்களுக்கும் நல்வாழ்வை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் உறுப்பினர் சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் தொகுதியில் ஒரு பிரச்சினை. இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய கடலாடி தொகுதியிலே

இயங்கி வரும் நரிப்பையூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு கட்டடம் கட்டித்தர வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் இங்கே வைக்கிறார்கள். அதேபோல, கடலாடி தொகுதியிலே ஆப்பனூர் என்ற பகுதியில் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் வைக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்தில் அலமேலுரங்காபுரம் என்கிற இடத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை 10 ஆண்டுகளாக வைத்து வருகிறேன். அதேபோல, ஆலங்காயம் பஞ்சாயத்தில் இருக்கக்கூடிய வெள்ளக்குட்டை என்ற கிராமத்திலும் ஒரு Primary Health Centre வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன். அதையும் நிறைவேற்றிக் கொடுத்து மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் எங்களுக்கும் நல்வாழ்வை அளிக்க வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பல்வேறு கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் இந்த மானியக் கோரிக்கைகளின்மீது தங்களுடைய கருத்துகளை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6—15*

இன்றைக்குப் பேசுவதற்கு வாய்ப்பு இல்லையென்று சொன்னாலும், நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் சோ. பாலகிருஷ்ணன், மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம், மாண்புமிகு உறுப்பினர் பி.ஆர். சுந்தரம், மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் லட்சுமணன், மாண்புமிகு உறுப்பினர் லத்தீப், மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன், மாண்புமிகு உறுப்பினர் மணி போன்றவர்கள் எல்லாம் இங்கே தங்களுடைய கோரிக்கைகளை எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல, இந்த மாமன்றத்திலே இருக்கிற, எதிர்க்கட்சியிலே இருக்கிற உறுப்பினர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வெட்டுத் தீர்மானங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்கெல்லாம் தகுந்த பதிலை துறை தயாரித்து வைத்திருக்கிறது. எனவே, அந்த வகையிலே அவர்களுடைய கோரிக்கைகளும் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்ற அந்தத் தகவலை



இந்தச் சந்தர்ப்பத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தத் துறையைப் பொறுத்தவரையில் நல்ல ஆலோசனைகளைச் சொல்லி இருப்பதற்கு நான் முதலிலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆட்சி எதைச் செய்தாலும், இன்னும் சொல்லப் போனால், நம்முடைய இதய தெய்வம், தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மக்களுக்கென்று எந்த நல்ல திட்டத்தைக் கொண்டு வந்தாலும் அதை எதிர்த்தே பழக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் பிச்சாண்டிகூட எந்தக் குறைபாட்டையோ அல்லது குற்றம், குறைகளையோ இந்தத் துறையிலே சொல்லாமல், ஏதோ தங்களது ஆட்சியிலே செய்ய முடியாத காரியங்களை இந்த ஆட்சியிலாவது செய்ய வேண்டும் என்கிற அந்தத் தொனியிலே பேசியிருக்கிறார். இருந்தாலும் போகிற போக்கிலே ஒரு கருத்தைச் சொல்லுகிற வகையில், அவர் இங்கே சொல்லுகிறபோது, மருத்துவத் துறைக்கு அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ஒதுக்கிய நிதியைவிடக் குறைவான சதவீதத்திலே நிதி ஒதுக்கப்பட்டு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். அதைச் சொல்லிவிட்டு அவர் சொன்னார், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசுக்கு மக்கள் நல்வாழ்வுத் துறையின்மீது அக்கறை இல்லையோ என்ற பொருள்படும்படி பேசியதாலே ஒரு விளக்கத்தைச் சொல்லுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, சென்ற ஆண்டு மொத்த வருவாய்க் கணக்கில், அந்த மொத்த மதிப்பீட்டில் 5.86 சதவீதம் ஒதுக்கியதாகவும், இந்த ஆண்டு 5.44 சதவீதம்தான் ஒதுக்கப்பட்டு இருப்பதாகவும் இங்கே சொன்னார்கள். ஆனால் ஒதுக்கப்பட்ட தொகை என்று பார்க்கிறபொழுது 72 கோடி ரூபாய் அதிகமாக நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் துறைக்கு ஒதுக்கியிருக்கிறார் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்காக நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதைப்போல, Part-II Scheme-லே எடுத்துக்கொண்டால், இந்த ஆண்டு நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எங்கள்

துறை சார்பிலே நாங்கள் வைத்த 53 கோரிக்கைகளில் ஒரு கோரிக்கையைக்கூட மறுக்காமல், ஒரு கோரிக்கையைக்கூட நிராகரிக்காமல், அந்த 53 திட்டங்களுக்கான ரூபாய் 10.50 கோடி பணத்தை முழுவதுமாகவே ஒதுக்கிவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் சென்ற ஆண்டு அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே பார்ப்பீர்களேயானால், வெறும் 5.33 கோடி ரூபாய் மட்டும்தான் Part-II Scheme என்ற வகையிலே ஒதுக்கப்பட்டு இருந்தது. அந்த வகையிலே 5 கோடி ரூபாய் அதிகமாக நிதி ஒதுக்கம் செய்திருப்பதற்கு நான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே சொன்னதைப்போல, சென்ற ஆட்சியாளர் கஜானாவைக் காலி செய்துவிட்டதாலே நிதி ஒதுக்கம் இங்கே செய்யப்படவில்லை, செய்ய முடியவில்லை என்று சொன்னாலும், முடிந்த அளவிற்கு ஒவ்வொரு துறைக்கும் தேவையான அளவிற்கு நிதியை ஒதுக்கி, வேறு வகையிலே நிதி ஆதாரங்களைத் திரட்டுகிற வகையிலே புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு தீவிரமான நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்ற வகையில் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு மட்டும் இன்றைக்கு ஃபின்லாந்து நாட்டிலே இருந்து 'தெர்மோ பிராஜெக்ட் 00' என்ற நிறுவனத்தோடு நம்முடைய அரசாங்கம் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து 86 கோடி ரூபாயைப் பெற்றிருக்கிற அந்த நல்ல செய்தியை நீங்கள் பத்திரிகையிலே பார்த்து இருப்பீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த 86 கோடி ரூபாய் நமக்குக் கிடைக்கும் பட்சத்தில் தமிழ்நாட்டில் இருக்கிற மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு உயிர் காக்கும் நவீனக் கருவிகளை வாங்குவதற்கு முழுத் தொகையும் பயன்படும் என்கிற நல்ல செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6-20*

அதைப்போலவே, தமிழ்நாடு மருத்துவத் துறை மேம்பாட்டுத் திட்டம் என்ற வகையில் தமிழ்நாட்டிலே இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்கள், தாலுகா மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள் என்று 3 அடுக்கு மருத்துவமனைகள் அனைத்தையும் தரம் உயர்த்தத் தேவையான வசதி வாய்ப்புகளை செய்துகொள்ள, நவீனக் கருவிகளை வாங்க 650 கோடி ரூபாய் திட்டத்தைத் தயாரித்து நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசுக்கு அனுப்பி, மத்திய அரசு இதற்கு ஒப்புதல் தந்து, இப்பொழுது உலக வங்கியிடம் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறது. அந்தத் தொகை நிச்சயமாகக் கிடைத்துவிடும். அப்படிக் கிடைக்கிற பட்சத்திலே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அத்துணை பேரும் சொன்னபடி,



அடிப்படையிலே இருக்கிற, கிராம மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்கள், தாலுகா மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள் அத்துணைக்கும் நீங்கள் கேட்கிற அளவுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான நடவடிக்கையாக, புரட்சித் தலைவி அவர்கள் 650 கோடி ரூபாய் திட்டத்தைத் தயார் செய்து உலக வங்கியினுடைய ஒப்புதலுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, நம்முடைய தாம்பரம் நெஞ்சக மருத்துவமனைபற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துகளைச் சொன்னார்கள். அந்த மருத்துவமனையில்தான், எச்.ஐ.வி. பாசிட்டிவ், எய்ட்ஸ் போன்ற வியாதிகளுக்கு சிறந்த மருத்துவம், சித்த மருத்துவம் செய்து வருகிறார்கள். எனவே, அந்த மருத்துவமனையைத் தரம் உயர்த்த வேண்டும் என்பதற்காக அட்லாண்டா நாட்டிலே உள்ள C.D.C. - Center for Disease Control-ல் இருந்து 47 கோடி ரூபாயைத் தருவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அந்தப் பணத்தைப் பெற்று அந்த மருத்துவமனையின் தரம் உயர்த்தப்படும் என்கிற நல்ல செய்தியையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோதும், வெட்டுத் தீர்மானங்கள் மூலமாகவும் சொல்லி இருப்பது, எங்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்துக் கொடுங்கள்; மருத்துவமனைகளை ஏற்படுத்திக் கொடுங்கள், இருக்கிற மருத்துவமனைகளுக்குக் கூடுதல் வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுங்கள்; டாக்டர்களை நியமியுங்கள், செவிலியர்களை நியமியுங்கள், பணியாளர்களை நியமியுங்கள் என்றுதான் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். அதேபோல மருந்தாளுநர்கள், டிரைவர்கள், டெக்னீஷியன்கள் போன்ற பதவிகளை எல்லாம் நிரப்ப வேண்டும் என்று சொல்லி இருக்கிறீர்கள். கூடுதலாகப் படுக்கை வசதிகள் செய்து தரக் கேட்டு இருக்கிறீர்கள். நவீனக் கருவிகள் வாங்கப்பட வேண்டுமென்று சொல்லி இருக்கிறீர்கள். எனவே, இதற்கெல்லாம்தான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இத்தகைய திட்டங்களைத் தீட்டி இருக்கிறார்கள் என்கிற அந்த ஒரு நிலைமையை மட்டும் இப்போது நான் இங்கே எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று சொல்லுவார்கள்; 'நோய்க்கு இடங்கொடேல்' என்று சொல்லுவார்கள். இதெல்லாம் ஆயிரம்,

ஆயிரம் ஆண்டு காலமாக நம்முடைய நாட்டிலே இருக்கிற பழமொழி. இருந்தாலும் இன்றைக்கு இருக்கிற நிலைமையில், கிராமத்திலே வாழுகிற ஒரு சராசரி மனிதனுக்கு இந்த நல்வாழ்வு, சுகாதார வாழ்வு கிடைத்து இருக்கிறதா என்பதுதான் நமக்கு இருக்கிற கேள்வி. சோவியத் நாட்டினுடைய ஜனாதிபதியாக இருந்த லெனின் அவர்கள் ஒரு முறை அவர் உடல்நலக் குறைவால் படுத்த படுக்கையாக இருந்தபோது, அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் எல்லாம் இங்கே சோவியத் நாட்டிலே இதற்கான மருந்து இல்லை. ஐரோப்பிய நாடுகளிலே இருந்துதான், அந்த மருந்தைத் தருவித்து இந்த உயிரைக் காப்பாற்ற முடியும் என்று அவர்கள் சொன்ன நேரத்தில், லெனின் அவர்கள் சொன்னதாகச் சொல்வார்கள். ஏராளமான செலவு செய்து வெளிநாட்டிலேயிருந்து தருவித்துத் தரும் மருந்து, சோவியத் நாட்டின் சாதாரணக் குடிமகனுக்கு, அவன் நோய்வாய்ப்பட்டிருக்கிறபோது கிடைக்கிறது என்றால்தான், நான் அந்த மருந்தை ஏற்றுக்கொள்வேன்; அப்படிப்பட்ட மருந்து என்னுடைய நாட்டுக் குடிமகனுக்கு இல்லை என்று சொல்கிறபோது, அது எனக்குத் தேவையில்லை என்று மறுத்துவிட்டதாகச் சொல்வார்கள். இருந்தாலும், ஒரு சிறந்த உலகத் தலைவரைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக மருத்துவர்கள் வெளிநாட்டிலேயிருந்து தருவித்து, அவருடைய மனைவியிடம் மறைமுகமாகக் கொடுத்து, அவர் சாப்பிடுகிற ரொட்டியிலே அந்த மருந்தை வைத்துக் கொடுத்து, அவருடைய உயிரைக் காப்பாற்றியதாகச் சொல்வார்கள்.

பிறபகல் 6—25

அதேபோல, நம்முடைய மகாத்மா காந்தியடிகளுடைய துணைவியார் கஸ்தூரிபாய் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தபோது, அவருடைய உயிரைக் காப்பதற்கும், இங்கிலாந்து அல்லது அமெரிக்கா நாட்டிலே இருந்துதான் மருந்து வரவேண்டும் என்று சொன்ன நேரத்திலே, காந்தியடிகள் சொன்னாராம்: 'அந்த மருந்து இந்தியாவில், கிராமத்தில் உள்ள சாதாரண மனிதனுக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னால், இந்த காந்தியினுடைய துணைவியார் என்பதற்காக என்னுடைய மனைவி உயிர் வாழ வேண்டிய அவசியமில்லை' என்று சொல்லி, அந்த மருந்தை நிராகரித்தார் என்று சொல்வார்கள். இதையெல்லாம் நான் எதற்காகக் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னால், அந்த உலகத் தலைவர்கள், அந்த உத்தமத் தலைவர்கள் எல்லாம் சொன்னதன் அர்த்தம், அவர்களுடைய சிந்தனையின் பொருள், சாதாரண ஏழைகளுக்கும் மருத்துவ வசதி கிடைக்க வேண்டும் என்பதுதான். எனவேதான், இன்றைக்கு அந்த உத்தமத் தலைவர்கள், அந்த உலகத் தலைவர்களுடைய



சிந்தனைக்குச் செயல் வடிவம் கொடுக்கிற வகையில், இந்த மானியக் கோரிக்கைகளை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நமக்குத் தந்திருக்கிறார்கள். கிராம மக்களையும், ஏழையெளிய, குடிசைவாழ் மக்களையும் நினைத்துக் கொண்டிருக்கிற காரணத்தினால்தான், இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில், ஏழையெளியவர்களுக்கு நலம் பயக்கின்ற நல்ல திட்டங்களை நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இங்கே தந்திருக்கிறார்கள்.

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்று சொல்வதைப்போல, ஒன்றிரண்டை மட்டும் இங்கே கோடிட்டுக் காட்டுவது சிறப்பாக இருக்குமென்று கருதுகிறேன். கிராமப்புற மக்களுக்கென்றே உருவாக்கப்பட்ட அனைத்துப் பிரதான ஆரம்ப சுகாதார நிலையங்களை, தாலுகா மருத்துவமனைக்கு ஈடாகத் தரம் உயர்த்தி, அதை மருத்துவமனைகளாக ஆக்குகின்ற ஒரு நல்ல திட்டத்தை நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இங்கே நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின்படி, இப்போது இருக்கிற சாதாரண சுகாதார நிலையங்கள், தாலுகா மருத்துவமனைகளில் என்னென்ன வசதிகள் இருக்கின்றனவோ, அந்த வசதிகளையெல்லாம் பெற இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். அந்த வகையிலே அப்படிப்பட்ட நிலைமை வருகிறபோது, என்னென்ன வசதிகள் கிடைக்க இருக்கின்றன என்பதை இங்கே நான் சொல்லியாக வேண்டும்.

ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மூன்று மருத்துவர்கள்தான் நியமனம் செய்யப்படுகிறார்கள். அதுவும் இப்போது இல்லை. இங்கே உறுப்பினர்கள் எல்லாம் பேசும்போது, ஒரு டாக்டர் இருக்கிறார்; பெண் டாக்டர் இல்லை, இரண்டு பேர் இருந்தால், ஒருவர் இல்லை என்று சொன்னார்கள். ஆனால், ஒரு ஆரம்ப சுகாதார மருத்துவமனைக்கு இருக்கவேண்டிய மருத்துவர்கள் மூன்று மருத்துவர்கள் இருக்க வேண்டும். ஆனால், இப்போது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய இந்த அறிவிப்பின் காரணமாக, அந்த மூன்று மருத்துவர்களோடு, இன்னும் இரண்டு Specialist Doctors அங்கே நியமிக்கப்பட இருக்கிறார்கள்.

Staff Nurses என்கிற செவிலியர்கள் எல்லாம் ஆரம்ப சுகாதார நிலையத்திலே இல்லவே இல்லை. ஆனால், இப்போது இரண்டு செவிலியர்களை அந்தப் பணியிலே நியமிக்க இருக்கிறார்கள். ஒரு Pharmacist நியமிக்கப்பட இருக்கிறார். ஆறு படுக்கைகள்தான் ஓர் ஆரம்ப

சுகாதார நிலையத்திற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் திட்டத்தின் மூலம் 30 படுக்கைகள் அங்கே அமைக்கப்பட இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு ஓர் அறுவை சிகிச்சை நிலையம்—Operation Theatre அங்கே இருக்கும். அதுவும் A.C. செய்யப்படும். அதைப்போல, ஒரு X-Ray Machine இருக்கும். அதை இயக்குவதற்கு ஒரு Radiographer இருப்பார். ஆம்புலன்ஸ் ஒன்று இருக்கும். அந்த ஆம்புலன்ஸ் மூலம் Blood Transmission Facilities கிடைக்கும். Operation-க்குத் தேவை என்று சொன்னால்கூட, அங்கே இரத்த வங்கி இல்லை என்று சொன்னால்கூட, பக்கத்திலே இருக்கிற தாலுகா அல்லது மாவட்ட மருத்துவமனையிலே இருந்து உடனடியாக இரத்தம் கொண்டு வருவதற்கான Ambulance facility-யுடன், Blood Transmission Facility-க்கும் அங்கே வசதி செய்து கொடுக்கப்படும். இப்போது ஆரம்ப சுகாதார நிலையம் என்று சொன்னால், அங்கே வருகிற புறநோயாளிகளுடைய கணக்கைக் கொண்டுதான், மருந்து வழங்கப்படுகிறது. மருந்து கொடுக்கிறோம். அந்த வகையிலே, புறநோயாளிகளுடைய கணக்கீட்டின்படி தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம் ஒவ்வோர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் 60 ஆயிரம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாய் வரைக்கும்தான் மருந்துகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செய்த அறிவிப்பின்படி, மேலும் ஒரு இலட்சம் ரூபாய்க்குக் கூடுதலாக மருந்துகள் வழங்கப்பட இருக்கின்றன என்கின்ற அந்த நல்ல செய்தியையும் இந்த நேரத்திலே நான் தெரிவிப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட ஒரு நிலைமை உருவாகுமேயானால் கிராமப்புறத்திலே இருக்கிற மக்கள் தாலுகா மருத்துவமனைக்கோ அல்லது மாவட்ட மருத்துவமனைக்கோ போக வேண்டிய நிலைமை நிச்சயமாக இருக்காது. அங்கேயே வைத்தியம் பார்க்கிற ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படும் என்கிற அந்த நல்ல செய்தியை நர்ன் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6—30

புரட்சித் தலைவி அவர்கள் இன்னொரு நல்ல அறிவிப்பையும் கொடுத்திருக்கிறார்கள். மலைவாழ் மக்கள், வயோதிகர்கள் இவர்களுக்கெல்லாம் மருத்துவ வசதி கிடைக்க வேண்டுமென்று சொன்னால், அவர்கள் பாவம்; ஆஸ்பத்திரியைத் தேடித்தான் செல்ல வேண்டும். ஆனால், இப்போது நம்முடைய இதய தெய்வம் டாக்டர்



புரட்சித் தலைவி அவர்கள் செய்த அறிவிப்பின்படி, அவர்கள் மருத்துவமனையை நாடி வந்து மருத்துவ சிகிச்சை பெறும் நிலையை மாற்றி, மருத்துவமனையே அவர்களைத் தேடிச் சென்று அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கிற ஓர் உன்னதமான (மேசையைத் தட்டும் ஒலி) திட்டத்தை இங்கே அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின்படி, ஆம்புலன்ஸ்கள் வாங்கப்பட இருக்கின்றன. அந்தத் திட்டம் முதலிலே மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு, மருத்துவ வசதியே இல்லாத கிராமப்புறப் பகுதிகளுக்குப் பயன்படுத்தப்படும் என்கிற அந்த நல்ல செய்தியையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

அதைப்போலவே, இன்னொரு திட்டம். யாருடைய மனதிலேயும் உதிக்க முடியாத திட்டம். நாம் கிராமம் என்று பேசுகிறோம், நகரம் என்று பேசுகிறோம். ஆனால் அதற்கு இடையிலே ஒரு பள்ளம் இருக்கிறது. அது என்ன என்று சொன்னால், நகர்ப்புறப் பகுதியிலே இருக்கிற Slums - குடிசைப் பகுதிகள். அவர்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று இதுவரை எந்த ஆட்சியாளரும் சிந்தித்தது கிடையாது. ஆனால் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்த ஏற்றத்தாழ்வைப் போக்க வேண்டும் என்பதற்காக அந்தக் குடிசைவாழ் மக்களின் நலனுக்காக நகர்ப்புற சுகாதாரத் திட்டம் என்ற ஓர் அற்புதமான திட்டத்தை இங்கே அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது விரைவிலே செயல்படுத்தப்பட இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எப்போதுமே அரைத்த மாவையே அரைத்துக் கொண்டு இருப்பதைவிட, ஏதாவது புரட்சிகரமான புதிய திட்டத்தை அறிவிக்க வேண்டும் என்பதற்காக ஒரு நல்ல திட்டத்தை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதாவது, இதற்கு முன்னாலே புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் Medical Camps எல்லாம் நடத்தப்பட்டன. பள்ளி மாணவர்களுக்காக, கிராமப்புற மாணவர்களுக்காக நடத்தப்பட்டன. அதனால் இலட்சக்கணக்கான பேர் பயனடைந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஏதோ 'பழைய மொந்தையிலே புதிய கள்' ஊற்றுவதைப் போல புரட்சித் தலைவி அவர்கள் நடைமுறைப்படுத்திய திட்டத்தையே மாற்றி 'வருமுன் காப்போம் திட்டம்', 'வாழ்வொளித் திட்டம்' என்றெல்லாம் சொல்லி, திட்டங்களை அரைகுறையாகக் கொண்டுவந்து செயல்படுத்த முடியாமல் திணறிக் கொண்டிருந்த காட்சியெல்லாம் நமக்கு நன்றாகத் தெரியும். காரணம், 'வருமுன் காப்போம்'

என்கின்ற அந்தத் திட்டத்திலே அவர்கள் என்ன செய்தார்கள் என்று சொன்னால், ஆரம்ப சுகாதார நிலையங்களிலே இருக்கிற டாக்டர்களைக் கிராமத்திற்கு அனுப்பிவிடுவார்கள். அங்கே ஆரம்ப சுகாதார நிலையத்திலே டாக்டர்களோ, பணியாளர்களோ இருக்கமாட்டார்கள். அங்கேயுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் போகிற மருத்துவர்கள், அங்கு வருகின்ற நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது கிடையாது. அப்படி அங்கே போனாலும், அங்கே என்ன செய்கிறார்கள் என்றால், 10 கோடி ரூபாய் ஒதுக்கினாலும், செலவு செய்ததாகக் கணக்குக் காட்டப்பட்டாலும், ஆரம்ப சுகாதார நிலையத்திலே இருக்கிற அந்த மருந்துகளைத்தான் அங்கே கொண்டுபோய்க் கொடுத்தார்கள். பிறகு அங்கே கண்டுபிடிக்கப்பட்ட, குணப்படுத்த முடியாத வியாதிகளுக்கு ஏதாவது மாற்று ஏற்பாடுகள் செய்தார்களா என்று சொன்னால் அதையும் அவர்கள் செய்யவில்லை. எனவே, இந்தத் திட்டம் தோல்வி அடைந்த ஒரு திட்டமாகப் போய்விட்டது. எனவே, இந்தத் திட்டத்திற்கு மாற்றாக, மாற்று என்றுகூடச் சொல்லமாட்டேன், ஏற்கெனவே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிமுகப்படுத்திய அந்தத் திட்டத்தினுடைய விரிவாக்கமாக, கிராமப்புற மக்களுக்கு உயர்தர சிகிச்சை அளிக்கும் வகையில், இப்போது ஓர் அற்புதமான திட்டத்தை அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கிராமத்திலே புற்றுநோய் வருகிறது, சர்க்கரை நோய் வருகிறது. அதேபோல, இரத்த அழுத்த நோய் - Hyper Tension- அதிகமான பேர்களுக்கு வருகிறது. Geriatric - வயது முதிர்ச்சியினால் ஏற்படுகிற நோய் எல்லாம் இருக்கிறது என்று இங்கே பேசினார்கள். அப்படிப்பட்ட வியாதிகளுக்கு கிராமப்புறத்திலே மருந்தே கிடையாது. அவர்கள் அதற்கான சிகிச்சை பெற வேண்டுமென்றால், மாவட்ட மருத்துவமனைக்குத்தான் செல்ல வேண்டும்.

*பிற்பகல் 6—35*

எனவே, அங்கேயே அந்த வசதியைச் செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தை மாற்றி, ஏற்கெனவே புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்த திட்டத்தின் விரிவாக்கமாக, Speciality Camps— சிறப்பு மருத்துவ முகாம்கள் என்ற பெயரிலே கிராமப்புற மக்களுக்கு உயர்தர சிகிச்சை அளிக்கின்ற வகையில், குறிப்பாக, புற்றுநோயைக் கண்டறியவும், சர்க்கரை நோயைக் கண்டறியவும், இரத்த அழுத்த நோயைக் கண்டறியவும், வயது முதிர்ச்சியால் ஏற்படுகின்ற நோயைக் கண்டறியவும், கிராமப் பகுதிகளில் Specialist Doctors-ஐ அனுப்பி நோயைக் கண்டறிந்து, அவர்களை வைத்தியத்திற்காக மாவட்ட



மருத்துவமனைக்கு அனுப்பி அவர்களுக்கு வைத்தியம் செய்ய, நோயைக் கண்டுபிடிக்க—காரணம், அவர்களுக்கு, கிராமத்தில் இருக்கிறவர்களுக்கு என்ன வியாதி என்றே யாருக்கும் தெரியாது. எப்படிப்பட்ட வியாதி தங்களுக்கு வந்திருக்கிறது; எந்த வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்று அவர்களுக்குத் தெரியாது. எனவே, அப்படிப்பட்டவர்களைக் கண்டறிந்து-அவர்களுடைய சிகிச்சைக்காக மாவட்ட மருத்துவமனைக்கு அல்லது தாலுகா மருத்துவமனைக்கு அவர்களை refer செய்கிற வகையிலே இந்த Speciality Camps என்கிற அந்த சிறப்பு மருத்துவ முகாம்களை இப்போது ஏற்படுத்துவதற்கு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் காலையிலே சொன்னதைப்போல, இதைவிட மிகப் பெரிய, வரவேற்கக்கூடிய ஒரு திட்டம். கிராமப்புறங்களிலே டாக்டர்கள் எல்லாம் அதிகமாக இல்லை. நியமிக்கப்படுகிற டாக்டர்கள்கூட போகமாட்டேன் என்று சொல்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் ராஜு போன்றவர்கள்கூட இங்கே சொன்னார்கள். அதற்குக் காரணம், படித்தவர்கள் எல்லாம் நகரங்களிலே இருக்கிற மாணவர்களாகவே படித்து விட்டதாலே அவர்கள் கிராமங்களிலே சென்று பணியாற்றுவதற்குத் தயாராக இல்லை. அதை மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மருத்துவக் கல்லூரியிலே சேருகிறபோதேகூட, என்னுடைய நினைவு சரியாக இருக்குமேயானால், நம்முடைய தலைவர் காமராஜர் அவர்கள் ஒரு திட்டத்தை அப்போது கொண்டு வந்தார்கள். மாவட்ட வாரியாக ஒதுக்கீடு வைத்திருந்தார் என்று கருதுகிறேன். ஆனால், அது பின்னர் உச்ச நீதிமன்றத்திலே ரத்து செய்யப்பட்டு விட்டது. எனவே, அதற்குப் பிறகு யாரும் அதிலே அக்கறை எடுத்துக்கொள்ளாமல் இருந்த காரணத்தினாலே நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இப்போது 25 சதவிகித ஒதுக்கீட்டை கிராமப் பகுதிக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, 25 சதவிகிதத்தைக் கிராமப்புறத்திற்குக் கொடுத்ததன் காரணமாக (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தனி ஒதுக்கீட்டில் மட்டும்-நான் மற்றபடி, பி.சி., ஓ.சி., அதற்குப் போகவில்லை-கிராமப்புற 25 சதவிகித ஒதுக்கீட்டில் மட்டும் பிற்படுத்தப்பட்டோர் பெற்ற இடம் 70; மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பெற்ற இடம் 46; தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பெற்ற இடம் 42; அதுபோல எஸ்.டி. - மலைவாழ் மக்கள் பெற்ற இடம் 2. ஆக, 160 இடங்கள் கிராமப்புற, மலைவாழ் மக்களுக்கு இடம் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை இப்போது நம்முடைய இதய தெய்வம்

டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு கிராமப்புற மாணவர்களுக்காக 25 சதவிகிதம் ஒதுக்கியது என்பது வரவேற்கக்கூடிய ஒன்று. இந்த 25 சதவிகிதம் அளவிற்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார்களா; மாணவர்கள் கிடைத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் படித்த இந்தப் புள்ளிவிவரத்தின்படி மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இதை நான் கண்கூடாகக் கண்டேன். நம்முடைய சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதிக்கு நான் ஒரு விழாவிற்குச் சென்றிருந்தபோது, அந்த மாணவர்கள் என்னிடம் கோரிக்கையாக வைத்தது, எங்களுடைய விடுதிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட வேண்டும் என்பதாகும். நான் அப்போது, இருக்கிற விடுதியே போதாதா, எதற்குக் கூடுதல் கட்டடம் என்று கேட்டபோது சொன்னார்கள்: புரட்சித் தலைவி அவர்கள் இந்த 25 சதவிகித ஒதுக்கீட்டைக் கொடுத்ததன் காரணமாக வெளியூரிலிருந்து, கிராமப்புறத்திலிருந்து, குக்கிராமங்களிலிருந்து சென்னை மருத்துவக் கல்லூரிக்கு மட்டும் கிட்டத்தட்ட 60 பேர்களுக்கு மேல் இடம் கிடைத்திருக்கிறது; இங்கே வந்திருக்கிறார்கள். எனவே, இட நெருக்கடி ஏற்பட்டதன் காரணமாக எங்களுக்கு விடுதிக்குக் கூடுதல் கட்டடம் வேண்டும் என்று கேட்டார்கள். அதையும் வைத்துச் சொல்கிறேன், நான் சொன்ன புள்ளிவிவரங்களின் அடிப்படையில் அந்த மாணவர் இடங்கள் நிரப்பப்பட்டு விட்டன என்பதை மாண்புமிகு உறுப்பினர், பெரியவர் பாலகிருஷ்ணன் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அந்த வகையிலே, புரட்சித் தலைவி அவர்கள் எல்லாத் துறைகளின்மீதும் அக்கறை செலுத்தி வந்தாலும், மக்கள் நல்வாழ்வுத் துறையின்மீது அதிக அக்கறை செலுத்தி வருகிறார்கள் என்று நான் சொல்வதற்குக் காரணம், இங்கே நான் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டதைப்போல, 'ஆரோக்கியமான நல்வாழ்வே ஒரு நாட்டின் வலிமைக்கும், மக்களின் மகிழ்ச்சிக்கும் அடித்தளமாகும்' என்ற அந்த அடிப்படையில் இந்தத் துறை முன்னேறினால், நாட்டினுடைய வளர்ச்சியும் முன்னேறும் என்கிற அந்த அடிப்படையில்தான் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். அதற்கு ஒரேயொரு உதாரணத்தை மட்டும் நான் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.



பிற்பகல் 6-40

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு இங்கே நடந்தது. இரண்டு நாட்கள் அந்த மாநாடு நடத்தப்பட்டது. அந்த மாநாட்டிலே பல்வேறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள், குறிப்பாக, தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர், இவர்களெல்லாம் மருத்துவமனையிலே மருத்துவர்களே இல்லை என்ற ஒரு மிகப் பெரிய குறைபாட்டைச் சொன்னார்கள். உடனே புரட்சித் தலைவி அவர்கள், டாக்டர்கள் இல்லை என்று சொல்கிறார்களே, ஏன் என்று என்னிடம்கூடக் கேட்டார்கள். அப்படிக் கேட்டதற்கு, புரட்சித் தலைவி அவர்களிடம் நான் சொன்னேன், சில டாக்டர்களை நாங்கள் நியமித்தோம், ஆனால் அதுபோன்ற கிராமப் பகுதிக்கு, மலைப் பகுதிக்கு அவர்கள் போய்ப் பணியாற்ற மறுத்து விடுகிறார்கள்; சென்று சேர்ந்துவிட்டு, விடுப்பிலே போய்விடுகிறார்கள்; அதனால்தான் பற்றாக்குறையே தவிர, வேறொன்றும் காரணமில்லை என்று சொன்னபோது—அதுதான் மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்பதற்கு புரட்சித் தலைவி அவர்கள் புதியதொரு திட்டத்தைக் கொண்டு வருவதற்குக் காரணம்— எனவே, இந்தக் குறைபாடுகளை எல்லாம் களைய வேண்டும் என்பதற்காக, புரட்சித் தலைவி அவர்கள் என்ன சொன்னார்கள் என்று சொன்னால், ஒரு நாள் அந்த மாநாட்டை நீட்டித்து, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் இருக்கச் சொல்லி, மக்கள் நல்வாழ்வுத் துறைக்கென்றும், சமூக நலத் துறைக்கென்றும் அரை நாள் ஒதுக்கி, மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு சுகாதாரத் துறையைப் பொறுத்து மாவட்ட அளவிலே எந்த அளவுக்கு அவர்களுடைய செயல்பாடுகள் இருக்க வேண்டும்; இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் எப்படி அவர்களுடைய ஒத்துழைப்பு இருக்க வேண்டும் என்பதை எல்லாம் தெரிந்து கொள்வதற்காக, ஒரு நாள் மாநாட்டையே நீட்டித்துக் கொடுத்தார்கள் என்பதை நான் இங்கே எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், இந்தத் துறையின்மீது அவர்கள் எந்த அளவுக்கு அக்கறை வைத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்வதற்காகத்தான் நான் இதை எடுத்துச் சொல்கிறேன்.

இன்னொன்று, இந்தத் துறை பற்றிய விவாதத்திலே நம்முடைய பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள், நல்லவேளையாக இப்போது இருக்கிற இந்த ஆட்சியின்மீது அதிகம் குறை கூறவில்லை. பழைய ஆட்சியிலே குறை இருந்தது, அது நீடிக்கிறது, அதை நிவர்த்தி செய்யுங்கள் என்ற பாணியில்தான் நம்முடைய உறுப்பினர் பாலபாரதி அவர்கள்கூட இங்கே கருத்துகளைச் சொன்னார்கள். உள்ளபடியே நாங்கள் வரவேற்கிறோம். காரணம், இந்தத் துறையைப் பொறுத்தவரையில் ஓர் ஐந்தாண்டு

தரிசாகப் போட்டுவிட்டார்கள். அதுதான் உண்மை. நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இங்கே நிதிநிலை அறிக்கையிலே சொன்னதைப் போல, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை அவர்கள் எந்த அளவுக்குச் செயல்படுத்துவதற்கு முனைந்து கொண்டிருக்கிறார்களோ, அதைப்போல, ஓர் ஐந்தாண்டு காலம் தரிசாகப் போட்டுவிட்ட இந்தத் துறையை நான் சீர்படுத்த வேண்டும், செம்மைப்படுத்த வேண்டும் என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குக் கொஞ்சம் கால அவகாசம் தேவை என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் பணிவன்போடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, அந்த வகையில், இன்னும் நிறைய, கருத்துகளை நான் சொல்ல வேண்டுமென்று சொன்னாலும், ஒரு சில கருத்துகளை மட்டும் இங்கே நான் எடுத்துச் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் வேலூர் மருத்துவக் கல்லூரியைப்பற்றி ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர் விரும்புகிறபடி இந்த மருத்துவக் கல்லூரி விரைவில் வரவேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணமும். ஆனால், அவருக்கே தெரியும், அந்த மருத்துவக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கான ஆணை 1998 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிறப்பிக்கப்பட்டு, அதற்கான விண்ணப்பத்தைக் கடந்த ஆட்சியாளர்கள் இரண்டு வருடங்கள் கழித்து, 28-7-2000-ல்தான் அனுப்பினார்கள். ஜி.ஓ. போட்டு இரண்டு ஆண்டுகள் கழித்துத்தான் விண்ணப்பமே போகிறது. அப்படிப் போன விண்ணப்பமாவது அங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்றால், ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இங்கே நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, அந்த விண்ணப்பம் திரும்ப வந்துவிட்டது. இப்போது நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடம் சொன்ன பிறகு, குறைபாடுகளை எல்லாம் போக்கி, மீண்டும் விண்ணப்பித்திருக்கிறோம். மேலும், அப்படி அவர்கள் அறிவித்து விட்டு, இந்த மருத்துவக் கல்லூரிக்கு என்று ஒதுக்கிய தொகை என்னவென்று சொன்னால், ரூ.2.73 கோடிதான். இரண்டு கோடியே எழுபத்து மூன்று இலட்சம் ரூபாய்தான். ஆனால், ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், காலையிலே சொன்னதைப்போல 67 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆனால், அதற்காக எந்தவிதமான அடிப்படை வசதிகளைக்கூட-infrastructure-அவர்கள் செய்யாமல், ஓர் அறிவிப்பை மட்டும் செய்துவிட்டு, காலம் கடத்திவிட்டார்கள். எனவேதான், இப்போது முழு முயற்சியோடு, அதற்கான விண்ணப்பத்தை நாங்கள்



அனுப்பி வைத்து, அதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 6-45

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள், டாக்டர்கள் பற்றாக்குறை பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நான் காலையிலேயே மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பதில் சொல்கிறபோது சொன்னேன். டாக்டர்கள் பணியிடங்களை நிரப்புவதற்கு புரட்சித் தலைவி அவர்கள், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, 350 பெண் டாக்டர்களையும், அதைப்போல 555 இதர டாக்டர்களையும் முன்னுரிமை அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் தெரிவு செய்வதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, டாக்டர்களுடைய பணியிடங்கள் நிரப்பப்படுகிறபோது, நீங்கள் சொன்ன குறைபாடுகள் எல்லாம் நிச்சயமாகப் போக்கப்படும்.

அதைப்போல, Consolidated Pay-ல் வேலை செய்து கொண்டிருக்கிற 210 செவிலியர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட இருக்கிறார்கள். அதுபோக, 650 செவிலியர்களைப் புதிதாக நியமிக்க இருக்கிறோம். அதுபோல, 1500 Para-medical staff நியமிக்கத் தடையாணை இருந்தது. அந்தத் தடை நீக்கப்பட்டு அந்தப் பணியாளர்களும் நியமிக்கப்பட இருக்கிறார்கள். எனவே, இந்தப் பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்படுகிறபோது, நிச்சயமாக நீங்கள் சொன்ன குறைபாடுகள் இருக்காது. ஒரு மருத்துவமனை என்று சொன்னால் அல்லது ஆரம்ப சுகாதார நிலையம் என்று சொன்னால், அங்கே மருத்துவர்கள் இருந்தாலே போதும். பல பிரச்சினைகள் தீர்ந்துவிடும். எனவே, அந்த வகையிலே அதற்கு முன்னுரிமை கொடுத்து, நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த அரசு, இந்தத் துறையைப் பொறுத்தவரையில், கொஞ்சம் மெத்தனமாக இருப்பதாகவும், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இங்கே சொன்னார்கள். நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் துறையைப் பொறுத்தவரையில் எந்த அளவிற்கு வேகமாகக் காரியங்களைச் செய்து வருகிறார்கள் என்பதற்கு ஓர் உதாரணத்தைச் சொன்னால் அது சரியாக இருக்கும்

என்று நான் கருதுகிறேன். இராமநாதபுரம் மாவட்டம், ஏர்வாடியிலே நடந்த ஒரு சோகமான சம்பவத்தை நாமெல்லாம் பத்திரிகையிலே பார்த்துப் பதட்டப்பட்டோம். தீர்க்க முடியாத ஒரு சமுதாயப் பிரச்சினையாக உருவெடுத்த அந்தப் பிரச்சினைக்கு பதின்மூன்றே நாட்களில் தீர்வு கண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், எந்த அளவிற்கு அவர் துடிப்போடு அரசு இயந்திரத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த சோகச் சம்பவம் 6 ஆம் தேதி நடைபெறுகிறது. அதற்குப் பிறகு அன்றைய தினமே நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களை அங்கே அனுப்பி வைத்து, நிலைமையைப் பார்த்து வரச் சொல்கிறார். 10 ஆம் தேதி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராகிய என்னையும், சமூக நலத் துறை அமைச்சராகிய மாண்புமிகு திருமதி வளர்மதி அவர்களையும், மாவட்ட அமைச்சராகிய நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. அன்வர் ராஜா அவர்களையும் அழைத்து இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல ஆலோசனைகளை வழங்கினார்கள். அதன்படி, உடனடியாக அந்த மாவட்டத்திலேயிருக்கிற 16 மன நலக் காப்பங்களை மூடிவிடுவது என்றும், அப்படி மூடப்பட்ட நிலைமையிலே, உறவினர்கள் அவர்களை அழைத்துச் சென்றது போக, மீதமுள்ளவர்களை இங்கே சென்னையிலே இருக்கிற மன நலக் காப்பகத்திற்குக் கொண்டுவந்து சேர்ப்பது என்றும், இனிமேல் இப்படிப்பட்ட மன நலக் காப்பகங்களைத் தனியார்கள் நடத்த வேண்டுமென்று சொன்னால், சில நிபந்தனைகளை விதித்து, அரசினுடைய அனுமதியைப் பெற்று, குறிப்பாக அது கூரைச்சாலையிலே இருக்கக்கூடாது, அந்த மன நோயாளிகள் சங்கிலியாலே பிணைக்கப்படக்கூடாது, அந்த மன நலக் காப்பகத்தில் நல்ல உணவு கொடுக்கப்பட வேண்டும், மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும், அரசினுடைய கண்காணிப்பிலே, குறிப்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர், அங்கேயிருக்கிற மன நல மருத்துவர் கண்காணிப்பிலே இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளை விதித்து, ஒரு மாத காலத்திற்குள்ளே அப்படிப்பட்ட மன நலக் காப்பகங்கள் உரிமம் பெற வேண்டும் என்கிற உத்தரவைப் போட்டு, அப்படிப் பிறப்பித்த உத்தரவின் பலனாக 152 மன நோயாளிகள் 19 ஆம் தேதி இங்கே கொண்டு வந்து சேர்க்கப்பட்டார்கள் என்பதும் நீங்கள் அறிந்த ஒன்றுதான். அதுபோக, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களுக்கு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு கோடி ரூபாயை ஒதுக்கி அங்கே மன நலக் காப்பகம் போன்று, மன நோயாளிகளுக்குப் புதிதாக ஒரு வார்டை உருவாக்கி அவர்களுக்கு அங்கே வைத்திய வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று 2 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள்.



பிற்பகல் 6-50

சில பத்திரிகையாளர்கள்கூடக் கேட்டார்கள். 152 பேரை இங்கே அனுப்பி வைத்துவிட்டீர்கள்; சில பேர் நல்ல நிலைமையிலே உறவினர்களாலே அழைத்துக் கொண்டு செல்லப்பட்டு, அப்படி அழைத்துச் செல்லப்படாத மற்றவர்களுக்கு, ஆதரவற்றவர்களாக இருப்பவர்களுக்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டபோது, உடல் ஊனமுற்றோர், முதியோர் ஆகியோருக்கு உதவித் தொகை வழங்குவதைப் போல இவர்களுக்கும் உதவித் தொகை வழங்கத் தயாராக இருக்கிறேன் என்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோக, ஏதோ ஒரு மாவட்டத்திலே நீங்கள் இந்த நடவடிக்கையை எடுத்துவிட்டால் போதுமா என்று கேட்டதற்கு அவர்கள் சொன்னார்கள், தமிழகத்திலே இருக்கிற 25 மாவட்ட மருத்துவமனைகளிலும் மன நல மருத்துவர்களை நியமித்து அந்தந்த மாவட்டத்திலே இருக்கிற மன நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அந்த உத்தரவையும் போட்டு இப்போது 25 மாவட்டங்களிலும் மன நல மருத்துவர்களை நியமிக்கிற அந்த மிகப் பெரிய ஒரு பணியைச் செய்திருக்கிறார்கள் என்ற அந்த நல்ல விவரத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இந்தச் சம்பவம் நடந்து 13 நாட்களில் மிகப் பெரிய பிரச்சினை, யாராலும் தீர்க்க முடியாத பிரச்சினை, அப்படிப்பட்ட ஒரு பிரச்சினையை இங்கே தீர்த்து, அந்த சமுதாயப் பிரச்சினைக்கு அவர்கள் ஒரு முற்றுப்புள்ளியை வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், உள்ளபடியே அதை நாம் பாராட்டியாக வேண்டும். நம்முடைய புரட்சித் தலைவியினுடைய செயல்பாடுகளை எல்லாம் குறை சொல்லியே வரவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கருணாநிதி அவர்கள்கூட இதற்கு மறுப்பே தெரிவிக்காமல், புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கையை வரவேற்பதைப் போல, அரசே நடத்த வேண்டும் என்று அறிக்கை கொடுத்ததோடு நின்றுவிட்டார்கள். எனவே, இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்து வருகிற நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்ட மனமில்லை என்று சொன்னாலும், கொச்சைப்படுத்த அவர்கள் எவ்வளவோ காரியங்களைச் செய்து வருவதை மன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் நன்றாக அறிவீர்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திடீரென்று என்னைப் பதவி இறக்கம் செய்து விட்டீர்களே, என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு இதைக் காட்டுகிறேன்.

(மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் 'முரசொலி' நாளிதழைக் காண்பித்தார்.)

இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னாலே வந்த முரசொலி பத்திரிகையிலே ஒரு கார்ட்டூன். அதிலே இரட்டை இலை போல போட்டு, அந்த இரட்டை இலைகளை பாம்புத் தலையாகப் போட்டு, அ.இ.அ.தி.மு.க. ஆட்சி 100 நாட்களுக்கான சாதனைகளை ஏதோ போல போட்டு, பாம்பாக வர்ணித்து, கொச்சைப்படுத்துகிற வகையிலே இதைப் போட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) அ.இ.அ.தி.மு.க.வினுடைய, எங்களுடைய சின்னம், இரட்டை இலைச் சின்னம்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத்தைப்பற்றிப் பேசும்போது, அதைப்பற்றி அந்தத் துறையிலே அவர்கள் ஒரு symbol வைத்திருப்பார்கள். அதில் பாம்புதான் இருக்கும்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** இதை நான் ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் திரு. கருணாநிதி அவர்கள், புரட்சித் தலைவி அவர்களைப் பழிக்க வேண்டும் என்று நினைத்து, ஏதோ அவருடைய நோக்கத்திலே அல்லது அவருடைய எண்ணத்திலே இந்தக் கார்ட்டூனை வரைந்தாலும்கூட, அவர் பழிக்க நினைத்தால்கூட, அது பாராட்டுவதாக அமைந்திருக்கிறது என்பதற்காகத்தான் இதை நான் இப்போது சொன்னேன்.

நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, இதை ஏன் இப்போது தொடர்புபடுத்தினேன் என்று சொன்னால், நீங்கள் சென்னை மருத்துவக் கல்லூரியிலே பார்த்தால் அந்த symbol அப்படித்தான் இருக்கும். ஒரு Greek Mythology Rod-- அதிலே இரண்டு பாம்புகள் சுற்றிக்கொண்டிருக்கும். இரண்டு பாம்புகளுடைய தலை இருக்கும். அது என்ன என்று கேட்பீர்களேயானால், அது ஒரு Greek Mythology அந்த Snake—

Snake is symbol of long life,
Snake is symbol of fertility,
Snake is symbol of wisdom.



எனவே, கருணாநிதி அவர்கள் பழிப்பதாக அந்தக் கார்ட்டூனைப் போட்டாலும், அது பழி என்று எடுத்துக்கொள்ளாமல் அது பாராட்டுக்குரியதாக அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6-55

இன்னும் சொல்லப் போனால், இந்தத் துறையைப் பொறுத்தவரையில் எவ்வளவு சிறப்பாக, செம்மையோடு நடந்து கொண்டிருக்கிறது என்பதற்கு உதாரணத்தைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நான் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவன். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருப்பவர்கள் பட்டபாடு, கல்லூரிச் சேர்க்கை நேரத்திலே பார்ப்பீர்களேயானால், அவராலே பதிலே சொல்ல முடியாத அளவிற்கு நிலைமைகள் இருக்கும். கோர்ட் வழக்குகள், ஊழல், முறைகேடுகள் என்பன போன்ற குற்றச்சாட்டுகள் எல்லாம் அப்போது எழுந்த காலம் உண்டு. ஆனால், நம்முடைய பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவருடைய ஆட்சிக் காலத்திலேதான் Entrance Examination முறை கொண்டு வரப்பட்டு, அது தொடர்ந்து இப்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் விஞ்ஞான ரீதியாக அந்தத் திட்டத்தில்கூட ஓர் ஊழலை மறைமுகமாகக் கொண்டு வந்தார்கள். அது எப்படி என்று சொன்னால், விளையாட்டுக்கு ஒரு Quota, தமிழ் வளர்ச்சிக்கு, சில பிரிவுகளுக்கு, சில தனி ஒதுக்கீடு இருக்கிறது. அந்த விசேஷச் சலுகையை வைத்து, தனக்கு வேண்டியவர்களை நியமித்துக் கொள்வதிலே அவர்கள் கெட்டிக்காரர்களாக இருந்த காரணத்தினாலே அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே பார்ப்பீர்களேயானால், தொடர்ந்து கோர்ட் வழக்கு இருந்து கொண்டிருக்கும். 10 பேர், 20 பேர், 30 பேர் கோர்ட்டுக்குப் போவார்கள், சீட்டுகளைப் பெற்று வருவார்கள். கோர்ட்டிலே அந்த ஆட்சியினுடைய தேர்வு முறையைக் குற்றஞ்சாட்டி, தேர்வு முறையை விமர்சனம் செய்தெல்லாம் தீர்ப்புகள் வந்திருக்கின்றன. அதைப்போன்று, 1999-2000 ஆம் ஆண்டில் Sports Quota-விலே மூன்று மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது முறையற்றது என்று சொல்லி, அதை நீக்கிவிட்டு, புதியதாக மூன்று மாணவர்கள் தேர்வு எழுத வேண்டுமென்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நம்முடைய ஆட்சிக் காலத்தில் நீங்கள் பார்ப்பீர்களேயானால், எந்தவிதப் புகாரும் இல்லாமல், எந்தவிதக் குற்றச்சாட்டும் இல்லாமல் தேர்வு நடந்தது. அந்தப் பணிகள் எல்லாம் முடிந்தன என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு வழக்குகூட நீதிமன்றத்திற்குப் போகவில்லை. ஒரே ஒரு வழக்கு போனது. அது என்னவென்று சொன்னால், கிராமப்புறப் பள்ளி ஒன்று அந்த list-ல் சேரவில்லை. தவறுதலாக விடுபட்ட அந்த ஒரு பள்ளியைச் சேர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். அது சேர்த்துக்கொள்ளப்பட்டது. பிறகு நாங்களும் அந்த மாணவர்களைச் சேர்த்துக் கொண்டோம். எனவே, இந்த மாணவர்கள் சேர்க்கை முறையிலே இந்த அரசாங்கம் கடைப்பிடித்திருக்கின்ற முறை, புரட்சித் தலைவியினுடைய அரசு ஒளிவு மறைவற்ற அரசாக இருக்கிறது என்பதற்கு இந்த ஓர் உதாரணத்தைச் சொல்ல வேண்டியது அவசியம்.

அதைப்போலவே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் துறையை ஏதோ ஒரு தனித் துறையாக பார்க்கவில்லை. சமுதாயத்தோடு பின்னிப் பிணைந்திருக்கிற ஒரு துறையாகக் கருதி, இந்தத் துறையில் எந்த நடவடிக்கை எடுத்தாலும், அது சமுதாயத்திற்கு நல்லது செய்யக்கூடிய ஒரு காரியமாக இருக்கிறது என்ற வகையிலேதான் இருக்கிறது.

இங்கே மாண்புமிகு பெண் உறுப்பினர்கள் எல்லாம் பாராட்டினார்கள். கருவிலே சிசுவின் உடல் நிலையைக் கண்டறியும் தொழில்நுட்ப உத்திகள் போன்ற அந்தச் சட்டப் பிரிவு, Pre-natal Diagnostic Technique (Regulation and Prevention of misuse) Act, 1994 என்பது 1994-லே கொண்டு வரப்பட்டது. 1996 ஆம் ஆண்டு நம்முடைய மாநிலத்திலே அந்தச் சட்டம் அமல்படுத்தப்பட்டது. ஆனால், அதற்குப் பிறகு அந்தச் சட்டம் என்னவானது என்றே யாருக்கும் தெரியாது. அந்தச் சட்டம் கொண்டு வந்ததன் நோக்கமே, நாட்டிலே ஆண், பெண் பிறப்பு விகிதம் குறைந்து வருகிறது. இப்போது இருக்கிற கணக்குப்படி ஆயிரம் ஆண் குழந்தைகள் பிறந்தால், 939 பெண் குழந்தைகள்தான் உயிரோடு இருக்கின்றன. அப்படி வருகிறபோது, பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் குறைந்துகொண்டே வருகிறபோது, அது ஒரு சமுதாயப் பிரச்சினையாக பின்னாலே வந்துவிடும். இப்போது பஞ்சாபிலே அதுபோன்ற நிலைமை வந்து கொண்டிருக்கிறது. இப்போது ஆயிரம் ஆணுக்கு ஆயிரம் பெண் இருக்க வேண்டும் என்ற நிலைமை மாறி, பெண்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிறபோது, அதனாலே, பின்னாலே மிகப் பெரிய ஒரு சமுதாயப் பிரச்சினையாக அது ஆகிவிடும் என்ற நல்ல நோக்கத்தோடுதான் அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டத்தைப்பற்றி யாருமே



கவனிக்கவில்லை. ஆனால், இந்த ஆண், பெண் விகிதாச்சாரம் குறையக்கூடாது, அதைச் சீர்படுத்த வேண்டும், சமநிலையில் இருக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக 1991-95 இல் பார்த்தால் அது வெகுவாகக் குறைக்கப்பட்டது. ஆனால், அதற்குப் பின்னாலே அந்த நிலை Stagnate ஆகிவிட்டது.

பிற்பகல் 7-00

இப்போது கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட நாங்கள் Diagram போட்டுக் காட்டியிருக்கிறோம். 5 ஆண்டு காலம் அது stagnate ஆகி, அந்த விகிதம் குறைக்கப்படாமலே இருந்துவிட்டது. பிறகு, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதையெல்லாம் ஆய்ந்து பார்த்த பிறகுதான், பெண், ஆண் பிறப்பு விகிதாச்சாரத்தையும் குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டத்தைக் கடுமையாக ஆக்க வேண்டுமென்று சொல்லி ஓர் உத்தரவைப் போட்டார்கள். அந்த உத்தரவின்படி எந்த மருத்துவமனையிலும், எந்த clinic-லும் ஸ்கேன் அல்லது அல்ட்ரா ஸ்கேனாக இருந்தாலும், சி.டி. ஸ்கேனாக இருந்தாலும், இதைப் பரிசோதிக்கிறபோது, கருவிலே இருப்பது ஆணா, பெண்ணா என்ற விவரத்தை-Sex Determination-யாரும் சொல்லக்கூடாது என்ற சட்ட விதியை உறுதிப்படுத்தி, அப்படிப்பட்ட நிலைமையை நாம் தவிர்க்க வேண்டுமென்று சொல்லி, அனைத்து ஸ்கேன் சென்டர்களும் பதிவு செய்யப்பட வேண்டுமென்று ஒரு கட்டாய உத்தரவைப் போட்டு 1500 விண்ணப்பங்கள் பெறப்பட்டு.895 மையங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதைப்போல, அவர்களுக்கும் நாங்கள் எச்சரிக்கை விடுத்திருக்கிறோம். கண்காணித்துக் கொண்டிருக்கிறோம். யாரும் ஸ்கேனைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது, சட்ட விதிகளை மீறக்கூடாது, யாரும் sex determination-ஐ சொல்லக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறோம். அந்த வகையில் இது ஒரு மிகப் பெரிய மாற்றத்தை நிச்சயமாக ஏற்படுத்துகிறது. அந்த ஒரு சூழ்நிலை ஏற்படும். காரணம், சேலம், தருமபுரி, நாமக்கல், உசிலம்பட்டி போன்ற மாவட்டங்களில் பெண் சிசுக் கொலை என்பது, ஸ்கேனைப் பார்த்து, அது பெண் குழந்தை என்று தெரிந்து, காலம் கடந்து abortion போன்ற அந்த நிலைக்கெல்லாம் தள்ளப்படுகிறபோது, ஆண், பெண் பிறப்பு விகிதாச்சாரம் மட்டுமல்ல, பெண் சிசுக் கொலையும் நடக்கிறது. கர்ப்பமுற்ற தாய்மார்களுக்கு இதனால் ஆபத்து ஏற்படுகிறது. எனவே, இந்த நிலையைப் போக்க வேண்டும் என்பதற்காக, இந்தச் சட்டத்தை மிகக் கடுமையாக ஆக்கியிருக்கிறார்கள்.

நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மிகப் பெரிய ஒரு காரியத்தைச் செய்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே இருக்கிற கர்ப்பிணிப் பெண்களுக்குக் குழந்தை பிறக்கிறபோது அந்தக் குழந்தைகள் கால் வீங்கி, வயிறு வீங்கி, ஆபத்தான நிலையிலிருந்து அது நீண்ட காலம் உயிர் வாழ முடியாத நிலைமைகூட இருந்தது. அதற்குக் காரணம், தமிழ்நாட்டிலே இருக்கிற பருவ வயது அடைந்த பெண்கள், அதிக அளவு இரத்த சோகை—'அனீமியா' போன்ற வியாதியாலே பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இரத்த சோகை ஏற்படுகிற தாய்மார்களுக்கு பிரசவ காலத்தில் அதிக உதிரப் போக்கு ஏற்பட்டு, அவர்கள் இறக்கும் ஒரு நிலைமை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட தாய்மார்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகள் நீண்ட நாட்கள் உயிர் வாழ முடியாத ஒரு நிலைமை இருக்கிற காரணத்தால், இதற்கு ஓர் ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று, அதற்கான காரணம் கண்டு அறிகிறபோது, அந்த இரத்த சோகைக்கு என்ன உபாயம் செய்ய வேண்டுமென்று ஆராய்ந்த போதுதான், அவர்களுக்கு இரும்புச் சத்து - Iron- குறைவாக இருக்கிறது என்ற காரணத்தாலே Iron and Folic tablets— இரும்புச் சத்து மற்றும் வைட்டமின் சத்துக் கலந்த மாத்திரையை வழங்க வேண்டும் என்பதற்காக, கர்ப்பம் அடைந்திருக்கிற தாய்மார்களுக்கு மட்டுமல்லாமல், கர்ப்ப காலத்தில் மட்டுமல்லாமல், அந்தப் பெண்களுக்கு ஆரம்ப காலத்திலிருந்து இரும்புச் சத்து அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக, 10 வயது முதல் 17 வயது வரை உள்ள பருவம் அடைந்த பெண்களுக்கு—53 இலட்சம் பேர்களுக்கு Iron and Folic tablets வழங்குவதற்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். பள்ளிக்கூடத்திலே படிக்கிற அந்த வயதினையுடைய பெண்களுக்குக்கூட ஆசிரியர்கள் மூலமாகவும், கிராமத்திலே இருக்கிறவர்களுக்கு கிராமச் செவிலியர்கள் மூலமாகவும் கொடுப்பதற்கு உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். இந்த உத்தரவிற்குப் பிறகு, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறபோது, நம்முடைய நாட்டிலே 'அனீமியா' நோயால் பாதிக்கப்பட்ட பெண்களுடைய சதவிகிதம் 3.6 என்று இருப்பது, National Average ஆன 2.1-ஐவிட அதிகமாக இருப்பது, குறையும். பக்கத்திலேயிருக்கிற கேரளாவிலே அந்த விகிதாச்சாரம் குறைவாக இருக்கிறது. அதற்குக் காரணம், அந்த மாநிலத்தைப் பொறுத்தவரையிலே பெண்கள் விவரமானவர்களாக, படிப்பறிவு உள்ளவர்களாக இருக்கிறார்கள். அதனால், இவர்களுக்கும் ஊக்கம் கொடுக்க வேண்டும்; கல்வி அறிவைப் புகட்ட வேண்டும். படித்த பெண்கள் ஓரளவிற்கு அதையெல்லாம் தெரிந்துகொண்டு, தங்களைத் தற்காத்துக்கொள்ளக்கூடிய, பாதுகாத்துக்கொள்ளக்கூடிய ஒரு நிலைமை



ஏற்படும் என்பதற்காகத்தான், பெண்கள் நலனிலே நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அக்கறை எடுத்துக் கொண்டிருப்பதோடு, இதுபோன்ற நல்ல காரியங்களையும் அவர்கள் செய்து வருகிறார்கள். அந்த வகையிலே, 10 முதல் 17 வயது கொண்ட 53 இலட்சம் பெண்கள் பலன் அடைய இருக்கிறார்கள் என்கிற அந்த ஒரு நல்ல செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 7—05

இந்தத் திட்டம் உள்ளபடியே, ஆதிதிராவிடப் பெண்களுக்கு சைக்கிள் வழங்குகிற திட்டத்தைவிட மிக அற்புதமான திட்டமாக, ஓர் உன்னதத் திட்டமாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கிராமங்களிலே இருக்கிற நோயாளிகளைப் பற்றி, அவர்களுடைய வியாதிகளைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். பெரும்பாலும் கிராமங்களிலே இருப்பவர்களுக்கு சர்க்கரை நோய், இரத்த அழுத்தம், வலிப்பு போன்ற வியாதிகள் அதிகம் வருவதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றுக்கான மாத்திரைகள் உள்ளூரிலே இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற அந்த உத்தரவையும் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலமாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இந்த வியாதிகளுக்கு உண்டான மாத்திரைகள் கிராமப்புறங்களிலே தாராளமாகக் கிடைக்கிற அளவுக்கு நிச்சயமாக இனிமேல் பார்த்துக்கொள்ளப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மருந்து கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டை இங்கே யாரும் அதிகமாகச் சொல்லவில்லை. ஆளுங் கட்சியைச் சார்ந்த ஒரு பெண் உறுப்பினர்கூட மருந்து குறைவாக இருப்பதாகச் சொன்னார்கள். நான் அந்தக் கருத்திற்கு மாறுபடுகிறேன். காரணம், நம்முடைய தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தைப் பொறுத்தவரையில், ஆண்டுக்கு 100 கோடி ரூபாய் மருந்து வாங்குவதற்காக ஒதுக்கப்பட்டு, இந்த ஆண்டு புரட்சித் தலைவி அவர்கள் 5 கோடி ரூபாய் சேர்த்து 105 கோடி ரூபாயாக ஆக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் குறைபாடுகள் எல்லாம் இப்போது நிச்சயமாக இல்லை. அப்படி ஏதாவது இருக்குமேயானால், எங்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வந்தால், மருந்துகள் இல்லையென்ற நிலைமையை நிச்சயமாக நாங்கள்

போக்குவதற்குத் தயாராக இருக்கிறோம். காரணம், மருந்து தேவையான அளவிற்குக் கொடுக்கப்படுகிறது. அப்படி யாராவது மருந்து வாங்குவதற்குத் தவறினால், அது டாக்டர்கள் மேல் உள்ள குற்றமாக இருக்கும். எவ்வளவு இன்டென்டு போட்டாலும், நாங்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். எனவே, மருந்துகள் பற்றாக்குறை என்பது நிச்சயமாக இருக்காது. இன்னும் சொல்லப் போனால், விஷக்கடி மருந்துகள், நாய்க்கடி மருந்துகள், பாம்புக்கடி மருந்துகள் பற்றாக்குறை என்று சொன்னார்கள். ஆனால், அப்படிப்பட்ட நிலைமைகூட இல்லை. மருத்துவமனைகளிலே அங்கே பணியாற்றக்கூடிய டாக்டர்கள் அதைக் கேட்டுப் பெறவேண்டும் என்று சொன்னால், கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். இப்போது தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் கையிருப்பில் 3,652 vials பாம்புக்கடி ஊசி மட்டும் கைவசம் இருக்கிறது. எந்த மருத்துவமனையில் இந்த மருந்து இல்லையென்று சொன்னாலும், மருத்துவ சேவைக் கழகம் அனுப்புவதற்குத் தயாராக இருக்கிறது. இது அங்கே இருக்கிற அந்த டாக்டர்களுடைய குறை என்று நான் கருதுகிறேன். காரணம், அவர்களுக்குத் தேவையான அளவிற்கு, அவர்கள் இன்டென்டு போடுகிற அளவிற்கு நாங்கள் மருந்துகளைக் கொடுக்கிறோம். அப்படியும் தேவைப்படுகிற மருந்து ஏதாவது வாங்க வேண்டும் அல்லது அவசியமான மருந்து ஏதாவது வாங்க வேண்டும் என்று சொன்னாலும்கூட, விநியோகிக்கப்படுகிற மருந்திலே 10 சதவிகிதம்—10 இலட்சம் ரூபாய்க்கு மருந்து கொடுக்கிறோம் என்று சொன்னால், 1 இலட்சம் ரூபாய்க்கு அவர்கள் local purchase செய்து கொள்ளலாம். அதற்கும் பணம் கொடுக்கிறோம். ஆக, மருந்துத் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லை. மருந்துகள் தாராளமாகக் கொடுக்கிறோம். அனுப்பப்படுகிற மருந்து, அவர்கள் கேட்கிற மருந்து இல்லையென்று சொன்னால், 10 சதவீதம் அளவிலே அவர்கள் வெளியிலே local purchase-ல் வாங்கிக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் பிச்சாண்டி, நம்முடைய பவானி கருணாகரன் என்று நான் கருதுகிறேன், நாய்க்கடி மருந்து அரக்கோணம் பகுதியிலே இல்லையென்று சொன்னார்கள். அதுவும் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தில் 2,094 vials இருக்கின்றன. ஆகவே, அவர்கள் கேட்டுப் பெற்றுக்கொள்வதிலே எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். காரணம், நம்முடைய மருத்துவ சேவைக் கழகம் சிறப்பான சேவைக் கழகமாக, இன்றைக்கு இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களுக்கு முன்னோடித் திட்டமாக, உலக அளவிலே பரிசைப் பெற்றிருக்கிறது. ராஜீவ் காந்தி பெயரில் இருக்கிற ஒரு பரிசைக்கூட அது பெற்று, சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. எனவே, மருந்துத் தட்டுப்பாடு என்கிற நிலைமை நிச்சயமாக ஏற்படாமல் நாங்கள்



பார்த்துக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 7-10

அடுத்து, பல்வேறு உறுப்பினர்கள் இன்னொரு சிறந்த அறிவிப்பை இங்கே பாராட்டினார்கள். புகை பிடித்தல் மற்றும் உமிழ்தலைத் தடுக்கும் சட்டம்-அதாவது புகையிலை, பான் மசாலா, குட்கா போன்ற பொருள்களுக்குத் தடை விதிக்கும் அறிவிப்புகளையும் இங்கே உறுப்பினர்கள் நல்ல முறையிலே வரவேற்றார்கள். உள்ளபடியே இதையெல்லாம் தயவுசெய்து நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த நடவடிக்கையை எடுப்பதற்கு மற்றவர்களெல்லாம் ஏன் தயங்கினார்கள் என்றுகூடத் தெரியவில்லை. காரணம், ஒரு சமுதாயத்திலே மக்கள் பாதிக்கப்படக்கூடாது, குறிப்பாக மாணவர்கள் இதற்கு அடிமையாகிவிடக்கூடாது என்கிற வகையில் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை, புரட்சிகரமான திட்டத்தை புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இது ஒரு நல்ல சமுதாயம். மேலும் இது ஒரு நல்ல சமுதாயமாக இருக்க வேண்டும். அடுத்து சுற்றுப்புற மாசுக் கட்டுப்பாடு. காசநோய், புற்றுநோய் போன்ற பயங்கரமான வியாதிகளுக்கு நாமே ஆளாகிக்கொள்ளக்கூடிய நிலைமைகள் எல்லாம் இருக்கக்கூடாது என்கிற வகையிலே இதுகுறித்த அறிவிப்பையும் மற்ற உறுப்பினர்கள் வரவேற்றதற்கு நான் இந்த நேரத்திலே நன்றி சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சினைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன கருத்துக்களை எல்லாம் நாங்கள் குறிப்பெடுத்து வைத்திருக்கிறோம், துறை அதிகாரிகளும் இங்கே குறிப்பெடுத்து வைத்திருக்கிறார்கள். எனவே, உங்களுடைய கோரிக்கைகள், உங்களுடைய ஆலோசனைகள் எல்லாம் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்கிற அந்த ஒரு உறுதியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே இந்தக் கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிற நல்ல திட்டங்களோடு இன்னும் சில அறிவிப்புகளையும் அறிவிக்கச் சொல்லி எனக்கு ஆணையிட்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய ஒப்புதலோடு இன்னும் ஒரு சில அறிவிப்புகளை இந்த நேரத்திலே வெளியிடுவது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

மதுரையிலே 114.48 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய செவிலியர் கல்லூரியை (மேசையைத் தட்டும் ஒலி) ஆரம்பிப்பதற்கு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இதுபோன்ற செவிலியர் பயிற்சிப் பள்ளியில் இளநிலை அறிவியல் பட்டப் படிப்பு-பி.எஸ்.சி. (நர்சிங்) — அரசாங்கக் கல்லூரியிலே 1967-ல்தான் முதலிலே தொடங்கப்பட்டது. அதற்குப் பின்னாலே எந்தக் கல்லூரியிலும் தொடங்கப்படவில்லை. 1967-ல்தான் முதன்முதலில் சென்னை மருத்துவக் கல்லூரியிலே தொடங்கப்பட்டது. 25 மாணவிகளுக்குத் தனிப் பயிற்சி கொடுத்து இன்னும் அது தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது. அதற்குப் பிறகு அரசாங்கத்தின் சார்பில் அதுபோன்ற கல்லூரியே தொடங்கப்படவில்லை. எனவே, மதுரையிலே ஒரு கல்லூரியைத் தொடங்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் வசதி கொண்டதாக படிப்படியாகத் தரம் உயர்த்த இருக்கிறோம். இந்த ஆண்டு 20 ஆரம்ப சுகாதார நிலையங்களை (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்துக்கொள்ள இருக்கிறோம். அதற்காக 12.89 கோடி ரூபாயை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். எனவே, இந்த ஆண்டே 20 ஆரம்ப சுகாதார நிலையங்கள், நான் சொன்னதுபோல தாலுகா மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்படும் என்கிற அந்த நல்ல செய்தியையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, பெண்களிடையே காணப்படும் இரத்த சோகையைக் குறைக்கும்பொருட்டு, மாநிலம் முழுவதும் 10 வயது முதல் 17 வயது வரையுள்ள சுமார் 53 இலட்சம் வளர் இளம் பருவப் பெண்களுக்கு இரும்புச் சத்து மாத்திரைகள் வழங்குவதற்கு 1 கோடியே 90 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த வருடம் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், 5 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும், வயது முதிர்ந்தோர் சிகிச்சைப் பிரிவு - Geriatric Unit ஒன்றை ஆரம்பிப்பதற்கு 5 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 7-15

மாநிலத்தில் சுகாதார நலத் திட்டங்களை மேலும் சிறப்பாகச் செயல்படுத்தும்பொருட்டு, சுகாதாரக் கண்காணிப்புத் தொடர்பு அமைப்பு



ஒன்றை ஏற்படுத்துவதற்கு 3 கோடியே 96 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அவசர கால வாகன வசதி இல்லாதது, பேறு கால மரணம் மற்றும் சிசு மரணத்திற்கு ஒரு முக்கியக் காரணமாக அமைகிறது என்பதாலே இதனைத் தவிர்க்க, ஒரு முன்னோடித் திட்டமாக மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் 12 அவசர கால ஊர்திகள் வழங்கப்பட்டு, இத்திட்டம் அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடன் செயல்படுத்தப்படும் என்பதையும், அவசர காலங்களில் உடனடி மருத்துவ உதவி கிடைக்க வசதி செய்ய இவ்வாகனங்கள் கம்பியில்லாத் தொடர்பு வசதி பெற்றிருக்கும் என்பதையும், இவ்வாகனத்தைப் பயன்படுத்துவோரிடமிருந்து மிகக் குறைந்த அளவில் சேவைக் கட்டணம் வசூலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இது ஏதோ பிரசவத்திற்காக மட்டும் அல்லாமல் சாலையிலே விபத்துக்கள் நடக்கிற நேரத்திலே அந்த விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை அருகிலே இருக்கிற மருத்துவமனைகளிலே சேர்ப்பதற்கும் பயன்படும் என்கிற வகையிலே அதற்காக 1 கோடியே 39 இலட்சம் ரூபாயை புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, தமிழ்நாட்டில் கருப்பை, வாய்ப் புற்றுநோய் நிகழ்வுகள் அதிகமாக உள்ளதால், ஒவ்வொரு வாரமும் ஒரு குறிப்பிட்ட நாளில் பேறுசார் பாதை நோய் மற்றும் பால்வினை தொற்றுநோய் பரிசோதனை செய்து சிகிச்சை அளிப்பதற்காக, பரிசோதனை செய்வதற்காக ஆய்வு வசதிகள் 30 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூபாய் 1 கோடியே 2 இலட்சம் செலவில் ஏற்படுத்துவதற்கான உத்தரவையும் இங்கே அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தருமபுரி, சேலம், மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் பெண் சிசுவதை மற்றும் பெண் குழந்தைகளைக் கருவில் கொல்லுதல் ஆகிய நிகழ்வுகள் அதிகமாக உள்ளதால் இந்த நான்கு மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு, இத்தகைய நிகழ்வுகள் குறித்து தகவல் பெறுவதற்காகவும், உடனடி நடவடிக்கை எடுப்பதற்காகவும், நேரடித் தனித் தொலைபேசி வசதி செய்து கொடுப்பதற்காக உத்தரவிட்டிருக்கிறார்கள்.

மாநிலத்திலே மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுகாதாரம் தொடர்புடைய நலப் பணிகள் குறித்து ரூ. 2 கோடியே 50 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்தினால் மாநிலத்தில் மகளிரின் நிலை உயர்வதோடு பலவேறு சுகாதார நலத் திட்டங்களின் செயல்பாடும் மேம்படுத்தப்படும் என்கிற வகையிலே இதற்கான உத்தரவையும் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

நிறைய மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். சில இடங்களிலே ஆபரேஷன் நடப்பதில்லை, ஆபரேஷன் செய்யப்படுவதில்லை என்றெல்லாம் சொன்னார்கள். எங்கள் துறை ஆய்வின்போது புரட்சித் தலைவி அவர்கள் இந்தக் கேள்வியை எங்களிடமும் கேட்டார்கள். அப்போது அவருக்குத் தெரிவிக்கப்பட்ட கருத்து, படித்த மயகக மருந்து கொடுக்கும் டாக்டர்கள் - Anaesthetists - பற்றாக்குறையாக இருக்கிறது என்று சொன்னபோது, உடனடியாக உத்தரவிட்டார்கள். அந்தப் படிப்புக்காக ஒதுக்கப்பட்ட இடங்களைக் கூடுதலாக ஒதுக்கி, கூடுதலான டாக்டர்களை உருவாக்குங்கள் என்று சொன்னார்கள். அந்த வகையில் மாநிலத்தில் மயக்க மருந்தியல் வல்லுநர்களின் தேவை அதிகமாக உள்ளதால், மயக்க மருந்தியல் பட்ட மேற்படிப்பில் மொத்தம் 19-லிருந்து 28-ஆக உயர்த்துவதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை வருகிறபோது மயக்க மருத்துவர்கள் அதிகமாக வெளிவருகிற நேரத்திலே இந்தக் குறைபாடுகள் எல்லாம் நிச்சயமாகப் போக்கப்படும். சில ஆபரேஷன் தியேட்டர்களிலே, எல்லாம் இருக்கும். ஆனால் அந்த ஆபரேஷன் தியேட்டர்களை மூடி இருப்பார்கள். காரணம்-Tetanus. ஆபரேஷன் செய்வதற்கு அந்த அறை தகுதியாக இல்லை, அதைச் சுத்தப்படுத்தித்தான் செய்ய முடியும் என்று சொல்வார்கள். அதை புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு போனோம். அவர்கள் என்ன சொன்னார்கள் என்று சொன்னால், அனைத்து அறுவை சிகிச்சை நிலையங்களிலும், அதுபோன்ற பாதிப்பு இல்லாத வகையிலே 'எவர்சில்வர் வால்' அல்லது அங்கு பயன்படுத்துகிற டேபிள் எல்லாம் ஸ்டெயின்லெஸ் ஸ்டீலிலே இருக்க வேண்டும் என்று சொல்லி, அந்த அறையினுடைய wall உட்பட—சுவர் உட்பட— அனைத்தும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீலிலே இருக்க வேண்டும் என்று சொல்லி முதற்கட்டமாக மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலே அறுவை சிகிச்சைக் கூடங்களுக்கு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் wall-கள் போடப்பட்டு, இனிமேல் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்தான் பயன்படுத்தப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் போடுகிறபோது, Tetanus பிரச்சினையே வராது. எனவே, அதற்கும் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, கண்ணொளி இழப்பைக் குறைக்கவும், கண் சிகிச்சை மற்றும் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்தவும் திருநெல்வேலி மருத்துக் கல்லூரி மருத்துவமனையில் கண் வங்கி ஒன்று ஏற்படுத்துவதற்கும் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 7-20

இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் போன்றவர்கள் எல்லாம் இயற்கை மருந்துகளுக்காக வாதாடினார்கள். திரு. குமாரதாஸ் போன்றவர்களெல்லாம் நல்ல கருத்துகளை இங்கே எடுத்துக் கூறினார்கள். திரு. ஞானசேகரன் அவர்கள், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை வெகுவாகப் பாராட்டினார்கள். (குறுக்கீடு) அவருடைய மகனை மட்டுமல்ல; அதாவது தந்தைக்கே புத்தி சொன்ன முருகப் பெருமான் போல, அவருடைய மகன் அவருக்கு எடுத்துச் சொன்னதாக, அவர் எங்களுக்கெல்லாம்கூட சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உள்ளபடியே அவருடைய திட்டத்தினை நாம் நிறைவேற்றினால் நல்லது.

இன்றைக்கு விவசாயிகளுக்காக நாம் எவ்வளவோ குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். விவசாயிகள் பழைய நிலைமையிலேயே, இட்ட பயிரையே இட்டுக்கொண்டு, பழைய விவசாயத்தையே செய்துகொண்டு, வருமானம் இல்லாமல் வாடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னதன்படி, ஞானசேகரன் அவர்கள் சொன்னதன்படி, இங்கேயிருக்கிற அந்தச் செடிகளை, அந்த வேர்களை, அந்தப் பூக்களை வெளிநாட்டிற்கு எடுத்துச் சென்று, அந்த மருந்துகளை, மாத்திரைகளை, கேப்சூல்களை எல்லாம் தயாரித்து வருகிறார்கள். எனவே, இங்கே செய்வதற்கு வாய்ப்பு இருந்தாலும், செய்ய முடியாது என்றிருந்தாலும், இதுபோன்ற பயிர்களைப் பயிரிட்டு, வெளி நாடுகளுக்கு நாமும் ஏற்றுமதி செய்தால் விவசாயிகள் வாழ்விலே நிச்சயமாக ஒளி பிறக்கும். அதைத்தான், எங்கு போனாலும், யாரிடம் போனாலும் நீங்கள் அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்க வேண்டாம்; பழைய நிலைமைக்குப் போக வேண்டாம்; இதுபோன்ற வருமானம் தரக்கூடிய புதிய பணப் பயிர்களை, மருந்துப் பயிர்களை, மருந்துச் செடிகளை நீங்கள் பயிரிடுங்கள். ஒரு ஏக்கருக்கு இவ்வளவு வருமானம் வருமென்ற கணக்கினை எல்லாம் சொல்லி, இப்போது விவசாயிகள் மனதை மாற்றுகின்ற பிரச்சாரத்திலே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது உள்ளபடியே வரவேற்கக்கூடியது. அப்படிப்பட்ட ஒரு நிலைமையெல்லாம் உருவாக்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு திட்டத்தினை அறிவித்திருக்கிறார்கள்.

இயற்கை மருந்துகள் உலகச் சந்தையில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளதால் இயற்கை மருந்துகள் ஏற்றுமதியை அதிகரிப்பதும் மூலிகைத் தாவரங்களைக் காப்பதும் அவசியமாகிறது. மூலிகைத் தாவரங்கள்

பாதுகாப்பு, முறையான அறுவடை, இலாபகரமான விளைச்சல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, பதனிடுதல், மூலப்பொருட்கள் விற்பனை ஆகியவற்றை ஒருங்கிணைப்பதற்காக மூலிகைத் தாவரங்கள் வாரியம் ஒன்றை உருவாக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி அந்த வாரியம் அமைகின்றபோது, திரு. குமாரதாஸ் அவர்கள் இதற்கெல்லாம் பேடன்ட் ரைட்ஸ் வாங்க வேண்டுமென்று சொன்னார்கள். நிச்சயமாக இந்த வாரியம் அதைப் பற்றி பரிசீலிக்கும்.

தற்போது எச்.ஐ.வி. நோய் கண்டறியும் வசதி மாநிலத்தில் 14 இடங்களில் மட்டுமே இருந்து வருகிறது. இது ஒரு பரவி வருகிற வியாதியாக இருக்கிறது. பல பேர் இதுகுறித்து பரிசோதனை செய்வதற்கே பயப்படுகிறார்கள். எச்.ஐ.வி. பாசிட்டிவ் இருக்கிறதா என்று பார்த்துக்கொள்வதற்குக்கூட வெட்கப்படுகிற ஒரு நிலையிருக்கிறது. 14 இடங்களில் மட்டுமே இந்த வசதி இருக்கிறது. அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள் ரூ.70 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டு, அந்தப் பரிசோதனைக்கென்று பொது மக்களிடமிருந்து 10 ரூபாய் பெற்றுக்கொண்டு—பொது மக்கள் 10 ரூபாய் செலுத்தி பரிசோதனை செய்துகொண்டு இலவச ஆலோசனை பெறலாம் என்கிற ஒரு நல்ல திட்டத்தினை அறிவித்திருக்கிறார்கள். இது ஒரு சாதாரண சமாச்சாரம் அல்ல. சாதாரணமான விஷயமாகத் தள்ளிவிடக் கூடாது. எனவே, ஒவ்வொருவரும் இதைப் பரிசோதித்து ஆரம்பக் கட்டத்திலேயே இதற்குண்டான தடுப்பு முறையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதற்காகத் திட்டத்தினை அறிவித்திருக்கிறார்கள். 10 ரூபாய் கட்டணம் செலுத்தி எச்.ஐ.வி. பாசிட்டிவ் இருக்கிறதா, இல்லையா என்பதைக் கண்டறிவதற்கான ஒரு நல்ல திட்டத்தினை, இலவசமாக ஆலோசனை பெறுகிற ஒரு திட்டத்தினை புரட்சித் தலைவி அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மருத்துவக் கல்லூரி ஆய்வுக்கூடம் இந்தியாவின் 12 தேசிய ஆய்வுக்கூடங்களுள் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த வருடம் ரூ.2.7 இலட்சம் செலவில் இவ்வாய்வகத்தினை மேம்படுத்துவதற்கான நிதி ஒதுக்கீட்டையும் புரட்சித் தலைவி அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.



நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனை, எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயாளிகள் சிகிச்சை பெறும் ஒரு முக்கிய மையமாகும். அட்லாண்டாவிலுள்ள நோய்க் கட்டுப்பாட்டு நிலையம் ரூ. 5 கோடி செலவில் இம்மருத்துவமனையை மேம்படுத்த நிதி உதவி செய்வதற்கு முன் வந்துள்ளது. எனவே, அந்தத் திட்டத்தினையும் தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையில் செயல்படுத்துவதற்கு புரட்சித் தலைவி அவர்கள் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் நூலக வசதிகளை மேம்படுத்த நூலகங்களுக்குக் கணினி வசதி மற்றும் இணைய தள இணைப்பு வழங்கப்படுவதற்கும், இந்த வருடம் சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிக்கு எல்.சி.டி. புரஜெக்டர் வழங்கப்படுவதற்கும்—இது மாணவர்கள் அறிவாற்றலை அதிகரிக்கப் பெருமளவில் உதவும் என்கிற வகையிலே இதற்காக ரூ.22 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள் என்கிற ஒரு நல்ல செய்தியையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 7—25

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஆரம்ப சுகாதார நிலையங்கள், தாலுகா மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட மருத்துவமனைகளுக்கு எல்லாம் Advisory Committee வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே Advisory Committee இருந்தது. ஆனால் அது செயல்பட்டதாகத் தெரியவில்லை. அநேகமாக ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அப்படிப்பட்ட கமிட்டி அமைக்கின்ற முறை இல்லை. ஆனாலும் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இதற்கும் ஒரு ஏற்பாட்டைச் செய்து கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் Community Health Committee என்ற ஒரு கமிட்டியை அமைத்து, அதிலே அந்த மருத்துவமனையிலே இருக்கின்ற ஒரு டாக்டர், அந்தக் கிராமத்தின் பஞ்சாயத்துத் தலைவர், அந்தக் கிராமத்திலே பணியாற்றக்கூடிய பள்ளி ஆசிரியர், அந்தக் கிராமத்திலே இருக்கிற கிராம நிர்வாக அலுவலர், அதேபோல அந்தக் கிராமத்திலே இருக்கிற தன்னார்வத் தொண்டு நிறுவன பெண் அமைப்பாளர்கள் (NGOs), கிராம சேவக், இன்னும் Philanthropist — கொடையாளிகள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு கமிட்டி அமைத்து அதைக் கண்காணிப்போடு

பார்த்துக்கொள்ள வேண்டும். காரணம், யாரும் கேட்பாரற்றுக் கிடக்கின்றன. ஆரம்ப சுகாதார நிலையங்களில் எத்தனை மணிக்கு டாக்டர்கள் வருவார்கள், என்னென்ன சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன, எத்தனை மணி வரை அங்கே சிகிச்சை அளிப்பார்கள் என்று யாருக்கும் தெரியாது. எனவே, அவற்றைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காக Citizen Charter for the use of PHCs என்கிற வகையிலே அங்கே ஒரு தகவல் பலகையில் தெரிவிக்கப்பட்டு, மருத்துவமனை எந்த நேரத்தில் என்னென்ன பணிகளை ஆற்றும், எந்தெந்த நேரங்களில் டாக்டர்கள் இருப்பார்கள் என்ற விவரங்கள் அடங்கிய தகவல் பலகையை வைத்து, அந்தக் கமிட்டி உறுப்பினர்கள் அதைக் கண்காணித்து, முறையோடு அந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன என்பதைக் கண்காணிக்கின்ற வகையிலே இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். அதேபோல தாலுகா மற்றும் மாவட்ட மருத்துவமனைகளிலே சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவன அமைப்பாளர்கள், கொடையாளிகள் ஆகியோரைக் கொண்டு ஒரு கமிட்டி அமைத்து— ஏற்கெனவே இருந்த கமிட்டி இப்போது revive செய்யப்பட்டு, அதற்குப் புத்துயிர் அளிக்க வேண்டுமென்ற ஒரு உத்தரவையும் தந்திருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட கமிட்டிகள் அமைக்கப்படுகின்றபோது அந்தக் கமிட்டிகள் சிறப்பாகக் கண்காணிக்கின்றபோது, அங்கே பணியாற்றுகின்ற டாக்டர்கள் அல்லது பணியாளர்கள் எல்லாம் நல்ல முறையில் ஒழுங்காகப் பணியாற்றுவார்கள் என்ற அந்த நம்பிக்கையில் புரட்சித் தலைவி அவர்கள் இதுபோன்ற ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து மாவட்ட மருத்துவமனைகள் வரை கமிட்டிகள் அமைக்கப்பட வேண்டுமென்ற உத்தரவை இட்டிருக்கிறார்கள்.

அதோடு இன்னும் ஓர் உத்தரவையும் சொல்லியிருக்கிறார்கள். ஆரம்ப சுகாதார நிலையத்திற்கோ அல்லது மருத்துவமனைக்கோ 50 இலட்சம் ரூபாய்க்கு மேலாக யாராவது நிதியுதவி செய்து, அப்படிப்பட்ட கொடையாளி தன்னுடைய பெயரையோ அல்லது தன்னுடைய குடும்பத்தில் இருப்பவர் பெயரையோ வைக்க விரும்பினால், அந்தக் கட்டடத்திற்கு, அந்தப் பிரிவுக்கு அவர்களுடைய பெயர் வைக்கப்படும் என்பதை அறிவித்து அவர்களை ஊக்கப்படுத்தி, இதுபோன்று அரசாங்கமே செலவு செய்ய வேண்டுமென்ற நிலை இல்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றவர்கள், நன்கொடையாளர்கள் யாராவது முன்வருவார்களானால்



அவர்களையும் இதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற ஒரு நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

நிறைய விபத்துக்கள் National Highway மற்றுமுள்ள சாலைகளில் ஏற்படுகின்றன. Trauma Centres-விபத்துப் பிரிவுகள் அமைக்க வேண்டுமென்று இங்கே சொன்னார்கள். எனவே, அந்த அடிப்படையிலே முதல் கட்டமாக 4 இடங்களிலே இந்த ஆண்டு விபத்து சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட இருக்கின்றன என்கின்ற அந்த நல்ல செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் நான் பல்வேறு கருத்துகளை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று விரும்பினாலும், நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. Communicable disease and Non-communicable disease பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதையெல்லாம் ஒழிப்பதற்கு இந்த அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன அனைத்து ஆலோசனைகளையும், அனைத்துக் கருத்துகளையும் இந்த அரசு கருத்தில் கொண்டு, இந்தத் துறையினுடைய முன்னேற்றத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன ஆலோசனைகளை வரவேற்று அவை செயல்படுத்தப்படும் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு) சிறுநீரக சிகிச்சைக்கு நிதி உதவி கொடுக்கப்படுகிறது. நீங்கள் யாராவது பாதிக்கப்பட்டவர்களுடைய விண்ணப்பத்தைக் கொடுத்தீர்களேயானால், அரசு அதற்கான மாத்திரை வழங்கவும் மற்றும் தேவையான உதவிகளைச் செய்து கொடுப்பதற்கும் தயாராக இருக்கிறது.

*பிற்பகல் 7—30*

இன்னும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர் வெட்டுத் தீர்மானங்களின் மூலம் தங்களுடைய தொகுதிகளிலுள்ள குறைபாடுகள், மருத்துவமனைகளுக்கு வேண்டிய வசதி, வாய்ப்புகளையெல்லாம் இங்கே கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கான பதில்களைத் துறை தயாரித்து வைத்திருக்கிறது. எனவே, அவர்களுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள்

எல்லாம், அவற்றைத் திரும்பப் பெற்று, அந்த மானியக் கோரிக்கைகளுக்கான தொகையை அரசுக்கு மாண்புமிகு தலைவர் அவர்கள் ஒதுக்குவதற்கு, உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமசந்திரன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்வளவு விளக்கமாகச் சொல்லிவிட்டார்கள். இன்னுமா சந்தேகம்?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முற்பகல் விவாதத்திலே குறுக்கிட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நாகர்கோவில் மருத்துவக் கல்லூரி சம்பந்தமாக சில விவரங்களைச் சொன்னார்கள். அந்த மருத்துவக் கல்லூரி இந்த 2001-2002 ஆம் வருடம் ஆரம்பிக்கப்படும் என்ற முறையிலே, அங்கேயுள்ள டி.பி. ஆஸ்பிடலிலே 50.00 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டடங்கள் renovate செய்யப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே, எம்.பி./எம்.எல்.ஏ.க்கள் நிதியிலிருந்து 2.00 கோடி ரூபாய்க்கு மேல் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணம் மேற்கொண்டு 180 இலட்சத்திற்கு மேலே அந்த நிதியிலே இருக்கிறது. அது lapse ஆகாமல் இருக்கக்கூடிய முறையிலே அந்தக் கட்டடங்களைத் தொடர்ந்து எழுப்புவதற்கு அந்த மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி கிடைக்கப்பெற்றால், உடனடியாக வகுப்புகள் தொடங்கப்படும் என்ற முறையிலே அந்தக் கட்டடங்களைத் தொடர்ந்து கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் காலையிலே சொன்னேன். அறிவிப்புச் செய்தார்களேயொழிய, விண்ணப்பமே கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அந்தக் கல்லூரிக்கு அவர்கள் அனுப்பவில்லை. இப்போது நாங்கள் வந்து அதைக் கண்டுபிடித்து, விண்ணப்பத்தை சென்ற வாரம்தான் அனுப்பியிருக்கிறோம். எவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுத்து அதைப் பெற்றுத் தர முடியுமோ, அதைப் பெற்றுத் தர நாங்கள் தயாராக இருக்கிறோம். இதுவரை 3.00 கோடி ரூபாய்தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் கூடுதலான தொகையை இங்கே அரசு ஒதுக்குவதற்குத் தயாராக இருக்கிறது. இருந்தாலும், நம்முடைய Medical Council of India- விடமிருந்து உத்தரவினை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதிலே உள்ள ஒரு சங்கடம் என்ன என்று சொன்னால், விண்ணப்பமே அனுப்பவில்லை, இப்போது



நாங்கள் வந்துதான், நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு வந்த பிறகுதான், விண்ணப்பமே அனுப்பப் பட்டிருக்கிறது. ஆகவே, எவ்வளவு விரைவிலே அங்கு ஒரு மருத்துவக் கல்லூரி நிறுவுவதற்கு நீங்கள் விரும்புகிறீர்களோ, அதைப்போலத்தான் இந்த அரசும் விருப்பம் தெரிவித்திருக்கிறது. அதற்கான நடவடிக்கையை நாங்கள் துரிதமாக எடுக்கத் தயாராக இருக்கிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சுந்தராம்பாள், இது கேள்வி நேரம் இல்லை. அவர் உங்கள் ஊர் அமைச்சர். நீங்கள் அவரது அறைக்குப் போய் கேட்டுக்கொள்ளலாம்.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 18 - மருத்துவம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 18-மருத்துவம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை.

திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. இ. புகழேந்தி, இருக்கையில் இல்லை.

திரு. இ. புகழேந்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை.

திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. செல்வி க. பாலபாரதி.



**செல்வி க. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆஸ்டின், இருக்கையில் இல்லை.

திரு. ஆஸ்டின் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை.

திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை.

திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி.என். சிவசுப்பிரமணியன்.

**திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.என். சிவசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை.

திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூபாய் 792,96,54,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஆ) கோரிக்கை எண் 19 - மக்கள் நல்வாழ்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 19-மக்கள் நல்வாழ்வு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. இ. புகழேந்தி, இருக்கையில் இல்லை.

திரு. இ. புகழேந்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை.

திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை.

திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

*பிற்பகல் 7-35*

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. து. நெப்போலியன், இருக்கையில் இல்லை.

திரு. து. நெப்போலியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.ஏ.எம். உசேன், இருக்கையில் இல்லை.

திரு. எஸ்.ஏ.எம். உசேன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூபாய் 541,76,36,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30-8-2001) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 7-36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

- ஏதுமில்லை -

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

33. மானியக் கோரிக்கை எண் 18 - மருத்துவம் மற்றும் கோரிக்கை எண் 19 - மக்கள் நல்வாழ்வு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

34. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் செயல்முறைத் திட்டம், 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)



## இணைப்பு

(60 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### கோரிக்கை எண்கள் 18 மற்றும் 19

### மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு

#### அத்தியாயம் – 1

#### முன்னுரை

'உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து'

– திருவள்ளுவர்

"ஆரோக்கியமான நல்வாழ்வே ஒரு நாட்டின்வலிமைக்கும், மக்களின் மகிழ்ச்சிக்கும்அடித்தளமாகும்."

– பெஞ்சமின் திஸ்ரேலி

மானுட வாழ்வென்பது இப்பூவுலகின் எண்ணற்ற படைப்புகளில் கிடைத்தற்கரிய அழகிய நறுமலர் போன்றதாகும். 'மக்கள் நல்வாழ்வு' என்பது, ஒரு மாநிலம், அனைத்துத் துறைகளிலும் ஆல் போல் தழைக்க ஆணிவேர் போன்றதாம். அதனால் தான் தமிழக அரசு ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க, மாநிலத்தின் மூலை முடுக்குகளிலுள்ள ஒவ்வொரு குடிமகனின் வீட்டு வாசலிலும் தரமான மருத்துவ வசதி கிடைக்க வழி செய்வதோடல்லாமல், உலக மருத்துவ அரங்கில் ஏற்படும் வேகமான தொழில்நுட்ப வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு மிகத் தரம் வாய்ந்த நவீன மருத்துவ வசதிகளை வழங்கவும் உறுதி பூண்டுள்ளது.

ஒவ்வொருவரும் எளிதில் பெறக்கூடிய வகையிலும், அனைவருக்கும் சம அளவிலும் மருத்துவ வசதிகள் அளிப்பதை நோக்கமாகக் கொண்டு, நோய் வருமுன் காக்கவும், வந்த பிணி தீர்க்கவும், மக்கள் நல்வாழ்வை மேம்படுத்தவும் தக்க சேவைகளை, சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் பெற இந்த அரசு ஆவன செய்து வருகிறது. பொதுமக்கள்

தரமான மருத்துவ வசதிகளை எளிதாகப் பெற வழி செய்ய 'நடமாடும் மருத்துவ முகாம் திட்டம்' அறிமுகப்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் எளிதில் அணுகக் கடினமாகவுள்ள இடங்களில் வாழும் ஏழை எளிய மக்கள், ஏலா நிலையிலுள்ளோர் மற்றும் முதியோரின் மருத்துவத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும். இதைத்தவிர, கிராமப்புறங்களில் புற்றுநோய், நீரிழிவு, இரத்த அழுத்தம் மற்றும் இருதய நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சரியான சிகிச்சையளிக்கவும், முதியோர் நலன் காக்கவும் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க,** கிராமப்புறங்கள் சுகாதார வசதிகளில் தன்னிறைவு பெற ஒவ்வோர் ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம், அனைத்து வசதிகளும், சிறப்பு சிகிச்சை வசதியும் கொண்ட 30 படுக்கைகளுடனான மருத்துவமனையாக மேம்படுத்தப்படும்.

கிராமப்புறங்களில் மருத்துவ வசதிகள் வழங்குவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும், நகர்ப்புறங்களில் வாழும் ஏழை எளியோர், குறிப்பாக குடிசைப் பகுதிகளில் வாழும் மக்கள் இன்னமும் மருத்துவ வசதிகள் முற்றிலும் கிடைக்கப் பெறாதவர்களாகவோ முழுமையாகக் கிடைக்கப் பெறாதவர்களாகவோ உள்ளனர். **கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களிடையே உள்ள இத்தகைய ஏற்றத் தாழ்வினைப் போக்கி சமநிலைப்படுத்த "நகர்ப்புற சுகாதாரத் திட்டம்" ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.**

மருத்துவமனைகளில் தடையற்ற மின்சாரம் பெற, படிப்படியாக அனைத்து மருத்துவமனைகளுக்கும் 'மின் ஆக்கிகள்' (Generators) வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. மேலும், **மருத்துவமனைகளிலுள்ள அனைத்து அறுவை சிகிச்சை அரங்கங்களிலும் குளிர்சாதன வசதி செய்யக் கருதப்பட்டுள்ளது.**

புகையிலையினால் புகை பிடிப்பவருக்கும், அவர் அருகிலுள்ளோர்க்கும் ஏற்படக்கூடிய உடல் நலக் கேட்டினையும், பொது இடங்களில் எச்சில் உமிழ்வதால் ஏற்படக்கூடிய சுற்றுப்புற சீர்கேட்டினையும் கருத்தில் கொண்டு, பொது இடங்களில் புகை பிடிப்பதையும், எச்சில் உமிழ்வதையும் தடை செய்ய சட்டம் இயற்றக் கருதப்பட்டுள்ளது. மேலும், குட்கா பொருட்கள் மற்றும் பான் மசாலா உபயோகிப்பதால் சீதப்படலத்தின்கீழ் கட்டிகள் தோன்றி அதன்



காரணமாக வாய் திறக்கமுடியாத நிலை ஏற்படுவது அதிகரித்து வருவதை இந்த அரசு உணர்ந்துள்ளது. **மக்கள், குறிப்பாக இளைஞர்கள் இப்பொருட்களுக்கு அடிமையாவதைத் தடுக்கும் வகையில் குட்கா பொருட்கள் மற்றும் பான் மசாலா மெல்லுவதைத் தடை செய்யும் சட்டம் இயற்றக் கருதப்பட்டுள்ளது.**

தரமான மருந்துப் பொருட்களைக் கொள்முதல் செய்து மருத்துவமனைகளுக்கு விநியோகிக்க கழகம் அமைத்ததில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. 1994ல் தொடங்கப்பட்ட தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் உலக சுகாதார நிறுவனத்தினால் ஒரு முன்மாதிரி நிறுவனமாகக் கருதப்பட்டு ISO-9002 நற்சான்றிதழையும் பெற்றுள்ளது. மருந்துப் பொருட்களின் முறையான விநியோகத்திற்கென 23 இடங்களில் கிடங்குகளைக் கொண்ட இந்நிறுவனத்தின் செயல்பாட்டினை மேம்படுத்த தற்பொழுது வாடகை இடத்திலுள்ள 6 கிடங்குகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை சுகாதாரக் குறியீடுகளின்படி, தமிழ்நாடு இந்தியாவில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டம், போலியோ நோய்த் தடுப்பு சொட்டு மருந்துத் திட்டம், மலேரியா தடுப்புத் திட்டம், எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம், காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம், கண்ணொளி இழப்பு தடுப்புத் திட்டம் மற்றும் தாய் சேய் நலத் திட்டம் ஆகிய திட்டங்கள் இம்மாநிலத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சுகாதாரம் தொடர்புடைய திட்டங்கள் மேலும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட, மாவட்ட தலைமைப் பொறுப்பிலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பல்வேறு துறைகளின் ஒத்துழைப்பையும் பெற சீரிய பங்காற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு மகளிர் உரிமை ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்திற்கேற்ப, இவ்வாண்டில் மகளிர் நலனை மையமாகக் கொண்ட பல்வேறு நலத் திட்டங்கள் செயலாக்கப்படவுள்ளன. பெண் சிசுவதையைத் தடுக்க "தொட்டில் குழந்தைத் திட்டம்" மற்றும் பெண் குழந்தைகள் நலம் காக்க பரிசுகளும், ஊக்கத் தொகைகளும் அளிக்கும் திட்டங்கள் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது ஆண் குழந்தைகளுக்குச் சாதகமாக உள்ள 'குழந்தைகள் பாலின விகிதம்' அரசுக்குக் கவலை தருவதாக உள்ளது. இந்நிலையை மாற்ற அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும். இதற்காக இவ்வரசு பெண் மருத்துவ

அலுவலர்களை நியமிப்பதில் உள்ள சிக்கல்களைக் களைந்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் பெண் மருத்துவர்களை நியமித்து பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் நல்ல மருத்துவ வசதி அளிக்க முடிவு செய்துள்ளது. மேலும், 1994 ஆம் ஆண்டின், 'பிறப்புக்கு முன்னான நோய் கண்டறியும் தொழில் நுணுக்க (முறைப்படுத்தல் மற்றும் தவறாகப் பயன்படுத்துவதைத் தடை செய்தல்) சட்டத்தைத்' தீவிரமாகச் செயல்படுத்தி அனைத்து ஸ்கேன் நிலையங்களையும் பதிவு செய்வதோடு, இச்சட்டத்தை மீறுபவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது '1000 பிறப்புகளுக்கு 52' என உள்ள சிசு மரண விகிதத்தை 2005 ஆம் ஆண்டுக்குள் '1000 பிறப்புகளுக்கு 30' ஆகக் குறைக்க இவ்வரசு முனைந்துள்ளது. இம்மாநில அரசின் சுகாதார நலத் திட்டங்கள் நடுத்தர மற்றும் ஏழை மக்களின் தேவையைப் பெருமளவில் பூர்த்தி செய்கின்றன. ஆயினும் போதிய மருத்துவர்கள் மற்றும் உதவிப் பணியாளர்கள் இல்லாதிருப்பது நலப் பணிகளுக்குப் பெரும் இடையூறாக உள்ளது. தற்பொழுது 905 மருத்துவர் பணியிடங்களும், 1508 தொழில்நுட்ப மற்றும் உதவிப் பணியாளர் பணியிடங்களும் காலியாக உள்ளன. இப்பணியிடங்களை நிரப்புவதிலுள்ள தடைகளை நீக்கி பணியாளர்களை நியமிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், வட்டார மருத்துவமனைகள், வட்டம் சாரா மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகிய மருத்துவமனைகளைப் பராமரிக்க பொதுமக்களின் பங்கினை உறுதி செய்ய 'மருத்துவ ஆலோசனைக் குழு' ஒன்று அமைக்கப்படவுள்ளது. மருத்துவமனைகளில் போதிய வசதிகள் செய்யவும், சுற்றுப்புற சுகாதாரத்தினைப் பேணவும் இக்குழு மருத்துவ மனைகளில் பொறுப்பு வகிக்கும் அலுவலர்களுக்கு உதவி செய்யும்.

தரமான மருத்துவ வசதிகளை அனைத்துத் தரப்பு மக்களும் எளிதாகப் பெற வகை செய்வதே இந்த அரசின் நோக்கமாயினும், நிதிநிலை ஒரு பெரும் தடைக்கல்லாய் அமைந்துள்ளது. சமுதாயத்தின் அதிகரித்து வரும் சுகாதாரத் தேவைகளுக்கும் நிதி ஆதாரத்திற்கும் இடையேயுள்ள இடைவெளியைப் போக்க, சமுதாயத்தில் நல்ல நிதி வசதியிலுள்ளோர் உதவிக் கரம் நீட்டலாம். தனியார் நிதியுதவி செய்வதை உற்சாகப்படுத்தும் விதமாக, இந்த அரசு ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளது. இத்திட்டத்தின்படி, ரூ.50 இலட்சத்திற்கு மேலாக நிதியுதவி செய்யும்



தனியார், அவரது உதவியால் ஏற்படுத்தப்படும் மருத்துவமனையின் பிரிவுக்குப் பெயரிடும் தகுதி பெறுவார். இத்திட்டம், சுகாதார வசதி மேம்பாட்டிற்கென மக்கட் பணி ஆர்வலர்களிடமிருந்து அதிக நிதியுதவி பெற வழிவகை செய்யும்.

2001-2002 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி ரூ.1,334.72 கோடி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு கோரிக்கைகளின்கீழ் பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு தமிழ்நாடு மாநில வரவு-செலவுத் திட்டத்திற்கான மொத்த வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.24,522 கோடியில் 5.44 சதவீதம் ஆகும்.

(ரூ. கோடியில்)

| மானியம் | திட்டத்தில் சேராதது | திட்டப் பணிகள் | | | |
|---|---|---|---|---|---|
| | | மாநிலத் திட்டம் | மத்திய அரசு பொறுப் பேற்பவை | மத்திய அரசின் நிதி உதவி பெறுபவை | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 18 மருத்துவம் | 748.70 | 28.30 | 8.37 | 2.98 | 39.65 |
| 19 மக்கள் நல்வாழ்வு | 244.08 | 54.39 | 177.38 | 61.68 | 293.45 |
| மொத்தம் | 992.78 | 82.69 | 185.75 | 64.66 | 333.10 |

(ரூ. கோடியில்)

| மானியம் | திட்டப் பணிகள் மற்றும் திட்டத்தில் சேராதது | திரும்ப வசூலிக்கப் பட்டவை கூட்டப்பட வேண்டியது | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (7) | (8) | (9) |
| 18 மருத்துவம் | 788.35 | 4.61 | 792.96 |
| 19 மக்கள் நல்வாழ்வு | 537.53 | 4.23 | 541.76 |
| மொத்தம் | 1325.88 | 8.84 | 1334.72 |

[2001 ஆகஸ்ட் 29

அரசு மருத்துவமனை மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்காக மூலதனச் செலவு மதிப்பீட்டில் ரூ.66.37 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின்கீழ் உள்ள பல்வேறு இயக்ககங்களுக்கு கோரிக்கை எண் 18–மருத்துவம் மற்றும் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு ஆகியவற்றின்கீழ் 2001–2002 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட தொகையின் விவரம் வருமாறு:

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | மருத்துவக் கல்வி இயக்ககம் | 39239.24 |
| 2. | மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் | 24900.12 |
| 3. | தொழிலாளர் காப்பீட்டுறுதி திட்டம் | 9098.75 |
| 4. | பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககம் (ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட) | 39496.20 |
| 5. | குடும்ப நல இயக்ககம் | 9448.07 |
| 6. | மருந்து கட்டுப்பாடு இயக்ககம் | 459.25 |
| 7. | இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம் | 4492.14 |
| 8. | டேனிடா தமிழ்நாடு பகுதி நல்வாழ்வு திட்ட இயக்ககம் | 930.74 |
| 9. | பேறுகாா் மற்றும் குழந்தை நலத்திட்ட இயக்ககம் | 673.42 |
| 10 | தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத்துறை | 788.76 |
| 11 | தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்), பொதுப் பணித் துறை (மருத்துவம் மற்றும் பொது சுகாதார நிலையங்களின் பராமரிப்பு மற்றும் செப்பனிடும் பணிகளுக்காக) | 2970.89 |
| 12 | இதர இனங்கள் | 90.99 |
| 13 | திரும்ப வசூலிக்கப்பட்டவை - கூட்டப்பட வேண்டியது | 884.33 |
| | மொத்தம் | 133472.90 |



2001 ஆகஸ்ட் 29]

1. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்திற்கான நிதி, மருத்துவக் கல்வி இயக்ககத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு மாநில கண்ணொளி இழப்புத் தடுப்பு சங்கத்திற்கான நிதி, மருத்துவக் கல்வி இயக்ககம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம் மற்றும் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திற்கான நிதி, மருத்துவக் கல்வி இயக்ககம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம் மற்றும் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் – 2

## மருத்துவக் கல்வி

மருத்துவக் கல்வி இயக்ககம் 1966 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. மருத்துவக் கல்வி இயக்ககத்தின் முதன்மைக் குறிக்கோள்கள் பின்வருமாறு இன வாரியாக விரிவாகப் பிரிக்கப்படுகிறது.

1. மருத்துவக் கல்வியை மேம்படுத்துதல்

2. நற்பயனளிக்கும் வகையில் மருத்துவ நிலையங்களைக் கண்காணித்தல்

3. மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவ நிலையங்களை நிர்வகித்தல்

### மருத்துவ நிலையங்கள்:

தற்போது இம்மாநிலத்தில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகளும், 1 அரசு பல் மருத்துவக் கல்லூரியும், 2 இயற்பியல் கல்லூரிகள் மற்றும் 1 செவிலியர் பயிற்சிக் கல்லூரியும் உள்ளன. இந்த 11 மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மொத்தம் 1055 மற்றும் ஒரு பல் மருத்துவக் கல்லூரியில் 60 பேர். இந்த மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கையை அதிகரிப்பதைக் கருத்தில் கொண்டு வேலூர் மற்றும் கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு அங்கீகாரம் பெற இந்த அரசு முனைப்பான நடவடிக்கை எடுத்து வருகிறது.

[2001 ஆகஸ்ட் 29

**பட்ட மேற்படிப்பு:**

மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மேற்படிப்பு விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| படிப்பு | சிறப்பு மருத்துவ எண்ணிக்கை | மாணவர்களின் மொத்த சேர்க்கை |
|---|---|---|
| பட்ட மேற்படிப்பு | 23 | 302 |
| பட்டய மேற்படிப்பு | 17 | 349 |
| மேல்நிலை பல் மருத்துவம் | 7 | 14 |
| உயர் சிறப்பு மேற்படிப்பு | 12 | 69 |

இந்த மாநிலத்தில் உள்ள சுயநிதி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவம் சார்ந்த படிப்புக்கான கல்லூரிகளின் விவரம் கீழ்வருமாறு:

| | |
|---|---|
| மருத்துவ கல்லூரிகள் | 3 |
| பல் மருத்துவக் கல்லூரிகள் | 10 |
| பி. பார்மஸி | 32 |
| பி.பி.டி. | 40 |
| பி.எஸ்.சி (செவிலியர்) | 34 |
| பி.ஓ.டி | 6 |

**தேர்வு முறை:**

எம்.பி.பி.எஸ்/ பி.டி.எஸ்/ பி.எஸ்.ஸி (செவிலியர்) / பி.பி.டி./ பி.ஓ.டி. / பி.பார்மஸி ஆகிய ட்டப் படிப்பிற்கு மருத்துவக் கல்வி இயக்குநரின் தலைமையிலான தேர்வுக் குழு ஒவ்வொரு வருடமும் அரசின் கொள்கைக்கிணங்க ஒற்றைச் சாளர முறையில் தேர்ந்தெடுக்கிறது. மேநிலை



2001 ஆகஸ்ட் 29]

மருத்துவம், மேல்நிலை பல் மருத்துவம் மற்றும் சிறப்பு மருத்துவம் உள்ளடக்கிய இடங்களுக்கு, நுழைவுத் தேர்வினைத் தொடர்ந்து கலந்தாய்வு மூலம் தேர்வுக் குழுவால் மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

இவ்வருடம் அரசு சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களிலுள்ள இடங்களை ஒற்றைச் சாளர முறையில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மருத்துவக் கல்விக்கு கிராமப்புற மாணவர்களின் சேர்க்கைக்கு 15 சதவீதம் ஒதுக்கீடு அளிக்கப்பட்டபோதும் அம்மாணவர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தினைக் கருத்தில் கொண்டு, அரசு கிராமப்புற மாணவர்களின் சேர்க்கை ஒதுக்கீட்டை 15 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக உயர்த்தி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மருத்துவக் கல்லூரிகளில் கிராமப்புற மாணவர்களின் சேர்க்கை அதிகரித்திட இந்த நடவடிக்கை வழிவகை செய்யும்.

**மருத்துவம் சாரா மற்றும் மருந்தாளுநர் பயிற்சிக் கல்வி:**

அரசினால் நடத்தப்படும் மருத்துவம் சாரா மற்றும் மருந்தாக்கியர் பயிற்சி நிலையங்களின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகின்றன.

| பயிற்சி வகை | நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கை |
|---|---|---|
| பி. பார்மஸி | 2 | 100 |
| பி.எஸ்ஸி. | 1 | 25 |
| பி.பி.டி. | 2 | 50 |

மேற்கண்ட நிலையங்கள் தவிர பட்டயப் படிப்பு அளிக்கும் வகையில் 9 செவிலியர் பயிற்சி பள்ளிகள் அரசினால் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றையும் சேர்த்து மொத்த மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கை 725 ஆக உள்ளது.

**மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்:**

தற்போது மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த முழுமையான வசதிகளுடன் கூடிய 41 மருத்துவமனைகள் மொத்தம் 19,677 படுக்கை வசதிகளுடன் இயங்கி வருகின்றன. இம்மருத்துவ மனைகளில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 19,516 உ.ள் நோயாளிகளும், 61,302 வெளி நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், குறிப்பாக நகர்ப்புறங்களில் சுகாதாரப் பணியில் முதுகெலும்பாகத் திகழ்கின்றன. இம்மருத்துவ மனைகள் கிராமப்புறங்களிலிருந்து வரும் நோயாளிகளுக்கு மேற்சிகிச்சை மருத்துவமனைகளாகவும் பயன்படுகின்றன. இம்மருத்துவமனைகளில் இலவசமாக சிகிச்சை அளிக்கப்படுவதால் அதிக அளவில் ஏழைப் பொதுமக்கள் இம்மருத்துவமனைகளில் உள்ள வசதிகளைப் பெருமளவில் பெறுகிறார்கள். பொதுமக்களுக்கு மிகச் சிறந்த, நாட்டிலேயே சிறப்பான, ஒப்பற்ற மருத்துவ வசதி செய்யும் பொருட்டு, உபகரணங்கள் எப்போதும் இயங்கும் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையினை அடைய கீழ்க்கண்ட வகையில் சில நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளன.

**நடப்பு நடவடிக்கைகள்:**

அ. ரூ.9.6 கோடி செலவில் இரண்டு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகள், சென்னை பொது மருத்துவமனையிலும், மதுரை அரசு இராசாசி மருத்துவமனையிலும் நிறுவப்பட்டு வருகின்றன. இது அரசுத் துறையில் முதலாவதாகும். மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் நிறுவப்படும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் தென் மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் தனியார் துறையில் முதன்மையானது ஆகும்.

ஆ. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிக அளவு புற்று நோய் கண்டறியப்படுவதைக் கருத்திற்கொண்டு, புற்று நோயாளிகளுக்குப் பெருமளவில் சிகிச்சை அளிக்க ரூ.4.5 கோடியில் 3 கோபால்ட் தெரபி கருவிகளும் மற்றும் ரூ.90 இலட்சத்தில் மூன்று மெமோகிராபி கருவிகளும் நிறுவப்படும்.

இ. சென்னை அரசு பொது மருத்துவமனையை எல்லா சிறப்பு வசதிகளுடன்கூடிய சிறந்த மருத்துவமனையாகத் திகழும் வகையில், ரூ.104 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்ட முடிவு எடுத்து ஆரம்பக் கட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன.



ஈ. சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் கை சீரமைப்பு ஆராய்ச்சி மற்றும் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சைத் துறைக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.10 கோடி மதிப்பீட்டுத் தொகை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

**எதிர்காலத் திட்டம்:**

அ. அனைத்து மருத்துவமனைகளிலும் மின் வெட்டுக் காலங்களில் தங்கு தடையற்ற மின் சக்தி கிடைக்கும் வகையில் மின்னாக்கிக் கருவிகளை அளித்திட 2001-2002 நிதி ஆண்டில் ரூ.1.32 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆ. அனைத்து அறுவை சிகிச்சை அரங்குகளிலும் குளிர்சாதன வசதிகள் ஏற்படுத்தப்படும்.

இ. பல தனியார் மருத்துவமனைகளில் பயிற்சி பெறாத செவிலியர்கள் நியமிக்கப்படுவது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, பயிற்சி பெற்ற மருத்துவம் சாரா பணியாளர்கள் இருந்தாலொழிய, ஒருங்கிணைந்த மற்றும் தரம் வாய்ந்த சிகிச்சை அளிக்க இயலாது. எனவே, மாநிலத்திலுள்ள ஒவ்வோர் அரசு மருத்துவக் கல்லூரியிலும் செவிலியர் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக் கூறுகளை அரசு ஆராய்ந்து வருகிறது.

ஈ. அரசு மருத்துவமனைகளில் தரமான சுகாதாரப் பணிகள் கிடைத்திட, அதி நவீன கருவிகள் பொருத்திட ரூ.86 கோடி மொத்த மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, இத்திட்டம் பின்லாந்து அரசின் தொழில் நுட்ப உதவி மற்றும் நிதியுதவியுடன் அமலாக்கப்பட உள்ளது.

இந்தத் திட்டத்தின் மொத்தத் தொகை ரூ.86 கோடியில் 30 சதவீதம் மானியம், மீதம் 70 சதவீதம் கடனாகும். இத்திட்டத்தின்கீழ் 29 மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவமனைகளில் 967 மருத்துவக் கருவிகள் நிறுவப்படும். இதற்கான ஒப்பந்தம் தமிழக அரசு மற்றும் திருவாளர்கள் தெர்மோ பிராஜக்ட், பின்லாந்து இடையே கையெழுத்தாகியுள்ளது.

**கிங் நோய்த் தடுப்பு மருத்துவ நிலையம், கிண்டி:**

இந்நாட்டின் தொன்மையான முன்னோடி நிலையமாக கிண்டி நோய்த் தடுப்பு கிங் மருத்துவ நிலையம் அமைந்துள்ளது. இந்த நிலையம்

[2001 ஆகஸ்ட் 29

தடுப்பூசிகள் மற்றும் சீரம் ஆகியவற்றைத் தயாரிக்கிறது. இது பயிற்சி போதனை மற்றும் ஆராய்ச்சி நிலையமாகத் திகழ்கிறது. இந்நிலையம் தனது முதன்மைத் தன்மையை நிலைநிறுத்திக்கொள்ளும் வகையில் தடுப்பூசிகள் தயாரிக்கும் வண்ணம் "திசுக்கள் ஆராய்ச்சி" நடத்தவும் திட்டமிட்டுள்ளது.

**தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம்:**

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் ஜூலை 1988 ஆம் ஆண்டு முதல் 44 இணைக்கப்பட்ட மருத்துவ நிலையங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பட்ட மேற்படிப்பு மற்றும் மருத்துவ ஆராய்ச்சி வசதிகள் அவ்வப்போது மேற்கொள்ள திட்ட நிகழ்ச்சிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. தற்போது இப்பல்கலைக்கழகம் தனது ஆளுகைக்குள் 194 இணைப்பு மருத்துவ நிலையங்களைக் கொண்டுள்ளது.

அமெரிக்காவின் போஸ்டன் இன்டர்நேசனல் மருத்துவ மையம், தரைத் தொடர்பு நிலையம் மற்றும் அதன் தொடர்புடைய கருவிகளைக் கொண்ட ஒன்றரை இலட்சம் டாலர்கள் மதிப்புள்ள சாதனங்களை நிறுவியுள்ளது. இதன் ஒளிபரப்பு மையம் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு அதன் நிகழ்ச்சிகளைப் பெறும் மையம், சென்னை, அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் இயங்கி வருகிறது.

இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவக் கல்லூரிகளில் பணியாற்றும் மருத்துவர்கள் மற்றும் நூலகர்களுக்கு ரூ.10 இலட்சம் செலவில் கணினி விழிப்புணர்வுப் பயிற்சி நடத்தியுள்ளது. இதன் மூலம் 650 பயிற்சியாளர்கள் பயன் பெற்றுள்ளனர். மருத்துவ ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சிகளையும் மற்றும் இரத்த வங்கி மருத்துவ அலுவலர்கள், தொழில் நுட்பனர்கள் மற்றும் சமூகப் பணியாளர்கள் ஆகியோருக்கும் திட்டமிட்ட வகுப்புகளை இப்பல்கலைக்கழகம் நடத்தி வருகின்றது.

திட்டக் குழு மற்றும் பல்கலைக்கழகப் பங்களிப்பு நிதியுதவியுடன் இப்பல்கலைக்கழகத்தில் ரூ.34 இலட்சம் செலவில் டிஜிட்டல் நூலகம் ஒன்றினை நிறுவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு ரூ.1.5 கோடி அரசு மானிய தொகை தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.



2001 ஆகஸ்ட் 29]

**2001–2002 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டப் பணிகள் விவரம் | இறுதி நிலைச் செலவு |
|---|---|---|
| 1. | சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 24 மணி நேர உயிர்வேதியியல் துறை ஆய்வகத்திற்கு கருவிகள் வாங்குதல். | 13.65 |
| 2. | சேலம், மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் மைய எரிவாயு மையம் ஏற்படுத்துதல். | 1.00 |
| 3. | செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கற்பட்டு 12 உடல்களை வைக்க கொள்ளளவு கொண்ட பிணவறைக்கு 3 டி.ஆர். கொள்ளளவு கொண்ட குளிர்சாதன கருவி பொருத்துவது. | 19.89 |
| 4. | செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கற்பட்டு தீவிர இருதய சிகிச்சைப் பிரிவிற்கு கருவிகள் வாங்குதல் | 10.00 |
| 5. | திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி பிணவறைக்கு 2 குளிர்சாதன கருவிகள் வாங்குதல். | 2.30 |
| 6. | மதுரை, இராசாசி மருத்துவமனை குழந்தைகள் நல பிரிவில் பச்சிளம் குழந்தைகள் பிரிவிற்கு கருவிகள் வாங்குதல். | 4.65 |
| 7. | இந்திய மருத்துவ கழக விதிகளுக்கு ஏற்ப அரசு மருத்துவமனைகளின் அறுவை கூடங்கள், தீவிர மருத்துவ சிகிச்சைப்பிரிவு, தலைக்காய பிரிவு, தீவிர சுவாச சிகிச்சைப் பிரிவு மற்றும் நெருப்பு காயம் பட்ட உள்நோயாளிகள் பிரிவிற்கு குளிர் சாதன வசதி ஏற்படுத்துதல். | 30.00 |
| 8. | சென்னை இராயப்பேட்டை மருத்துவமனையின் மின் தூக்கியை மாற்றியமைத்திடல். | 14.00 |
| 9. | தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, சென்னை மேற்பட்டப்படிப்பு கட்டடத்தின் மேல் கூடுதலாக ஒரு மாடி கட்டிடம் கட்ட. | 80.00 |

| | | |
|---|---|---|
| 10. | சென்னை,கிண்டி, அரசு நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் வெறிநாய் கடி தடுப்பு மருந்து மையத்தில் திசுக்கள் ஆராய்ச்சி ஏற்படுத்துதல். | 24.00 |
| 11. | சென்னை, அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனையின் மகளிர் நோய் மகப்பேறு சிறுநீரக இயல் துறையை மேம்படுத்துதல். | 47.00 |
| 12. | சென்னை, மண்டல கண் இயல் நிலையம் மற்றும் அரசினர் கண் மருத்துவமனையில் புதிய எலக்ட்ரானிக் தொலைபேசி இணைப்பகம் ஏற்படுத்துதல். | 10.00 |
| 13. | சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தீவிர சிகிச்சைப் பிரிவை மேம்படுத்துதல். | 10.27 |
| 14. | மதுரை, இராசாசி மருத்துவமனை தீவிர சுவாச சிகிச்சைப் பிரிவை மேம்படுத்துதல். | 1.73 |
| 15. | சென்னை, மகப்பேறு மகளிர் நோயியல் நிலையம் மற்றும் அரசினர் தாய் சேய் மருத்துவமனையின் மயக்கவியல் பிரிவை வலுப்படுத்துதல். | 2.00 |
| 16. | சென்னை, அரசினர் ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனைக்கு அல்ட்ரா சவுண்டு ஸ்கேனர் கருவி வாங்குதல். | 13.00 |
| 17. | சென்னை, கே.கே நகர், அரசு புறநகர் மருத்துவமனைக்கு கருவிகள் வாங்குதல். | 13.70 |
| 18. | மதுரை, அரசு இராசாசி மருத்துவமனைக்கு எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவை மேம்படுத்துதல். | 11.50 |
| 19. | மருத்துவ நிறுவனங்களில் உள்ள 20 நோயாளர் ஊர்திகளை மாற்றுதல். | 80.00 |
| 20. | சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அறுவை பகுதி கட்டிடத்தின் மின் தூக்கிகளை மாற்றியமைத்தல். | 20.00 |



| | | |
|---|---|---|
| 21. | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர், மின் தூக்கியை மாற்றியமைத்தல். | 20.00 |
| 22. | சென்னை, ஸ்டான்லி மருத்துவமனை பிணவறையில் கூடுதலாக உடல்களை வைக்க குளிர் சாதன வசதி ஏற்படுத்துதல். | 6.00 |
| 23. | மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் குடல் அழற்சி சிகிச்சை இயல் பிரிவுக்காக மேல் இரைப்பைப் பகுதி நோய் ஆய்வு, கீழ் இரைப்பைப் பகுதி நோய் வசதிகளுடன் கூடிய "என்டாஸ்கோப்" சாதனம் வாங்குதல். | 10.00 |
| 24. | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் நடமாடும் ஊடுகதிர் இயந்திரம் வாங்குதல் | 7.00 |
| 25. | செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கற்பட்டு உயிர் வேதியியல் துறைக்கு கருவிகள் வாங்குதல் | 2.40 |
| 26. | சென்னை தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு இந்திய பல் மருத்துவக் கழக விதிகளுக்கு ஏற்ப புதிய பல் மருத்துவ சிகிச்சை நாற்காலிகள் வாங்குதல். | 31.06 |
| | மொத்தம் | 485.15 |
| | | |

## அத்தியாயம் - 3

## மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம்

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், சங்கிலித் தொடர்போல் இணைக்கப் பெற்ற 25 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், 162 வட்ட மருத்துவமனைகள், 79 வட்டம் சாரா மருத்துவமனைகள், 12 மருந்தகங்கள் வாயிலாக மருத்துவப் பராமரிப்பு சேவை வழங்கும் பொறுப்பில் இருக்கிறார். மேலும் காசநோய், மனநலம், எச்.ஐ.வி மற்றும் இரத்த வங்கி போன்ற பல்வேறு மருத்துவப் பணிகள் திட்டத்தைத் திட்டமிட்டு செயல்படுத்துவதும் அவரது பொறுப்பாகும். மாநிலத்தில் சங்கிலித் தொடர்போல் அமைந்த மருத்துவப் பணிகளில் வட்டம் சாரா மருத்துவமனைகளும், வட்ட மருத்துவமனைகளும் முதலாவது மேல் சிகிச்சை நிலையங்களாக அமைந்துள்ளன. 25 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளும் இரண்டாவது மேல் சிகிச்சை நிலையங்களாகும். கிராமப்புற மக்களுக்கு நல்ல மருத்துவ சேவை வழங்க, இந்த மருத்துவமனைகளில் மருத்துவ வசதிகளை விரிவாக்கம் செய்து மேம்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும்.

மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவ சிகிச்சை, கண்நோய் சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை சிகிச்சை, பல் சிகிச்சை, குழந்தை நலம், இந்திய மருத்துவம் மற்றும் விபத்துக்கு உள்ளானவர்களுக்கு அவசர ஐசியு. சேவை போன்ற சிறப்பு சிகிச்சைகள் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் மருத்துவம் மற்றும் சுகாதாரத் திட்டங்களை மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் கண்காணித்து செயல்படுத்தி வருகின்றன. சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் குடும்ப நலம் உள்ளிட்ட அனைத்து மருத்துவ நலத் திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணிப்பது நலப் பணிகள் இணை இயக்குநர்களின் பொறுப்பாகும். மேலும், கண்ணொளி இழப்பு மற்றும் எய்ட்ஸ் தடுப்புத் திட்டங்கள், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டம் போன்ற திட்டங்களை செயல்படுத்த பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல் படுகிறார்கள்.

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகளில் 21,389 படுக்கை வசதிகள் உள்ளன. ஒரு நாளைய சராசரி உள்நோயாளர் எண்ணிக்கை 17,315 ஆகும். வெளிநோயாளர் எண்ணிக்கை 1,69,800 ஆகும்.



வட்டம் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் சிறந்த மருத்துவ நல சேவைகளை வழங்கும் நோக்கத்திலும், பெரிய நகரங்களில் அமைந்துள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நோயாளிகளின் நெருக்கத்தைக் குறைக்கவும், மாவட்ட மற்றும் வட்ட மருத்துவமனைகளில் சாதனங்கள் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. அறுவை அரங்குகளுக்குப் படிப்படியான முறையில் குளிர்சாதன வசதி அமைக்கவும் மருத்துவமனைகளுக்கு மின் ஆக்கி (Generator) வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. விபத்தினால் ஏற்படும் உயிரிழப்பைக் குறைக்க விபத்து நேரக்கூடிய பகுதிகளில் அமைந்துள்ள மருத்துவ மனைகளில் படிப்படியான முறையில் அவசர சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்படும்.

தொடர்பற்ற, நெடுந்தொலைவில் வாழும் மக்களின் வீட்டிற்கருகிலேயே மருத்துவ நல சேவை வழங்க, நடமாடும் சுகாதாரப் பராமரிப்பு நிலையங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் மேம்பாட்டுத் திட்டம்:

தற்போதுள்ள மருத்துவப் பணிகளை மேம்படுத்தும் நோக்கமாக ரூ.650 கோடி செலவில் ஒரு கருத்துரு உருவாக்கப்பட்டு மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் 'தமிழ்நாடு சுகாதார அமைப்புகளை மேம்படுத்தும் திட்டம்' என அழைக்கப்படும். இத்திட்டத்திற்கான நிதி, உலக வங்கியால் வழங்கப்பட்டு, ஐந்து வருட காலத்தில் செயல்படுத்தப்படும்.

1. முதல் நிலை சிகிச்சை மருத்துவ மனைகளை மேம்படுத்துதல்

2. இரண்டாம் நிலை மருத்துவமனைகளை மேம்படுத்துதல்

3. சுகாதார துணைநிலையங்களைக் கட்டுதல்

4. மனநல சிகிச்சைத் திட்டம், பல் சிகிச்சைத் திட்டம் மற்றும் பொதுச் சுகாதாரத் திட்டம் ஆகியவற்றை மேம்படுத்துதல்

5. நெடுஞ்சாலை விபத்து நிவாரண மற்றும் ரோந்துப் பணிகள் திட்டம்

6. மருந்துப் பரிசோதனைக் கூடங்கள் மூலமாக மருந்துகள் வழங்குதல்

7. நோய் அறிதல் வசதிகளை மேம்படுத்துதல்

*இந்தத் திட்டத்திற்கான ஒப்புதல் உலக வங்கியிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.*

**தமிழ்நாட்டில், பிறப்பிற்கு முன் கருவை அறியும் தொழில் நுட்ப முறை (வரன்முறை மற்றும் தவறான பயன்பாட்டினைத் தடுத்தல்) சட்டம், 1994-ன் செயல்பாடு**

*இதற்காக மாநில மற்றும் மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், இச்சட்டத்தினை அமல்படுத்தும் மாநில அமலாக்க அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.*

*மாவட்ட அளவில், இச்சட்டத்தை அமல்படுத்தும் அமலாக்க அலுவலராக, உறுப்பினர்களுடன், அந்தந்த மாவட்ட நலப் பணிகள் இணை இயக்குநர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.*

*சமீபத்தில், அதாவது 23-6-01 அன்று வெளியிடப்பட்ட அரசு செய்திக் குறிப்பில், இச்சட்டத்தின்கீழ் தொழில்நுட்பக் கருவிகளை கருவின் பாலினத்தைத் தெரியப்படுத்த தவறாகப் பயன்படுத்துதல் போன்ற தவறுகளில் ஈடுபடும் மருத்துவர்கள், அவர்களின் மருத்துவத் தொழில் பதிவுரிமையை இழக்க நேரிடும் என எச்சரிக்கப்பட்டுள்ளனர்.*

*மேலும் இச்சட்டத்தின்கீழ், பதிவு செய்யாமலிருத்தல் மற்றும் இத்தகைய தொழில் நுட்பக் கருவிகளை கருவின் பாலினத்தைத் தெரியப்படுத்த தவறாகப் பயன்படுத்துதல் போன்ற குற்றச் செயல்கள், 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் ரூ.50,000/- வரை அபராதமும் விதிக்கத்தக்க, ஜாமீனில் வெளிவர முடியாத மற்றும் மனமொத்து தங்களுக்கிடையே தீர்வு காண இயலாத குற்றங்களாகும். இத்தொழில் நுட்பக் கருவிகள் மருத்துவ சிகிச்சைக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.*

*பிறப்பிற்கு முன், கருவை அறியும் தொழில்நுட்ப முறைகளில் ஈடுபட்டுள்ள அமைப்புகள் அனைத்தும் பதிவு செய்துகொள்ளும் பணி தற்பொழுது நடைபெற்று வருகிறது.*

**மன நல மருத்துவத் திட்டம்**

***6-8-2001 அன்று ஏர்வாடி தனியார் மனநலக் காப்பகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 28 பேர் மரணமுற்றதைக் கருத்தில் கொண்டு, மனநோயால் பாதிக்கப்பட்டோருக்கு அனைத்து மருத்துவ***



***வசதிகளையும் உடனடியாக நல்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.*** *அதனடிப்படையில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:*

*1) எல்லா தனியார் மன நலக் காப்பகங்கள் மற்றும் மருத்துவமனைகள், மன நோய் சுகாதாரச் சட்டம் 1987ன்கீழ் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.*

*2) ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின்கீழ் கண்காணிப்புக் குழுமம் அமைக்கப்பட்டு, மனநோய்க் காப்பகங்களின் செயல் முறைகள் கண்காணிக்கப்படும்.*

*3) விதிமுறைகளுக்கு மாறாகச் செயல்படும் மனநலக்காப்பகங்களை மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*4) மன நோயாளிகள் சங்கிலியால் பிணைக்கப்படுவதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.*

*5) இராமநாதபுரம் ஏர்வாடியிலுள்ள அனைத்து மனநலக் காப்பகங்களும் மூடப்பட்டன.*

***6) 1 கோடி ரூபாய் செலவில் மாவட்ட மன நல மருத்துவத் திட்டம் இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் மதுரை மாவட்டத்திற்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.***

*7) மனநோயால் பூரண குணம் பெற்று, புகலிடமற்றோருக்கு, முதியோர் இல்லங்களில் புகலிடம் அளிக்கப்பட்டு, முதியோர் ஓய்வூதியம் பெற வகை செய்யப்பட்டுள்ளது.*

***8) மனநோய் மருந்தகங்கள் இல்லாத மாவட்டங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, 14 மனநோய் மருத்துவர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு, மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் மனநோய் மருந்தகங்கள் அமைக்கப்படும்.***

**திருச்சியில் மன நல மருத்துவத் திட்டம்**

*திருச்சி மாவட்டத்திலுள்ள நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கு, மனநோயிலிருந்து நிவாரணம் பெறவேண்டி, மனநல மருத்துவத் திட்டமொன்று 1997 முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், மனநோய் மருத்துவர், மனநோய் ஆய்வாளர், மனநோய் சமூக நல ஊழியர்,*

செவிலியர் மற்றும் இதர அலுவலர்களை உள்ளடக்கிய நடமாடும் குழு, திருச்சியைச் சுற்றியுள்ள கிராமங்களுக்குச் சென்று, மனநோயாளிகளைக் கண்டறிந்து, ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்ட மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட மருத்துவமனைகள் மூலமாக வைத்தியம் செய்து தக்க மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன. மனநோயின் தன்மையைப் பொறுத்து திருச்சி மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சைக்கு வழிவகை செய்யப்பட்டு வருகிறது. இதற்காக சில படுக்கைகள் கொண்ட மனநோய்ப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மனநோய் பற்றிய தகவல்களும், விளக்கங்களும் பொது மக்களுக்குப் புரியும் வகையில் இயம்பப்பட்டு வருகின்றன. சென்னை மனநல மருத்துவமனையின் இயக்குநர் இத்திட்டத்தை நடத்தி வருகிறார்.

**இராமநாதபுரத்திலும், மதுரையிலுள்ள உசிலம்பட்டியிலும் மன நல மருத்துவத் திட்டம்**

மனநலத் திட்டம் திருச்சியில் வெற்றிகரமாகச் செயல்படுவதால், இத்திட்டம் இராமநாதபுரம் மற்றும் மதுரை மாவட்டத்தில் உள்ள உசிலம்பட்டியில் இந்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம், மேற்படி கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு மனநோய் மருத்துவ நிவாரணம் அளிக்கும் வகையில் செயல்படவுள்ளது.

**தமிழ்நாடு மாநில நோயாளர் நிதியுதவி அமைப்பு:**

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு அச்சுறுத்தும் நோயால் பாதிக்கப்பட்டிருந்தால் மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டி சுகாதாரச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு இவ்வமைப்பு நிறுவப்பட்டது. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் இச்சங்கத்தின் உறுப்பினர்-செயலாளராவார்.

உயர்மட்ட சுகாதாரத் துறை அலுவலர்கள் இச்சங்கத்தின் உறுப்பினராகவும் செயல்பட்டு வருகின்றனர். இத்திட்டத்தின்கீழ் சென்னையிலுள்ள அரசினர் பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, கே.எம்.சி. மருத்துவமனை மதுரை இராசாசி மருத்துவமனை மற்றும் நெல்லை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகள் அறுவை சிகிச்சை நடத்தும் இடங்களாகத் தேர்வு செய்யப்பட்டு மேற்படி திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான நிதி மாநில மற்றும் மத்திய அரசுகளால் 2:1



என்ற விகிதாச்சார அடிப்படையில் வழங்கப்படும். இதுவரை இத்திட்டத்திற்கு மத்திய மாநில அரசுகளிடமிருந்து பெறப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூபாய் 15 கோடியாகும். மேற்படி தொகை இத்திட்டத்திற்குச் செலவிடப்பட்டு வருகிறது.

**தனியார் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் நடத்தும் மருத்துவமனைகளுக்கு அரசு வழங்கும் மானியம்**

ஒவ்வோர் ஆண்டும் மருத்துவம் சார்ந்த அரசு சாரா நிறுவனங்களுக்கு (என்.ஜி.ஓ) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு திருப்திகரமாக செயல்பட்டு வருகின்றன என அறியப்பட்ட பின்னர், தவணை முறையில் இந்நிதி வழங்கப்படுகிறது.

**காசநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்**

தமிழ்நாட்டில் சுமார் 10 இலட்சம் காச நோயாளிகள் இருக்கின்றனர். அவர்களில் சுமார் நான்கில் ஒரு பங்கினர் (2.5 இலட்சம்) தொற்று நோயாளிகள். இம்மாநிலத்தில் பத்து காசநோய் நல நிலையங்களும், மருத்துவமனைகளும் உள்ளன. (இவற்றுள் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் ஐந்து அரசு நிலையங்களும் மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் மூன்று அரசு நிலையங்களும், இரண்டு தனியார் நிலையங்களும் உள்ளன. தமிழ்நாட்டில் காசநோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கென்று 3654 படுக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பெரும்பாலான காச நோயாளர்கள் வீடுகளில் இருந்து அருகில் உள்ள மருத்துவ நிலையங்களில் சிகிச்சை பெறுகின்றனர். மாநில அளவில் கூடுதல் இயக்குநர் நிலையில் முழுநேர அலுவலர் ஒருவர் காசநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தினை ஒருங்கிணைப்பதற்கும், கண்காணிப்பதற்கும் செயல்பட்டு வருகிறார். மாவட்ட அளவில் மருத்துவப் பணிகள் துணை இயக்குநர், மாவட்ட காசநோய் அதிகாரியாக மாவட்ட காசநோய் மையத்தைக் கண்காணித்து வருகிறார். காசநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்குத் தேவைப்படுகிற மருந்துகள் மற்றும் கருவிகளுக்கு ஆகும் செலவில் பாதியை மத்திய அரசு தந்து உதவுகிறது. காசநோய் நிலையப் பணியாளர்கள், கட்டடப் பராமரிப்பு, வாகனங்கள் போன்ற செலவு முழுவதையும் மாநில அரசு தருகிறது.

[2001 ஆகஸ்ட் 29

**இலக்கும் சாதனைகளும்**

| ஆண்டு | பொருள் | திட்ட இலக்கு | சாதனை | சதவீதம் |
|---|---|---|---|---|
| 2000-2001 | புதியதாகக் கண்டறியப்பட்ட சளியில் கிருமிகள் உள்ள காச நோயாளிகள் | 30890 | 24533 | 79% |
| | சளி பரிசோதனை செய்யப்பட்ட காச நோய் அறிகுறி உள்ளவர்கள் | 308880 | 384506 | 124% |
| 2001-2002 | மேலே உள்ள இலக்குகளே இந்த வருடத்திற்கும் அனுசரிகப்படவுள்ளது. | | | |

**உலக வங்கி உதவியுடன் செயல்படும் திருத்தப்பட்ட தேசிய காசநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்**

திருத்தியமைக்கப்பட்ட காசநோய் தடுப்புத் திட்டம் உலக சுகாதார நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டம் முந்தைய காசநோய்த் திட்டத்தின் மேம்பாடாகும். சளியில் காசநோய்க் கிருமிகள் உள்ள, நோய் தொற்றும் தன்மையுள்ள, காசநோயைக் குணப்படுத்த இப்புதிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அனைத்து வகைக் காசநோயாளிகளும் 6 மாத குறுகிய கால காசநோய் சிகிச்சை, மிக சக்தி வாய்ந்த மருந்துகள் கொண்டு நேரடிக் கண்காணிப்பில் மருத்துவமனை புறநோயாளிகள் பிரிவில் குணப்படுத்தப்படுகிறார்கள். முதல் இரண்டு மாதங்கள் தீவிர சிகிச்சையும், மீதமுள்ள நான்கு மாதங்கள் தொடர் சிகிச்சையும் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் இதுவரை 22 மாவட்டங்களில் இத்திட்டம் அமலாக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 8 மாவட்டங்களில் (திருவாரூர், கரூர், தேனி, மதுரை, கன்னியாகுமரி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் விருதுநகர்) திருத்தி அமைக்கப்பட்ட காசநோய் தடுப்புத் திட்டத்தின் மூலம் நேரடி மருத்துவ சிகிச்சையினால் குணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.



2001 ஆகஸ்ட் 29]

1) மிகவும் நோய்வாய்ப்பட்ட மற்றும் காசநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு, குறுகிய கால வேதியியல் முறையில் சிகிச்சையளிப்பதன் மூலம் குணமாகும் நோயாளிகளின் எண்ணிக்கை வீதத்தை 85 சதவீதம் வரை உயர்த்தலாம் என்பதை வலியுறுத்தல்.

2) நோய்க்கு சிகிச்சையளிப்பதில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை அடைந்த பின்னர் நோயுற்றவர்களின் எண்ணிக்கையில் 70 சதவீதம் கண்டுபிடிக்க கூடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**புதிய திட்டங்கள் 2001–2002**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டங்களின் விவரம் | இறுதி தொகை |
|---|---|---|
| 1 | மருத்துவமனைகள் உள் கட்டமைப்பை மேம்படுத்துதல் 75 கே.வி.ஏ. திறனுள்ள மின்னாக்கிகளை 6-மாவட்ட தலைமை மருத்துவ மனைகளுக்கு வழங்குதல் | 72.00 |
| 2 | 20 மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் உள்ள அறுவை அரங்குகளில் குளிர்சாதன வசதி ஏற்படுத்துதல். | 17.65 |
| 3 | 21 மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகங்களில் மோடம் கருவியை இணைக்க ஓ.ஒய்.டி. தொலைபேசி வசதி வழங்குதல். | 3.98 |
| 4 | பெரியகுளம் மாவட்ட தலைமை மருத்துவ மனையில் நவீன சமையலறை கட்டிடம் கட்டுவது. | 14.10 |

[2001 ஆகஸ்ட் 29

| வ. எண் | திட்டங்களின் விவரம் | இறுதி தொகை |
|---|---|---|
| 5 | சேலம் மாவட்டம் ஓமலூர் அரசு மருத்துவ மனையில் 10-படுக்கைகளுடன் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுகள் விரிவாக்கம் செய்வது. | 19.00 |
| 6 | மருத்துவமனையில் உள் கட்டமைப்பு மேம்படுத்துதல் 40 கே.வி.ஏ. திறனுள்ள மின்னாக்கிகள் (ஜெனரேட்டர்) 6 - வட்ட மருத்துவ மனைகளுக்கு வழங்குதல். | 60.00 |
| 7 | மன்னார்குடி அரசு மருத்துவமனையில் புறநோயாளர் பிரிவு கட்டுவதன் மூலம் புற நோயாளர் சிகிச்சை வசதிகளை மேம்படுத்துதல். | 7.50 |
| 8 | குளித்துறை மற்றும் ஓசூர் மருத்துவமனைகளில் குளிர்சாதன வசதியுடன் கூடிய பிண அறை கட்டுதலின் மூலம் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல். | 50.00 |
| 9 | இயக்குநரகத்தில் - நிர்வாக பணிகள் மேம்படுத்திட 2 - கணினிகள் மற்றும் அதன் உபகரணங்கள், 2-மோடம்கள், 2 ஸ்கேனர்கள், 2 லேசர்கள் ஆகியவை - மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகத்திற்கு வழங்குவது. | 2.00 |
| 10 | மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகத்தின்கீழ் உள்ள மருத்துவமனைகளுக்கு 20 - ஆம்புலன்ஸ் வாகனம் வழங்குதல். | 80.00 |
| | மொத்தம் | 326.23 |



2001 ஆகஸ்ட் 29]

## அத்தியாயம் - 4

## பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை

பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சமுதாயத்தில் நோய்த் தடுப்பு, நோயின் தன்மை அறிதல் மற்றும் இறப்பு விகிதங்களைக் குறைத்தல் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்ட தேசிய மற்றும் மாநில அரசுகளின் மக்கள் நலப் பணிகளுக்குப் பொறுப்பாகும்.

பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறையின் செயல்பாடுகளில் தாய் சேய் நல சேவை, தடுப்பு ஊசி போடுதல் மற்றும் சொட்டு மருந்து கொடுத்தல், கொள்ளை நோய்த் தடுப்பு, மலேரியா, யானைக்கால் நோய் ஒழிப்பு, தொழுநோய் ஒழிப்பு, உணவுக் கலப்படத்தைத் தடுத்தல், மாணவர்களுக்கு மருத்துவர் பரிசோதனை செய்தல், மக்களுக்கு நலக் கல்வி அளித்தல், பிறப்பு-இறப்புப் பதிவின் மூலம் அடிப்படைப் புள்ளிவிவரங்கள் சேகரித்தல், அயோடின் குறைபாடு நோய்த் தடுப்பு ஆகிய சேவைகள் உள்ளடங்கிய ஆரம்ப சுகாதார நலத் திட்டங்களும் செயல் படுத்தப்படுகின்றன.

### ஆரம்ப சுகாதார நலன்:

ஆரம்ப சுகாதாரப் பணிகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமுதாய நல நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் போன்ற நல அமைப்புகளின் வாயிலாக செழுமைப்படுத்தப்பட்டு, சமுதாய ஒத்துழைப்புடனும், பிற துறைகளின் பங்களிப்புடனும் நோய்த் தடுப்பு, உடல் நல மேம்பாடு, நோய் களைதல் மற்றும் மறுவாழ்வுப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகள் மக்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் 1,410 ஆரம்ப சுகாதார நிலையங்களும் 8,682 துணை சுகாதார நிலையங்களும் உள்ளன. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகளான தொடர் குளிர்சாதனக் கருவிகள், சிறு அறுவை சிகிச்சைகளுக்குத் தேவையான கருவிகள், மகப்பேறு சாதனங்கள், அடிப்படை ஆய்வுகள் செய்வதற்குத் தேவையான வசதிகள், அத்தியாவசிய மற்றும் அவசர கால மருந்துப் பொருட்கள், உள் நோயாளிகளுக்குத் தேவையான படுக்கை வசதிகளும் (ஆரம்ப சுகாதார நிலையத்தில் 6 படுக்கைகள், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் 30 படுக்கைகள், மற்றும் 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையங்களில் 10 படுக்கைகள்) செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அனைத்து

ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் கண் புரை நோய் கண்டறியவும், கதிர் கோட்ட விலகல் கோளாறுகளைச் சரி செய்யத் தேவையான கருவிகளும், சிறு கண் கோளாறுக்கான சிகிச்சை அளிக்க வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இதைத் தவிர, மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஊடுகதிர் இயந்திர சாதனப் பிரிவு மற்றும் அறுவை சிகிச்சை அரங்கமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஈரோடு மாவட்டத்தில் "சென்னிமலை" மற்றும் சேலம் மாவட்டத்தில் "இளம்பிள்ளை" ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அல்ட்ரா சவுண்டு ஸ்கேன் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. திருத்தி அமைக்கப்பட்ட காசநோய் கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ் மருத்துவ ஆய்வுக்கூடங்கள் மேம்படுத்தப்படுகின்றன. மொத்தமுள்ள 1,410 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 25 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மலைவாழ் மக்கள் உள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

250 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் செயல்படுகின்றன. மொத்தமுள்ள 1,410 ஆரம்ப சுகாதார நிலையங்களில், 69 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 6 துணை சுகாதார நிலையங்களும் தொழில் அதிபர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களுக்குத் தேவையான மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் 403.44 இலட்சம் புறநோயாளிகளும் 77,635 உள்நோயாளிகளும் ஆரம்ப சுகாதார நிலையங்களின் வாயிலாக சிகிச்சைப் பெற்று பயனடைந்தனர். 95 விழுக்காடு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசுக் கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன. மொத்தம் 2,855 மருத்துவ அலுவலர்கள் பணிபுரிகின்றனர்.

**ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பெண் மருத்துவர் நியமனம்:**

ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் வரும் நோயாளிகளில் பெரும்பாலானவர்கள் பெண்களும், குழந்தைகளும்தான். ஆனால், இவர்களைக் கவனித்து சிகிச்சை அளிப்பதற்குப் போதுமான பெண் மருத்துவர்கள் இல்லை. தாய் சேய் நல சேவைகளை மேம்படுத்துவதற்கு அரசு ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ஒரு பெண் மருத்துவ அலுவலர் வீதம் நியமிக்க முடிவு செய்து, 350 பெண் மருத்துவ அலுவலர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

24 மணி நேரமும் செயல்படும் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், பிரேதப் பரிசோதனையைத் தவிர, மருத்துவ-சட்ட





இயல் சார்ந்த அனைத்து சேவைகளும் அளிக்கப்படும். இதற்கான ஒரு நாள் பயிற்சி ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துதல்:**

ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 30 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவ நிலையம் ஏற்படுத்துவது அரசின் கொள்கையாகும். இந்நிலையங்களில் சிறப்புத் தகுதி பெற்ற மருத்துவ அலுவலர்கள் இருப்பார்கள். மற்றும் அவர்களுக்குத் தேவையான உபகரணங்களும் இருக்கும். தமிழ்நாட்டில் 385 ஒன்றியங்கள் உள்ளன. பெரும்பாலான ஒன்றியங்களில் மேம்படுத்தப்பட்ட மருத்துவ சிகிச்சைகளை மக்களுக்கு அளிக்கப் போதுமான வசதிகள் உள்ளன. (26 மாவட்ட மருத்துவமனைகள், 162 தாலுக்கா மருத்துவமனைகள் மற்றும் 59 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள்(சமுதாய ஆரம்ப சுகாதார நிலையங்கள்) மீதமுள்ள ஒன்றியங்களுக்கும் 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையங்கள் தேவை. முதற்கட்டமாக 20 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட உள்ளன. மீதமுள்ள ஒன்றியங்களிலும் படிப்படியாக மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படும்.

**நடமாடும் மருத்துவப் பணிகள்:**

நடமாடும் மருத்துவ சேவைக் குழுக்கள் மூலமாக எளிதில் செல்ல முடியாத மற்றும் மிகவும் தொலைதூரத்திலுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான மருத்துவ நல சேவைகள் அளிப்பது இந்த அரசின் கொள்கையாகும். தற்சமயம் தமிழ்நாட்டில் 25 ஆரம்ப சுகாதார நிலையப் பகுதிகளில் எளிதில் செல்ல முடியாத மற்றும் மலைவாழ் பகுதிகளில் வாழும் மக்கள் போதுமான மருத்துவ வசதிகளின்றி வாழ்ந்து வருகின்றனர். இந்தப் பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பிற ஆரம்ப சுகாதார நிலையங்களைப் போலவே அலுவலர்களும் பணியாளர்களும் இருப்பதுடன் மற்ற வசதிகளும் உள்ளன. சிசு மரண விகிதம் அதிகமாக உள்ள ஒன்றியங்களில் இலக்கிடப்பட்ட பணிகளின் மூலமாக சிசு மரணத்தைக் குறைக்கவும் தாய்சேய் நலப் பணிகளை மேம்படுத்தவும், நடமாடும் மக்கள் நலப் பணிகள் அவசியமாகிறது. முதற்கட்டமாக 25 நடமாடும் மருத்துவப் பணிக் குழுக்கள் ஏற்படுத்தப்படும்.

[2001 ஆகஸ்ட் 29

**பங்கேற்பு சமுதாய நலக் குழு:**

நலப் பணிகளில் தரக் கட்டுப்பாடு மேலாண்மை தற்பொழுது பிரபலமடைந்து வருகிறது. நலப் பணிகள், அளிப்பவரின் பொறுப்பு என்பதிலிருந்து மாறுபட்டு, பயனடைவோரின் பங்கும் உடையதாக மாறி வருகின்றது. மக்களின் தேவைகளும், எதிர்பார்ப்புகளும் நிறைவேற்றப்பட சேவைகள் முன்னேற வேண்டும். பயனடைவோரின் திருப்தி என்பதே தரக் கட்டுப்பாட்டில் முக்கியமான அளவுகோலாகும். தமிழக அரசு கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களுக்குத் தரமான சுகாதார சேவைகளை அளிப்பதில் தனிக் கவனம் செலுத்துகிறது. ஆகவே, பங்கேற்பு சமுதாய நலக் குழு என்ற ஒரு குழு ஆரம்பிக்கப்பட உள்ளது. இக்குழுவில் மருத்துவ அலுவலர், துணை மருத்துவப் பணியாளர், பஞ்சாயத்துத் தலைவர், பள்ளி ஆசிரியர், கிராம நிர்வாக அலுவலர், வளர்ச்சி அலுவலர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள். இவர்கள் ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறமையாகச் செயல்படுவதற்கு வழிகாட்டியாகவும் உதவியாகவும் இருப்பார்கள்.

**மக்களின் அருகில் அமைக்கப்பட்டுள்ள துணை சுகாதார நிலையங்கள்:**

கிராமப்புற மக்களுக்கு துணை சுகாதார நிலையங்களே மருத்துவ வசதி வழங்கும் அடித்தள அலகுகளாக அமைந்துள்ளன. மலைப்பகுதிகள் மற்றும் பழங்குடியினர்கள் வாழும் பகுதிகள் மற்றும் எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளில் 3,000 மக்களுக்கு ஒரு துணை சுகாதார நிலையமும், இதர பகுதிகளில் 5,000 மக்களுக்கு ஒரு துணை சுகாதார நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது 8,682 துணை சுகாதார நிலையங்கள் தமிழ்நாட்டில் செயல்படுகின்றன. அவற்றில் 5,572 துணை சுகாதார நிலையங்கள் அரசுக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. மற்ற துணை சுகாதார நிலையங்களுக்கான கட்டுமானப் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும். நபார்டு உதவியுடன் 500 துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்டப்படும்.

**நாடு தழுவிய தடுப்பூசித் திட்டம்:**

நாடு தழுவிய தடுப்பூசித் திட்டம் மிகவும் வெற்றிகரமாகச் செயல்பட்டு ஆண்டுதோறும் நூறு சதவிகித கருவுற்ற தாய்மார்களும், சிசுக்களும் தொடர்ந்து பயன்பெறுகின்றனர். வழக்கமான தடுப்பூசித் திட்டத்துடன் ஆண்டுதோறும் தீவிர இளம்பிள்ளை வாத சொட்டு மருந்து முகாம்கள் நடத்தப்பட்டு, ஐந்து வயதிற்கு உட்பட்ட 73 இலட்சம்



2001 ஆகஸ்ட் 29]

குழந்தைகளுக்குக் கூடுதலாக இரண்டு தவணைகள் சொட்டு மருந்து கொடுக்கப்படுகின்றது. சிறந்த முறையில் தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் தடுப்பூசித் திட்டம் மற்றும் தீவிர சொட்டு மருந்து முகாம்கள் மூலமாக, தடுப்பூசிகளினால் தடுக்கக்கூடிய நோய்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டு, 2000 ஆம் ஆண்டில் மூன்று இறப்புகள் நடந்துள்ளன. மேலும், ஒரு இளம்பிள்ளை வாத நோய்கூட தமிழ்நாட்டில் கண்டறியப்படவில்லை.

**தாய் சேய் நலத் திட்டங்கள்:**

தாய் சேய் நலத் திட்டப் பணிகள், தாய் மற்றும் குழந்தைகளின் நலத்தை மேம்படுத்த செயல்படுத்தப்படுகின்றன. 98.3 சதவீத கருவுற்ற தாய்மார்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையம்/துணை சுகாதார நிலையம் மூலமாகப் பதியப்பட்டு இரணஜன்னிக்கு எதிரான தடுப்பூசி போடப்பட்டு, குறைபாடுள்ள, கடினமான மற்றும் அதிக ஆபத்துள்ள தாய்மார்களை மேல் மருத்துவ சிகிச்சை நிலையங்களுக்குப் பாதுகாப்பான பிரசவத்திற்குப் பரிந்துரை செய்தல் போன்ற நலப் பணிகள் அளிக்கப்படுகின்றன. 85.6 சதவீதப் பிரசவங்கள் நிலையங்களிலும், 98 சதவீதப் பிரசவங்கள் பயிற்சி பெற்றவர்களாலும் நடைபெறுகின்றன.

தாய் சேய் நலக் கவனிப்பில் ஈடுபட்டுள்ள பல்வேறு துறைகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக, தாய் சேய் நல ஆணையர் பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, மருத்துவம் மற்றும் ஊரகப் பணிகள் துறை, டேனிடா நிதி உதவி பெறும் தமிழ்நாடு பகுதி நல வாழ்வு கவனிப்புத் திட்டம் மற்றும் பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத்திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகளை இவர் கவனிப்பார்.

**அயோடின் சத்துக் குறைவினால் ஏற்படும் உடல்நலக் குறையைக் கட்டுப்படுத்தும் தேசியத் திட்டம்:**

தமிழ்நாட்டில் அயோடின் சத்துக் குறைவினால் ஏற்படும் உடல்நலக் குறையைக் கட்டுப்படுத்தும் தேசியத் திட்டம் 1991 முதல் செயல்பட்டு வருகின்றது. 1-7-1994 முதல் மாநில அயோடின் பற்றாக்குறை நோய்த் தடுப்புத் திட்டப் பிரிவு இயங்கி வருகிறது. அயோடின் பற்றாக்குறையினால் ஏற்படும் நோய்கள் உள்ள மாவட்டங்களைக் கண்டுபிடித்து, உண்ணத் தக்க பொருட்களில் கலக்கப்படும் அயோடின் சத்துக் குறைவான உப்பினால் உண்டாகும் நோய்களை, தகவல்-கல்வித் தொடர்பு மூலம்

நீக்குவதற்காக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

அயோடின் சத்தற்ற உப்பைப் பயன்படுத்த உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தடை விதிக்கப்பட்டுள்ளது. உப்பில் அயோடின் சத்தின் அளவு மற்றும் உபயோகத்தினைக் கண்டறியவும், உப்பு வியாபாரிகளிடமும், வீடுகளிலும் உப்பு மாதிரிகள் எடுக்கப்படுகின்றன. மேலும், சட்டம் சாரா உப்பு மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகின்றன.

**பள்ளிக் குழந்தைகள் நலத் திட்டம்:**

அனைத்துப் பள்ளி மாணவர்களையும் பரிசோதித்து, அவர்களுக்கு உள்ள நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தில் இருதய சம்பந்தப்பட்ட நோய், கண், காது, பல், தொண்டைப் புண் போன்ற நோய்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ரூ.300 இலட்சங்கள் மதிப்புள்ள மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம் அளிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தில், ஒவ்வொரு வியாழக்கிழமையும் பள்ளி சுகாதார நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி ஆரம்ப சுகாதார நிலையங்களைச் சார்ந்த மருத்துவ அலுவலர்களும், இதர மருத்துவம் சார்ந்த பணியாளர்களும் ஒன்று சேர்ந்து, மருத்துவக் குழுக்களாக, தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பள்ளிகளுக்குச் சென்று அங்குள்ள மாணவர்களைப் பரிசோதனை செய்து, அவர்தம் நோயினைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தேவையான சிகிச்சை அளிக்கின்றனர். சிறப்பு மருத்துவக் கவனிப்பு தேவைப்படும் மாணவர்களை மேல் சிகிச்சைக்காக உயர் மருத்துவ நிலையங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். ஒவ்வொரு சனிக்கிழமையும், மேல்சிகிச்சை நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. மேல்சிகிச்சைக்காக மேல்மருத்துவ நிலையங்களில் தனியான சேவைப் பிரிவு உள்ளது.

இத்திட்டத்தை ஒருங்கிணைக்கவும், உதவி புரியவும், ஒவ்வொரு பள்ளியிலும் இரண்டு ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்களுக்கு மாணவர்களிடையே பொதுவாகத் தோன்றும் நோய்களைக் கண்டறியவும், அதனை மருத்துவரிடம் எடுத்துச் சொல்லவும் பயிற்சி அளிக்கப்படுகிறது.



இத்திட்டத்திற்கான பள்ளி நல அட்டைகள் அச்சடித்து விநியோகிக்கப்படுகின்றன. இந்த அட்டைகள் பள்ளிகளில் பராமரிக்கப்படும். மாணவர்கள் பள்ளியை விட்டு விலகும்போது மாறுதல் சான்றிதழ்களுடன் இந்த பள்ளி நல அட்டைகளும் வழங்கப்படும். மாணவர்களின் உடல் தன்மை மற்றும் அவர்களிடையே காணப்படும் நோய்களின் அறிகுறிகள் மற்றும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை சம்பந்தமான விவரங்களைப் பதிவு செய்வதற்குத் தேவையான பல்வேறு பதிவேடுகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

நிர்ணயிக்கப்பட்ட இலக்கிடான மொத்தம் 40,308 பள்ளிகளில் 36,192 பள்ளிகள் மருத்துவக் குழுவினரால் பார்வையிடப்பட்டு, 88,76,439 மாணவர்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளனர். 1,39,660 மாணவர்கள் மேல் சிகிச்சைக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். சுமார் 10,000 மாணவர்களுக்கு மூக்குக்கண்ணாடி இத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

**பள்ளி மாணவர் நலத் திட்டத்தில் பள்ளி மாணவர்களிடையே கண்டறியப்பட்ட நோய்களின் நிலை:**

| வரிசை எண் | நோய்கள் | சதவீதம் |
|---|---|---|
| 1. | பல்சொத்தை | 10.23 |
| 2. | வயிற்று பூச்சி | 8.72 |
| 3. | சுவாச கோளாறு | 8.63 |
| 4. | இரத்த சோகை | 5.59 |
| 5. | வைட்டமின் (ஏ) குறைபாடு | 2.70 |
| 6. | சொரி சிரங்கு | 1.31 |
| 7. | கண்பார்வை கோளாறு | 0.29 |
| 8. | காதில் சீழ்வடிதல் | 0.40 |
| 9. | தொழுநோய் | 0.05 |
| 10. | காது கேட்பதில் குறைபாடு | 0.08 |
| 11. | இதய நோய் | 0.10 |
| 12. | காசநோய் | 0.08 |
| 13. | முன்கழுத்து கழலை | 0.02 |

[2001 ஆகஸ்ட் 29

**தொற்று நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்:**

தொற்று நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் அடிப்படை சுகாதாரப் பணிகளில் முக்கியமான ஒன்றாகும். குறிப்பாக, கொள்ளைநோய் அளவில் ஏற்படுகின்ற, தண்ணீர் மூலம் பரவும் கடும் வயிற்றுப்போக்கு, வாந்தி பேதி போன்ற நோய்களுக்கு இத்திட்டத்தில் முதலிடம் கொடுக்கப்படுகின்றது. மாவட்ட அலுவலர்களும், உள்ளாட்சி மன்றங்களில் உள்ள செயல் அலுவலர்களும் தடுப்பு நடவடிக்கை எடுத்து சுகாதாரத்தை சீரிய முறையில் பாதுகாக்கும் பொருட்டு குப்பைக் கூளங்கள் மற்றும் கழிவுகளை சேகரித்துத் தகுந்த பாதுகாப்புடன் அவற்றை உடனுக்குடன் அகற்றவும், அனைத்துக் குடிநீர் நிலையங்களிலும், குளோரின் போன்ற கிருமி நாசினிகளைத் தேவையான அளவு கலந்து தெளிக்கவும், ஈக்களை ஒழிக்கவும் தேவையான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2000 ஆம் ஆண்டில் 3.96 இலட்சம் பேர்களுக்கு வாந்தி பேதி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. 49,763 குடிநீர் நிலையங்களில் கிருமி நாசினி கலக்கப்பட்டது.

வாந்தி பேதியினால் உண்டாகும் உடல் நீர் வறட்சியை ஈடுசெய்ய, வறட்சியைப் போக்கும் வாய்வழி செலுத்தும் உப்புநீர் கரைசல் பொட்டலங்களின் உபயோகம் மற்றும் உப்பு சர்க்கரை நீர் கரைசல் தயாரிக்கும் முறை பற்றிய செயல் விளக்கம் களப் பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டது.

**தேசிய கொள்ளைநோய் தடுப்பு கண்காணிப்புத் திட்டம்:**

நோயைத் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்குமான ஏற்பாடுகளைச் செய்யவும், கொள்ளைநோய் தடுப்பு கண்காணிப்பு அவசியம். அந்தக் கொள்ளைநோய்கள் ஏற்படுவதை முன்கூட்டியே அறிந்துகொள்ளவும், தேவையான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தயார் நிலையில் இருக்கவும் இது உதவுகிறது. தமிழ்நாட்டில் தேசிய அளவிலான கொள்ளைநோய் தடுப்புத் திட்டம் முன்மாதிரியாக தருமபுரி, விழுப்புரம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**தொழிற்சாலை மற்றும் நலவியல்:**

குடிநீரில் தூய்மைக் கேட்டினைக் கண்காணித்து தொற்று நோய்களைக் கட்டுப்படுத்த ஏதுவாக சென்னை மற்றும் கோயம்புத்தூரில்



2001 ஆகஸ்ட் 29]

நீர்ப் பகுப்பாய்வுக் கூடங்கள் நிறுவப்பட்டு, பாதுகாக்கப்பட்ட குடிநீரில் தூய்மைக் கேட்டைக் கண்டறிய, நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இப்பகுப்பாய்வுக் கூடங்கள் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுகளைப் பரிசோதனை செய்ய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு உதவி புரிந்து வருகின்றன. மேலும் தொழிற்சாலைகள் மற்றும் சுற்றுப்புறத் தூய்மைக் கேட்டைக் கட்டுப்படுத்தத் தேவையான கள ஆய்வுகள் மேற்கொள்ள உதவுகின்றன.

காற்றின் தரத்தை மதிப்பீடு செய்ய தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொழிற்சாலைகளினால் ஏற்படும் தொல்லைகளை அகற்றவும், அமைதி காக்கவும் தொழிற்பேட்டைகள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளை தனித்தனி மண்டலங்களாகப் பிரித்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2000–2001 ஆம் ஆண்டில் 25,959 நீர் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டன.

**உணவுக் கலப்படத் தடுப்பு:**

1954 ஆம் ஆண்டைய மத்திய அரசின் உணவுக் கலப்படத் தடைச் சட்டம் மற்றும் 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உணவுக் கலப்படத் தடை விதிகள் ஆகியவற்றை தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தி, இம்மாநிலத்தில் உணவுக் கலப்படத்தை தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் இவ்வுணவுக் கலப்படத் தடைச் சட்டம் மற்றும் உணவுக் கலப்படத் தடை விதிகள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்த அறிவிக்கப்பட்டுள்ளது. 481 உள்ளாட்சி மன்றங்களில் இவ்வுணவுக் கலப்படத் தடைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

உள்ளாட்சி மன்றங்கள் மூலமாக உணவு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்விற்காக கிங் நிலைய வளாகம், கிண்டியிலும், கோயம்புத்தூர், மதுரை, பாளையங்கோட்டை, சேலம் மற்றும் தஞ்சை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள அரசு உணவுப் பகுப்பாய்வுக் கூடங்களிலும் சென்னை மாநகராட்சி உணவுப் பகுப்பாய்வுக் கூடத்திலும் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

2000–2001 ஆம் ஆண்டு 3,381 உணவு மாதிரிகள் மேற்படி பகுப்பாய்வுக் கூடங்களில் ஆய்வு செய்யப்பட்டதில், 376 உணவு மாதிரிகள், கலப்படம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி கலப்படத்தின் சதவீதம் 11.12 ஆகும். மேலும் 158 வழக்குகள் நீதிமன்றங்களில் தொடரப்பட்டுள்ளன.

74 வழக்குகள் நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி 74 வழக்குகளில், 6 வழக்குகளில் அபராதமும், மீதி 68 வழக்குகளில் அபராதத்துடன் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

**அடிப்படை புள்ளிவிவரத் திட்டம்:**

மத்திய அரசால் 1969 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பிறப்பு-இறப்பு பதிவுச் சட்டத்தின்படி பிறப்பு-இறப்பு, அவை நிகழ்ந்த இடத்திலேயே கட்டாயமாகப் பதிவு செய்யப்பட்டு வருகிறது. மத்திய அரசு 01-01-2000 முதல் பிறப்பு-இறப்பு பதிவு முறையை மாற்றி அமைத்துள்ளது. அதன்படி தமிழ்நாட்டில் 'மாற்றியமைக்கப்பட்ட பிறப்பு-இறப்புப் பதிவு விதிகள், 2000' அறிவிக்கப்பட்டு, 01-01-2000 முதல் செயல்முறைப்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் உள்ள அனைத்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கும், மாற்றியமைக்கப்பட்ட பிறப்பு-இறப்புப் பதிவு முறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**பூச்சியினால் பரவக்கூடிய நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்:**

பூச்சியினால் பரவக்கூடிய மலேரியா, யானைக்கால் நோய், நரம்புசிலந்தி மற்றும் மூளைக் காய்ச்சல் போன்ற நோய்களைத் தடுக்க, திட்டங்கள் பல இம்மாநிலத்தில் நடைமுறையில் உள்ளன.

**மலேரியா:**

தமிழ்நாட்டில் உள்ள மலேரியா நோய், நகர்ப்புற மலேரியா, கடற்கரையோர மலேரியா, ஆற்றுப்படுகை மலேரியா என மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றது.

தமிழ்நாட்டில் மொத்த மலேரியா நிகழ்வுகளில் 60 முதல் 70 சதவீதம் நகர்ப்புறங்களில் காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக, சென்னை முக்கியமாக பாதிக்கப்பட்ட பகுதியாகும். மலேரியா ஒழிப்புப் பணிக்கான செலவுகளை மாநில அரசே ஏற்கிறது. மத்திய அரசு தனது பங்கான 50 சதவீதத்தை மலேரியா நோய் தடுக்கும் மாத்திரைகள், புழுக்கொல்லி/கொசுக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றை அளிப்பதன் மூலமாக வழங்குகிறது.

**மூளைக் காய்ச்சல்:**

கடந்த சில ஆண்டுகளாக மூளைக் காய்ச்சல் நோய் முக்கியப் பொதுச் சுகாதாரப் பிரச்சனையாக விளங்குகின்றது.



கடலூர், விழுப்புரம், பெரம்பலூர் ஆகிய இடங்களில் உள்ள மூளைக் காய்ச்சல் நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவும், தலைமையகத்திலுள்ள வழிகாட்டும் பிரிவும் இந்நோயைப் பரப்பும் பூச்சித் தடுப்பு மற்றும் பூச்சியியல் ஆய்வுகளை மேற்கொள்கின்றன. மூளைக் காய்ச்சல் தடுப்பூசி போடும் பணி பெரம்பலூர் மாவட்டத்தில் சில தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இமாசலப் பிரதேசத்தில் உள்ள கசோலி மத்திய ஆராய்ச்சி நிலையத்திலிருந்து மூளைக் காய்ச்சல் நோய் தடுக்கும் 17,000 மருந்துக் குப்பிகள் பெறப்பட்டு பெரம்பலூர் மாவட்டத்திற்கு அளிக்கப்பட்டுள்ளன.

**தேசிய யானைக்கால் நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்:**

தமிழ்நாட்டில் 1957 ஆம் ஆண்டு முதல் யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான தளவாடப் பொருட்கள் மற்றும் கருவிகளுக்கான செலவில் 50 சதவீதத்தை மத்திய அரசு தருகின்றது. மற்ற செலவுகள் அனைத்தையும் மாநில அரசே ஏற்கிறது. இந்தத் திட்டம் இந்நோய் அதிகமாகக் காணப்படும் மாவட்டங்களாகிய காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலும், சென்னை மாநகராட்சி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் வீரவநல்லூர் பேரூராட்சியிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

யானைக்கால் நோய் ஒழிப்பில் அண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், குறைந்தது ஐந்தாண்டுகளுக்கு ஆண்டுக்கொரு முறை "ஒட்டுமொத்த டிஇசி" சிகிச்சை முறை மூலம் யானைக்கால் ஒட்டுண்ணி வெகுவாகக் குறைக்கப்படுகின்றதுஎன்பதை எடுத்துக்காட்டுகிறது. முதன் முறையாக கடலூர் மாவட்டத்தில் ஒட்டுமொத்த டிஇசி சிகிச்சைத் திட்டம் நடத்தப்பட்டது. பிறகு யானைக்கால் நோயுற்ற பகுதிகளை அதிகமாகக் கொண்ட கடலூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டு இதுவரை நான்கு சுற்று ஒட்டுமொத்த டிஇசி சிகிச்சை முறை முடிந்திருக்கிறது. 2002 ஆம் ஆண்டில் ஐந்தாவது சுற்று நடத்தப்பட உள்ளது.

மேலும், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் வேலூர் ஆகிய 6 வருவாய் மாவட்டங்கள், டிஇசி மாத்திரைகளுடன் அல்பன்டோசோல் மாத்திரைகளையும் சேர்த்து வழங்குவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. முதன்முறையாக ஒட்டுமொத்த கூட்டு மருந்து விநியோக முறை செயல்படுத்தப்பட்டுள்ளது.

**லெப்டோஸ்பைரோசிஸ் கட்டுப்பாட்டுத் திட்டம்:**

2000–2001 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் திருவள்ளூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள வட்ட/மாவட்ட தலைமையிடத்து மருத்துவமனைகளில் 7 லெப்டோஸ்பைரோசிஸ் சிகிச்சை நிலையங்கள் தொடங்கப்பட்டு தற்போது இயங்கி வருகின்றன.

**நோய் பரப்பும் உயிரினக் கட்டுப்பாட்டு நிறுவனம், ஒசூர்:**

ஒசூரிலுள்ள நோய் பரப்பிகள் மற்றும் விலங்கின, மனித இனப் பரிவர்த்தனை நோய்கள் கட்டுப்பாட்டு மையம், பிளேக் கண்காணிப்பு நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு மையமாகச் செயல்பட்டு வருகின்றது. 1998–99 ஆம் ஆண்டில் ஒசூர் விலங்கின, மனித இனப் பரிவர்த்தனை நோய்கள் கட்டுப்பாட்டு நிலையத்தில் டெங்கு மற்றும் மூளைக் காய்சசல் நோய்களுக்காக ஆர்போவைரஸ்களைக் கட்டுப்படுத்திட இரசாயனக் கரணி தயாரிக்கும் ஆய்வகம் ஒன்றினை அனைத்து வசதிகளுடன் அரசு அமைத்துள்ளது.

பூச்சிகளால் பரவும் மலேரியா, டெங்கு, மூளைக் காய்ச்சல், யானைக்கால் போன்ற நோய்கள் குறித்தும், லெப்டோஸ்பைரோசிஸ், ஆந்தராக்ஸ் போன்ற விலங்குகள் மூலம் மனிதருக்குப் பரவும் நோய்கள் குறித்தும் தற்பொழுது பரந்த அளவிலான முன் தடுப்புகளைக் கருத்திற்கொண்டு நோயின் தீவிரம் அதிகமாகக் காணப்படும் ஐந்து மாவட்டங்களில் 1998–1999 ஆம் ஆண்டில் முன் தடுப்பு நடவடிக்கைகளுக்காக ஐந்து நோய்க் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

**தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம்:**

தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம் 1954–55 ஆம் ஆண்டில் தொழுநோயைத் தொடக்க நிலையிலேயே கண்டறிந்து, அனைத்துத் தொழுநோயாளிகளுக்கும் ஒரு மருந்து தொடர் சிகிச்சை அளிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.



தமிழ்நாட்டில் 1–8–1997 வரை தனித்துய்ச செயல்பட்டு வந்த தேசிய தொழுநோய்த் தடுப்புத் திட்டம், அதன்பின் நாட்டிலேயே முதன்முறையாக அரசு ஆரம்ப சுகாதார நிலையப் பணிகளுடன் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 1981 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கூட்டு முறை மருந்து சிகிச்சை காரணமாக தொழுநோயாளிகளிடையே நோய் குணமடைவதில் கணிசமான முன்னேற்றம் தென்பட்டது. தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தில் தமிழ்நாடு பாராட்டத்தக்க அளவில் செயல்பட்டுள்ளது. 1983 ஆம் ஆண்டு இருந்த நோயின் தன்மை 10,000 மக்கள் தொகைக்கு 118 என்ற நிலை தற்போது 10,000–க்கு 4.3 என்ற நிலைக்குக் குறைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் முழுமையான நோய் ஒழிப்பை நோக்கி முன்னேறுகிறது. உலக சுகாதார நிறுவனத்தினரால் இலக்கிடப்பட்டுள்ள, 'நோயின் தன்மை 10,000 மக்கள் தொகைக்கு ஒன்றிற்குக் கீழ்' என்ற நிலையினை தமிழ்நாடு அடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**சிறப்பு மருத்துவ முகாம்கள்:**

கிராமப்புற மக்களுக்கு சாதாரண நோய்களுக்கான மருத்துவ சிகிச்சைகள், நல நிலையங்களின் மூலமாக வழங்கப்பெறுகின்றன. பெரிய நோய்களான புற்றுநோய், சர்க்கரை நோய் போன்றவற்றிற்கு சிகிச்சை பெற அவர்களுக்குப் போதுமான வசதிகள் அருகில் கிடைப்பதில்லை. ஆகவே, கிராமப்புற மக்களுக்கு, குறிப்பாக தொலைதூரத்தில் வசிக்கும் கிராமப்புற மக்களுக்கு இந்த நோய்களுக்கான உயர்தர சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். புற்றுநோய், சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் மற்றும் இருதய நோய்கள், வயது முதிர்ச்சியினால் ஏற்படும் நோய்கள் ஆகியவற்றிற்கு ஒவ்வொரு வட்டார அளவிலும் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென ரூபாய் 3.85 கோடிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**தமிழகத்தில் மாநில எல்லைப்புற மாவட்டங்களில் தாய் சேய் நலக் குழு பயிற்சித் திட்டம்:**

தமிழ்நாட்டில் யூனிசெப் ஆதரவுடன் திருவள்ளூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் தாய் சேய் நலத் திட்டப் பணிகளை வலிமைப்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சுகாதாரம், ஊட்டச்சத்து, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் மக்கள் ஒத்துழைப்புடனும், நகரம்

மற்றும் கிராமப்புறங்களில் இத்திட்டம் ரூ.63,68,048/- செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**பொதுச் சுகாதாரப் பயிற்சி மற்றும் தொடர் கல்வி:**

மருத்துவ அலுவலர்களும் களப் பணியாளர்களும் ஒவ்வொரு திட்டங்களிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினை அறிந்துகொள்ளும் வகையிலும் நிர்வாகத் திறமையை வளர்க்கவும் இத்துறையில் பல்வேறு பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. சென்னை எழும்பூர், பூந்தமல்லி, மதுரை, விழுப்புரம், சேலம் மற்றும் காந்திகிராமம் ஆகிய இடங்களில் வட்டாரப் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பிட்ட 28 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கிராமப் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. முறையான நீண்ட நாள் பயிற்சிகள் 5 பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சிப் பள்ளிகளினாலும், ஒரு பல்நோக்கு சுகாதார மேற்பார்வையாளர் பயிற்சி பள்ளிகளினாலும் நடத்தப்படுகின்றன. மருத்துவர்களுக்கும் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கும் குறுகிய காலப் பயிற்சிகளும் இந்நிலையங்களில் கொடுக்கப்படுகின்றன. நலப்பணிகளில் புற்றுநோய்க் கட்டுப்பாடு, தாய் சேய் நலம் ஆகியவற்றில் மருத்துவ அலுவலர்களுக்கு, பணியில் அமர்த்தப்பட்டவுடனே மேற்படி நிலையங்களில் கொடுக்கப்படுகின்றன. புற்று நோய், மனநலம், வயது முதிர்ச்சியில் ஏற்படும் கோளாறுகள், மறுவாழ்வு அளித்தல் ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. மேலும், தன்னார்வ சுகாதாரத் தொண்டு நிறுவனங்களிலும் மற்றும் அடையாறில் உள்ள புற்றுநோய் நிறுவனம், ஸ்பேஸ்டிக் சொசைட்டி ஆகிய பெயர் பெற்ற நிறுவனங்களும் இதில் பங்கேற்கின்றன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகள் வழக்கமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன:

1) பலநோக்கு சுகாதாரப் பணியாளர் (பெண்) சான்றிதழ் பயிற்சி
2) பலநோக்கு சுகாதார மேற்பார்வையாளர் (பெண்) பயிற்சிப் பள்ளி
3) களப் பணி மற்றும் ஆய்வக உதவியாளர்களுக்கு பணிக்கு முந்தையபயிற்சி வகுப்பு
4) மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கு ஒருமுகப் பயிற்சித் திட்டம்





5) புதிதாகப் பணியமர்த்தப்பட்ட உதவி மருத்துவர்களுக்கான பயிற்சி
6) ஆண் பணியாளர்கள்/களப் பணியாளர்களுக்கு பணியிடைப் பயிற்சி.

**நகர்ப்புற சுகாதாரம்:**

கிராமப்புறங்களில் பல்வேறு சுகாதாரத் திட்டங்கள் 1,410 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 8,682 துணை சுகாதார நிலையங்கள் மூலமாகச் செயல்படுத்தப்படுகின்றன. இந்த நிலையங்கள் கிராமப்புறம் மட்டுமல்லாது நகரப் பஞ்சாயத்துகளில் வசிக்கும் மக்களின் சுகாதாரத் தேவைகளைக் கவனித்துக்கொள்கின்றன. ஆனால், நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் வசிக்கும் மக்களுக்கு, குறிப்பாக குடிசைப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான சுகாதார வசதிகள் இல்லை. இவர்கள் பெரும்பாலும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளையே நம்பி உள்ளனர். இம்மருத்துவமனைகளில் அங்கு வருவோருக்கு மட்டும் சிகிச்சை அளிக்கப்படுகின்றதே தவிர, வெளியே சென்று பணிகள் செய்வதில்லை. ஆகவே, இங்கு வாழும் மக்களுக்கு அடிப்படை சுகாதார சேவைகள் கிடைக்கக்கூடிய வகையில் இல்லை. ஆகவே, நகர்ப்புற சுகாதார சேவைகள், கிராமப்புற சுகாதாரச் சேவைகள் போன்று திட்டமிட்டுக் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். ஏற்கெனவே நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் உள்ள பணியாளர்கள் மற்றும் பிற வசதிகளை ஒன்றுபடுத்தி ஒருங்கிணைந்த நகர்ப்புற ஆரம்ப சுகாதார சேவைகளை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*2001–2002 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்*

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சேலத்தில் உள்ள காடையாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்துதல் | 69.88 |
| 2. | சுகாதார கருவிகளை பழுது பார்க்கும் பிரிவில் வண்டிகளை வாங்குதல் | 16.00 |
| 3. | டிஸ்போசல் டெலிவரி கிட்ஸ் | 10.00 |
| 4. | 100 சுகாதார நிலையங்களுக்கு கருவிகள் வாங்குதல் | 17.50 |
| 5. | மக்களிடையே சுகாதார விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல் | 3.50 |
| 6. | 20 ஊர்திகள் வாங்குதல் | 80.00 |
| | மொத்தம் | 196.88 |

மற்றும் கிராமப்புறங்களில் இத்திட்டம் ரூ.83,68,048/- செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**பொதுச் சுகாதாரப் பயிற்சி மற்றும் தொடர் கல்வி:**

மருத்துவ அலுவலர்களும் களப் பணியாளர்களும் ஒவ்வொரு திட்டங்களிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினை அறிந்துகொள்ளும் வகையிலும் நிர்வாகத் திறமையை வளர்க்கவும் இத்துறையில் பல்வேறு பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. சென்னை எழும்பூர், பூந்தமல்லி, மதுரை, விழுப்புரம், சேலம் மற்றும் காந்திகிராமம் ஆகிய இடங்களில் வட்டாரப் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பிட்ட 28 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கிராமப் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. முறையான நீண்ட நாள் பயிற்சிகள் 5 பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சிப் பள்ளிகளினாலும், ஒரு பல்நோக்கு சுகாதார மேற்பார்வையாளர் பயிற்சி பள்ளிகளினாலும் நடத்தப்படுகின்றன. மருத்துவர்களுக்கும் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கும் குறுகிய காலப் பயிற்சிகளும் இந்நிலையங்களில் கொடுக்கப்படுகின்றன. நலப்பணிகளில் புற்றுநோய்க் கட்டுப்பாடு, தாய் சேய் நலம் ஆகியவற்றில் மருத்துவ அலுவலர்களுக்கு, பணியில் அமர்த்தப்பட்டவுடனே மேற்படி நிலையங்களில் கொடுக்கப்படுகின்றன. புற்று நோய், மனநலம், வயது முதிர்ச்சியில் ஏற்படும் கோளாறுகள், மறுவாழ்வு அளித்தல் ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. மேலும், தன்னார்வ சுகாதாரத் தொண்டு நிறுவனங்களிலும் மற்றும் அடையாறில் உள்ள புற்றுநோய் நிறுவனம், ஸ்பேஸ்டிக் சொசைட்டி ஆகிய பெயர் பெற்ற நிறுவனங்களும் இதில் பங்கேற்கின்றன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகள் வழக்கமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன:

1) பலநோக்கு சுகாதாரப் பணியாளர் (பெண்) சான்றிதழ் பயிற்சி

2) பலநோக்கு சுகாதார மேற்பார்வையாளர் (பெண்) பயிற்சிப் பள்ளி

3) களப் பணி மற்றும் ஆய்வக உதவியாளர்களுக்கு பணிக்கு முந்தையபயிற்சி வகுப்பு

4) மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கு ஒருமுகப் பயிற்சித் திட்டம்





5) புதிதாகப் பணியமர்த்தப்பட்ட உதவி மருத்துவர்களுக்கான பயிற்சி

6) ஆண் பணியாளர்கள்/களப் பணியாளர்களுக்கு பணியிடைப் பயிற்சி.

**நகர்ப்புற சுகாதாரம்:**

கிராமப்புறங்களில் பல்வேறு சுகாதாரத் திட்டங்கள் 1,410 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 8.682 துணை சுகாதார நிலையங்கள் மூலமாகச் செயல்படுத்தப்படுகின்றன. இந்த நிலையங்கள் கிராமப்புறம் மட்டுமல்லாது நகரப் பஞ்சாயத்துகளில் வசிக்கும் மக்களின் சுகாதாரத் தேவைகளைக் கவனித்துக்கொள்கின்றன. ஆனால், நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் வசிக்கும் மக்களுக்கு, குறிப்பாக குடிசைப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான சுகாதார வசதிகள் இல்லை. இவர்கள் பெரும்பாலும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளையே நம்பி உள்ளனர். இம்மருத்துவமனைகளில் அங்கு வருவோருக்கு மட்டும் சிகிச்சை அளிக்கப்படுகின்றதே தவிர, வெளியே சென்று பணிகள் செய்வதில்லை. ஆகவே, இங்கு வாழும் மக்களுக்கு அடிப்படை சுகாதார சேவைகள் கிடைக்கக்கூடிய வகையில் இல்லை. ஆகவே, நகர்ப்புற சுகாதார சேவைகள், கிராமப்புற சுகாதாரச் சேவைகள் போன்று திட்டமிட்டுக் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். ஏற்கெனவே நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் உள்ள பணியாளர்கள் மற்றும் பிற வசதிகளை ஒன்றுபடுத்தி ஒருங்கிணைந்த நகர்ப்புற ஆரம்ப சுகாதார சேவைகளை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*2001–2002 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்*

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சேலத்தில் உள்ள காடையாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்துதல் | 69.88 |
| 2. | சுகாதார கருவிகளை பழுது பார்க்கும் பிரிவில் வண்டிகளை வாங்குதல் | 16.00 |
| 3. | டிஸ்போசல் டெலிவரி கிட்ஸ் | 10.00 |
| 4. | 100 சுகாதார நிலையங்களுக்கு கருவிகள் வாங்குதல் | 17.50 |
| 5. | மக்களிடையே சுகாதார விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல் | 3.50 |
| 6. | 20 ஊர்திகள் வாங்குதல் | 80.00 |
| | மொத்தம் | 196.88 |

[2001 ஆகஸ்ட் 29

## அத்தியாயம் - 5

## குடும்ப நலத் திட்டம்

தேசிய குடும்ப நலத் திட்டம் 1956 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் மக்கள் தாமாகவே விரும்பி ஏற்றுக் கொள்ளும் திட்டமாக செயல்பட்டு வருகிறது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன், தாய் சேய் நலத்தை மேம்படுத்தி, அதன் மூலம் மக்கள் தொகை வளர்ச்சியைக் குறைக்கும் நோக்கத்துடன் குடும்ப நலத் திட்டம் மக்கள் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. "சமுதாயத் தேவைகளின் மதிப்பீட்டு அணுகுமுறையைப்" பின்பற்றி குடும்ப நலம் மற்றும் தாய் சேய் நலத் திட்டங்கள் தமிழ்நாட்டில் தற்போது செயல்படுத்தப்படுகின்றன.

**இலக்குகள் மற்றும் சாதனைகள்:**

1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு மக்கள் தொகையில் அடைந்துள்ள இலக்குகள் மற்றும் சாதனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன: (தற்காலிகமானது)

| | |
|---|---|
| 1. பிறப்பு விகிதம் | 19.3/1000 மக்கள் தொகைக்கு |
| 2. இறப்பு விகிதம் | 8.0/1000 மக்கள் தொகைக்கு |
| 3. சிசு மரண விகிதம் | 52/1000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு |
| 4. தாய்மார்கள் இறப்பு விகிதம் | 1.4/1000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு |
| 5. இயற்கை வளர்ச்சி விகிதம் | 1.13 சதவிகிதம் |

தமிழ்நாட்டில் இத்துறை, 2005 இல் கீழ்க்கண்ட இலக்கினை அடைவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது:

| | |
|---|---|
| 1. மருத்துவமனைகளில் பிரசவம் | 90 சதவிகிதம் |
| 2. சிசு மரண விகிதம் | 30 அல்லது அதற்கும் குறைவு/ 1000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு |
| 3. பிறப்பு விகிதம் | 15/1000 மக்கள் தொகைக்கு |

தமிழ்நாட்டின் மக்கள் தொகை 2010 ஆம் ஆண்டில் 7.2 கோடியாக நிலைத்திருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.



2001 ஆகஸ்ட் 29]

**மாநில மக்கள் தொகை ஆணையம்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு அரசு "மாநில மக்கள் தொகை ஆணையம்" அமைக்கப்பட்டுள்ளது. 'தேசிய மக்கள் தொகைக் கொள்கை, 2000' அமல்படுத்தப்படுவதை மேற்பார்வை மற்றும் ஆய்வு செய்வதற்கும் இந்த மாநில மக்கள் தொகை ஆணையம் நிறுவப்பட்டுள்ளது.

**குடும்ப நல மையங்கள்:**

தமிழ்நாட்டில் குடும்ப நலத் திட்டம் கீழ்க்கண்ட நிலையங்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

| | |
|---|---|
| 1. பேறுகால பின்கவனிப்பு நிலையங்கள் | 118 |
| 2. நகர்ப்புற குடும்ப நல மையங்கள் | 65 |
| 3. நகர நல்வாழ்வு நிலையங்கள் | 243 |
| 4. கிராமப்புற குடும்ப நல மையங்கள் | 382 |
| 5. அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவ நிலையங்கள் | 967 |
| 6. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் | 30 |

தமிழ்நாட்டில் தாய் சேய் மற்றும் குடும்ப நலத் திட்டங்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிலையங்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. மாநிலத்தில் நடைபெறும் குடும்ப நல அறுவை சிகிச்சைகளில் 55 சதவீதம் அரசு மருத்துவ நிலையங்களிலும், 11 சதவீதம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிலும், 25 சதவீதம் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளிலும், 4 சதவீதம் உள்ளாட்சி அமைப்பு மருத்துவமனைகளிலும், மீதம் உள்ளவை அங்கீகரிக்கப்படாத தனியார் மருத்துவ மனைகளிலும் நடைபெறுகின்றன.

**பிரசவம் பார்க்கும் கிராம சுகாதார செவிலியர்/உதவி செவிலியர் ஊக்கத் தொகை**

பயிற்சி பெறாத தாதியர்கள் பிரசவம் பார்ப்பதைத் தவிர்க்கும் பொருட்டும், வீடுகளில் பிரசவம் நடப்பதைத் தவிர்க்கும்பொருட்டும், கிராம சுகாதார செவிலியர்/உதவி செவிலியர் பிரசவம் பார்ப்பதை

ஊக்குவிக்கும்பொருட்டும், துணை சுகாதார நிலையங்களில் பிரசவம் நடப்பதை மேம்படுத்தும்பொருட்டும், கிராம சுகாதார செவிலியருக்கு, ஒரு பிரசவம் பார்த்தால் ரூபாய் 50/– ஊக்கத் தொகையாக வழங்கி ஊக்குவிக்கப்படுகிறது. மேலும், சிக்கலான பிரசவத்தால் ஏற்படும் தாய்மார்களின் இறப்பைத் தவிர்ப்பதற்காக மருத்துவமனைகளுக்குத் தக்க காலத்தில் பரிந்துரை செய்யும் ஒவ்வொரு சிக்கலான பிரசவத்திற்கும் ரூபாய் 25/– ஊக்கத் தொகையாக அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

**சிசு மரண விகிதம் குறைக்க வழிமுறைகள்**

சிசு மரண விகிதத்தைக் குறைப்பதற்கு அரசு பின்வரும் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

(அ) ஒவ்வொரு கிராம சுகாதார செவிலியரும், அவர் பணிபுரியும் பகுதியில் ஓராண்டு காலத்தில் சிசு இறப்பேதும் இல்லை என்பதை உறுதி செய்தால், அவர்களுக்கு ஒரு சவரன் தங்க நாணயம் பரிசாக வழங்கப்படுகிறது.

(ஆ) ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அதிகாரியாகப் பணிபுரிபவர், அவர் பணிபுரியும் அரசு ஆரம்ப சுகாதாரப் பகுதியில் சிசு மரண விகிதத்தைத் பெருமளவு குறைத்தால் அவருக்கு சுழற்கோப்பை பரிசாக வழங்கப்படுகிறது.

(இ) சிசு மரண விகிதத்தைத் பெருமளவு குறைத்து சாதனை படைக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சுழற்கோப்பை வழங்கப்படுகிறது.

**குழந்தைகள் அதிகம் பிறப்பதைக் குறைத்தல் (இரண்டு குழந்தைகளுக்கு மேல்)**

ஒவ்வொரு வருடமும் தமிழ்நாட்டில் 11.5 இலட்சம் பிறக்கும் மொத்தக் குழந்தைகளில் 24 விழுக்காடு குழந்தைகள், இரண்டு குழந்தைகளுக்கு மேல் பிறக்கும் குழந்தைகளாக உள்ளனர். இக்குழந்தைகளில் 2.5 இலட்சம் குழந்தைகள், மூன்று அல்லது அதற்கு மேலும் பிறக்கும் குழந்தைகள் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெறும் தாய்மார்களின் எண்ணிக்கையினைக் குறைத்தால், நாம் 2005 ஆம் ஆண்டில் அடைய வேண்டிய இலக்கினை அடைய வாய்ப்புள்ளது. ஒவ்வொரு வருடமும் நான்கில் ஒரு பகுதியைக் குறைத்தால் நான்கு ஆண்டுகளில் அதிகக் குழந்தைகள் பெறும்



தாய்மார்களின் எண்ணிக்கையைக் குறைத்து விடலாம். 15 மாவட்டங்கள் மாநில சராசரியைவிட அதிக குழந்தைகள் பெறும் தாய்மார்கள் உள்ள மாவட்டங்களாகக் கணக்கிடப்பட்டுள்ளன. மாநில அரசு ரூபாய் 35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றி அதிகக் குழந்தைகள் பெறும் தாய்மார்களின் எண்ணிக்கையைக் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

**கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் தாய்மார்களுக்கான காப்பீட்டுத் திட்டம்:**

கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் தாய்மார்களுக்கான புதிய காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அரசு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டு மருத்துவமனையில் இறக்கும் தாய்மார்களுக்கு ரூ.2.00 இலட்சம் காப்பீட்டுத் தொகையாகவும் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டு 30 நாட்களுக்குள் மரணமடைந்தால் இந்திய அரசால் வழங்கப்படும் ஈட்டுத்தொகையுடன் ரூ.25,000/– காப்பீட்டுத் தொகையாக மொத்தமாக வழங்கப்படும்.

இத்திட்டம் தேசியக் காப்பீட்டுக் கழகத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கென அரசு, ஒரு பிரசவத்திற்கு ரூ.14/– சந்தாத் தொகையாகச் செலுத்துகிறது. இனி மருத்துவர்கள், கருத்தடை அறுவை சிகிச்சையின் காரணமாக மரணமடைந்து நஷ்ட ஈடு கோரி நீதிமன்றங்களில் தொடரப்படும் வழக்குகளில் இருந்து விடுபடலாம். தாய்மார்களுக்குக் காப்பீடு அளிக்கப்படுவதால் கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்ள வரும் தாய்மார்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**தகவல்/கல்வித் தொடர்புப் பணிகள்:**

1. மாநில மற்றும் மாவட்ட அளவிலும் தகவல்/கல்வித் தொடர்புப் பணிகள் குடும்ப நலத் திட்டத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

2. மாநில அளவில் உள்ள முக்கியப் பேருந்து நிலையங்களில், சுழலும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மூலமும், முக்கிய இடங்களில், நகரும் மின்னணுப் பலகைகள் மூலமாகவும், குடும்ப நலக் கருத்துகளை விளம்பரப்படுத்துதல், பி.வி.சி. ஒட்டிகள் தயாரித்தல், லேமினேட்டட் பலகைகள் தயாரித்தல்; பி.வி.சி போம் பலகைகள் தயாரித்தல், அக்ரிலிக் பலகைகள் தயாரித்தல், துணி பதாகைகள், ஒளி, ஒலி நாடாக்கள் தயாரித்தல் மற்றும் இதரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2001 ஆகஸ்ட் 29

3. மாவட்டங்களில் விளம்பரப் பணிகள் மகளிர் மன்ற உறுப்பினர்கள், மகளிர் முன்னேற்றக் கழகத்தின் மகளிர் உறுப்பினர்கள் மற்றும் நவீன முறையில் குறுகிய வட்டத் தொலைக்காட்சி மூலமாக நடத்தப்பட்டு வருகின்றன. வட்டார மற்றும் மாவட்ட அளவிலான குடும்ப நலத் தலைவர்கள் முகாம்கள், குழு விவாதங்கள், கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்காக மக்கள் தொகையியல் கல்விக்கென பேச்சுப் போட்டிகள் நடத்துதல், பொருட்காட்சிகள் மற்றும் சுவர் விளம்பரங்கள் மற்றும் பல்வேறு விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4. 2000–2001 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தமிழ்நாட்டில் 30 மாவட்டங்களில் மாவட்ட அளவிலான கருத்தரங்கம் நடத்தவும், 15 அதிக குழந்தைகள் பெறும் (இரண்டு குழந்தைகளுக்கு மேல்) மாவட்டங்களில் தீவிர தகவல் கல்வி விளம்பரப் பணிகள் மேற்கொள்ளுதல் | 15.00 |
| 2. | பழுதடைந்த குடிநீர், மின்சார வசதிகளை சரிசெய்தல் மற்றும் சிறு பணிகள் மேற்கொள்ளுதல் (100 இடங்களில்) | 50.00 |
| 3. | கணினிகள், உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள் | 1.00 |
| | மொத்தம் | 66.00 |



2001 ஆகஸ்ட் 29]

## அத்தியாயம்—6

## மருந்துக் கட்டுப்பாட்டு நிர்வாகம்

தமிழ்நாட்டிலுள்ள ஆயுர்வேதம், சித்தா, யுனானி, ஓமியோபதி மருந்துகள் உட்பட அனைத்து மருந்துத் தயாரிப்பு மற்றும் விற்பனையை முறைப்படுத்த, மருந்துக் கட்டுப்பாட்டு நிர்வாகம், 1981 ஆம் ஆண்டு நவம்பர் முதல் தனித் துறையாக இயங்கி வருகிறது.

2. ஆங்கில முறை மருத்துவம், ஆயுர்வேதம், சித்தா, யுனானி மருந்துப் பொருட்கள், ஓமியோபதி மருந்துகள், ஒப்பனைப் பொருட்கள் ஆகியவற்றைத் தயாரித்து விற்பனை செய்வதற்கான உரிமங்களை வழங்கவும், அவற்றைப் புதுப்பிப்பதற்கும் உரிய அதிகாரி, மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டு இயக்குநர் ஆவார். அவரே இரத்த சேமிப்பு வங்கிகளுக்கும் மத்திய உரிமம் வழங்கும் குழுமத்தின் ஒப்புதலின் பேரில் உரிமம் வழங்கும் அதிகாரம் பெற்றவர். இந்த மாநிலம் 13 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு மருந்துக் கட்டுப்பாட்டு உதவி இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். அவரே அந்த மண்டலத்திற்குரிய விற்பனை உரிமங்கள் வழங்குவதற்கும், புதுப்பிப்பதற்கும் உரிமை உள்ளவராவார். சட்டம் சம்பந்தமான விவகாரங்களில் நடவடிக்கை எடுக்கவும் சிறப்புப் புலனாய்வுகளை மேற்கொள்வதற்கும் மருந்துக் கட்டுப்பாட்டு இயக்ககத்தில் சட்டம்–புலனாய்வுப் பிரிவு ஒன்று உள்ளது. மதுரையில் போலி மருந்துகள் குறித்த புகார்களை ஆராய, நடமாடும் புலனாய்வுப் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது. மருந்து ஆய்வாளர்கள் எடுத்த மருந்துப் பொருட்கள், ஒப்பனைப் பொருட்கள் ஆகியவற்றின் மாதிரிகளைச் சோதனை செய்வதற்கு இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மருந்துப் பொருட்கள் சோதனை ஆய்வுக்கூடம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

3. இம்மாநிலத்தில் 31–3–2001 முடிய மொத்தம் 33,157 நிறுவனங்கள் மருந்துப் பொருட்களை விற்பனை செய்கின்றன. மேலும் 31–3–2001 முடிய மொத்தம் 2,057 நிறுவனங்கள் மருந்துப் பொருட்களைத் தயாரிக்கின்றன. (ஆங்கில முறை மருத்துவம் 1,070, இந்திய முறை மருத்துவம் 800, ஒப்பனைப் பொருட்கள் தயாரிப்பு நிறுவனங்கள் 171, ஹோமியோபதி 16).

4. மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் ஆகியவற்றின் தயாரிப்பையும், விற்பனையையும் முறைப்படுத்த கீழ்க்கண்ட சட்டங்கள் உள்ளன:

அ. 1940 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம்:

ஆ. 1995 ஆம் ஆண்டு மருந்துகள் விலைக் கட்டுப்பாட்டு ஆணை:

இ. 1954 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் மாயாஜால நிவாரணங்கள் (மறுக்கத் தக்க விளம்பரங்கள்) சட்டம்:

ஈ. 1985 ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கம் தரும் பொருட்கள் சட்டம்:

5. 2001-2002 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:

இத்துறையின் வளர்ச்சிக்காக 2001-2002 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தில் கருத்துரு அனுப்பப்பட்ட திட்டங்களின் விவரம்:

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டப்பணி விபரம் | இறுதி நிலைச் செலவு |
|---|---|---|
| 1. | 1999-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 3 புதிய மண்டல அலுவலகங்களுக்கு தொலைபேசி இணைப்புகள் வழங்குதல். | 0.54 |
| 2. | ஐந்து மண்டல அலுவலகங்களுக்கு புகைப்பட நகல் எடுக்கும் கருவி வாங்குதல். | 7.50 |
| 3. | மருந்து ஆய்வுக்கூட பயனுக்காக ஒரு புகைப்பட நகல் எடுக்கும் கருவி வாங்குதல். | 1.50 |
| | மொத்தம் | 9.54 |



அத்தியாயம் - 7

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை

இந்திய மருத்துவ முறைகளின் விரைவான வளர்ச்சியில் தமிழக அரசு முழு ஈடுபாடு கொண்டுள்ளது. உலகெங்கிலும் பாரம்பரிய மருத்துவ முறைகள் மீட்டுயிர்ப்பு செய்யப்படுவதைத் தமிழக அரசும் கவனத்தில் கொண்டுள்ளது. நவீன மருத்துவ முறையைப் பாரம்பரிய மருத்துவ முறையோடு இணைத்து ஒருங்கிணைந்த ஒரு புதிய மருத்துவத் தளத்தை உருவாக்க வேண்டும் என்ற புதிய சிந்தனை உலகெங்கும் தற்போது நிலவி வருகிறது. நவீன மருத்துவ முறையானது மனிதனின் நோய்களுக்கு மட்டும் சிகிச்சையளிக்கின்ற நிலையில், இந்திய மருத்துவ முறைகளோ மனிதனின் ஒட்டுமொத்த நலனையும் கருத்தில் கொண்டு சிகிச்சையளிக்கின்றன. நாளடைவில் தமிழகத்தில் உள்ள எல்லா மருத்துவ நிலையங்களிலும் நவீன மருத்துவ முறையோடு கூடவே, இந்திய மருத்துவ முறை சிகிச்சைகள் அனைத்தையும் அளிப்பதே குறிக்கோளாகும். ஏற்கெனவே இதற்கான நடைமுறைகள் தொடங்கப்பட்டு, தற்போது 281 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவர்களும், ஒரு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் யுனானி மருத்துவரும் பணியாற்றுகின்றனர். வருங்காலத்தில் படிப்படியாக ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் ஒரு இந்திய மருத்துவ முறை மருத்துவரைப் பணியமர்த்திட முயற்சி மேற்கொள்ளப்படும்.

### மருந்துகளைத் தரப்படுத்துதல்

இந்திய மருத்துவ முறைகளைப் பரப்புவதில் அவற்றின் மருந்துகளின் தர மேம்பாடு ஒரு பெரும் சவாலாக இருந்து வருகிறது. இதுகுறித்துப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்திய அரசின் உதவி பெற்று சென்னையிலும், பாளையங்கோட்டையிலும் உள்ள மருந்துசெய் நிலையங்களை முறையே, ரூ.50 இலட்சத்திலும், ரூ.80 இலட்சத்திலும் நவீனமயமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நவீன மருந்து சோதனைக்கூடம் ஒன்றை அமைத்திடவும் திட்டமிடப்பட்டு, அதற்குத் தேவையான உபகரணங்களை வாங்கவும், அதற்கான கட்டடம் கட்டவும் ரூ.85 இலட்சம் செலவிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சோதனைக்கூடம் அமைப்பதன் மூலம் சித்தா, யுனானி, ஆயுர்வேத மருந்துகளின் தரம் மேம்பட்டு, நம்பகமான மருந்துகள் மூலம் மக்களின் தேவை பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் அமைத்தல்**

சித்த மருத்துவ மேம்பாட்டிற்காக மத்திய அரசு, சென்னையில் தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் அமைக்க முடிவு செய்துள்ளது. மாநில அரசு, சென்னை தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தினை அமைப்பதற்காக 14.78 ஏக்கர் நிலத்தை மத்திய அரசுக்கு இலவசமாக வழங்கியுள்ளது. மேலும், தொடர் செலவிலும், தொடராச் செலவிலும் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ள மாநில அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இதனை விரைவில் நிறுவிட வேண்டிய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மைக் காலங்களில் உலகளாவிய நிலையில் இயற்கை மருந்துகள், இயற்கை உணவு, இயற்கை அழகுச் சாதனங்கள் தயாரிப்புத் தொழில்களில் ஆர்வம் பெருகி வருவதன் காரணமாக மூலிகை மருந்துத் தொழிலானது, விரைந்து வளரும் தொழில்களில் ஒன்றாகக் கருதப்பட்டுள்ளது. அகில உலக அளவில் மூலிகைச் சந்தையின் மதிப்பு 40 பில்லியன் டாலர் என்றும், அதன் ஆண்டு வளர்ச்சி விதம் 7 சதவீதம் என்றும் அறியப்பட்டுள்ளது. எனவே, மருத்துவத் தாவரங்கள் வாரியம் ஒன்றை அமைத்திட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய வாரியம் ஒன்றை உருவாக்கிட அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. இவ்வாரியம் மூலிகைகளின் உற்பத்தி, விற்பனை மற்றும் அவற்றைப் பதனப்படுத்துதல் ஆகிய பணிகளை ஒருங்கிணைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய மருத்துவ முறை தனது பண்டைய பெருமையை மீண்டும் அடைந்து, அது சுயமாகவே தம்மை நிலைநிறுத்திக்கொள்கின்ற ஓர் உகந்த சூழலை உருவாக்கிட வேண்டும் என்பதே அரசின் அடிப்படைத் தொடர் நடவடிக்கையாக அரசு பலநோக்குக் கொள்கையுடன் கீழ்க்கண்டவற்றில் கவனம் செலுத்தி வருகிறது:

1. கல்வி 2. ஆராய்ச்சி 3. பழைய மருத்துவ ஆவணங்களைச் சேகரித்து நூலாக்கம் செய்தல் 4. மாவட்டம், வட்டம், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அளவில் இந்திய மருத்துவ முறைகள் கிடைக்கச் செய்தல் 5. மருந்துகள் தயாரிப்பு, மருந்துகளைத் தரப்படுத்துதல், தர நிர்ணயம் செய்தல் 6. தரமான மூலிகைகளை வளர்த்தல், பராமரித்தல்

**கல்வி:**

இதில் இரு வேறு நிலைகள் பின்பற்றப்படுகின்றன. சித்தா, யுனானி, இயற்கை மருத்துவம் மற்றும் யோகா, ஓமியோபதிக் கல்லூரிகளை அரசே



முன்வந்து நிறுவி செயல்பட்டு வருகிறது. மேலும், தேவையான தகுதி படைத்த தனியார் கல்லூரிகளுக்கும் இத்துறை அனுமதி வழங்கி வருகிறது. அரசுக் கல்லூரிகளிலும், தனியார் கல்லூரிகளிலும் முறையே, 236 மற்றும் 660 மாணவர்கள் ஒவ்வோர் ஆண்டும் சேர்ந்து பயில்கின்றனர். அரசுக் கல்லூரிகளில் மட்டுமே மருத்துவப் பட்ட மேற்படிப்புக் கல்வி ஆண்டொன்றுக்கு 80 மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அரசுக் கல்லூரிகளில் ஆண்டொன்றுக்கு 85 மாணவர்களுக்கு மருந்தாளுநர் பட்டயக் கல்வி அளிக்கப்படுகிறது. அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் 20 மாணவர்களுக்கு மேசியர் பயிற்சி ஆண்டொன்றுக்கு அளிக்கப்படுகிறது. நிறுவனங்களில் அளிக்கப்படும் படிப்புகள் விவரம் அட்டவணை வருமாறு:

| நிறுவனத்தின் பெயர் | சித்தா | ஆயுர்வேதா | யுனானி | ஓமியோபதி | யோகா - இயற்கை மருத்துவம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| பட்டப்படிப்பு | 150 | | 26 | 50 | 10 | 236 |
| அரசுக் கல்லூரி | | 90 | | 300 | 100 | 490 |
| தனியார் | 60 | 60 | | 50 | | 170 |
| 1 தற்போது உள்ளபடி | | | | | | |
| 2. புதிய சேர்க்கை (2001-2002) | | | | | | |
| பட்ட மேற்படிப்பு அரசு | 80 | | | | | 80 |
| மருந்தாளுநர் பயிற்சி அரசு | 30 | 15 | 15 | 25 | • | 85 |
| மேசியர் (தேகம் பிடித்து விடுவோர்) அரசு | 20 | | | | | 20 |
| சித்த இயன் முறைப் பயிற்சி தனியார் | 40 | | | | | 40 |

**ஆராய்ச்சி:**

சென்னை–தாம்பரம் நெஞ்சக நோய் மருத்துவமனையில் எய்ட்ஸ் நோயாளிகளுக்குப் பரிசோதனை முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சித்தா மற்றும் அலோபதி மருத்துவர்களைக் கொண்ட குழு ஒன்று இதனைக் கண்காணிக்க நிறுவப்பட்டுள்ளது. இதேபோன்று, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையிலும், அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டையிலும் புற்றுநோய், எய்ட்ஸ்,

[2001 ஆகஸ்ட் 29

நீரிழிவு, மலட்டுத் தன்மை போன்ற நோய்களுக்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**பழைய மருத்துவ ஆவணங்களைச் சேகரித்து நூலாக்கம் செய்தல்:**

சித்தர்கள் எழுதி விட்டுச் சென்றுள்ள ஓலைச் சுவடிகள் நமக்குக் கிடைத்துள்ள அரிய செல்வமாகும். அரிய ஓலைச் சுவடிகளைச் சேகரித்து, கடினப்பட்டு, படித்தறிந்து புத்தகமாக வெளியிடும் அரிய பணியை முதன்மையானதாகச் செயல்படுத்தி வருகிறது. இதுவரை கீழ்க்காணும் ஆவணங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன:

1. அரிய நூற்கள் 1064
2. ஓலைச் சுவடிகள் 1063
3. கையெழுத்துப் பிரதிகள் 256
4. தட்டச்சுப் பிரதிகள் 360

**மொழி பெயர்ப்புப் பிரிவு செய்யும் பணிகள் கீழ்வருமாறு:**

தமிழிலுள்ள 11 சித்த மருத்துவப் புத்தகங்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவற்றுள் 2 புத்தகங்கள் வெளியாகியுள்ளன. மற்ற 9 புத்தகங்கள் அச்சிடும் நிலையில் உள்ளன.

ஆயுர்வேதப் புத்தகங்களான சரகசம்ஹிதா (3 பாகங்கள்), சுஸ்ருத சம்உறிதா (2 பாகங்கள்), அஷ்டாங்க சங்கிரகம் ஆகியவை சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு அச்சாகியுள்ளன.

யுனானி மொழிபெயர்ப்பு நூலான கிடாபுல் அட்வியா, அரசினர் யுனானி மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர்களால் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது. மேலும், யுனானி மருத்துவ அகராதி (உருது—ஆங்கிலம்—தமிழ்) ஒன்றும் தொகுக்கப்பட்டு வருகிறது.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, அரிய சித்த ஓலைச் சுவடிகளை பாரம்பரிய இந்திய மருத்துவர்களிடமிருந்து சேகரிக்க முயற்சிகள் எடுத்து வருகின்றது. இதுவரை 202 ஓலைச் சுவடிக் கட்டுகளும், 30 அரிய சித்த மருத்துவப் புத்தகங்களும் பரம்பரை மருத்துவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன.



2001 ஆகஸ்ட் 29]

**மாவட்டம், வட்டம், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அளவில் இந்திய மருத்துவ முறைகள் கிடைக்கச் செய்தல்:**

264 படுக்கைகளைக் கொண்ட அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை, சென்னை, தொடங்கி அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் வரை 631 நிலையங்களில் இந்திய மருத்துவ முறைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிறுவனங்களில் 965 உள்நோயாளி படுக்கைகள் அமைந்துள்ளன. இதன் விவரங்கள் வருமாறு:

| இந்திய மருத்துவ முறையின் பெயர் | நிலையங்களின் எண்ணிக்கை | மருத்துவ படுக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. சித்தா | 567 | 651 |
| 2. ஆயுர்வேதா | 11 | -- |
| 3. யுனானி | 7 | -- |
| 4. ஓமியோபதி | 43 | 50 |
| 5. யோகா இயற்கை மருத்துவம் | 1 | -- |
| 6. ஒருங்கிணைக்கப்பட்ட மருத்துவமனை (சித்தா, ஆயுர்வேதா, யுனானி, வர்மா) | 2 | 264 |
| மொத்தம் | 631 | 965 |

**மருந்துகள் தயாரிப்பு, மருந்துகளைத் தரப்படுத்துதல், தர நிர்ணயம் செய்தல்:**

நான்கு அரசு மருந்துசெய் நிலையங்கள் சித்தா, ஆயுர்வேதா, யுனானி மருந்துகளை உற்பத்தி செய்கின்றன. அவை சென்னை, பாளையங்கோட்டை, வண்ணாரப்பேட்டை, திருமயம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்த மருந்துசெய் நிலையங்களில் புதிய கருவிகள் வாங்குவதற்கும் கட்டடங்கள் கட்டுவதற்கும், பாளையங்கோட்டை மருந்துசெய் நிலையத்திற்கு ரூ.80 இலட்சமும், சென்னை மருந்துசெய் நிலையத்திற்கு ரூ. 50 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பணி முடிவடையும்போது மருந்துகளின் தரமும் உயரும். இந்திய முறை மருந்துகளைத் தரப்படுத்தவும், மருந்துகளை சோதனை செய்யவும்

தேவையான வசதி இல்லை என்பது கண்டறியப்பட்டு, 2001–2002 ஆம் நிதியாண்டில் மாநில மருந்தாய்வுக் கூடம் கட்டுவதற்கும், கருவிகள் வாங்குவதற்கும் ரூ.85 இலட்சத்தை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. மாநிலத்தில் முதல் முயற்சியான இது, தரமான மருந்துகளைத் தயாரித்து ஒழுங்குபடுத்தப் பெரிதும் உதவும்.

**தரமான மூலிகைகளை வளர்த்தல், பராமரித்தல்:**

மூலிகை மருத்துவக் கழகம் ஒன்றை நிறுவி மூலிகை தயாரித்தல், தர நிர்ணயம் செய்தல், அவற்றைப் பாதுகாத்தல் போன்றவற்றை ஒருங்கிணைக்கத் தனி முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கெனவே வணிக ரீதியில் மூலிகைகளின் பயன்பாட்டை மேம்படுத்திட அரசு, டாம்ப்கால் நிறுவனத்தை நிறுவியுள்ளது.

**டாம்ப்கால்:**

மூலிகை மேம்பாட்டிற்கும் வணிக ரீதியில் இக்கழகத்தில் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.50 இலட்சங்கள், தற்போதைய செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.20.75 இலட்சங்கள் தமிழ்நாடு அரசினால் முதலீடு செய்யப்பட்டுள்ளது. கடன் மற்றும் ஏனைய இனங்களில் அரசிற்குச் செலுத்த வேண்டிய பாக்கி ஏதும் இல்லை. 1998–99 ஆம் ஆண்டு முதல் ஆதாயப் பங்கை அரசிற்கு செலுத்த ஆரம்பித்துள்ளது.

கொல்லிமலையில் மூலிகைத் தாவரங்களைப் பயிரிட்டு அபிவிருத்தி செய்வதற்கென இக்கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 105 ஏக்கர் நிலத்தில் 55 ஏக்கர் நிலத்தினைப் பயன்படுத்தி உள்ளது. இந்த 55 ஏக்கர்கள் நிலத்தில் எல்லா அபிவிருத்திப் பணிகளும் முடிக்கப்பட்டு, பயிரிடும் பணி முடிக்கப்பெற்றுள்ளது. இந்த மூலிகைப் பண்ணையிலிருந்து நல்ல வருவாய் ஈட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டாம்ப்கால் 1998–99 ஆம் ஆண்டில் ரூ.38 இலட்சம் இலாபமும், 1999–2000 ஆம் ஆண்டில் ரூ.26.78 இலட்சம் இலாபமும் ஈட்டியுள்ளது. 2000–2001 ஆம் ஆண்டில் மேலும் ரூ.38 இலட்சம் நல்ல இலாபமாக ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கழகம் விகரஸ் கோல்டு, டாம்பிடைசர், பெமிக்யூர், பெயின்பாம் போன்ற ஒரு டஜன் புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இக்கழகம் அதன் பொருட்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து சாதனை படைத்து வருகிறது. இந்திய மருத்துவத்தை ஊக்குவிக்கும் பொருட்டு இன்டர்நெட்டில் (www.tampcol.com) என்ற இணையத் தளத்தைத் தொடங்கியுள்ளது.



2001–2002 ஆம் நிதியாண்டில் உயர் இரத்த அழுத்தக் குறைப்புக் கூடுகள், நீரிழிவு குறைப்புக் கூடுகள், குடற்புண் மற்றும் அமிலத் தன்மை நீக்கும் மாத்திரைகள் போன்ற புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றைத்தவிர, தற்போதுள்ள பெட்டக மருந்துகளில் 10 மருந்துகளை அதிகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கூறிய நடவடிக்கைகளின் மூலம் 2001–2002 ஆம் ஆண்டு விற்பனைத் தொகை ரூ.550.00 இலட்சத்தினைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி பயிற்சி பெற்ற மருத்துவர்களுக்குப் பதிவு:

தமிழ்நாடு இந்திய முறை மருத்துவக் கழகம், சென்னை, இந்திய மருத்துவ ஒருங்கிணைப்பு கழகம், சென்னை மற்றும் தமிழ்நாடு ஓமியோபதி மருத்துவக் கழகம், சென்னை ஆகியவை மாநிலத்திலுள்ள இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவ முறையில் பயிற்சி பெற்ற மருத்துவர்களைப் பதிவு செய்து வருகின்றன.

**31.3.2001 வரை பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:**

| மருத்துவ முறை | தமிழ்நாடு இந்திய முறை மருத்துவக் கழகம் | இந்திய மருத்துவ ஒருங்கிணைப்பு கழகம். |
|---|---|---|
| ஆயுர்வேதா | 3873 | 431 |
| யுனானி | 1113 | 46 |
| இயற்கை வைத்தியம் | 45 | - |
| மொத்தம் | 5031 | 477 |

**இந்திய மருத்துவ முறை தொழில் புரிவோர் (பதிவு):**

1982–க்கு பிறகு பரம்பரை இந்திய மருத்துவ முறையைப் பின்பற்றும் மருத்துவர்களை இந்திய மருத்துவக் கழகத்தில் பதிவு செய்ய இந்திய மருத்துவ மத்தியக் குழுச் சட்டத்தில் இடமில்லை. எனினும், பரம்பரை மருத்துவம் செய்து வந்தவர்களின் நலனைக் காக்கும்பொருட்டு, இந்திய மருத்துவம் செய்யக் கோரி விண்ணப்பித்த பரம்பரை 1982 ஆம் ஆண்டில் பதிவு செய்யக் கோரி விண்ணப்பித்த பரம்பரை வைத்தியர்களின் பெயர்களை அவர்கள் தமிழ்நாட்டில் மருத்துவத் தொழிலைச் செய்ய ஏதுவாக தமிழ்நாடு இந்திய முறை மருத்துவக் கழகத்தில் பதிவு செய்து கொள்ளலாம் என்று அரசு ஆணையிட்டது. இதனால், 3322 நபர்கள் இந்தப் பதிவு செய்யும் திட்டத்தின்கீழ் பயன் பெற்றுள்ளனர்.

**தமிழ்நாடு சித்த மருத்துவ மன்றம்**

*தமிழ்நாடு சித்த மருத்துவ முறை (மேம்படுத்துதல் மற்றும் மருத்துவத் தொழிலாற்றுநர்கள் பதிவு செய்து கொள்ளுதல்) சட்டம், 1997:*

சித்த முறை மருத்துவத்தை மேம்படுத்தவும், சித்த மருத்துவர்களின் பதிவு மற்றும் புதுப்பித்தல் முறைகளை வரன்முறைப்படுத்தவும், தமிழ்நாடு சித்த மருத்துவ முறை (மேம்படுத்துதல் மற்றும் மருத்துவத் தொழிலாற்றுநர்கள் பதிவு செய்து கொள்ளுதல்) சட்டம், 1997 மாநில அரசால் இயற்றப்பட்டு, இச்சட்டம் 29–9–1997 முதல் அமலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு ஓமியோபதி மருத்துவக் கழகம்:**

31–3–2001 வரையில் தமிழ்நாடு ஓமியோபதி மருத்துவக் கழகத்தில் 16,342 ஓமியோபதி மருத்துவர்கள் அவர்களுடைய பெயரைப் பதிவு செய்துள்ளனர். அவர்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| ஏ | வகுப்பு மருத்துவர்கள் | 1156 |
| பி | வகுப்பு மருத்துவர்கள் | 14144 |
| சி | வகுப்பு மருத்துவர்கள் | 1042 |
| | மொத்தம் | 16342 |

**12. 2001–2002 ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:**

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்ட விளக்கம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையில் புற நோயாளிகளுக்கான கூடுதல் கட்டிட வசதி | 40.00 |
| 2 | அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் உயிர்வேதியியல், நோய்க் கணிப்பு, ஆய்வுக்கூடத்திற்கு புதிய கருவிகள், இராசயனங்கள் வாங்குதல் | 8.00 |
| 3. | நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளில் உபயோக பயன்படுத்த 6 கணினிகள் மற்றும் ஜெராக்ஸ் இயந்திரம் ஒன்று வாங்குதல் | 9.00 |
| 4 | அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில் உள்ள இயற்கை மற்றும் யோகா சிகிச்சை பிரிவில் கல்லூரிக்காக பழைய கட்டிடத்தின் மேல் முதல்தளம் கட்டுதல் | 30.00 |
| | மொத்தம் | 87.00 |





**அத்தியாயம் – 8**

## டேனிடா தமிழ்நாடு பகுதி நல்வாழ்வுத் திட்டம் மூன்றாம் கட்டம்

டேனிடா தமிழ்நாடு பகுதி நல்வாழ்வுத் திட்டத்தின் தற்போதைய மூன்றாம் கட்ட திட்டப் பணிகள் 24–12–1996 முதல் 5 ஆண்டுகட்கு, ரூ.59.10 கோடி (நேரடி நிதி ரூ.6.00 கோடியையும் சேர்த்து) ஒதுக்கீட்டில், தருமபுரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் திட்டத்தின் அனைத்துப் பணிகளும், சேலம், நாமக்கல், கடலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய பழைய திட்ட மாவட்டங்களில் சில பணிகளும், மாநில அளவில் பணியிடைப் பயிற்சி, மருந்து விநியோகம் முதலிய பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டம், அது நடைமுறைப்படுத்தப்படும் பகுதிகளில் வாழும் கிராமப்புற மக்களின் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்தினைக் குறிப்பாக, நலிவுற்ற மக்களின் நலனை மேம்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. தேசிய நலவாழ்வு கொள்கையின்படி தற்போதுள்ள நலவாழ்வு மற்றும் குடும்ப நலப் பணிகளுக்கான வசதிகளை ஒருங்கிணைத்து மேம்படுத்துவதற்காகவும், பலப்படுத்துவதற்காகவும், டேனிடா நிறுவனம் நல்வாழ்வு, பிரிவிற்கு இருசார் உதவி அளிக்கும் நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இத்திட்டத்திற்கான நிதியைச் செலவிட்டு திரும்பப் பெறும் அடிப்படையில் டேனிடா 85 சதவீதப் பங்கும், மைய அரசு 5 சதவீதப் பங்கும், மாநில அரசு 10 சதவீதப் பங்கும் அளிக்கின்றன.

**நிர்வாக அமைப்பும் மேலாண்மையும்:**

மாநில அளவில், சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு, திட்ட இயக்குநரின்கீழ் இத்திட்டத்தின் செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. மாநில திட்ட ஒருங்கிணைப்புக் குழு/ அதிகாரக் குழு ஆகியவற்றின் ஒப்புதல் பெற்ற பிரேரணைகள்மீது இத்திட்டத்தின் இயக்ககம், நலவாழ்வு மற்றும் பிற துறைகளான பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம், குடும்ப நல இயக்ககம், தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தி வருகிறது. மாவட்ட அளவில், குறைந்த ஆதரவிலான பணியாளர்களுடன் கூடிய மாவட்ட மேலாண்மைக் குழுமம் உருவாக்கப்பட்டு, திட்டப் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு, துணை சுகாதார இயக்குநர்களுக்கு உதவி வருகின்றனர். திட்டப் பணிகளின் நடைமுறைகளை மாநில அளவில் மாநில திட்டக் கண்காணிப்புக் குழுவும், மாவட்ட அளவில் மாவட்ட திட்டக் கண்காணிப்புக் குழுக்களும் கண்காணிக்கின்றன.

**மூன்றாம் கட்ட சாதனைகள் மற்றும் பணி முன்னேற்றம்:**

கட்டுமானப் பணிகள்:

தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்திற்கு தருமபுரியில் ஒரு மத்திய மருந்துக் கிடங்கு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மற்றொன்று, திருவாரூரில் கட்டப்பட்டு வருகிறது. மாரண்டஹள்ளி ஆரம்ப சுகாதார நிலையம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. குடிநீர், எரிவாயு மற்றும் சூரிய ஒளி விளக்கு ஆகிய வசதிகளுடன்கூடிய 400 துணை சுகாதார நிலையங்கள் சமுதாய ஒத்துழைப்புடன் புதிய திட்ட மாவட்டங்களில் கட்டப்பட்டு வரும் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெறுகின்றன. 1000 பழைய துணை சுகாதார நிலையங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வசதி செய்யும் பணி நடைபெற்று வருகிறது. திட்ட மாவட்டங்களிலுள்ள 100 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சீரமைத்தல் மற்றும் உபகரணங்கள் வழங்குதல், 350 பழைய துணை சுகாதார நிலையங்களுக்கு மின் வசதி மற்றும் குடிநீர் வசதி வழங்குதல், 45 பழைய துணை சுகாதார நிலையங்களைப் புதுப்பித்தல் மற்றும் 50 பழைய துணை சுகாதார நிலையங்களில் சிறு பழுதுகள அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. விழுப்புரத்திலுள்ள மத்திய மருந்து கிடங்கிற்கு சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளது. சேலம் மற்றும் விழுப்புரத்தில் உள்ள மனிதவள மேம்பாட்டு நிறுவனங்கள், ஓசூரில் உள்ள விலங்கின நோய் பரிவர்த்தனை மற்றும் பரப்பிகள் கட்டுப்பாட்டு நிலையம், 5 பலநோக்குப் பெண் சுகாதாரப் பணியாளர் பயிற்சிப் பள்ளிகள், 20 ஊரக சுகாதாரப் பயிற்சிப் பள்ளிகள், சென்னையிலுள்ள பெண் பலநோக்கு சுகாதார மேற்பார்வையாளர் பயிற்சிப் பள்ளி, சென்னை, மதுரை மற்றும் காந்திகிராமத்திலுள்ள சுகாதாரம் மற்றும் குடும்ப நலப் பயிற்சி நிலையங்கள், மாரண்டஹள்ளியிலுள்ள பயிற்சி நிலையம் மற்றும் பூந்தமல்லியிலுள்ள பொதுச் சுகாதாரப் பயிற்சி நிறுவனம் ஆகிய பயிற்சி நிலையங்களின் உள்ளமைப்பு, பயிற்சி வசதிகள் மற்றும் உபகரணங்கள் வலுப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

தகவல் தொடர்பு மேம்படுத்துதல்:

சிசு மரணம் மற்றும் பேறுகால மரணம் தொடர்பான மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவிலான பணியரங்குகள், நலவாழ்வு அலுவலர்களிடம் பெண்ணுரிமை மேம்பாடு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு நடத்தப்பட்டன. கலைப்பயணம் என்னும் தெரு நாடகக் கலைக் குழு மூலம் தருமபுரி மாவட்ட கிராமப்புறப் பகுதிகளில்



சுகாதாரம், பெண்ணுரிமை மற்றும் பெண் சிசுக்கொலைக்கு எதிராக சமுதாயத்தை ஒன்று திரட்ட நாடகம் மற்றும் பாட்டுகள் போன்றவை நடத்தப்பட்டன. இதுபோன்ற கலைப்பயணம் திருவாரூர் மாவட்டத்திலும் நடத்தப்பட்டது. மேலும் சேலம் மாவட்டத்திலும் செயல்படுத்தப்படவுள்ளது. மாநிலம் முழுவதும் உள்ளடக்கிய 1996 மற்றும் 1997, 1998 மற்றும் 1999 ஆண்டுகளின் முக்கிய நிகழ்வுக்கான ஆய்வுகள் முறையே 1998, 1999 மற்றும் 2000 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டு மாவட்ட அளவிலான முக்கிய நிகழ்வுகள் மதிப்பீடு செய்யப்பட்டன. உள்ளாட்சி உறுப்பினர்கள், சமுதாய செயல்வீரர்கள் மற்றும் சுகாதாரக் களப் பணியாளர்கள் ஆகியோருக்கு நலவாழ்வுப் பிரச்சனைகள், கொள்கைகள் மற்றும் செயற்படுத்துதல் ஆகியவற்றுக்கான புத்தறிவுப் பயிற்சி ஒன்று மிகப் பெரிய அளவில் நடத்துவதற்கான பயிற்சி தற்சமயம் நடைபெற்று வருகிறது. நலவாழ்வு மற்றும் பெண்ணுரிமை குறித்த பாடல்கள், தகவல்கள் கொண்ட ஒலிநாடாக்கள் சமுதாய நலப் பணியாளர்கள் மற்றும் பள்ளிகளுக்கு வழங்கப்படவுள்ளன. பிற மக்கள் தொடர்பு சாதனங்களான சினிமா அரங்குகள், சுவரோவியங்கள், ஒட்டிகள் (Stickers) ஆகியவை நல்வாழ்வு மற்றும் குடும்ப நலச் செய்திகளை, திட்ட மாவட்டங்களில் பரப்பப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், இத்திட்டத்தில் உருவாக்கப்பட்ட தகவல் தொடர்புப் பொருட்கள் திட்ட மாவட்ட இளம் விடலைப் பருவத்தினருக்குப் பள்ளிகளில் போட்டிகள் மற்றும் இதர நிகழ்ச்சிகள் மூலம் விநியோகிக்கப்பட உள்ளன. இளம் விடலைப் பருவத்தினருக்கு சுகாதாரம் மற்றும் குடும்ப நலவாழ்வுக் கல்வி தொடர்பான 'மலர்ந்து மலராத' என்னும் ஒரு புதிய தொடர் நிகழ்ச்சிக்கு அகில இந்திய வானொலி நிலையத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இத்தொடர் அக்டோபர் 2000 முதல் 1 வருட காலத்திற்கு அகில இந்திய வானொலி மூலம் ஒலிபரப்பப்பட்டு வருகின்றது. திட்ட மாவட்டங்களில் அனைத்து மட்டத்திலும் தற்போது உள்ள தகவல் தொடர்பு/நலக்கல்வி உபகரணங்கள் ஆய்வு மேற்கொண்டு தேவைப்படும் இடங்களில் சரி செய்தல் மற்றும் புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

பயிற்சி:

பயிற்சி அறிவுரைக் குழுமத்தின் உதவியுடன்கூடிய மாநில பயிற்சிப் பிரிவு ஒன்று பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு அனைத்து வகைப் பயிற்சிகளின் செயலாக்கத்திற்குத் திட்டமிட உதவி புரிகிறது. திட்ட

மாவட்டங்களில் 10 மாவட்டப் பயிற்சிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. பயிற்சி நிறுவனங்களின் பயிற்றுவித்தல் திறனை மேம்படுத்துவதற்குத் தேவையான சீரான பணியாளர் அமைப்பு/பயிற்சிப்படி, உபகரணங்கள் மற்றும் நூலக வசதிகள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் சீரான பயிற்சி பெறுபவர் பரவலை அனைத்துப் பயிற்சி நிலையங்களிலும் ஏற்படுத்த இயலும். மாவட்ட நல அலுவலர்களுக்கு மேம்படுத்தப்பட்ட மேலாண்மைக்கான பயிற்சி தரப்படவுள்ளது. வட்ட அளவிற்குக் கீழ்மட்டத்திலுள்ள பெண் சுகாதாரக் களப் பணியாளர்களுக்கு இந்திய மருத்துவ முறை தொடர்பான பயிற்சி வழங்கப்படவுள்ளது. அதற்கான வரைவுப் பயிற்சிக் கையேடுகள் உருவாக்கப்பட்டு அச்சிடும் பணி தற்சமயம் நடைபெற்று வருகிறது.

**நலப் பணிகள் நிர்வாகம்:**

ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெறும் பணிகள் குறித்த புள்ளிவிவரங்கள் மாதந்தோறும் கணிப்பொறி உதவியுடன் தொகுப்பதற்கான மென்பொருள் உருவாக்கப்பட்டு, அதன்மூலம் மாநிலத்திலுள்ள 1,410 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெறும் பணிகள் கண்காணிக்கப்படுகின்றன. கணிப்பொறிகள் 10 திட்ட மாவட்டங்களிலுள்ள துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகங்கட்கு வழங்கப்பட்டுள்ளன. பொதுச் சுகாதாரத் துறைக்கென 35,000 பணியாளர்களின் விவரங்களடங்கிய ஒரு பணியாளர் தகவல் முறை பல்லவன் போக்குவரத்து ஆலோசனை நிறுவனத்தின் மூலமாக உருவாக்கப்பட்டு வருகிறது. இளநிலை அலுவலர்களுக்கான மேலாண்மை மேம்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டு, 700 மருத்துவ அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் திட்டமிடல் மற்றும் செயலாக்கத் திறன் மேம்படுத்துதலுக்கான ஒரு முயற்சியாக ஒருங்கிணைந்த மாவட்ட நலத் திட்டம், மாவட்ட சுகாதார அலுவலர்களால் தயாரிக்கப்பட்டு வருகிறது. சுகாதார மேலாண்மைத் தகவல் முறையினை மேம்படுத்துவதற்காக மாவட்டங்கள் மற்றும் மாநில அளவில் பணிபுரியும் அலுவலர்களுக்கு எல்காட் (ELCOT) நிறுவனத்தின் மூலமாக கணினிப் பயன்பாட்டின் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் உள்ள கிராம சுகாதார செவிலியர்களுக்கான சுகாதார மேலாண்மைத் தகவல் முறைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் அச்சிட்டு விநியோகிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இரு சக்கர வாகனங்கள்



ஓட்ட விருப்பமுள்ள எல்லா பெண் சுகாதாரக் களப் பணியாளர்களுக்கும் திட்ட மாவட்டங்களில் இரு சக்கர வாகனம் வாங்குவதற்கான எளிய கடனுதவி மற்றும் ஓட்டுவதற்கான பயிற்சி அளித்து, அவர்களது இடம்பெயராற்றலைத் துரிதப்படுத்தி சுகாதாரப் பணிகள் மேம்படுத்தபட்டுள்ளன. மேலும், அதற்கான ஒரு சுழல் நிதியும் உருவாக்கப்பட்டுள்ளது.

**மருந்து வழங்கல் மேம்பாடு:**

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் 23 மத்திய மருந்துக் கிடங்குகளுக்கும் கணிப்பொறி உள்ளிட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன மற்றும் நான்கு மண்டல மேலாளர்களுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து உபகரணங்கள் மற்றும் கருவிகள் பராமரிப்பு மற்றும் அதற்கான முறைகள் உருவாக்கத்திற்கென மாநிலத்தில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களுக்கான ஆய்வு நடத்தப்பட்டு வருகின்றது. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான மருந்து வழங்குதல் முறையைச் சீர் செய்யும்பொருட்டு மருந்து அளவீடு ஆய்வு நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்திற்கு மருந்து வழங்கு முறையைச் சீர் செய்யும்பொருட்டு வல்லுநர்கள் சேவை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**2001–2002க்கான உத்தேசிக்கப்பட்ட செயல்பாடுகள்:**

இத்திட்டம் தற்சமயம் திருத்திய திட்ட மதிப்பீடான ரூ 70.70 கோடியைப் பெறுவதற்கும் திட்டப் பணிகளை டிசம்பர் 2002 வரை நீட்டிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கான அனுமதி மத்திய, மாநில அரசுகளிடமிருந்து எதிர்நோக்கப்படுகிறது. இத்தொகை கிடைக்கப்பெற்றதும் கீழ்க்கண்ட செயல்பாடுகளுக்கான கருத்துருக்கள் மாநில திட்ட ஒருங்கிணைப்புக் குழு/அதிகாரக் குழுவின் ஒப்புதல் பெற்று அரசாணை பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

1. தற்சமயம் புதிய மற்றும் பழைய திட்ட மாவட்டங்களில் செயல்பட்டு வரும் மாவட்டப் பயிற்சிக் குழுக்கள், மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தி பயிற்சியாளர் பயிற்சி, மண்டலப் பயிற்சி நிலையங்களுக்கு வழங்குவது போன்று சீரான உதவித்தொகை மற்றும் கட்டணங்கள் வழங்குதல்.

[2001 ஆகஸ்ட் 29

2 சுகாதார மேலாண்மைத் தகவல் முறையை சுகாதார ஆய்வாளர், ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் முதன்மைப் பரிந்துரை நிலையச் செயல்பாடுகளுக்கு முறைப்படுத்துதல்.

3. தற்சமயம் திட்ட மாவட்டத்தில் கிராம சுகாதார செவிலியர்களுக்கு இரு சக்கர வாகனங்கள் ஓட்டும் பயிற்சி மற்றும் வாகனம் வாங்குவதற்கான முன்பணம் வழங்குதலை மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தல்.

4. ஆரம்ப சுகாதார நிலையப் பணியாளர்களுக்குச் சீரான மருந்து உபயோகிப்பதற்கான பயிற்சி அளித்தல், கிராம சுகாதார செவிலியர்களுக்கு அடிப்படை சுகாதார நலன் தொடர்பான கையேடுகள் வழங்குதல் மற்றும் மருந்தாளுநர்களுக்கு மேலாண்மை மருந்து விநியோகக் கையேடுகள் வழங்குதல்.

5. தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் கட்டுமானப் பணிப் பிரிவினை வலுப்படுத்தல்.

6. துணை சுகாதார நிலையங்களைப் பராமரிப்பதற்கான மொத்த நிதிக் கோட்பாட்டை உருவாக்குதல்.

7. சுயசார்புக் குழுக்கள் மூலம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறை, குடும்ப நலத் துறை மற்றும் சமூகநலத் துறைகளின் தகவல்/கல்வித் தொடர் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

## அத்தியாயம் – 9

## பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம்

1994 ஆம் ஆண்டு கெய்ரோ நகரில் மக்கள் தொகை மற்றும் வளர்ச்சி மேம்பாடு சம்பந்தமாக அனைத்து நாடுகளும் பங்கேற்ற உலக மாநாட்டில் குடும்ப நல செயல் திட்டத்தை மட்டுமே முக்கியமாகக் கொள்ளாமல் மகளிர் நல்வாழ்வு குறித்து முழுமையான அணுகுமுறையில் ஒரு திட்டத்தைப் பரிந்துரை செய்தது. அதுவே "பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம்" என்பதாகும்.



2001 ஆகஸ்ட் 29]

**பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின் அணுகுமுறை:**

இனப்பெருக்கம் மற்றும் கருத்தரிப்பதை முறைப்படுத்தும் திறமை உள்ளவர்களாக மக்களைத் தயார் செய்யவும், கர்ப்ப காலத்தையும், பிள்ளைப் பேற்றையும் மகளிர் பாதுகாப்பாகக் கடந்து செல்லவும், அத்தகைய கர்ப்பங்கள், தாய் மற்றும் சிசுவின் நல்வாழ்வை உறுதிப்படுத்தவும், தம்பதியர், கர்ப்பமுறுதல் மற்றும் நோய்கள் ஏற்படுதல் போன்ற பயம் ஏதுமின்றி தாம்பத்திய உறவு மேற்கொள்ள உதவுதல் போன்றவை பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின் அணுகுமுறைகளாகும்.

இந்தக் கருத்தைக் கவனத்தில் கொண்டு, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்தை மேம்படுத்தும் வகையில், தற்பொழுது செயல்பட்டுக் கொண்டிருக்கும் அனைத்து தாய் சேய் நலத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் பயன் பெறுவோருக்கு அவர்களுடைய நலத் தேவைகள் அடிப்படையிலும், அவர்களுடைய திருப்தியை மையமாக வைத்தும், அவர்கள் தேவையைக் கேட்டுப் பெறும் வகையிலும், அதிகத் தரம் வாய்ந்த ஒருங்கிணைந்த சேவைகளை அளிப்பது இத்திட்டத்தின் அடிப்படைக் கருத்தாகும்.

**திட்ட அமலாக்கம்:**

பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம் தமிழ்நாட்டில் இரண்டு பகுதிகளாக அமல்படுத்தப்படுகிறது.

(அ) முதல் கட்டமாக, மதுரை மற்றும் தேனி மாவட்டங்களின் நகர் மற்றும் கிராமப் புறங்களில் உப திட்டமாகச் செயல்படுத்துதல்.

(ஆ) மாநிலம் முழுமைக்கும் மீதமுள்ள அனைத்து மாவட்டங்களின் பேறுசார் திட்டத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

இந்த உப திட்டம் 1997–98ம் ஆண்டு முதல் 5 வருட காலத்திற்கு 23.14 கோடி ரூபாய் உலக வங்கி நிதி உதவியுடன் (கிராமப்புறத்திற்கு 15.24 கோடி ரூபாயாகவும், நகர்ப்புறத்திற்கு 7.90 கோடி ரூபாயாகவும்) மதுரை மற்றும் தேனி ஆகிய இரு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாநில அளவிலான செயல் திட்டத்தின்கீழ் அனைத்து மாவட்டங்களுக்கும் தாய் சேய் நலத் திட்டத்தின் சில குறிப்பிட்ட செயல் திட்டங்கள் மத்திய அரசு மற்றும் உலக வங்கி ஒப்புதலுடன் செயல்படுத்தப்படுகிறது.

[2001 ஆகஸ்ட் 29

**மதுரை, தேனி மாவட்டங்களுக்கான உப திட்டத்தின் பரந்த குறிக்கோள்கள்:**

அ. மகளிர், வளரும் இளம் வயதினர் மற்றும் குழந்தைகளின் நலவாழ்வு நிலையை மேம்படுத்துதல்

ஆ மகளிர் நலமுடன் வாழ்வதற்காக தரமான சேவைகளைப் பயன்படுத்தும் பழக்கத்தை அதிகரிக்கச் செய்தல்

இ. நலச் சேவைகளின் தரத்தை உயர்த்துவதன் மூலமாக நலச் சேவைகள் வழங்குவோரின் மதிப்பினை அதிகரித்தல்.

**மதுரை, தேனி மாவட்டங்களுக்கான உப திட்டத்தின் சிறப்புக் குறிக்கோள்கள்:**

(அ) சிசு இறப்பு விகிதத்தை, 1000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு 50–க்குக் கீழாகக் குறைத்தல்–பேறுசார் தாய் இறப்பு விகிதத்தை 1000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு ஒன்றுக்கும் கீழாகக் குறைத்தல்.

(ஆ) சிசுக்களுக்கு ஏற்படும் நோய்கள், குறிப்பாக வயிற்றுப்போக்கு, தீவிர சுவாசப் பாதைத் தொற்றுநோய் ஆகிய நோய்களின் தாக்கத்தைக் கணிசமாகக் குறைத்தல்

(இ) தாய்மார்களுக்கு ஏற்படும் நோய் நிலையினைக் கணிசமாகக் குறைத்தல்

(ஈ) மருத்துவ ரீதியான கருச்சிதைவுப் பணிகளை மேம்படுத்துதல்–கர்ப்ப விரயத்தைக் குறைத்தல்

(உ) இனப்பெருக்கப் பாதைத் தொற்றுநோய் மற்றும் உடலுறவு மூலமாக ஏற்படும் தொற்றுக்களைக் குறைத்தல்

(ஊ) சிசுக்கொலையை அறவே ஒழித்தல்

மத்திய அரசு, மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் உப திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு 12,25 கோடி ரூபாயினை இதுவரை வழங்கியுள்ளது. இத்திட்டச் செலவிற்காக (2001–2002 வரையிலான)திட்டக் காலத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை ரூபாய் 23.14 கோடி ஆகும். இதற்கான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன;



2001 ஆகஸ்ட் 29]

| பொருள் | (ரூபாய் லட்சங்களில்) |
|---|---|
| கட்டுமானப் பணிகள் | 602.17 |
| மருத்துவ உபகரணங்கள் | 135.79 |
| அறைகலன் | 20.01 |
| வாகனங்கள் | 120.00 |
| சுழல் நிதி | 19.80 |
| தகவல், கல்வி, தொடர்பு | 331.68 |
| கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல் | 298.00 |
| கலந்து ஆய்வு செலவு | 32.00 |
| புதுமை திட்டங்கள் | 30.00 |
| அரசு சாரா நிறுவனங்கள் உதவி | 152.00 |
| சம்பளம் முதலியன | 415.55 |
| மருந்துகள் மற்றும் தேவைப் பொருட்கள் | 54.00 |
| வாடகை | 5.76 |
| நடைமுறைச் செலவு | 83.02 |
| ஒப்பந்த அடிப்படை ஊழியர் | 14.50 |
| மொத்தம் | 2314.28 |

**உப திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்ற பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:**

1. உப திட்டப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு நல்ல தரமான நலச் சேவைகள் கிடைக்கும்பொருட்டு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், துணை சுகாதார நிலையங்களிலும் தண்ணீர் வசதி, மின் வசதி மற்றும் சிறு மராமத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் இத்திட்டத்தின்கீழ் 21 துணை சுகாதார நிலையங்களும், மதுரை மற்றும் தேனி மாவட்ட நகராட்சிப் பகுதிகளில் 7 நகர நலவாழ்வு மையங்கள் கட்டித் தரப்பட்டு வருகின்றன. பெரியகுளம் நகராட்சியில் உள்ள மகப்பேறு இல்லம் மேம்படுத்தப்பட இருக்கிறது.

2. தரமான சேய் நலப் பணிகள் சிறந்த முறையில் வழங்கப்படவேண்டும் என்பதற்காக இத்திட்டத்தின்கீழ்வரும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர நலவாழ்வு

நிலையங்களுக்கு. தேவையின் அடிப்படையில் மருத்துவ உபகரணங்கள் ரூ.100.39 லட்சத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

3. முதன்மைப் பரிந்துரை நிலையங்களின் பரிந்துரை சேவைகள் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன.

4. கிராம சுகாதார செவிலியர்களுக்கும், பகுதி சுகாதார செவிலியர்களுக்கும் இரு சக்கர வாகனம் ஓட்டுதல் மற்றும் தொடர்புப் பணிகளில் பயிற்சி அளித்து மொபெட் வாகனம் வாங்க கடன் உதவி செய்யப்பட்டு வருகிறது.

5. துணை சுகாதார நிலையம மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம் போன்றவற்றில் கிடைக்கும் நலச் சேவைகளை எவ்வாறு அதிக அளவில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதைப் பற்றிய விழிப்புணர்வு உள்ளூர் தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் கலைப் பயண நடவடிக்கைகள் மூலம் மக்களிடையே உருவாக்கப்பட்டு வருகிறது.

6. மருத்துவம் சார்ந்த மற்றும் மருத்துவம் சாராத மருத்துவப் பணியாளர்களுக்கு மாவட்டம்/பகுதி/துணைப் பகுதி அளவில் பேறுசார் குழந்தை நலத் திட்டம் பற்றிய விழிப்புணர்ச்சிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி/நகரப் பஞ்சாயத்து மற்றும் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் இந்தத் திட்டம் பற்றி விழிப்புணர்ச்சிப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

7. தன்னார்வ நிறுவன உதவியுடன் பரிந்துரைப் பணிகளுக்கு வாகன வசதி செய்து தரப்பட்டு வருகிறது.

**தேசியத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிற பணிகள்:**

பாதுகாப்பான தாய்மையையும், குழந்தை உயிர் வாழ்தலையும் உறுதிப்படுத்த தேசியத் திட்டத்தின்கீழ் மாநிலம் முழுவதிலும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் முதன்மைப் பரிந்துரை நிலையங்களின் கட்டுமான வசதிகளை மேம்படுத்தி, தேவையான மருத்துவ உபகரணங்களையும் வழங்குதல்.

1. முதன்மைப் பரிந்துரை நிலையங்கள் மற்றும் தனியார் மருந்துவமனைகளில் பணிபுரியும் மயக்க மருந்து நிபுணர்களின் சேவையைப் பயன்படுத்தி, 44 வட்டார ஆரம்ப சுகாதார





நிலையங்களில் உள்ள அறுவை சிகிச்சை அரங்குகளை செயல்படுத்துதல்.

2. முதன்மைப் பரிந்துரை நிலையங்கள் மற்றும் தனியார் மயக்க மருந்து நிபுணர், மகப்பேறு மருத்துவர்களின் உதவியுடன் மருத்துவக் கருக்கலைப்பு மற்றும் குடும்ப நல பெண் அறுவை சிகிச்சை சேவைகளை 44 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வழங்குதல்.

3. தனியார் மயக்க மருந்து நிபுணர்கள் மற்றும் மகப்பேறு மருத்துவர்களின் சேவையைப் பயன்படுத்தி 24 மணி நேர அவசர கால மகப்பேறு சிகிச்சை அளித்தல்.

4. இருபத்தி நான்கு மணி நேர ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒப்பந்த அடிப்படையில் செவிலியர்கள் மற்றும் இதரப் பணியாளர்களைப் பணியமர்த்தி, 24 மணி நேரமும் பிரசவ சேவைகளை அளித்து, நிலையத்தில் ஏற்படும் பிரசவ நிகழ்வுகளை அதிகப்படுத்துதல்.

5. ஆரம்ப சுகாதார நிலையம்/துணை சுகாதார நிலையம்/முதன்மைப் பரிந்துரை நிலையம்/மாவட்டத் தலைமை மருத்துவமனை ஆகியவற்றில் ரூ.220 இலட்சம் செலவில் சிறு மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்படுதல்.

6. பிரசவ அறை மற்றும் அறுவை சிகிச்சை அரங்குகள் போன்ற கூடுதல் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு முதன்மைப் பரிந்துரை நிலையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூ.4.02 கோடி செலவில் வலுப்படுத்தப்படுதல்.

7. சிறு நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக துணை சுகாதார நிலையங்கள்/முதன்மைப் பரிந்துரை நிலையங்களுக்கு ரூ8.72 கோடி செலவில் மருந்துப் பெட்டிகள் வழங்குதல்.

8. பணியாளர்களின் திறமையை மேம்படுத்த பலதரப்பட்ட நலத் துறைப் பணியாளர்களுக்கு பேறுசார் மற்றும் குழந்தை நலம் பற்றிப் பயிற்சி அளித்தல்.

9. தேர்ந்தெடுக்கப்பட்ட 70 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிறப்புறுப்புத் தொற்று மற்றும் பால்வினை நோய் சிகிச்சை நிலையங்கள் நிறுவுதல்.

[2001 ஆகஸ்ட் 29

10. முதல் நிலைப் பரிந்துரை நிலையங்களுக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், இளஞ்சிசுப் பராமரிப்பு உபகரணங்கள், அறுவை சிகிச்சை மற்றும் மயக்க மருந்து கொடுக்கத் தேவையான உபகரணங்கள் வழங்குதல்.

## அத்தியாயம் 10

## தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம்

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் 1994 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தியா முழுமையிலும் முதன் முதலாகத் தொடங்கப்பட்ட சங்கம் தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கமேயாகும். இம்மாநிலம் முழுமைக்கும், எச்.ஐ.வி. நோய் தொற்றுதல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதலும், எய்ட்ஸ் நோயினைக் கட்டுப்படுத்த தீவிர முயற்சி மேற்கொள்ளுதலும் இச்சங்கத்தின் குறிக்கோளாகும்.

### தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் செயல்பாடுகள்:

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் முக்கியமான பிரிவுகள், உத்திகள் மற்றும் சங்கம் செயல்படுத்தும் பல்வேறு திட்டங்கள் முதலியவை குறித்த விபரம் வருமாறு:

### விழிப்புணர்வு மற்றும் சமுதாய ஆதரவு திரட்டும் நடவடிக்கைகள்:

எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோய் வராமல் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் விழிப்புணர்வுப் பணிகள் இன்றியமையாதவையாக உள்ளன. எச்.ஐ.வி/எய்ட்ஸ் நோய் குறித்து, தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டுவரும் தகவல்–கல்வி–தொடர்புப் பணிகள்–இப்பணிகளைச் செயல்படுத்தும் பாங்கு ஆகியவை இந்திய மாநிலங்களுக்கு முன்மாதிரியாக உள்ளன. திட்டம் குறித்த தகவல்களை–செய்திகளை, நேருக்கு நேர் விளக்குவதும் (Inter Personnel Communication) திட்ட வெற்றிக்கு உதவும் வகையில் மக்களிடையே நடத்தை மாற்றம் கொண்டு வருவதும் இப்போது முக்கியப் பணிகளாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

### நோய்க்கு ஆளாகும் அதிக வாய்ப்புக்களையுடைய குழுக்களிடையே (High Risk Groups) தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் கூட்டாளியாக இணைந்து பணிகளாற்றுதல்:

நோய்க்கு ஆளாகும் அதிகமான வாய்ப்புகளையுடைய, ஒதுக்கப்பட்ட, ஆபத்தான பழக்க வழக்கங்களுடைய மக்களிடையே எச்.ஐ.வி/எய்ட்ஸ்



2001 ஆகஸ்ட் 29]

நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுப் பணிகளாற்றுவதை இலக்காகக் கொண்டு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் இதுவரை 379 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்துள்ளது. நோய்க்கு ஆளாகும் அதிக வாய்ப்புகளையுடைய பாலியல் தொழிலாளர்கள், போதை மருந்துக்கு அடிமைப்பட்டவர்கள், ஓரினச் சேர்க்கையாளர்கள், ஊர் விட்டு ஊர் இடம் பெயர்ந்து செல்பவர்கள் ஆகியோரிடையே, இலக்குடன்கூடிய 75 இடையீட்டு விழிப்புணர்வுத் திட்டங்கள் தற்போது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### இரத்தப் பாதுகாப்பு மற்றும் தன்னார்வ இரத்த தானம்:

இரத்தம் மற்றும் இரத்தத்தைக் கொண்டு செய்யப்படும் பொருள்கள் மூலம் எச்.ஐ.வி கிருமித் தொற்று ஏற்படும். தமிழ்நாட்டில், 67 அரசு இரத்த வங்கிகளும், அரசு சாரா நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முதலியவற்றின்கீழ் 104 இரத்த வங்கிகளும் இயங்கி வருகின்றன. தானமாக அளிக்கப்படும் இரத்தத்தில் எச்.ஐ.வி கிருமி, ஹெபிடைட்டிஸ்–பி மற்றும் சி கிருமிகள், கிரந்தி நோய்க்குரிய கிருமிகள், மலேரியாத் தொற்று ஆகியவை உள்ளனவா என்று இந்த இரத்த வங்கிகள் பரிசோதனை செய்கின்றன. தமிழ்நாடு இரத்த ஏற்றுமதிக் குழுமம், மருந்துக் கட்டுப்பாட்டு அலுவலர்களுடன் இணைந்து, இரத்த வங்கிகளின் செயல்பாடுகளை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது.

### பால்வினை நோய்கள் கட்டுப்பாடு:

பொதுமக்களிடையே எச்.ஐ.வி கிருமி பரவுவதற்கான வாய்ப்புகளைவிட, பால்வினை நோயாளிகளிடையே எச்ஐவி கிருமி பரவுவதற்கான வாய்ப்புகள் அதிகம். எனவே, பால்வினை நோய்கள், இனப்பெருக்க உறுப்பு நோய்கள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை தந்து சிகிச்சையளிக்கப்படுகிறது. கிராமப்புறங்கள், நகர்ப்புறங்கள் ஆகியவற்றில் முகாம்கள் நடத்தி சிகிச்சையளிக்கப்படுகிறது. பால்வினை நோய் சிகிச்சை நிலையங்களுக்கு வருகை தரும் நோயாளிகளுக்கு, நோயை உடன் குணப்படுத்த மருந்துகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. முகாம்களுக்கும், பால்வினை நோய் சிகிச்சை நிலையங்களுக்கும் வருபவர்களுக்கு ஆலோசனையும் அளிக்கப்படுகிறது.

### ஆணுறை (காண்டோம்) உபயோகத்தை அதிகப்படுத்துவதற்கான பணிகள்:

பாலியல் தொடர்பு, பாதுகாப்பில்லா பாலியல் தொடர்பு காரணமாக, நோய் பாதிப்புக்கு ஆளாகும் அதிக வாய்ப்புடையவர்கள், குறைவான

வாய்ப்புடையவர்களிடையே எச்ஐவி தொற்று ஏற்படாமல் தடுப்பதற்காக, மக்களிடையே ஆணுறை (காண்டோம்) உபயோகத்தை அதிகப்படுத்துவதற்கான பணிகளுக்கு முன்னுரிமை தந்து நிறைவேற்றிட ஆவன செய்யப்பட்டுள்ளது.

**பயிற்சி மற்றும் ஆற்றல் மேம்பாட்டுப் பணிகள்:**

சிறந்த சேவைகளை அளிப்பதற்கான வாய்ப்புகளைப் பெருக்கவும், தனியார் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் நடவடிக்கைகளை வலுப்படுத்தவும், மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் ஆகியோருக்கும் உரிய பயிற்சி அளிக்க வேண்டி, செயல் திட்டத்தில் பயிற்சிக்கெனப் போதுமான நிதி ஒதுக்கீட்டிற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

**எச்.ஐ.வி கிருமித் தொற்று இருப்பதைக் கண்டுபிடிப்பதற்கான வசதிகள்:**

சமுதாயத்தில் எச்.ஐ.வி கிருமி பரவல் நிலை எப்படியுள்ளது என்பதைத் தெரிந்துகொள்ள, தனிப்பட்டவர்கள், எச்.ஐ.வி கிருமித் தொற்றுள்ளதா எனப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டியது அவசியமாகும். பரிசோதனை பற்றிய தகவலைச் சொல்லி ஒப்புதல் பெறுதல், பரிசோதனைக்கு முன்னும் பின்னும் ஆலோசனை வழங்கல், தனிப்பட்டவர் பற்றிய அந்தரங்கத்தை இரகசியமாக வைத்துக் காத்தல் முதலியவை, உரியவர்களுக்குப் பரிசோதனை முடிவைத் தெரிவிப்பதற்குமுன் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டியவையாகும். இத்தகைய வசதிகளையும், சேவைகளையும் அளிப்பதற்காகவே, தமிழ்நாட்டில் 11 இடங்களில் தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

**நோய் பரவல் நிலை போக்கை அறிவதற்காக கவனக் கண்காணிப்புக் கணக்கெடுப்பு முறை:**

நோய் பாதிப்புக்குள்ளாகும் அதிகமான வாய்ப்புகளையும், குறைவான வாய்ப்புகளையும் உடைய மக்களிடையே எச்.ஐ.வி கிருமி பரவல் நிலை எப்படி உள்ளது என்பதைக் கணக்கிட, கவனக் கண்காணிப்புக் கணக்கெடுப்பு முறை அவசியமாகத் தேவைப்படும் ஒன்றாகும். மாநிலத்தில் 11 இடங்களில் கவனக் கண்காணிப்புக் கணக்கெடுப்பு மையங்கள் செயல்படுகின்றன. மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் நோய் பரவல் நிலை எப்படியுள்ளது என்பதைத் தெரிந்து கொள்வதற்குத் தோதாக, இத்தகைய மையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் — அவற்றிற்குத் தேவையான கருவிகளும் வழங்கப்படும்.





**எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோய் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு ஆதரவும் பராமரிப்பும்:**

சென்னை, தாம்பரத்திலுள்ள அரசு நெஞ்சக நோய் மருத்துவமனை, அதிகமான எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயாளிகளை உள் நோயாளிகளாகவும், புற நோயாளிகளாகவும் அனுமதித்து, அவர்களுக்கு வரும் வேறு பல நோய்களுக்கு சிகிச்சையும், பராமரிப்பும் அளித்த முதல் மருத்துவமனையாகும். பெருகி வரும் எச்ஐ.வி/எய்ட்ஸ் நோயாளிகளுக்குப் பராமரிப்பு அளிக்க, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் ஆகியவற்றில் பராமரிப்புப் பகுதிகள் (Institutional Care wards) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**இளைஞர்கள், விடலைப் பருவத்தினர் மற்றும் நோய்த் தாக்குதலுக்குள்ளாகக் கூடியவர்களுக்கான திட்டங்கள்:**

எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோய் குறித்த விழிப்புணர்வை 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளிடையே ஏற்படுத்தவும், அதனால் ஏற்படும் விளைவுகளை உணர்த்தவும், 1420 பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நோய்த் தாக்குதலுக்கு ஆளாகும் வாய்ப்புடைய, தேர்வு செய்யப்பட்ட கல்லூரிகளின் மாணவ, மாணவிகளிடையே கல்லூரி எய்ட்ஸ் திட்டம் (College AIDS Talk Programme) செயல்படுத்தப் படுகிறது. மேலும், எச்ஐ..வி/எய்ட்ஸ் நோய் பற்றிய பல்வேறு கூறுகள் பற்றி மாணவ, மாணவிகள் கலந்துரையாடி, கருத்துகளைப் பரிமாறிக்கொள்ள வாய்ப்பளிக்கும் முகமாக, அவர்களைக் கொண்டே சிவப்பு ரிப்பன் குழுக்கள் கல்லூரிகளில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

**அனைத்து மக்களுக்கும் திட்டச் செய்திகள் சென்றடைய உதவும் பன்முக அணுகுமுறை:**

எச்ஐ.வி./எய்ட்ஸ் நோய் ஏற்படுத்தி வரும் அச்சுறுத்தலைச் சந்தித்து, அதைத் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்குமான பணிகளில் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவுகளைச் சார்ந்தவர்களையும், அனைத்துத் துறைகளைச் சார்ந்தவர்களையும் ஈடுபடச் செய்வதே பன்முக அணுகுமுறையாகும் (Multi Sectoral Approach) இம்முறையின்கீழ் சுய உதவிக் குழுக்கள், இளைஞர் குழுக்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், கிராமப்புற உள்ளாட்சி நிறுவனங்கள், தொழில் அமைப்புகள், கல்வி நிலையங்கள் முதலியவற்றின் மூலம் எச்ஐவி/எய்ட்ஸ் நோய் குறித்த செய்திகளை—தகவல்களை மாநிலத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் பரப்பி, சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவு மக்களுக்கும் அவை

**சமுதாயப் பராமரிப்பு நிலையங்கள்:**

நோய் பரவும் அதிகமான வாய்ப்புகள் உடைய பகுதிகளுக்கு (High Risk Areas) பராமரிப்பு மற்றும் எய்ட்ஸ் நோயாளிகளுக்கான ஆதரவுப் பணிகளே இப்போதைய தேவையாகும். 2001–2002 ஆம் ஆண்டில், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை முழுமையாக ஈடுபடுத்தி சில இடங்களில் (சுமார் 5 பராமரிப்பு நிலையங்கள்) சமுதாயப் பராமரிப்பு நிலையங்களை ஏற்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது. எய்ட்ஸ் நோயாளிகளுக்கு வரும் பிற நோய்களுக்கான சிகிச்சையும், பராமரிப்புப் பணிகளும் இந்நிலையங்களின் மூலம் நிறைவேற்றப்படும். வீட்டில் வைத்துப் பராமரிக்கப்படுபவர்களுக்கும், மருத்துவமனைகளில் வைத்துப் பராமரிக்கப்படுபவர்களுக்கும் உதவும் நல்வாழ்வு பேணும் நிலையங்களாக இந்நிலையங்கள் செயல்படும்.

**விழிப்புணர்வுப் பேரியக்கங்கள்:**

நோய்க்காளாகும் அதிக வாய்ப்புகளையுடைய மாவட்டங்களில் (High Risk Districts) சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு விழிப்புணர்வுப் பேரியக்கங்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது, நோய்க்காளாகும் அதிக வாய்ப்புகளையுடைய மாவட்டங்களாக 5 மாவட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. எச்ஐ.வி./எய்ட்ஸ் நோய் குறித்த விழிப்புணர்வுத் தாக்கத்தை ஏற்படுத்த, இந்த 5 மாவட்டங்களில் விழிப்புணர்வுப் பேரியக்கங்களை நடத்த வேண்டியது இன்றியமையாததாகும். இதற்கென ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 2001–2002 ஆம் ஆண்டில் பல்வேறு வகையான விழிப்புணர்வுத் திட்டங்களைச் செயல்படுத்த, இத்தொகை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட எய்ட்ஸ் ஆலோசனைக் குழு, மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின்கீழ் விழிப்புணர்வுத் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தும்.

**தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை நிலையங்கள்:**

எச்ஐ.வி. கிருமி பாதிப்புக்குள்ளானவர்களைப் பரிசோதனை மூலம் கண்டறிந்து ஆலோசனை வழங்குவதற்காக, அனைத்து மாவட்டங்களிலும் தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை நிலையங்கள் ஏற்படுத்த ஆவன செய்யப்பட்டு வருகிறது. பரிசோதனை வசதிகள் தனி நபர்களுக்கும், திட்டத்தைச் செயல்படுத்துபவர்களுக்கும் அவசியமாகத் தேவைப்படுவதாகும். இத்தகைய வசதிகள் தற்போது 11 இடங்களில் உள்ளன. 2001–2002 ஆம் ஆண்டில் அனைத்து மாவட்டத் தலைமை



மருத்துவமனைகளிலும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை நிலையங்கள் இயங்கும். விருப்பப்படுபவர்கள் ரூ.10/– (ரூபாய் பத்து மட்டும்) செலுத்தி, பரிசோதனை செய்துகொள்ளலாம். பரிசோதனைக்கு முன்னும், பின்னும் ஆலோசனை வழங்க இந்நிலையங்களில் வசதி உண்டு.

**ஆணுறை (காண்டோம்) விற்பனையை மேம்படுத்துதல்:**

பால்வினை நோய்கள் வராமல் தடுப்பதற்காக, ஆணுறை விற்பனையை கிராமப்புற, நகர்ப்புற மக்களிடையே மேம்படுத்துவது முக்கியமான பணியாகும். இதன் மூலம் எச்ஐ.வி. கிருமி பரவாமல் தடுக்கலாம். நோய்க்காளாகும் அதிக வாய்ப்புகளையுடைய பகுதிகளிலும், குறைவான வாய்ப்புகளையுடைய பகுதிகளிலும், நடப்பாண்டில், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலம் ஆணுறை விற்பனையை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**எச்.ஐ.வி. கிருமி பரவலைத் தடுக்க வளர்ச்சித் திட்டம் பணியாக்க, பரவலாக்கப்பட்டகட உத்திகள்:**

எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோய் ஒரு நல்வாழ்வுப் பிரச்சினை மட்டுமல்ல. அது, வளர்ச்சிப் பணிகளின் நடவடிக்கைகளை நிர்ணயிக்கும் ஒரு சமூகப் பிரச்சினை. எனவே, எதிர்காலத்தில், எச்ஐவி கிருமி பரவுவதைத் தடுக்க அனைத்துத் துறைகளோடும் சேர்ந்து பணிகளாற்ற வேண்டியது அவசியத் தேவையாக உள்ளது. இரயில் துறை, தொழில் துறையினர், துறை முகப் பொறுப்பாட்சிக் குழுமம், போக்குவரத்துத் துறை போன்ற பல துறைகளும் எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோய்த் தடுப்புப் பணிகளில் ஈடுபட்டுச் செயல்பட ஆவன செய்யப்படும்.

**தாம்பரம், அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையை மேம்படுத்துதல்:**

எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வரும், தாம்பரம், அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையின் சேவை வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அட்லான்டாவில் உள்ள, நோய்க் கட்டுப்பாட்டு நிலையம் இம்மருத்துவமனையை மேம்படுத்த நிதி உதவி (சுமார் ரூ.5 கோடி) அளிக்க கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது. இம்மருத்துவமனையின் உள்நோயாளிகளுக்கான சேவை வசதிகள், ஆய்வக வசதிகள் முதலியவை இத்திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்படும். மேலும், எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோய் குறித்து, மருத்துவர்களுக்கும், மருத்துவப் பணியாளர்களுக்கும் பயிற்சியளிக்கும் நிலையமாகவும் செயல்படும்.

## அத்தியாயம் 11

## தமிழ்நாட்டில் கண்ணொளி இழப்பு தடுப்புத் திட்டம்

உலகத்தின் ஜனத்தொகையில் 30 மில்லியன் மக்கள் பார்வையற்றோர். இதில் இந்தியாவில் மட்டும் 6 மில்லியன் நபர்கள் உள்ளனர். இந்தியாவில் 1000 பேருக்கு 14 பேர் கண் பார்வையற்றவர்கள் என்ற நிலையை 1000க்கு 3 நபர்கள் எனக் குறைப்பதே இப்புதிய திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். தமிழ்நாட்டில் கண்ணொளி இழந்தோர் 4/1000 அளவுக்கு இருக்கின்றார்கள்.

**உலக வங்கி உதவியுடனான கண்புரை நோய்த் தடுப்புத் திட்டம்:**

இதை தமிழ்நாடு கண்ணொளி இழப்பு தடுப்புச் சங்கம் அமல்படுத்தியுள்ளது. சுமார் 6 வார காலம் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்திற்காக இந்திய அரசு சுமார் 64.2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டம் மேலும் ஓராண்டு காலத்திற்கு, அதாவது 31-3-2002 வரை ரூ.7774.00 இலட்சம் செலவில் நீட்டிக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 35 மாவட்ட/வட்ட மருத்துவமனைகளில் கண் சிகிச்சை படுக்கைப் பிரிவுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசால் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 327 கண் பரிசோதனை இருட்டறைகள் கட்ட ஒப்பளிக்கப்பட்டு, அவற்றில் 312 இடங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் கண் தானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் பொதுமக்களுக்குத் தரமான கண் சிகிச்சை அளிக்க ஏதுவாக மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் மற்றும் மாவட்ட மருத்துவமனைகளுக்கும் அதிநவீன கண் சிகிச்சை கருவிகள்/உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட அளவில் இத்திட்டத்தின் செயல்பாட்டினை மேம்படுத்தவும், சிறப்புறக் கண்காணிக்கவும் மாவட்ட பார்வை இழப்பு தடுப்புச் சங்கம், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வட்டார வளர்ச்சி அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையுள்ள, முன் அனுபவத்துடன்கூடிய ஓய்வு பெற்ற அரசு அலுவலர் ஒருவர் ஒவ்வொரு சங்கத்திற்கும் மாவட்ட திட்ட மேலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இச்சங்கம் தொண்டு நிறுவனங்கள் மற்றும் நடமாடும் கண் சிகிச்சைப் பிரிவின் உதவியுடன்





மாவட்ட அளவில் கண்புரை அறுவை சிகிச்சை முகாம்கள் நடத்தியும், இலவச கண்புரை அறுவை சிகிச்சை செய்யும் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கியும் சுகாதாரக் கல்வித் திட்டத்தின்கீழ் விளம்பரங்கள் செய்தும் கண்பார்வை இழப்பு தடுப்புத் திட்டச் செயலாக்கத்தை மத்திய/மாநில அரசுகள் மற்றும் தமிழ்நாடு மாநில பார்வை இழப்பு தடுப்புச் சங்க வழிகாட்டுதலின்படி மேற்பார்வை செய்தும் வருகிறது.

**2001-2002 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:**

1. 4,00,000 கண்புரை அறுவை சிகிச்சைகள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2. தொண்டு நிறுவனங்களில் (Voluntary Organisations) கிராமப்புறம், பழங்குடியினர் வசிப்பிடம் மற்றும் தங்க வசதிகள் இல்லாத இடங்களில் கண் சிகிச்சைப் பிரிவுகள் அமைக்க முன்வருவோருக்கு மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

3. விழியுள் பொருத்தும் ஆடிகள் (I.O.L.) அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட மருத்துவமனைகளுக்கு வழங்கப்படவுள்ளன.

4. அனைத்து மாவட்டங்களையும் முதிர்வுற்ற கண்புரை நோயற்றோர் மாவட்டங்களாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5. 2001-2002-ல், மேற்கொண்டு 20 கண் மருத்துவர்கள், 20 செவிலியர்கள் ஆகியோருக்கு, கண் மருத்துவம் குறித்த சிறப்புப் பயிற்சி அளிக்கவும், கண் வங்கி ஒன்று ஏற்படுத்தவும் அரசால் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

6. 5 லட்சம் மக்கள் தொகை உள்ள, கண்ணொளி இழப்பு தடுப்புத் திட்டம் நடைமுறையில் இல்லாத இடங்களில் 30 அ று வை அரங்குகள் கட்டுதல் அல்லது மேம்படுத்துதல் மற்றும் அவற்றை உபயோகிக்க போதிய தளவாடச் சாமான்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல்.

7. இதுவரை வழங்கப்படாத எஞ்சிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட மருத்துவமனைகளுக்கு 23 யாக் லேசர் (Yag Laser) கருவி வழங்குதல்.

8. கிராமங்களில் உள்ள சமுதாய மக்கள் மற்றும் சுகாதாரப் பணித் துறை இரண்டினையும் இணைக்க முன்வரும் தன்னார்வத் தொண்டர்களைத் தேர்ந்தெடுத்தல்.

9. தேர்ந்தெடுக்கப்பட்ட 100 ஒன்றியங்களில், நிலுவையிலுள்ள, இரண்டு கண்களிலும் பார்வை இழந்தவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்ய ஏதுவாக ஒப்பந்த அடிப்படையில் தனியார் கண் மருத்துவர்கள் நியமிக்கத் திட்டமிடல்.

## அத்தியாயம் - 12

## தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்படி, தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் 1-7-1994 முதல் அரசு நிறுவனமாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் அமைக்கப்பட்டதன் முக்கிய நோக்கம் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு அரசு மருத்துவமனைகளுக்கும், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் உயர்ந்த தரம் வாய்ந்த மருந்துகளை வாங்கி அவற்றிற்கு விநியோகம் செய்வதுடன், மருத்துவமனைகள் சிறப்பாகச் செயல்படத் தேவையான இதர பணிகள் புரிவதுமாகும்.

### நிர்வாக அமைப்பு:

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் தலைவராக மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளரும் அன்றாட நடவடிக்கைகளை நிர்வாக இயக்குநரும் கவனித்துக் கொள்கிறார்கள். நிர்வாக இயக்குநருக்கு உதவியாக ஆற்றல் மிக்க தொழில் நிபுணர்கள் பணியாற்றுகிறார்கள்.

### நடவடிக்கைகள்:

1. தமிழகத்தில் 23 இடங்களில் நவீன மருந்துக் கிடங்குகள் அமைக்கப்பட்டு, அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் இக்கிடங்குகள் மூலமாக மருந்துப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன.

2. அனைத்து மருத்துவமனைகளுக்கும், அவர்கள் தேவைக்கு ஏற்ப நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான பாஸ் புத்தகமும் அளிக்கப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்தி அவர்கள் மருத்துவமனைக்குத் தேவையான மருந்துப் பொருட்களை மருந்துக் கிடங்கிலிருந்து பெறுகின்றனர்.



3. உள் மற்றும் புறநோயாளிகளின் தேவைகளை நிறைவு செய்யும்பொருட்டு தமிழகத்தில் 17 மருத்துமனைகளில் சிடி.ஸ்கேன் கருவிகளை இம்மருத்துவக் கழகம் நிறுவி, குறைந்த கட்டணத்தில் பொது மக்களுக்கு சேவை செய்து வருகிறது.

### செயல் முறை:

அரசால் அமைக்கப்பட்ட குழுவின் உதவியுடன் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் 293 மருந்துகள் கொண்ட மருந்துப் பட்டியலை முடிவு செய்து, ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் சீரிய முறையில் மருந்துத் தயாரிப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதன் பிறகு கணிப்பொறியின் உதவியுடன மருந்துத் தேவையைப் பரிசீலிப்பது, உத்தரவளிப்பது மற்றும் விநியோகம் ஆகியவை செய்யப்படுகின்றன.

### விநியோகம்:

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் தமிழகத்தில் 23 மருந்துக் கிடங்குகள் அமைத்துத் தகுதி வாய்ந்த மருந்தாளுநர்களைப் பொறுப்பாளர்களாக நியமித்துள்ளது. முன்னரே கணக்கிடப்பட்ட ஆண்டு மற்றும் காலாண்டுத தேவை அடிப்படையில், தேவைக்கேற்ப மருந்துகள் பற்று வரவுப் புத்தகம் மூலம் மருத்துவமனைகள் வாங்கிக் கொள்ளலாம். மருந்துக் கிடங்குகளில் அவர்களது தேவைக்கேற்ப மூன்று மாதத் தேவைக்கான மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

### தர நிர்ணயக் கட்டுப்பாடு:

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தில் மிக உயர்ந்த தரம் வாய்ந்த மருந்துகளை வழங்கும்பொருட்டு தர நிர்ணயக் கட்டுப்பாட்டுப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. தர நிர்ணயக் கட்டுப்பாட்டுப் பிரிவு, மருந்து நிறுவனங்கள் வழங்கும் மருந்துகளிலிருந்து மாதிரி எடுத்து பகுப்பாய்வு செய்வதன் மூலம் மருந்துகளின் தரத்தை உறுதி செய்கிறது.

### முடிவுரை:

கால்நடை மருத்துவமனைகள், ஆவின், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், கூட்டுறவுத் துறை, உள்ளாட்சித் துறை போன்ற இதர நிறுவனங்களுக்கும் தேவையான மருந்துகளை வாங்கி வழங்குகிறது. மேலும், அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான சாதனங்களை இக்கழகம் வாங்கி வழங்குகிறது.

[2001 ஆகஸ்ட் 29

தமிழகத்தில் இயங்கி வரும் 23 மருந்துக் கிடங்குகளில் 12 கிடங்குகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அவற்றில் 5 கிடங்குகளுக்கு சொந்தக் கட்டடம் ரூ.425 இலட்சத்தில் கட்டப்பட்டு வருகிறது. மேலும் 6 கிடங்குகளுக்கு ரூ.600 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இக்கழகம், எம்.ஆர்.ஐ ஸ்கேன், சி.டி. ஸ்கேன் கருவிகள், டெலிகோபால்ட் தொப்பி கருவிகள் மற்றும் சாப்ட் டிஷ்யு பெமோகிராபி கருவிகள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து அரசு மருத்துவமனைகளில் பொருத்தி வருகிறது.

## அத்தியாயம் - 13

## தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை

**துறையின் நோக்கம்:**

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ள பழுதான ஊர்திகளின் எண்ணிக்கையைக் குறைவாக வைத்திருப்பதே இத்துறையின் நோக்கமாகும். இந்த நோக்கத்திற்காக இத்துறை 1981 ஆம் ஆண்டு முதல் தனித் துறை இயக்ககமாக ஏற்படுத்தப்பட்டது.

இத்துறையினால் பராமரிக்கப்பட்டு வரும் ஊர்திகளின் எண்ணிக்கை பற்றிய விவரம் இயக்கக வாரியாகக் கீழே அளிக்கப்பட்டுள்ளது:

| வரிசை எண் | இயக்ககம் | ஊர்திகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மருத்துவக் கல்வி | 263 |
| 2. | மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் | 584 |
| 3. | குடும்ப நலம் | 572 |
| 4. | பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை | 1161 |
| 5. | டேனிடா நல வாழ்வு பாதுகாப்பு திட்டம் | 18 |
| 6. | மருந்து கட்டுப்பாடு | 3 |
| 7. | தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்து துறை | 42 |
| 8. | இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி | 5 |
| | மொத்தம் | 2648 |



2001 ஆகஸ்ட் 29]

**செயல்பாடுகள்:**

தமிழ்நாடு சுகாதாரப் போக்குவரத்துத் துறையின்கீழ் 7 மண்டலப் பணிமனைகள் முறையே சென்னை, வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்க்ளில் செயல்படுகின்றன. இதைத் தவிர 9 மாவட்டத் தலைமை இடங்களில் மாவட்டப் பணிமனைகள் மற்றும் 25 நடமாடும் பணிமனைகள் இயங்கி வருகின்றன. சென்னையில் ஒரு மறுசீர் பிரிவு மற்றும் உடற்கூறு பழுது நீக்கும் பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகிறது. இத்துறையில் தொழில் நுட்பப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர் மற்றும் இதர பணியாளர்கள் மொத்தம் 669 பேர் பணியாற்றுகின்றனர்.

இத்துறை பழுதடைந்த ஊர்திகளின் (பெரிய, இரண்டாம் நிலை மற்றும் சிறிய) பழுதுபார்ப்புப் பணிகள் மற்றும் தொடர் பராமரிப்புப் பணிகளையும் செய்து வருகிறது. நல்ல நிலையில் இயங்கக்கூடிய எஞ்சின் மற்றும் கியர் பாக்ஸ் அசெம்பிளி போன்ற உதிரி பாகங்களை இத்துறையிலேயே மறுசீர் (Recondition) செய்து போதுமான அளவில், ஆயத்தமாக வைத்திருப்பதன் மூலம் ஊர்திகளுக்குப் பணிமனையில் பழுதுபார்க்க தேவைப்படும் கால அளவு வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இத்துறை படிப்படியாக, ஓடும் ஊர்திகளின் விழுக்காட்டினை உயர்த்தி உள்ளது. இவ்வாண்டு பெரிய, இரண்டாம் நிலை மற்றும் சிறிய பழுதுகள் மொத்தம் 12,940 இத்துறையால் பழுது நீக்கும் செய்யப்பட்டுள்ளது.

இவை தவிர பல்வேறு துறைகளுக்கும் புதிய ஊர்திகள் வாங்க அரசு வழங்கும் ஒப்பளிப்புகள் மீது இத்துறை நடவடிக்கை எடுத்து ஊர்தி விற்பனையாளரிடம் ஊர்திகளை விரைவில் பெற நடவடிக்கை எடுக்கிறது. பின்னர் ஊர்திகள் விநியோகம் செய்யப்பட்டதும், அவற்றை சென்னையிலுள்ள மைய பண்டக சாலையில் பெற்றுப் பதிவு செய்து, அவற்றை ஊர்தி உபயோகிக்கும் உரிய அலுவலர்களிடம் ஒப்படைக்கும் பணியையும் இத்துறை செய்து வருகிறது.

சென்னையிலுள்ள வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர் அலுவலகம் மற்றும் இயக்குநர், மைய அரசின் தொழிற் பழகுநர் பயிற்சிக் குழுமம், தரமணி அவர்களால் அனுப்பப்படும் தொழிற் பயிற்சி சான்றிதழ் பெற்றவர்கள், பொறியியல் பட்டம் பெற்றவர்கள் மற்றும் பொறியியல் பட்டயம் பெற்றவர்கள் ஆகியோருக்கு இத்துறையால் தொழில் பழகுநர்

பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் பொறியியல் பட்டம் பெற்ற 17 நபர்களுக்கும் பொறியியல் பட்டயம் பெற்றவர்கள் 20 நபர்களுக்கும் மற்றும் தொழிற்பயிற்சி சான்றிதழ் பெற்றவர்கள் 45 நபர்களுக்கும் தொழில்பழகுநர் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**புதிய திட்டப் பணிகள் 2001–2002:**

திட்டப் பணிகள்–2001–2002 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் புதிய திட்டங்கள்

| திட்டத்தின் விவரம் | மதிப்பீடு (ரூ. லட்சங்கள்) |
|---|---|
| ஏற்கனவே உள்ள 25 நடமாடும் பணிமனைகளுடன் மேலும் கூடுதலாக 2 நடமாடும் பணிமனைகள், திருவள்ளூர் மற்றும் தூத்துக்குடியில் நிறுவுதல் (2 வாகனங்களுக்கு) | 8.00 |





மாவட்ட வாரியாக மக்கள் தொகை சதவீதம் – தமிழ்நாடு




ஆதாரம்: மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2001

## மக்கள் தொகையியல் தகவல் தொகுப்பு - 2001

| | |
|---|---|
| மக்கள் தொகை | 6,21,10,839 |
| பரப்பளவு (சதுர கி. மீ.) | 1,30,058 |
| அடர்த்தி | 478 |
| இன விகிதம் | 986 |
| 0–6 வயது இன விகிதம் | 939 |
| மொத்த கல்வி அறிவு பெற்றோர் சதவீதம் | 73.5 |
| பெண் கல்வி அறிவு பெற்றோர் சதவீதம் | 64.6 |
| ஆண் கல்வி அறிவு பெற்றோர் சதவீதம் | 82.3 |
| 10 ஆண்டு வளர்ச்சி விகிதம் (%) | 11.19 |

| | |
|---|---|
| பிறப்பு விகிதம் (2000) | 19.5 |
| இறப்பு விகிதம் (1999) | 8.0 |
| சிசு மரண விகிதம் (1999) | 52 |
| பேறு கால மரண விகிதம் (1999) | 1.4 |
| பிறப்பில் ஆயுட் கால எதிர்பார்ப்பு 1996 – 2001 வருடங்களில் ஆண் / பெண் | 65.2 / 67.6 |
| பாதுகாக்கப்பட்ட தம்பதியர் விகிதம் (2000) (%) | 50.2 |
| முழுமை கருவுறு விகிதம் (1999) | 2.0 |



**பிறப்பில் ஆயுட்கால எதிர்பார்ப்பு (ஆண்)**
**இந்தியா மற்றும் தமிழ்நாடு (1961–71 – 1996–2001)**



## பிரசவங்களின் பகுத்தாய்வு (2000–01)




தமிழ்நாட்டில் மருத்துவமனையில் நடந்த மொத்த பிரசவங்கள்:86%

ஆதாரம்: பொ.சு.துறை





பிறப்பு விகித நிலவரம் - தமிழ்நாடு




பிறப்பு விகிதம்:
ஆண்டு மத்தியில் மதிப்பிடப்பட்ட மக்கள் தொகையில்
1000 பேருக்கு அதே ஆண்டில் பிறந்த குழந்தைகள்

ஆதாரம்: மா.க.ப (1971-1999) மற்றும் கு.ந. துறை (2000)



தமிழ்நாட்டில்
பாதுகாக்கப்பட்ட தம்பதியர் விகித நிலவரம்




பாதுகாக்கப்பட்ட தம்பதியர் விகிதம் :
தகுதி வாய்ந்த தம்பதியர் எண்ணிக்கையில் ஆண்டு இறுதியில் குடும்ப நல முறையை அனுசரிப்போர்

ஆதாரம் : கு.ந. துறை


தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்
90000
80000
70000
60000
50000
40000
30000
20000
10000
0
18705
31719
77359
1998-99
1999-00
2000-01
வருடம்
ஸ்கேன் செய்யப்பட்ட நோயாளிகள் எண்ணிக்கை




தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்
வருடம் வாரியாக கொள்முதல்
தொகை கோடிகளில்
120
100
80
60
40
20
0
75.51
78.02
78.41
86.57
94.22
107.22
95-96
96-97
97-98
98-99
99-00
2000-01
கொள்முதல்

223442